# சங்க இலக்கியத்தில் நிகழ்வுகள்

பாரதிதாசன் பல்கலைக்கழக
முனைவர் (Ph.D.) பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்

**இரா.கவிதா, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,**
(பதிவு எண்: 33735/Ph.D.-K6/Tamil/P.T./Oct.2012)

ஆய்வு நெறியாளர்
**முனைவர் உ.கலைச்செல்வி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,**
உதவிப்பேராசிரியர்

**தமிழாய்வுத்துறை**
**மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
தத்தனூர் – 621 804


**ஏப்ரல் – 2017**

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் உ.கலைச்செல்வி**, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
தத்தனூர்–621 804.

**சங்க இலக்கியத்தில் நிகழ்வுகள்** என்ற தலைப்பில் **இரா.கவிதா** அவர்கள் எழுதியுள்ள இவ்ஆய்வேடு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்காக மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழாய்வுத்துறையில் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளராகப் பயின்ற காலத்தில் என் மேற்பார்வையில் தன்னியலாக எழுதப்பட்டது என்றும் இவ்ஆய்வின் மீது வேறு எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

இடம் : தத்தனூர்
நாள் :

முதல்வர்

# துணைநூற் பட்டியல்

## முதன்மை ஆதாரங்கள்


*செயபால், இரா. (உ.ஆ.)* **அகநானூறு,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

*தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ.)* **ஐங்குறுநூறு,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

*நாகராசன், வி. (உ.ஆ.)* **குறுந்தொகை,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

*பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ.)* **நற்றிணை,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

*விசுவநாதன், அ. (உ.ஆ.)* **கலித்தொகை,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

**புறநானூறு,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

**பதிற்றுப்பத்து,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

**பரிபாடல்,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, நான்காம் பதிப்பு, 2011.*

**துணைமை ஆதாரங்கள்**


*அன்னிதாமசு,* **தமிழர் சமூகவியல்,** *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 200.*

*இராமகிருட்டிணன், ஆ.,* **அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு,** *சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1982.*

*இராஜம் கிருஷ்ணன்,* **புதியதோர் உலகம் செய்வோம்,** *தாகம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2000.*

*உண்ணாமலை,* **புதுக்கவிதையில் சமுதாயம்,** *செல்மா பதிப்பகம், சிவகங்கை, முதற்பதிப்பு, 1991.*

*கேசவன், கோ.,* **மண்ணும் மனித உறவுகளும்,** *சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1979.*

*கொடுமுடி ராஜகோபாலன்,* **சாணக்கியன் ஆட்சிக்கலை,** *ஸ்டார் பிரசுரம், சென்னை, 1959.*

*கைலாசபதி, க.,* **பெரும்பெயர் உலகம் ஒப்பியல் இலக்கியம்,** *பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1978.*

*சண்முகம் பிள்ளை, மு.,* **உலகத் தமிழர் வாழ்வியல்,** *பாவை பதிப்பகம், சென்னை, 1997.*

*சதாசிவ பண்டாரத்தார், டி.வி.,* **பிற்காலச் சோழர் சரித்திரம்,** *அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1967.*

*சரளா இராசகோபாலன்,* **சங்க இலக்கியத்தில் தோழி,** *ஒளிப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1981.*

*சாமிநாதையர், உ.வே.,* **பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்,** *பாவை பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1961.*

*சிங்காரவேலு முதலியார்,* **அபிதான சிந்தாமணி,** *சீதை பதிப்பகம், சென்னை, 2004.*

*சுப்பிரமணியன், ந.,* **பண்டைய இந்திய அரசியல் ஆட்சி நிலையங்கள்,** *தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.*

*சுப்புரெட்டியார், ந.,* **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை,** *பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, மறுபதிப்பு, 1974.*

*செயராமன், ந.,* **களம் கண்ட கருத்துக்கள்,** *குமரன் பதிப்பகம், மதுரை, 1977.*

*செயராமன், நா.,* **சங்க இலக்கியத்தில் பாடாண் திணை,** *ஸ்டார் பிரசுரம், சென்னை, 1958.*

*சோமசுந்தர பாரதியார், ச. (உ.ஆ.)* **தொல்.பொருள். புறத்திணையியல்,** *பசுமலை, மதுரை, 1942.*

*தமிழரசி, இரா.,* **ஐக்கூவில் சமூகமும் உத்திகளும்,** *சுமன் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 2005.*

*தாயம்மாள் அறவாணன்,* **பெண்மையாய்,** *பச்சைப்பசேல் பதிப்பகம், புதுச்சேரி, 2001.*

*தொல்காப்பியர்,* **தொல்காப்பியம் (பேராசிரியர் உரை),** *கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1969.*

---. **தொல்காப்பியம் (இளம்பூரணர் உரை),** *கழக வெளியீடு, சென்னை, 8 ஆம் பதிப்பு, 1977.*

---. **தொல்காப்பியம் (நச்சினார்க்கினியர் உரை),** *கழக வெளியீடு, சென்னை, 6 ஆம் பதிப்பு, 1976.*

---. **தொல்காப்பியம், களவியல் உரைவளம், (வெள்ளைவாரணம் உரை)** *பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983.*

*நக்கீரர் (உ.ஆ.)* **இறையனார் களவியலுரை,** *கழக வெளியீடு, சென்னை, 1969.*

*நடராசன், தி.சு.,* **இலக்கிய இசங்கள்,** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, முதற்பதிப்பு, 1996.*

*நளினிதேவி, நா.,* **ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் சமுதாய மாற்றம்,** *மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991.*

*பரிமேலழகர்*
*(உ.ஆ.)*
**திருக்குறள்,**
*கழக வெளியீடு,*
*சென்னை,*
*10 ஆம் பதிப்பு, 1956.*

*பழனியப்பன், பெ.*
*(ப.ஆ.)*
**நம்பியகப்பொருள்,**
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,*
*அண்ணாமலை நகர்,*
*1977.*

*பாரதியார்,*
**பாரதியார் கவிதைகள்,**
*தென்றல் நிலையம்,*
*சிதம்பரம்,*
*2001.*

*பாலசுப்பிரமணியன், முனைவர் கு.வெ.,*
**சங்க இலக்கியத்தில் புறப்பொருள்,**
*மெய்யப்பன் பதிப்பகம்,*
*சிதம்பரம்,*
*2007.*

*பாஸ்கரதாஸ், ஈ.கோ.,*
**அகப்பொருள் பாடல்களில் தோழி,**
*திருமண வெளியீடு,*
*கோயம்புத்தூர்,*
*1979.*

*புலவர் குழந்தை,*
**அகப்பாடல்களில் தோழி,**
*திருமலை வெளியீடு,*
*கோவை,*
*1979.*

*மாணிக்கம், வ.சுப.,*
**தமிழ்க்காதல்,**
*பாரி நிலையம்,*
*சென்னை,*
*1962.*

---.
**சிந்தனைக் களங்கள்,**
*மணிவாசகர் நூலகம்,*
*சிதம்பரம்,*
*1975.*

*மாதவன், பெ.,*
**தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை,**
*தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு,*
*தஞ்சாவூர்,*
*2005.*

*வித்தியானந்தன், சு.,* **தமிழர் சால்பு,** *பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1971.*

*வேங்கடசாமி, மயிலை சீனி.,* **அஞ்சிறைத்தும்பி,** *ஸ்டார் பிரசுரம், சென்னை, 1964.*

---. **சமணமும் தமிழும்,** *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1959.*

*வேங்கடராமச் செட்டியார்,* **பாரியொடு மூவேந்தர் போர்,** *செந்தமிழ்ச் செல்வி 29 ஆம் சிலம்பு, பரல் 8, 1955.*

*ஜெயம், அ., சந்திரலேகா வைத்தியநாதன்,* **தமிழ் இலக்கிய வரலாறு,** *ஜனகா பதிப்பகம், சென்னை, 2013.*


**ஆங்கில நூல்**


Jayaswal, K.P., **Hindu Policy,** The Bangalore Printing Publishing, Bangalore, 1943.


**அகராதிகள்**


*கதிரைவேற்பிள்ளை, நா.,* **தமிழ்மொழி அகராதி, பகுதி 1,** *சாரதா பதிப்பகம், சென்னை, 2010.*

*கந்தையா, ந.சி.,* **நர்மதா தமிழ் அகராதி,** *நர்மதா பதிப்பகம், சென்னை, 2001.*

*சண்முகம்பிள்ளை, மு. (ப.ஆ.)* **தமிழ் - தமிழ் - அகராதி** *தமிழ்நாட்டு பாடநூல் நிலையம், சென்னை, 1985.*

*தாமஸ், கே.எம்., சீனிவாசன் (ப.ஆ.)* — **பிரிட்டானிகா ஆங்கிலக் கலைக்களஞ்சியம், தொகுதி I, II, III,** *விகடன் பிரசுரம், சென்னை, 2007.*

*நிலாமணி, மு. (தொ.ஆ.)* — **தமிழ் - தமிழ் அகராதி,** *வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2009.*

*பதிப்புக்குழு,* — **தமிழ்ப் பேரகராதி,** *கழக வெளியீடு, சென்னை, 2004.*

*பாலுச்சாமி, நா. (ப.ஆ.)* — **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 5,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு, 2002.*

---. — **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 8,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு, 2004.*

. . . — **A Mega Dictionary,** Art Printers, Chennai, First Edition, 1992.

**கலைக்களஞ்சியம்**

*அருணாச்சலம், ப.,* — **சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி 1 & 3,** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.*

# ஆய்வாளர் உறுதிமொழி

தத்தனூர்,

நாள்:

**இரா.கவிதா, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,**
பகுதிநேர ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
தத்தனூர்.

**சங்க இலக்கியத்தில் நிகழ்வுகள்** என்ற தலைப்பில் அமையும் இவ்ஆய்வேடு மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழாய்வுத்துறையில் பகுதிநேர ஆய்வாளராகப் பயின்ற காலத்தில் என் சொந்த முயற்சியில் உருவானது என்றும், இதற்கு முன் வேறு எந்தப் பட்டத்திற்கும் இவ்ஆய்வேடு அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

நெறியாளர் ஆய்வாளர்

## நன்றியுரை

**சங்க இலக்கியத்தில் நிகழ்வுகள்** என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள அனுமதியளித்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கல்லூரியில் முனைவர்ப் பட்டம் பயில எனக்கு வாய்ப்பளித்த கல்லூரித் தாளாளர் உயர்திரு **எம்.ஆர்.இரகுநாதன், எம்.ஏ., எம்.எல்.,** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம் கல்லூரியை வழிநடத்தி கல்லூரிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் கல்லூரி இயக்குநர் உயர்திரு **முனைவர் ஆர்.இராஜமாணிக்கம், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,** அவர்கட்கும், ஆலோசகர் **தங்க.பிச்சையப்பா, எம்.ஏ., எம்.பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,** அவர்கட்கும், முதல்வர் **முனைவர் சா.சேகர், எம்.காம்., எம்.ஃபில்., எம்.பி.ஏ., பிஎச்.டி.,** அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இவ் ஆய்வேடு நன்முறையில் உருப்பெற்றிட ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிகாட்டிய உதவிப்பேராசிரியர், நெறியாளர் **முனைவர் உ.கலைச்செல்வி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,** அவர்களுக்கும் யான் மிகவும் நன்றிக் கடப்பாடுடையேன் ஆவேன்.

ஆய்வின்போது துணைநின்று அரிய கருத்துக்கள் நல்கிய அன்பு உள்ளங்களுக்கும் என் ஆய்வுப் பணிகள் மேன்மேலும் சிறக்க, பல கிடைத்தற்கரிய நூல்களையும், ஆலோசனைகளையும் நல்கிய தமிழாய்வுத்துறைப் பேராசிரியர்களுக்கும் இவ்ஆய்வேடு சிறப்பாக அமைவதற்கு காரணமாக இருந்த அண்ணன் **கிருஷ்ணன்** அவர்களுக்கும், நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்ஆய்வேட்டிற்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய எம் கல்லூரி நூலகத் துறைத்தலைவர் **கலைச்செல்வன்,** நூலகர் **T. மகாலெட்சுமி** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வாழ்வின் உயர்வுக்கு உற்ற துணையாய் விளங்கும் என் தாய், தந்தை, சகோதர, சகோதரிகளுக்கும், உறவினர்களுக்கும், தோழிகளுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். முனைவர் பட்ட ஆய்வுக்கு முனைந்து செயல்பட வைத்த என்னுயிர் கணவருக்கும் குழந்தைகளுக்கும் நன்றிசொல்லக் கடப்பாடுடையேன் ஆவேன்.

இந்த ஆய்வேட்டை நன்முறையில் கணிப்பொறியில் வடிவமைத்துக் கொடுத்த **தஞ்சை நாகு கணிப்பொறி நிறுவனத்தார்க்கும்** என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரா.கவிதா**

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | - | அகநானூறு |
| உ.ஆ. | - | உரையாசிரியர் |
| கலி. | - | கலித்தொகை |
| கு.கலி. | - | குறிஞ்சிக்கலி |
| குறள். | - | திருக்குறள் |
| தொல். | - | தொல்காப்பியம் |
| நூ. | - | நூற்பா |
| ப. | - | பக்கம் |
| ப.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| பக். | - | பக்கங்கள் |
| பா. | - | பாடல் |
| பா.கலி | - | பாலைக்கலி |
| புறம். | - | புறநானூறு |
| பொருள். | - | பொருளதிகாரம் |
| மு.கலி. | - | முல்லைக்கலி |
| மேலது. | - | மேலே குறிப்பிட்ட நூல் |
| p. | - | page |

# பொருளடக்கம்


| இயல் | | | பக்கம் |
|---|---|---|---|
| | | முன்னுரை | 1 |
| ஒன்று | : | நிகழ்வுகள் - ஒரு பார்வை | 6 |
| இரண்டு | : | தலைவன், தலைவி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள் | 25 |
| மூன்று | : | தோழி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள் | 85 |
| நான்கு | : | புற இலக்கியங்களில் நிகழ்வுகள் | 121 |
| ஐந்து | : | சமுதாய நிகழ்வுகள் | 184 |
| | | முடிவுரை | 229 |
| | | துணைநூற் பட்டியல் | i |

# இயல் 5

# சமுதாய நிகழ்வுகள்

*சமுதாயம் என்பது ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை முறையைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமூகம் எனப்படும். இது மக்கள் ஒன்றுபட்ட பொது எண்ணத்துடன் கூடிய சட்டத்திட்டங்களைக் கருத்தில் கொண்டு ஒன்றுகூடி ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறித்து அமைவதாகும். இச்சமுதாய நிகழ்வுகளை இவ்வியல் ஆராய்கிறது.*

## சமுதாயம் பொருள் விளக்கம்

*மக்கள் இனம் ஒன்று சேர்ந்து வாழும் அமைப்பினைச் சமுதாயம் எனச் சுட்டலாம்.*

> தொடக்க காலத்தில் ஆதிமனிதர்கள் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும், மரப்பொந்துகளிலும் விலங்கோடு விலங்காக வாழ்ந்த சூழ்நிலைமாறி ஒன்றாக ஓரிடத்தில் வாழத் தலைப்பட்ட போதே சமூகம் (Society) எனும் அமைப்பு உருவானது[1]

*என்று சமுதாய வளர்ச்சியின் படிநிலையினை மு.அருணாசலம் என்பவர் எடுத்துக்காட்டுகிறார்.*

> சமுதாயம் எனும் சொல் ஓர் இனத்தையோ நாட்டையோ உலகமக்கள் அனைவரையுமே குறிக்கலாம். ஒரு சிறு நிலப்பரப்பில் ஒரு பொதுவாழ்க்கை முறையைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும்[2]

*எனச் சமுதாய அமைப்பு குறித்து வாழ்வியற்களஞ்சியம் விளக்கம் தருகின்றது.*

> சொசைட்டி என்பது மன்னயம், சமுதாயம், கூட்டு வாழ்வுக்குழு என்பனவற்றைக் குறிப்பிடுவதுடன் நட்புக்குழு, உயர்குடி வகுப்பு, கூட்டுறவுக் கழகம், சேவைக்குழு என்பனவற்றையும் குறிப்பிடுவதாகும்[3]

*என்று சமுதாயம் குறித்து சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழ் அகராதி கூறுகின்றது.*

> சமுதாயம் என்பது மக்கள் சேர்ந்து வாழ்வதை மட்டும் குறிப்பதன்று. தனி மனிதர்கள் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்துள்ள அமைப்பு முறையையும் குறிக்கின்றது. இவ்வொழுங்கின் அடிப்படையில் இணைக்கப்பட்ட தனிமனிதர்களும், அவர்களைப் பிணைக்கும் உறவுமுறைகளும் இடைவிடாத மாற்றத்துக்குள்ளாகின்றன. இத்தகு சிக்கலான மாறிக்கொண்டே இருக்கும் அமைப்பையே சமுதாயம் என்பர்[4]

*என்று சமுதாயம் குறித்து நா.நளினிதேவி குறிப்பிடுகிறார்.*

### சமுதாயமும் இலக்கியப் படைப்பாளனும்

*இலக்கியங்கள் சமுதாயத்திலிருந்து பிறக்கின்றன. இலக்கியத்தையும், சமுதாயத்தையும் பிரிக்க இயலாதளவில் ஒன்றோடொன்று கலந்து காணப்படுகின்றன. இலக்கியப் படைப்பாளிகள் சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளைக் கூர்மையாகவும், பரந்துபட்ட பார்வையோடும் உற்றுநோக்கி அணுகுகின்றனர். படைப்பாளர்கள் தங்களுக்குரியப் படைப்பின் கருப்பொருளைச் சமுதாயத்திலும், சமுதாயம் சார்ந்த தளங்களிலிருந்தும் பெறுகின்றனர். தாங்கள் வாழ்கின்ற சமுதாயத்தின் நிலைப்பாடுகளைத் தங்கள் படைப்பின் வழியே பிரதிபலித்துக் காட்டுகின்றனர்.*

> இலக்கியப் படைப்பாளன் சமுதாயப் படிப்பாளனாக இருக்கவேண்டும். அவனது சிந்தனை ஊற்று வயிற்றுச் சோற்றுக்காக இல்லாமல் சமுதாய ஏற்றத்திற்காகப் பொங்கிப் பெருக வேண்டும். அவனது புலமை சமுதாய வளமைக்குத் தலைமை உரை கூறும் தகைமை உடையதாய் அமைய வேண்டும். அவனது எழுத்து சமுதாயத்தை அழுத்தும் கொடுமைகளை எடுத்துக்காட்ட வேண்டும். அப்போதுதான் அவன் மக்கள் எழுத்தாளனாக மதிக்கப்பெறுவான்[5]

*என்று படைப்பாளன் சமுதாயத்தின்மீது கொண்டுள்ள ஈடுபாட்டினைக் கவியமுது எனும் நூல் எடுத்துரைக்கின்றது.*

*கவிஞன் தான் காணுகின்ற சமுதாயச் சூழலை மட்டும் தம் படைப்பில் பதிவு செய்யவில்லை. சமுதாய மாற்றத்தை விரும்பும் அவன் சமுதாயத்தில் நடந்தேறி வரும் சீர்கேடுகளை வன்மையாகச் சாடுகிறான். சமுதாயச் சூழலை மாற்றி அமைக்கவும், அந்தந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும்*

விழைகின்றான். தான் விரும்பும் நல்ல சமுதாயம் அமையத் தன் படைப்பு வழியே குரல் கொடுக்கின்றான்.

**சங்க இலக்கியங்களில் சமுதாய நிகழ்வுகள்**

சங்கப் புலவர்களின் முழுப் பார்வையும் சமுதாய நலன்மீது அக்கறை கொண்ட நிலையில் காணப்படுகிறது. சமுதாயத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை உற்றுநோக்கி உள்ளார்ந்து உணர்ந்து நற்செயல்களைச் சிறப்போடும், சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டியும் எடுத்துரைக்கின்றனர். சமுதாயத்தில் மலிந்து வரும் சீர்கேடுகள் களையப்பட்டு நல்ல சமுதாயமாக மீட்டுருவாக்கம் பெறவேண்டும் என்ற கருதுகோளைத் தம் கவிதை வழியே முன்னிறுத்திக் காட்டுகின்றனர். சமுதாயத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளைக் கீழ்காணும் நிலைகளில் பதிவு செய்கின்றனர்.

1. காதல் சிறப்பும் சீர்கேடுகளும்
2. விருந்தோம்பல்
3. மடலேறுதல்
4. நிமித்தங்கள்
5. பெண்ணுணர்வுகள்
6. விளையாட்டுகள்
7. வாழ்வியல் நெறிகள்

என்னும் ஏழு நிலைகள் இவ்வியலில் பகுத்து ஆராயப்படுகிறது.

**காதல் சிறப்பும் சீர்கேடுகளும்**

மனித வாழ்க்கையில் இன்றியமையாத கூறுகளுள் ஒன்று காதல், ஒரு பருவத்தில் ஆணும், பெண்ணும் துணை தேடுவதென்பது மனித உடலியற்படியும், உளவியற்படியும் மிக இயல்பான ஒன்று. காதல் என்பது மனிதனின் கூட்டு வாழ்வுக்கும் மனிதத்தின் தொடர்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. இதனைப் பாரதியார்.

காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்,

காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்
காணமுண்டாம் சிற்பமுதற் கலைக ளுண்டாம்[6]

என்கிறார்.

**காதல் சொல் விளக்கம்**

காதல் என்பதற்கு அன்பு, வேட்கை ஆசை[7]

என்று தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகின்றது.

காதல் என்பது இனக்கவர்ச்சி அடிப்படையில் ஆண், பெண் இருவரிடையே ஏற்படும் அன்பு, நேசம்[8]

என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் தருகின்றது.

ஓர் ஆண் - பெண் இருவரிடையே அன்பானது முகிழ்க்கும்போது காதல் என்று அழைக்கப்படுகிறது. முன்பின் பார்த்திராத இருவரிடையே திடீரெனத் தோன்றும் இக்காதல் தெய்வீகத் தன்மை கொண்டு விளங்குகின்றது. பருவம் கடந்தாலும் கடவாமல் நின்று உருவம் மாறினாலும் அன்பு உள்ளம் மாறாமல் நின்று உள்ளத்து உணர்ச்சிகளுக்கெல்லாம் தலைமை வகுத்து நிற்பது காதலாகும்.

பிறப்பு முதல் இறப்புவரை மனிதருள் ஒன்றெனக்கலந்துவிட்ட ஓர் உணர்வுதான் காதல். அது ஒவ்வொரு பருவத்தினரிடமும் வெவ்வேறு பரிமாணங்களில் வெளிப்படும் என்பதை,

தாய்தன் மீது செலுத்தும் அன்பையும் அரவணைப்பையும் மகன் பின்னாளில் தன் காதலியிடமும் மனைவியிடமும் எதிர்பார்க்கின்றான். அதேபோல் தந்தை தன்மீது செலுத்தும் அன்பையும், பாசத்தையும் பருவமடைந்த பெண் பிறகு தன் காதலனிடமும் கணவனிடமும் எதிர்பார்க்கின்றாள்[9]

என உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு கூறும் கருத்தினை இராஜம் இராஜேந்திரன் என்பார் எடுத்துக்காட்டுகிறார்.

**நற்றிணையில் காதல்**

*தலைமகன் நாள்தோறும் வந்து தலைவியைச் சந்திக்கின்றான். அவன் ஒருநாள் வரவில்லை என்றாலும் தலைவி உயிர் பிரிவது போன்ற துன்பத்தை அடைகின்றாள். ஆனால், அவனுடைய நெடிய தேரின் வருகையை ஊரில் எழும் அலர் தடுத்து நிறுத்துகிறது. இவ்வாறு ஒரு தேர் வருவதற்குக் காரணம் தான் யார் என்று ஊர் அலசி ஆராய்கிறது. இதனை அறிந்த தோழி இது என்ன கொடுமை? என்று மனம் வேதனைப்படுகின்றாள். இதனை,*

. . . . . . . . . . . . . .
கறவினங் கலித்த நிறையிரும் பரப்பின்
துறையிலுந் துஞ்சாக் கண்ணர்
பெண்டிரும் உடைத்திவ் வம்பல் ஊதே[10]

*என்ற நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கின்றது. அலர்வாய்ப் பெண்டிரின் அருளற்ற மொழிகளை எண்ணி சினமும் வெறுப்பும் கொண்டு தோழி வருந்துகின்றாள் என்கிறது இப்பாடல்.*

**அன்னை அலைத்தல்**

*கண்டல் மரங்களாகிய வேலி சூழ்ந்த சிறிய குடித்தெருவின் கண்ணே ஒருநாள் ஒருதேர் வருகிறது. நேற்றிரவு ஒருதேர் வந்ததன்றோ? என்று உரையாடி ஊர் முழுவதும் அலராக எழுகிறது. அவ்வலரைக் கேட்டதாய், தன்னையொத்த இளமகளிர் பலரிருக்கத் தன்னையே குறிப்பாகப் பார்த்தாள் என்கிறாள் தோழி. மகள் காதல் வயப்பட்டு இருப்பாளோ என்ற அத்தாயின் பதட்டே இந்தச் சந்தேகத்திற்குக் காரணம். மற்றொரு தாயை, மறுகின் பெண்டிர் சிலரும் கடைக்கண்நோக்கி, மூக்கின் சுட்டுவிரல் சேர்த்து அம்பலாகத் தூற்றுகின்றனர். அதனால் பெரிதும் அச்சமும், அவமானமும் அடைந்த தாய் பருவம் அடைந்த தன்மைகளைக் கோலால் புடைத்துத் துன்புறுத்துகின்றாள். இதனால் நான் அலந்தனென் தோழி என்று தலைவி அவதிப்படுகின்றாள். தலைவியின் வேதனையை உணர்ந்த தோழி அவ்வூரின்மீது தன் கோபத்தைக் காட்டுகின்றாள். இதனைக் கூறும் பாடல்,*

நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் தசினால் யானே
அலர்சுமந்து ஒழிக இவ்வழுங்கல் ஊரே[11]

என்பதாகும். தோழி வெறுப்பினை உமிழ்ந்து தலைவியின் உடன்போக்கிற்கு உடன்படுகின்றாள்.

தலைமக்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்ட ஆசையினால் இரவும் பகலும் குறியிடத்துச் சந்தித்து வருகின்றனர். அதனால் ஊரார் தூற்றும் அலரினால் தலைவி இற்செறிப்புச் செய்யப்படுவாள் என்று அஞ்சுகிறாள் தோழி.

இவள் அலரின் அருங்கடிப் படுகுவாள்[12]

என்று கூறுகின்றாள். தலைவி காவல் மிகுதியால் குறியிடையீடுபட்டுத் தவிக்கின்றாள். அவள் புறம்போகாதவாறு அன்னை இரவும் பகலும் துயிலாது விழித்துக் கொண்டிருக்கிறாள். இதனால்,

பெய்யாது வைகிய கோதைபோல[13]

தலைவியின் மேனி வாடிக் காணப்படுகிறது. பனிநீர்ச் சேர்ப்பன் நாம முதலையின் நடுக்க முறுத்தும் பகைக்கும் அஞ்சாமல் காமமிகுதியால் வரும்பொழுது என் நெஞ்சம், படையோடு பகையரசன் மதிலை முற்றுகையிட்ட காலத்து, காவல் மிக்க எயிலைப் பெற்றிருப்பதால் கலங்காது இருக்கும் நொச்சி வேந்தனைப் போன்று அஞ்சாது இருந்தது. ஆனால் இப்பொழுது நடுயாமத்தில் புள்ளொலி கேட்டாலும், தலைவனின் தேரின் மணியோசையோ என்று மனம் கலங்குகின்றேன் என்கிறாள்.

**விருந்தோம்பல்**

'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்பது பழமொழி. இல்வாழ்க்கையில் இருக்கும் மகளிர் விருந்தினரைப் பேண வேண்டும் என்பதைக் கடமையாக, கற்பின் திறமாகப் போற்றுகின்றனர். தொல் தமிழர்களின் தனித்த அடையாளங்களில் ஒன்று 'விருந்தோம்பல்' என்னும் பண்பாட்டுக் கூறாகும். தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதிலும் விருந்தோம்பல் பண்பாட்டைக் காணமுடிகிறது.

விருந்து என்னும் சொல் புதுமை என்னும் பொருளைத் தருவதாகும் என்பர் தொல்காப்பியர்,

விருந்து தானே புதுவது மேற்றே[14]

என்று குறிப்பிடுகிறார்.

இல்வாழ்க்கையில் வரும் விருந்தினரை ஓம்புவதும், சுற்றத்தாரை உபசரிப்பதும், இரப்பார்க்கு ஈதலும் முக்கிய அறமாகும். விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்று அவர்க்கு இனிய உணவை ஆக்கி மகளிர் விருப்புடன் படைத்தனர். இதனை,

விருந்தயர் விருப்போடு விருந்தினர் ஆசைஇய
முறுவர் இன்நகை காண்கம்[15]

என்று நற்றிணை வரிகள் இயம்புகின்றன.

இரவு நேரத்தில் விருந்தினர் வந்தால்கூட அவரைப் போற்றுவதற்கு மகளிர் பின்னடைவது இல்லை என்பதை,

எல்லிவந்த நல்இசை விருந்திற்கு
கிளர்இழை அரிவை நெய்துழந்து அட்ட
விளர்ஊர் அம்புகை எறிந்த நெற்றி
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே[16]

என்று நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது.

தலைவியின் குணப் பண்புகளைப் பற்றிக் கூறும்போது, தைத்திங்கள், பாவைத் திருமணம் நிகழ்த்துவதும், பெண்ணைக் கொள்வதற்காகச் சிறுசோறு (நிலாச்சோறு) சமைத்து மகிழும் மகளிர் நோன்பின் பயனை கலித்தொகை எடுத்துரைக்கிறது.

சிறுசோறு மடுத்து நீநறு
நூதலவரொடு தக்கது[17]

என்பதில் நிலாச்சோறும் அதனை மற்றோருடன் உண்டு மகிழ்ந்ததையும் காணலாம்.

மருதக்கலியில் தலைவி கூற்றாக வரும் இடத்தில் ஊடல் தீர்க்கும் வாயில்களுள் விருந்தினர் வருகையும் ஒன்றாகும். பரத்தையிடம் சென்று

*மீண்ட தலைவன், தலைவியின் ஊடலைத் தவிர்க்க விருந்துடன் வந்தான் என்பதை,*

விருந்து எதிர்கோடலின் மறப்பல்[18]

*என்ற வரி சுட்டுகிறது.*

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை[19]

*என்று கூறுவது விருந்து பேணலின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.*

*வள்ளுவப் பெருந்தகையும் விருந்தோம்பல் பற்றிக் கூறும்போது, பொருள் நிரம்ப உள்ள காலத்து வெறுமையாவது, விருந்தோம்பலை ஏற்றுக்கொள்ளாது வெறுக்கும் பேதைமையாகும். அது அறிவில்லாதவரிடத்து மட்டுமே உண்டு என்கிறார். இதனை,*

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு[20]

*என்ற குறள்வழி விளக்குகிறார்.*

**மடலேறுதல்**

*சங்க காலத்தில் நிலவிய ஒரு பண்பாட்டு மரபு தான் மடலேறுதல். தலைவன் பனங்கருக்காற் செய்த குதிரைமீது அமர்ந்து, தலைவியின் உருவத்தைப் பனவோலையில் வரைந்து கைப்பிடித்துப் பல்லோர் அறிய ஊர் நடுவே நாற்சந்தியில் நிற்பான். பூளைப்பூ, ஆவாரம்பூ, எருக்கம்பூ ஆகியவற்றால் தொடுத்த மாலையை அணிந்து தலைவி மீது கொண்ட காதலை ஊரார் அறியும் வண்ணம் தெரிவிப்பான். பின்னர் தலைவனுக்குத் திருமணம் நிகழும்.*

**பெருந்திணை**

*மடலேறுதல் பெருந்திணைப் பாற்படும் என்பர் தொல்காப்பியர். அவர்,*

ஏறிய மடம்திறம்[21]

என்கிறார். தொல்காப்பியரும் சங்கப்புலவரும் பெருந்திணையை மிகுந்தக் காமமாக வகுத்துப் பாடியுள்ளார்.

> ஐந்திணையானது அளவுக்காதல், பெருந்திணையாவது மிகுதிக்காதல், பெரும் என்ற அடை அளவிலும் மிகுதிப்பாட்டை மிகையைக் குறிக்கின்றது. பெரும்மூச்சு பெருங்காற்று, பெருமழை, பெரும்பேச்சு, பெருங்காஞ்சி, பெருவஞ்சி போன்ற தொடர்களை உள்நோக்குக[22]

என்பார் வ.சுப.மாணிக்கனார்.

**ஏறிய மடல்திறம்**

ஐந்திணைக் களவில் தலைவன் தலைவியை நினைத்து அவளுடன் கலந்து இன்பமுற நினைப்பான். தோழி அதற்கு இணங்காமல் சேட்படுத்துவாள். இந்நிலையில் தலைவனின் காமம் முற்றி தான் மடலேறுவதாகத் தோழியிடம் கூறி அச்சுறுத்துவான். உடனே தலைவியைத் தோழி தலைவன்பால் ஆற்றுப்படுத்துவாள்.

தலைவி கிடைக்கப் பெறாமையால் தலைவன் பனைமடலைக் குதிரையாகக் கொண்டும், எருக்கம் பூவைத் தலையில் சூடியும். வீதியில் வருவான் என்பதை,

> மாவென மடலும் ஊர்ப பூவெனக்
> குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப
> சான்றவர்க்கு எல்லாம் கடன்ஆனால் இவ்விருந்த
> சான்றீர் உமக்கு ஒன்று அறிவுறுப்பேன்[23]

என்ற பாடல் விளக்குகிறது. தன்னை விரும்பாத பெண்ணை வேண்டி ஒருவன் மடலேறும்போது அவன் சான்றோர்களைப் பார்த்து விளிப்பது இல்லை. எனவே, மடலேறுதல் ஒத்தகாமம் உடையவர் மாட்டே நிகழும் என்பர்.

**அன்புக் காதலர்கள்**

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் நோக்குகின்றனர். பார்த்தப்பொழுது சிறிதேயாயினும் இருவர் உள்ளமும் காதலால் ஒன்றிவிட்டது. இயற்கைப் புணர்ச்சியும் நிகழ்ந்தது. அதன்பின் தலைவனால் தலைவியைக் காணமுடியவில்லை. இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம்,

*பாங்கியற்கூட்டம் நடைபெற வழியில்லை. இதனால் தலைவன் வேட்கை மிகுதியால்,*

மின்னவிர் நுடக்கமும் கனவும்போல் மெய்காட்டி
என்னெஞ்சம் என்னொடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங்க கரந்தானைத் தலைப்படும் ஆறுஎவன் கொலோ[24]

*என்றும்,*

துளியிடை மின்னுப்போல் தோன்றி ஒருத்தி
ஒளியோடு உருவென்னைக் காட்டி அளியன்என்
நெஞ்சாறு கொண்டான் அதற்கொண்டும் துஞ்சேன்[25]

*என்று கூறி, அவளைத் தலைப்படுதல் கூடுமா எனப் புலம்புகிறான் தலைவன். எனினும் பல்வேறு இடையூறுகளுக்குப் பின் தலைவனும் தலைவியும் மனமொத்த அன்புடையவர்களாக இருப்பதை,*

அன்புறு கிளவியாள் [26]
ஒண்டொடி நோய்நோக்கு[27]
எந்நெஞ்சாறு கொண்டான்[28]
என்நெஞ்சம் இடியஇடைக்
கொள்ளும் சாயல்ஒருத்தி[29]

*என்பதன் வாயிலாக இருவரும் ஒத்த அன்புடைக் காதலர்கள் என்பதை மேற்கண்ட பாடலடிகள் உணர்த்துகின்றன.*

**மடலேறித் தலைவியைப் பெறுதல்**

*தலைவியைக் காண வாய்ப்பில்லாத நிலையில் தலைவனுக்குக் காமம் மிகுதியாகும். தன் உள்ளம் கவர்ந்தவளை ஊரறிய வெளிப்படுத்த வேண்டும் என்று தலைவன் நினைக்கிறான். அதனால் மடலேறுவதைக் கருவியாகக் கொள்கிறான். ஒரு தலைவன் மடலேறித் தலைவியை அடைந்ததாகக் கூறுகிறான். இதனை,*

மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை, அவிரை, எருக்கொடு, பணித்துயாத்து
மல்லல் ஊர் மறுகின்ற கண்இவட்டாடும் இதுஒத்தன்
எல்லீரும் கேட்டிமின் என்ற

படரும் பனைஈன்ற மாவும் சுடரிழை

நல்கியான் நல்கீ யவை[30]

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. எனவே தான் மடலேறித் தலைவியைப் பெற்றதாகத் தலைவன் கண்டோரிடம் கூறுகிறான்.

**பெற்றோர் உடன்படுதல்**

மடலேற்றம் கண்ட ஊர் மக்கள், மகள் இசையும்போது பெற்றோர் குறுக்கிடல் பொருந்தாது; தலைவனின் காதல் மெய்யானது என்று கூறுவர். தலைவியும் தலைவனை அடைய விரும்புகிறாள். இது அன்புடைக்காமம் என்று சான்றோர் பகர்வர். மகளும், ஊராரும், சான்றோரும் ஒப்பும்போதும், தலைவனும் தன் காதலில் உறுதியாக இருக்கும்போதும் பெற்றோர், தாம் விரும்பாவிடினும் தலைவியைத் தலைவனுக்கு மணம் முடித்து வைப்பர் என்பதை,

வருத்தமா ஊர்ந்து மறுசின்கட் பாடத்

திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே

பொருந்தாதோர் போர்வல் வழுதிக்கு அருள்திறை

போலக் கொடுத்தார் தமர்[31]

என்ற பாடல் கூறுகிறது. இப்பாடல் கண்டோருக்கெல்லாம் இரக்கம் தோன்றும்படி தலைவன் மடலேறினான். தெருவிலே தன் காதலைப் பாடினான். இவற்றை எல்லாம் கண்ட கேட்ட அவன் சுற்றத்தார் பாண்டியனுக்கு அஞ்சிப் பகைவர்கள் நிறைகொடுப்பது போல, மடலேறியவனுக்கு அவளை மணம் செய்து கொடுத்தனர் என்கிறது. ஒரு நாட்டை ஆள்பவர், தம்மைவிட வலியவர் படை எடுத்து வந்தால், தம் குடிகளின் நலன்கருதி, திறை கொடுத்தேனும் அமைதி செய்து கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர்,

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறையெறின்

கொள்வர் பெரியார்ப் பணிந்து[32]

என்கிறார். பெருந்திணைத் தலைவன், தன் காதலியை இல்லக் கிழத்தியாக்குவதற்கு மடலேறுதல் என்ற பெருமுயற்சியில் ஈடுபடுகிறான். அதற்காக நாணத்தைக் கைவிடுகிறான். இவையெல்லாம் மிகுசெயல் என்ற அடிப்படையில் இதனை பெருந்திணையாகக் கொள்ளலாம்.

**கோளும் நாளும் பார்த்தல்**

*பழங்கால மக்கள் இயற்கையைத் தெய்வமாகப் போற்றி வாழ்ந்தனர். இயற்கையின் மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. பழக்கவாக்கங்களும் நம்பிக்கைகளும் பண்டையக் காலம் முதல் வாழ்ந்து வந்த மக்கள் வகைவகையாக வகுத்த வழக்கங்களும், நம்பிக்கைகளும் ஒவ்வொரு நாட்டிலும் வேரூன்றிக் கிடப்பனவாகும். இவற்றை மனிதகுலப் பண்பாட்டின் வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் தோன்றக் காரணம் வாழ்க்கைத்தேவை, அச்சம் ஆகியவையே ஆகும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் ஏராளமாகக் காணப்பெறுகின்றன. இதனடிப்படையில் மனித வாழ்வில் நம்பிக்கைகள் தோன்றலாயின. மக்களுக்கு நம்பிக்கை என்பது மூன்றாவது கை என்று கூறுவர். நிமித்தம் அல்லது சகுணம் பார்த்தல் என்பது பாமர மக்களிடம் மட்டுமன்று, படித்த மக்களிடமும் காணப்படுகிறது.*

*தமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் நிமித்தங்களை நாள் நிமித்தம், புள்நிமித்தம், பிறநிமித்தம் என மூவகைப் படுத்துகின்றார். அவர்,*

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்[33]

*என்கிறார். பண்டைத் தமிழ் மக்கள் நாள்களில் சிலவற்றை நல்லநாள், கெட்டநாள் எனக் கொண்டிருந்தனர். விண்மீன்களும், கோள்களும் நிற்கும் நிலைக்கொண்டு நாள்களைக் கணித்தனர். ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார், மாமூலனார், மூலங்கீரனார் ஆகிய சங்கப் புலவர்கள் நாளால் பெயர் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*மக்கள் தங்கள் அகவாழ்வில் நடைபெறும் இன்றியமையாத நிகழ்ச்சிக்கு நாளும் கோளும் பார்த்தனர். களவு மனத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன் இந்த வழக்கத்தைப் பின்பற்றமாட்டான் என்பதை,*

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை[34]

*என்னும் தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கிறது.*

*திருமணம் ஆடவர் மகளிர் வாழ்வில் நிகழும் பெரும் விழாவாகும். நல்ல நாள், நல்ல நேரம் நிமித்தம் பார்த்து மணம் முடித்து வைத்தனர் என்ற செய்தியை,*

திங்கள், சகுடம் மண்டிய துகள்நீர் கூட்டத்துக்
கடிநிகர் புனைந்து கடவுட பேணிப்
படுமண முழவொடு பரூஉப் பணைஇமிழ
வதுவை மண்ணிய மகளிர்[35]

*என வரும் பாடல் சுட்டுகிறது. திங்கள் உரோகினி கூடிய குற்றமற்ற நன்னாளில் திருமணம் நிகழ்ந்தது என்பதை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.*

*தீய கோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற வளைந்த வெள்ளிய திங்களைக் குற்றமற்ற சிறந்த புகழினையுடைய உரோகினி எனும் நாள், மீன் அமைந்த நன்னாளில் திருமணம் நிகழ்ந்தது என்பதை,*

கனையிருள் அகன்ற கவின்பெறுகாலை
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
வதுவை நன்மணம் கழிந்த பின்றை[36]

*என்ற பாடலின் மூலம் அறியலாம். வானியல் கலை பற்றிய முழுமையாக அறிந்த நம் பண்டைத் தமிழ் மக்கள் விண்மீன்கள் ஆகியவற்றின் நிலைகளைக் கொண்டு நல் நிமித்தங்களையும், தீய நிமித்தங்களையும் கணித்துத் இன்பம் தரும் நல்லற வாழ்வு சிறப்புற வேண்டி திருமணங்களை நடத்தியுள்ளனர் என்பது மேற்கண்ட சான்றுகளின் மூலம் அறிய இயலுகிறது.*

**புள் நிமித்தம்**

*சங்க இலக்கியத்தில் 'புள்' என்ற சொல் பறவைகளைக் குறிக்கின்ற சொல்லாகவும், பொதுவான நிமித்தங்களைக் குறிக்கின்ற சொல்லாகவும் பயின்று வருகிறது. 'புள்' என்பதற்கு நிமித்தம் என்ற சிறப்புப் பொருளும் உண்டு என்பதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இவ்விரு பொருளிலும் நிகழும் நிமித்தங்களை அகநானூறு படம்பிடித்துகாட்டுகின்றது.*

அணங்குடை முந்தீது பரந்த செறுவின்
உணங்கு திறம் பெயர்த்த வெண்கல் அமிழ்தம்

குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் ஆடவர்[37]

என்ற பாடல் உப்பினை எடுத்துச் செல்வோர் நன்னிமித்தம் பார்க்கின்ற வழக்கத்தினை உடையவராய் இருந்தனர் என்பதையும், இப்பாடலில் 'புள்' என்ற சொல் நிமித்தம் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளன. தற்காலத்திலும் இரவு நேரங்களில் உப்பை பிறர்க்குக் கொடுக்கும் வழக்கம் பெரும்பான்மையான மக்களிடம் இல்லை என்பதை அறியலாம்.

'நம்பிக்கை' என்பது பன்னெடுங்காலமாக மக்கள் வாழ்வில் இருந்து வந்துள்ளதை அகநானூறு சுட்டிக்காட்டுகிறது. நம்பிக்கைகள் எழக்காரணமாய் இருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் மக்களிடம் நம்பிக்கை இருப்பது உண்மையாகும். இன்றைய சமுதாயம் அறிவியல் வளர்ச்சியினால் மாபெரும் மாற்றத்தைக் கண்டாலும் மக்களிடம் காணப்பெறும் நம்பிக்கைகளில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை என்பதை சமுதாயத்தில் நிகழும் நிகழ்வுகளின் மூலம் அறியலாம்.

**பெண்ணுணர்வுகள்**

தொல்காப்பியர் பெண்களுக்குரிய இயல்புகளாக அச்சம், நாணம், மடன் என்ற முப்பண்புகளையும் எக்காலத்தும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். இதனை,

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப[38]

என்ற நூற்பாவால் கூறுகிறார். எனினும் தொல்காப்பியர் காலச் சமுதாய வழக்கம் சில சங்ககாலத்தில் வேறுபட்டும் மாறுபட்டும் உள்ளன என்பதற்கு ஔவையார், ஆதிமந்தியார், நச்செள்ளையார், காக்கைபாடினியார் முதலிய பெண்பாற் புலவர்களின் பாடல்களைச் சான்றாகக் கொள்ளலாம்.

**தலைவி தோழியிடம் கூறுதல்**

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாளாகித் தன் துன்பத்தை வெளிப்படுத்த இயலாதவாறு ஆற்றியிருக்க வேண்டும் என ஊரார்

*வலியுறுத்தும்போது தலைவி தன்னிலையைப் புலப்படுத்த எதிர்மறுத்துரைக்க முயல்கிறாள்.*

முட்டுவென்கொள் தாக்கு வேன்கொல்
ஓரென் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவுவேன் கொல்
அலமர லசைவளி அலைப்பவென்
உயவு நோயறியாது துஞ்சுமூர்கே[39]

*என்ற பாடல், தலைவன் வரைவிடை வைத்துப் பிரிய என்னை ஆற்றியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் இவ்வூரார்க்கு என் ஆற்றாமையை எவ்விதம் வெளிப்படுத்துவேன் என்று கூறுகிறாள். தன் உணர்வுகள் ஊரார்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் ஒரு தலைவி தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முயல்வதைக் காணமுடிகிறது. பெண் தன் காதல் உணர்வினை வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கும் அன்றைய சமுதாய மரபினை சங்ககாலத் தலைவி உடைத்தெறிய முற்படுகிறாள் எனலாம்.*

**தலைவி தோழியிடம் கூறுவாளாய் தலைவன் கேட்பக் கூறுதல்**

நெடுவரை மருங்கிற் பாம்புட இடிக்கும்
கடுவிசை யுருமின் கழுறுகுர லளைஇக்
காலொடு வந்த காமஞ்சூள் மாமழை
ஆரளி யிலையோ நீயே பேரிசை
இமயமுந் துளைக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரி ∴தெவனே[40]

*என்ற பாடலில் இடியும் காற்றுமாக வந்த மழையே, உனக்கு இரக்கம் இல்லையோ, உன்னால் இமயத்தையும் அசைக்க முடியும். அப்படிப்பட்ட வலிமை உடையநீ துணையற்றப் பெண்களிடம் உன் வலிமையைக் காட்டலாமோ என்று தலைவி கேட்பதாக உள்ளது. இது பெண்ணின் காதல் உணர்வை வெளிப்படுத்துகிறது. தலைவி தலைவன் வரும் வழியின் துன்பத்தை நினைத்து அஞ்சுகின்றாள். அஞ்சுவதற்குரிய செயலை விடுத்துத் திருமணம் செய்துக்கொண்டு வாழ விரும்புவதை அவளது சொற்கள் குறிப்பால் உணர்த்துகின்றன.*

### தலைவன் தன் நெஞ்சிடம் கூறுதல்

நல்லுரை இகந்து புல்லுரை தாஅய்ப்
பெயல் நீர்க்கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கள் வெளம் நீந்தி
அரிது அவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூசலுயர் கோட்டு
மகவுடை மந்திபோல
அகனுறத் தழிஇக் கேட்டுனர் பெறினே[41]

என்ற பாடல் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைவன் தலைவியை மணந்து கொள்ள காலநீட்டிப்புச் செய்கிறான். களவுக் காலத்தில் கூடுதல் வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ள தன் நெஞ்சிடம் பெறுதற்கு அரியது என்பதை அறிந்தும் பெற விரும்புதல் என்பது பசிய மண்கலத்தில் பெய்த நீரைப்போன்று அழிவினை ஏற்படுத்தும் என்கிறான். மேலும் தன் மனப்போராட்டம் பெரிதாகின்றது. உயர்ந்த மரக்கிளையில் தன் குட்டியைத் தழுவிக் கொள்ளும்பெண் குரங்கு போல நீயும் தலைவியைத் தழுவக்கூடும். எப்போதெனில் தலைவி உன் சொற்களைக் கேட்கும்பொழுது, என்று தலைவன் தன் நெஞ்சிடம் கூறுகின்றான். களவுக் காலத்தில் தலைவியுடன் கூடி இன்பம் துய்த்து பழிச்சொற்களுக்கு ஆளாவதைவிட அவளை மணந்து கொண்டு கற்புக்காலத்தில் இன்புற்று வாழ்வதே சிறந்தது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

மேலும் ‘அகனுறத் தழீஇ கேட்குநர் பெரினே’ என்று தலைவன் குறிப்பிடுவதால் தலைவி அவனுடைய பேச்சைக் கேட்கவில்லை என்பது புலனாகிறது. அவளை வற்புறுத்த விரும்பாத தலைவனின் நெஞ்சமும் வெளிப்படுகிறது.

### தோழி தலைவனிடம் கூறுதல்

தலைவியை உடன்போக்கு அழைத்துச் செல்ல தோழி வலியுறுத்துகிறாள். ஏனெனில் தலைவியின் நலனை உயிராகக் கருதுபவள் தோழி ஆவாள். இதனை விளக்கும் பாடல் பின்வருமாறு,

நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடாததாகும்
கவணை அன்ன பூட்டு பொருதசாஅ
உமினெருத் தொழுகைத்தோடு நிரைத்தன்ன
முளிசினை பிளக்கு முன்பின்மையின்
யானை கைமடித் துயவும்
கானமும் இனியவாழ் நும்மொடு வரினே[42]

என்பது பாடல். இப்பாடல் நீரில் உள்ள குவளை மலர் வெப்பக்காற்று வீசிய இடத்தும் வாடாது இருப்பது போல, தலைவி உன்னுடன் வருவாளாயின் கடத்தற்கரிய பாலைநிலமும் இனியதாகும் என்று தோழி தலைவனிடம் கூறுவதாக அமைகிறது. நீர் குளிர்ச்சியைப் பெற்றிருப்பது போலத் தலைவி இனிமை தரும் இயல்பினைப் பெற்றவள் என்பது எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

நீரில்லாவிட்டால் குவளைமலர் வாடிவிடும். அதுபோல் தலைவாகிய நீ இல்லாவிட்டால் தலைவி வாடிவிடுவாள். எனவே உன்னுடன் அழைத்துச் செல்வாயாக என்று துணிச்சலாகத் தோழி கூறுகிறாள். தலைவி தலைவனைச் சார்ந்து இருக்கும் நிலை இப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கட்டுவிச்சியிடம் குறி கேட்கும் நிகழ்வு**

மக்கள் தங்கள் வாழ்க்கையில் நேரும் சில நிகழ்ச்சிகளின் உண்மையை அறிவதற்கும் மேல் நிகழ்வதை அறியவும் குறி கேட்டல், நேர்ந்த துன்பங்களுக்குச் சந்தி செய்தல் போன்ற வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இக்குறி கேட்பதற்குக் ‘கட்டுவிச்சி’ என்னும் குறி சொல்லும் பெண்மணியை அழைத்து வினவுவர். கட்டுவிச்சி வெள்ளிப்பூண் கட்டிய சிறுகோல் தாங்கிய கையுடன் இருப்பாள். குறி கேட்பவள் முறத்தில் நெல்லைக் கொண்டு வந்து கொடுக்க குறி சொல்லுபவள் முறத்தில் உள்ள நெல்லைக் கையில் அள்ளி எண்ணி, ஒற்றைப்படை, இரட்டைப்படையாக அமைவதைக் கொண்டு சில நிமித்தங்களை அறிந்து கூறுவது மரபாக இருந்துள்ளது. குறி சொல்பவள் பெரும்பாலும் குறவர் மகளிராக இருந்துள்ளனர்.

அகவன் மகளே அகவன் மகளே
மனவு கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவன்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே[43]

*என்ற பாடலின் வழியாகத் தோழியின் மதிநுட்பம் புலப்படுகிறது. கட்டுவிச்சியிடம் தோழி தலைவனுடைய மலையைப் புகழ்ந்து மீண்டும் மீண்டும் பாடச் சொல்வதன் வாயிலாகத் தலைவியின் காதலைத் தாய்க்கு குறிப்பாக உணர்த்துகிறாள். இந்தப் பாடலின் மூலம் தலைவியின் காதலை நேரடியாக வெளிப்படுத்தக் கூடாது என்ற மரபை மீறாமல் குறிப்பால் உணர்த்துவது குறிப்பிடத்தக்கதாகும்.*

**உடன்போக்கு செல்வதை ஏற்கும் நிகழ்வு**

*அக்காலத்தில் தலைவனுடனான திருமணத்திற்குச் செவிலி, நற்றாய், உறவினர்கள் மறுக்கும் நிலையில் தோழியின் உதவியுடன் தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிடுவாள். இதனால் உடன்போக்குச் சென்ற காலத்தில் தலைவி மீது வெறுப்பாக உள்ளவர்கள் சிறிது காலத்திற்குப் பின் மனம்மாறி அவளை ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு இருந்துள்ளது என்பது பின்வரும் பாடல் மூலம் அறியப்பெறுகின்றது. அப்பாடல்,*

பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொல் மூதாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலு லீர்க்கோசர் நன்மொழி போல
வாயாகின்றே தோழியாய் கழற்
சேயிலை வெவேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே[44]

*என்பதாகும். இப்பாடல் களவு வாழ்க்கையில் பெற்றோர் தனது மகளின் காதலுக்கு உடன்படாதபோது அவள் விரும்பிய ஆடவனுடன் உடன்போக்கில் ஈடுபட்டாள் என்பதை உணர்த்துகிறது. இந்த உடன்போக்கை அக்காலச் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது எனலாம்.*

**கற்பு நிலையில் கூறுதல்**

*கற்புக்காலத்தில் நிகழும் சமுதாய நிகழ்வுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன,*

1. *தலைவி தோழியிடம் கூறும் நிகழ்வு.*
2. *தலைவன் தோழியிடம் கூறும் நிகழ்வு.*
3. *பரத்தை பாங்காயினரிடம் கூறும் நிகழ்வு*

*என்பனவாகும்.*

**1. தலைவி தோழியிடம் கூறும் நிகழ்வு**

*வினையே ஆடவர்க்கு உயிர். மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என்பதற்கேற்பத் தலைவி தலைவன் பிரிவால் ஏற்படும் துன்ப நிகழ்வைத் தோழியிடம் கூறுவது மரபாக உள்ளது. இதற்கு,*

வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றலார்க்கும்
மலையுடை யருஞ்சுர மென்ப நம்
முலையிடை முனிநர் சென்ற வாறே[45]

*என்ற பாடல் சான்றாகும். இப்பாடல் தலைவனையே நினைத்து வாழும் தலைவி அவன் பொருள்வயிற் பிரிந்தபொழுது சென்ற வழியின் நிலையை நினைத்து வருந்தி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவி தலைவனின் பிரிவை நினைத்து வருந்தவில்லை என்றும், அவன் சென்ற சுரவழியை நினைத்து வருந்துவதாகக் கூறுகிறாள். தலைவன் தன் மார்பிடத்தே துயிலுதலை வெறுத்தவர் இப்பொழுது அவர் சென்றவழி வெப்பமிக்க காற்று வீசுதலால் வாகையினது நெற்றுக்கள் ஒலித்தற்கு இடனாகிய கடத்தற்கரிய பாலை வழியை எவ்வாறு கடந்து சென்றாரோ! என்பதை நினைத்தே வருந்துகின்றேன் என்கிறாள். இப்பாடலில் தலைவியின் அன்பின் மிகுதியைக் காணமுடிகிறது. தலைவன் தலைவியிடம் சொல்லாமல் பிரிந்து போனதை நினைத்துத் தலைவி வருந்துவதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.*

செல்வா ரல்லரென் றியானிகழ்ந்தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந்தனரே

ஆயிடை இருபே ராண்மை செய்த பூசல்

அல்ல னெஞ்ச மலமலக் குறுமே[46]

*தலைவி தலைவன் பிரிந்து செல்லமாட்டான் என்று நினைத்திருந்த காலத்தில் அவன் பிரிவை அறிவித்தால் உடன்படமாட்டாள் என்று எண்ணி தலைவியிடம் சொல்லாமல் தலைவன் பிரிந்து செல்கிறான். இரு வாள் கொண்டு நிகழ்த்தும் போரினால் ஏற்படும் விளைவுகள் எவ்வாறு மனத்தை வருத்துமோ அதைப்போல என் நெஞ்சமும் வருந்துகின்றது என்கிறாள் தலைவி. இவர் நம்மைப் பிரியார் என்னும் ஊக்கத்தையும் இவளுக்கு சொல்லாமலே போவோம் என்னும் துணிவையும் ஆண்மை என்றார்.*

## 2. தலைவன் தோழியிடம் கூறும் நிகழ்வு

*பொருள்வயிற் பிரிந்து மீண்டு வந்த தலைவன் தலைவியைப் பிரிந்த காலத்தில் இருந்த மனநிலையைக் கூறுவதாக இப்பாடல் அமைகிறது. தலைவியைப் பிரிந்தது துன்பம் தருவதாக இருந்தாலும் பொருள்தேடப் பிரிவது உலக இயல்பு என்கிறான். சான்றாக,*

உள்ளினெ னல்லெனோ யானே உள்ளி

நினைத்தனெ னல்லனோ பெரிதே நினைத்து

மருண்டென னல்லனோ உலகத்துப் பண்பே

நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை

இறைத்துணச் சென்றற் றாஅங்

கனைபெருங் காமமீண்டு கடைக்கொளலே[47]

*என்ற பாடலைக் கூறலாம். உயர்ந்த மரக்கிளையைத் தொட்டுச் சென்ற வெள்ளம் பின்னர் இறைக்கும் அளவுக்குச் சென்றதுபோல தான் தலைவியை நினைத்து வருந்தினால் காமநோய் பெருகுகிறது. நினைத்தேன் மீண்டும் மீண்டும் நினைத்தேன் உலக இயல்பை எண்ணி மயங்கினேன் என்று தலைவன் கூறுவதன் மூலம் தலைவிமீது தலைவன் இடையறாத அன்புகொண்டவன் என்பதும் பொருள்தேடச் செல்லுதல் சமுதாய நிகழ்வுகளில் ஒன்றாகும் என்பதையும் இப்பாடல் சுட்டுகிறது.*

## 3. பரத்தை பாங்காயினோரிடம் கூறும் நிகழ்வு

*சங்ககாலச் சமுதாயத்தில் பரத்தையர் ஒழுக்கம் ஏற்றுக்கொண்ட ஒன்றாகவே இருந்துள்ளது. இது பற்றிப் புலவர்கள் பாடியிருக்கின்றனர். பல*

ஆடவரைத் தழுவும் பெண்களைப் 'பரத்தையர்கள்' என்று கூறியிருக்கின்றனர். பல பெண்களைத் தழுவும் ஆடவரைப் பற்றி எதுவும் பதிவு செய்யப்படாமையால் சமூகத்தில் அதிகாரம் ஆடவர்களிடம் இருந்துள்ளது என்பதை,

> பரத்தையிடம் சென்று வந்த கணவனுக்கு வீட்டினுள் நுழைய இசைவு கொடுத்தல் (வாயில் நேர்தல்) இசைவு கொடாமை (வாயில் மறுத்தல்) என்ற இரு துறைகளும் மருதத்திணையில் பெருவரவின. இத்துறைகள் காட்டும் குறிப்பு என்ன ? பரத்தை வழிப்பட்ட பின்பு ஒரு தலைவன் தன் வீட்டிற்குள் புக அஞ்சுகின்றான். புகும் உரிமையை இழக்கின்றான். கேட்டுப் புகவேண்டிய நிலைக்குத் தாழ்கின்றாள்[48]

என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகிறார்.

ஒரு தலைவி வாயில் வேண்டி வந்த தலைவனை வீட்டிற்கு நுழைய அனுமதி மறுக்கின்றாள். அப்போது மானமுடைய தலைவன் திருந்துவதற்கு இவ்வாயில் மறுப்பு போதாதா என்று பரத்தையிற் பிரிவு பற்றித் தலைவி குறிப்பிடுகிறார். அந்நிலையில் தலைவியை நோக்கிப் பரத்தை கூறும் பாடல் பின்வருமாறு,

> கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி
> பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
> யாம.். தயர்ம சேரும் தான.்.து
> அஞ்சுவது உடையள் ஆயின் வெம்போர்
> நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
> முனையான் பெருநிரை போலக்
> கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே[49]

என்ற பாடலில் தலைவியின் இல்லற வாழ்க்கையைப் பரத்தை பழித்துத் தலைவிக்குப் பாங்காயினோரிடம் கூறுகிறாள். நானும் தலைவனும் நீர் விளையாட்டு விளையாடச் சென்றோம். தலைவி அதற்கு அஞ்சுவாளாயின் எழினியின் பசுக்கூட்டத்தைப் பகைவர் காத்தல் போல நீயும் உன் தலைவனைத் தனது சுற்றத்தோடு சேர்ந்து பாதுகாத்துக் கொள்வாயாக என்கிறாள் பரத்தை. தலைவனைக் காத்தல் தலைவியின் கடமையாகும் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

தலைவி தன்னைப் புறங்கூறினாள் என்பதைக் கேட்ட பரத்தை தலைவன் தன்னிடம் மிகுந்த அன்பு கொண்டவன் என்றும் தலைவியிடம் அன்பு கொண்டவன் அல்லன் என்று கூறுவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

அரிற்பவர்ப் பிறம்பின் வரிபுப்ற நீர்நாய்
வாளை நாளிறை பெறூஉம் ஊரன்
பொற்கோல் அவிர்தொடி நற்கெழு தகுவி
எம்பிறம் கூறும் என்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோள் எள்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன அவ்விரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மண கொளற்கிவரும் மள்ளர் போதே[50]

என்பது அப்பாடலாகும். ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடும் ஆட்டம் துணங்கையாகும். அக்கூத்தில் தான் விரும்புகின்ற பெண்ணுக்குக் கைகொடுத்து ஆடுவது ஆடல் மரபு. அப்படி ஆடப்படும் துணங்கைக் கூத்தில் தலைவன் என்னையே விரும்பி என்னுடன் சேர்ந்து ஆடுவதை நீங்கள் பார்ப்பீர்கள் என்று பரத்தை கூறுகிறாள். சமூகத்தில் தலைவிக்கே மதிப்பும் மரியாதையும் உண்டு. பரத்தையர்கள் பெண்களாக இருப்பினும் குற்றம் இல்லாதவர்களாக இருப்பினும் சமூக மதிப்பு என்பது அவர்களுக்கு இல்லை எனலாம். பெண்களுக்குக் காதலிக்கும் உரிமை இருந்தாலும் காதலை ஏற்றுக் கொள்ளாத மனநிலையும் அக்காலம் முதல் இக்காலம் வரை நிலவி வருகிறது. எனினும் பெண்கள் சங்ககாலத்தில் கல்வி அறிவில் மேம்பட்டு இருந்ததையும் பாடல்கள்வழி காணமுடிகிறது. சில நேர்வுகளில் பெண் உணர்வுகளை மதிக்காத சூழல் சங்ககாலத்தில் நிலவியதையும் அறியமுடிகிறது.

ஔவையார் பெண் புலவராக இருந்ததனால் பெண்களின் உணர்வுகளை மதித்துப் பெண்களின் நிலையை அவரது பாடல்களின் வழியாக உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளார். ஔவையாரின் பாடல்கள் அக்கால மகளிரின் நிலையைப் பெரிதும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

## விளையாட்டுகள்

சங்க காலத்தில் அம்புலியை அழைத்தல், தழூஉ விளையாடுதல், சிறுதேர் உருட்டல், ஊசல், சிற்றில் இழைத்தல், எதிரொலி கேட்டல், அலவன் ஆட்டம், சூதாட்டம், பந்து விளையாடுதல், கவண் வீசுதல், ஏறுதழுவுதல் போன்ற விளையாட்டுகள் இடம்பெறுமாற்றைக் காணலாம்.

## அம்புலியை அழைத்தல்

தலைவி குழந்தைக்கு நிலாவைக்காட்டி சோறு ஊட்டுகிறாள். அப்போது நிலவின் அழகை எடுத்துக் கூறல், நிலவினைப் பற்றிக் கதைகள் சொல்லல், நிலவைப் பூமிக்கு இறங்கி வந்து குழந்தையுடன் விளையாட வேண்டல் முதலிய நிகழ்வுகள் நடக்கின்றன. அம்புலியை குழந்தைகளுடன் விளையாட வருமாறு அழைத்து மகிழ்கின்றனர். இந்நிகழ்வு தற்காலத்திலும் நடைபெறுகிறது எனலாம்.

ஐய திங்கட் குழவி வருக எனயான் நின்னை
அம்புலி காட்டல் இனிது[51]

என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

## தழூஉ விளையாடுதல்

தழூஉ சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு என்று தெரிகிறது. சிறுவர்கள் பலரும் சேர்ந்து இருமணல் செறிந்தஅகன்ற தெருவிலே ஓடிப்பிடித்து விளையாடுவர். இதில் ஒருவர் பிடிக்க மற்றவர்கள் அவர் பிடிக்கு அகப்படாமல் ஓடவேண்டும். பிடிப்பட்டவர் யாரோ அவரைக் கட்டித் தழுவிப் பிடிப்பதுதான் தழூஉ விளையாட்டு என்பதாகும். இதனை,

இணையர் தழூஉ ஆடும் அக்கர்வாய்
வயன் தெரு[52]

என்ற அடிகள் சுட்டுகின்றன. இவ்விளையாட்டு தெரு வீதிகளில் விளையாடப்பட்டது எனத் தெரிகிறது. இது சிறுவர் ஒருவரை ஒருவர் ஓடவிட்டுப் பிடித்துத் தழுவுதலால் இந்த விளையாட்டு தழூஉ எனப் பெயர் பெற்றது எனலாம்.

**சிறுதேர் உருட்டல்**

*பழங்காலத்தில் மரக்கட்டைகளில் செய்யப்பட்ட மூன்று சக்கர வண்டிகளை (தேர்களை) உருட்டிச் சிறுவர்கள் மகிழ்ந்தார்கள். புதல்வன்பால் கொண்ட அன்பினால் பெற்றோர் தம் தொழிலையும் மறந்து சிறுதேர் உருட்டி நடைப்பயிலும் காட்சியைக் கண்டு மகிழ்வதை,*

முற்றத்துக்
கால்வல் தேர்கையின் இயக்கி நடைபயிற்றா
ஆலமர் செல்வன்[53]

*என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தன் புதல்வனுக்குத் தேரினைக் கையினால் இயக்கி நடை பழக்கினார்கள். பனக்குரும்பையால் உருளை செய்து இயற்றிய சிறுதேரை மணலில் இழுத்து விளையாடும் சிறுவர்கள் தங்களைக் குதிரைகளாகவும், தலைவன் மகன் அத்தேரில் ஏறிவரும் அரசனாகவும் கற்பித்துக் கொண்டு விளையாடினர் என்று இப்பாடல் கூறுகிறது.*

**ஊசல் விளையாடுதல்**

*தினைப்புனத்திலே கிளியை ஓட்டிக் காவல் புரியச் சென்ற தலைவி அதன் அருகே ஊசலில் அமர்ந்து ஆடினாள் என்பதனை,*

ஊசல் ஊர்ந்து ஆட, ஒரு ஞான்று வந்தானை[54]

*என்ற பாடல் வரி உணர்த்துகிறது.*

**சிற்றில் இழைத்தல்**

*மகளிர் மணலில் சிறிய வீடுகளைக் கட்டி விளையாடுவது சிற்றில்கட்டி விளையாடுவதாகும். வீட்டின் முன்னால் உள்ள மணல் நிறைந்த தெருவிலும், துறையிலும் உள்ள மணல் பரப்பிலும் சிற்றில்கட்டி விளையாடியுள்ளனர் என்பதை,*

தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா[55]

*என்ற வரிகள் சுட்டுகின்றன. தெருவிடத்தே மகளிர் சிற்றில் இழைத்து, உணவு சமைத்து விளையாடும்போது, மணலால் செய்த சிற்றிலைக் காலால்*

சிதைத்தும், கூந்தலில் சூட்டிய மலரினைப் பற்றி இழுத்தும், வரியினை உடைய பந்தை எடுத்துக் கொண்டு விளையாடினார் என்பதை அறியமுடிகிறது.

### எதிரொலி கேட்டல்

களவுக் காலத்தில் தலைவனும் தலைவியும் மலைப்பகுதியில் சந்திக்கும் பொழுது உரத்துக் கூறும் சொற்கள் மீண்டும் எதிரொலிக்கச் செய்கின்றன. அவற்றைச் சுட்டும் பாடலடிகள்,

இலங்குதாழ் அருவியொடு அணிகொண்ட
நின்மலைச்
சிலம்புபோல் கூறுவ கூறும்[56]

என்பதாகும். அருவிகளோடு அழகுடன் விளங்கும் நின்மலையின் மலை அடுக்குகள் கால் சிலம்பு போல், தன்முன் கூறுவனவற்றை அப்படியே எதிரொலிக்கச் செய்கின்றன. தலைவியும் தலைவனும் எதிரொலி கொடுத்து மகிழ்ச்சி அடைந்தனர் என்று கூறப் பெற்றுள்ளது.

### அலவன் ஆட்டம்

நெய்தல் நிலப் பகுதியில் வாழும் சிறுவர்கள் கடற்கரையில் நீர் படிந்த மணற்பகுதியில் உள்ள நண்டுகளைப் பிடித்து விளையாடி மகிழ்ந்தனர். இதனை,

உவறுநீர் உயர்எக்கர் அலவன் ஆடும் அலைவிரி[57]

என்ற பாடலடி சுட்டுகிறது. அலைகள் திரண்டு வந்து ஊறுகின்ற நீரை உடைய இருமணலிடத்து வளையினின்றும் வெளியே வந்து விளையாடித் திரியும் புள்ளிகளை உடைய நண்டுகள் அலைக்கழிக்கும். அந்நண்டுகள் அலைக்கழித்தாலும் அவற்றை விடாமல் பிடிக்கும் ஆர்வத்தைச் சிறுவர்கள் மேற்கொள்வார்கள். இது சூதாடு களத்து பலமுறை தோற்றலும், வேட்கை தவிராது காய்களை உருட்டி இடைவிடாமல் விளையாடும் விளையாட்டோடு ஒப்பிடப்படுகிறது.

**சூதாட்டம் (தாயம்) விளையாடல்**

உவறுநீர் உயர்எக்கர் அலவன் ஆடும் ஆணைவரி
தவல்இல் தன் கழகத்துத் தவிராது வட்டிப்ப
கவறு உற்ற வடுஏய்க்கும்[58]

*என்ற பாடலடிகள் சங்ககாலச் சமுதாயத்தில் சூதாடுதல் விளையாட்டாக ஆடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறது. சூதாட்டம் விளையாடுவோர் மனவேட்கை கெடுதல் இல்லாத தண்ணிதென்று நீங்கிய சூதாடுகளத்து பலமுறை தோற்றாலும் வேட்கை தவிராது காய்களை உருட்ட வடுவுற்ற காய்களைப் போல அலவன் ஆட்டமும் ஒத்துக் காணப்படும். மேலும், தலைவி தலைவனை அடையாத நிலைக்குச் சூதாட்டத்தில் வேண்டிய எண், பெறாதவனுடைய மனம் வருத்தம் பெறும் நிலைக்கு உவமை கூறப்பட்டுள்ளது. சூதாட்டத்தில் பொருளை வைத்து ஆடியுள்ளனர் என்பது, 'உடைப்பொதி இழுத்தான் போல' என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளது.*

**பந்து விளையாட்டு**

*மகளிர் தெருவிடத்தே உள்ள மணலில் சிற்றில் இழைத்து, உணவு சமைத்து விளையாடும்போது மணலால் செய்த சிற்றிலைச் சிறுவர்கள் காலால் சிதைத்தும், பெண்களின் கூந்தலில் சூட்டிய மலரினை இழுத்தும், தாங்கள் விளையாடிய வரியினை உடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடிச் செல்வார்கள் என்பதை,*

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டுஓடி
நோதக்க செய்யும்[59]

*என்ற வரிகள் உணர்த்தகின்றன. மேற்கூறிய விளையாட்டுகளைச் சிறுவர் முதல் ஆடவர் - மகளிர் வரை விளையாடியிருக்கின்றனர். அவர்கள் ஆடிய விளையாட்டுகளைக் கலித்தொகையில் காணமுடிகிறது. இவ்விளையாட்டுகள் வாழ்வோடு இயைந்த விளையாட்டாகவும், மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இருந்துள்ளன. இன்றைய காலம்வரை இவ்விளையாட்டுகள் மக்களால் விளையாடப்பட்டு வருகின்றன.*

**வாழ்வியல் நெறிகள்**

*இலக்கியங்கள் மக்களை மகிழ்வித்தலுடன் அறிவுறுத்தும் செயலையும் செய்கின்றன. மக்கள் வாழ்க்கையில் பின்பற்றும் உயர்நெறிகள், இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன. பண்டைத் தமிழரின் வாழ்க்கைமுறை குறிக்கோள் வாழ்க்கையாகும். நல்லது செய்தல் ஆற்றாராயினும் அல்லவை செய்யத் துணியாத தூய்மையான எண்ணம் கொண்டவர்களாக வாழ்ந்துள்ளனர். புகழெனின் உயிரையும் கொடுக்கத் தயங்காதவர்கள். பழியெனின் இவ்வுலகைக் கொடுத்தாலும் பெற விரும்பாதவர்கள். வறுமையிலும் செம்மையாக வாழத் தலைப்பட்டவர்கள். எப்படியும் வாழலாம் என்பதன்றி இப்படித்தான் வாழவேண்டும் என்ற உயர்ந்த நெறியை உள்ளத்தால் கொண்டவர்கள்.*

*வாழ்வின் அடிப்படையாக அமைந்த குறிக்கோள்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றாகும். ஆண், பெண் அன்பு வாழ்க்கையைத் தொல்காப்பியர்,*

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை[60]

*என்று குறிப்பிடுகிறார்.*

*அறத்தினால் பொருளாக்கி, அப்பொருளால் இன்பம் எய்துதல் சிறப்பாகும். இதனை உணர்த்தவே ஆசிரியர் இன்பத்தை முதலில் கூறி அதைப் பெறுவதற்குக் காரணமானப் பொருளை அடுத்துச் சொல்லி, அறத்தை இறுதியில் கூறினார்.*

*மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அவரவர் நிலைக்கேற்பச் சில வாழ்வியல் நெறிகளைக் கொண்டிருத்தல் இயல்பாகும். அவ்வியல்புகளில் குறிப்பிடத்தக்கனவாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.*

1. *இல்வாழ்க்கை*
2. *கணவனைப் பேணுதல்*
3. *இன்சொல் கூறல்*
4. *சோம்பல்*

*என நான்கு நிலைகளில் வாழ்வியல் நெறிகள் கூறப்பெறுகின்றன.*

**1. இல்வாழ்க்கை**

இல்வாழ்க்கையில் ஈடுபடும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இன்றியமையாதது ஒத்த அன்பாகும். ஒத்த அன்பே காதலெனப்பட்டது. இல்வாழ்க்கையில் இருவரும் பிரியாது கூடிவாழும் வாழ்க்கையைப் பெரும்பேறாகக் கருதினர்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை[61]

என்று குறள் கூறுகிறது. வறிய வாழ்க்கையினும் பிரியா வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று சங்கத் தமிழர் எண்ணினர். ஒன்றன் கூறாடையை உடுத்தினாலும் மனம் ஒருமித்து வாழ்ந்தனர்.

இளமையும் காமமும் பொருந்தப் பெற்றவர்; அதன் பயனை நுகராது நாளைப் போக்கின் கழியும் இளமையை மீட்பது இயலாது என்று உணர்ந்து வாழ்ந்தவர்கள். இத்தகு அன்பான வாழ்வை நற்றிணை,

மாரிப் பித்திகத்து ஈரிதழ் அலரி
நறுங்காழ் ஆரமொடு மிடைந்த மார்பிற்
குறும்பொறிக் கொண்ட கொம்மையம் புகர்ப்பிற்
கருங்கண் வெம்முலை ஞெமுங்கப் புல்லிக்
கழிவதாக கங்குல்[62]

என்று கூறுகிறது. இப்பாடல் காதலர் கூடும் கூட்டம் ஒருவரோடு ஒருவர் மெய்யுறு புணர்ச்சியில் ஈடுபட்டதைப் புலப்படுத்துகிறது. தலைவியை விட்டுப் பிரியாது கழிப்பெருங்காம நுகர்ச்சியைப் பெற்றனர் என்பதை,

வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை
போழப் படாஅ முயக்கு[63]

என்று வள்ளுவமும் கூறுகிறது.

எனவே இன்பத்திற்குரிய காலம் இளமை என்பதும் அது கழிந்தால் மீண்டும் இயலாது என்பதும் இதன்மூலம் வலியுறுத்தப்படுகிறது. அத்துடன் இன்ப நுகர்ச்சியில் வாய்ப்பு நேரும்போது காலந்தாழ்த்தாது பெற்றால் வாழ்க்கை சிறக்கும் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## 2. கணவனைப் பேணுதல்

பண்டைத் தமிழ்ப் பெண்கள், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரெனக் கொண்டனர். உணவு சமைத்துப் பரிமாறி அவன் விருப்புடன் உண்பது கண்டு பெருமகிழ்வெய்தினர். கணவனுடைய இல்லத்தில் வறுமை வந்த காலத்தும் அவனோடு இயைந்து அவனுக்குத் தொண்டு செய்து வாழ்தலையே கடமையாகக் கொண்டனர் என்பதற்குப் பல சங்கப் பாடல்கள் சான்று பகருகின்றன.

தலைவி பெற்றோரின் வீட்டில் செல்வச் செழிப்பில் வாழ்ந்தவள். ஆயினும் கணவன் வீட்டில் வறுமை வந்த போதும் தலைவனை விட்டுப் பிரிந்து செல்லும் நிலையில் இருக்கவில்லை. இம்மை மாறி மறுமையாகினும் நீயாகியர் என் நெஞ்சு நேர்பவளே! என்று ஒன்றி வாழ்ந்தனர். வறுமையை நினைத்து கலங்கவில்லை என்பதற்குச் சான்றாக,

> கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
> கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
> ஒழுகுநீர் நுணங்கறல் போல
> பொழுதுமறுத்து உண்ணுஞ்சிறுமது கையளே[64]

என்ற பாடலைக் கூறலாம். இப்பாடலில் தன்னை மணந்து கொண்ட கணவனின் குடி வறுமை அடைந்ததென்று வருந்தவில்லை. அவள் பிறந்தகத்தில் தந்தை கொடுத்த கொழுவிய சோற்றினையும் நினையாளாயினாள். நீர் ஒழுகும் பாதையிலே வளைந்து வளைந்து கிடக்கும் கருமணலைப் போலப் பொழுதிற்கு உண்பதையும் கைவிட்டாள். தன் கணவன் குடிநிலைக்கேற்றபடி ஒழுகுவளாய்த் தானும் உண்டு வாழும் வன்மை கொண்டவளாக விளங்குகிறாள் என்பது எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

பெண்கள் தம் கணவனின் வருவாய்க்கேற்ப வாழ்ந்து இல்லறம் பேணும் சிறந்த தலைவியாகத் திகழ்ந்தனர். தந்தை வீட்டுப் பெருவாழ்வையும் மறந்து கணவன் வீட்டு நிலையோடு ஒன்றிக் கலந்துவிடும் உயரியபண்பு நெறியை உடையவர்களாக வாழ்ந்தனர்.

### 3. இன்சொல் கூறல்

ஒருவருடைய பேச்சு கேட்போர்க்கு மகிழ்வைத் தருதல் வேண்டும். பரிமேலழகர் இனியவை கூறல் என்பதற்கு மனத்தின்கண் உள்ள உவமையை வெளிப்படுவனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல் என்கிறார். சொன்ன சொல் தவறாத வாய்மையும் நினைக்குந்தோறும் நெடிது இனிது பயக்கும் இனிமையான சொற்களைப் பேசுபவர் எனச் சங்கத்தமிழ்ப் பெண் கூறுவதிலிருந்து இன்ப வாழ்விற்கு இனிய சொற்கள் உறுதுணையாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை ஒருவன் கூறின் அல்லவை தேய்ந்து அறம் பெருகும் என்பதை வள்ளுவர்,

அல்லவைதேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்[65]

என்பார்.

### 4. சோம்பல்

இது மடி என்றும் சொல்லப்பெறும். உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் வளமான வாழ்வு பொருளுடையார்க்கே அமையும். இல்லார் இவ்வுலகில் இன்பம் எய்துவதில்லை. எனவே வறுமை மிகவும் கொடியது. அதுவும் இளமையில் வறுமை இன்னும் கொடியதாகும். இத்தகு வறுமை ஒருவருக்குச் சோம்பலினால் வருவது. சோம்பலுக்கு இடம் தந்தோர் வாழ்வில் இன்பம் விடை கொடுக்கும். அவர்களால் அறத்தில் தவறாது ஒழுகுதலும், கேளிர் கேடுபோக்குதலும், பகைவர் செருக்கை அழித்தலும் பெற இயலாது.

இவ்வுலகில் புகழ் பெறுதலும், இன்பம் எய்தலும், ஈந்து உவத்தலும், சோம்பித் திரிவோர்க்கு இல்லையாகும். இதனை நற்றிணைப் பாடலின் கீழ்க்காணும் வரிகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

அரும்பொருள் கூட்டம் இருந்தோர்க்கு இல்[66]

என்கிறது. இம்மைக்குரிய புகழும் இம்மை மறுமை எனும் இருமைக்கு உரிய இன்பமும் மறுமையில் இன்புறுதற்கு ஏதுவாகிய ஈதல் ஆகிய மூன்றும், சோம்பி இருந்தார்க்கு வாய்ப்பதில்லை என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றது.

**பொருளினும் சிறந்த பொருள்**

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற வள்ளுவரின் வாக்கு பொருளின் இன்றியமையாமையை உணர்த்துகிறது.

நாளது இன்மையும் இளமைய தருமையுந்

. . . . . . . . . . . . . . . . . .

ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்[67]

என்று தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதிய இளம்பூரணர் யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை, பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை, இன்மையான் வரும் இளிவரவினைப் பொருந்தாமை, பொருளுடையார்க்கு வேண்டிய அமைவு இன்றிமென்மேலும் ஆசை செலுத்துதல், சிறந்தார்மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை, பிரிதலருமையைப் பொருந்தாமை ஆகியவை பொருள்தேடிச் செல்வோர்க்கு உரிய இயல்புகள் என உரைவகுக்கின்றார்.

பாலைக்கலியில் பொருள்வயிற் பிரியக்கருதிய தலைவனைச் செலவழுங்குவிக்கத் துணியும் தோழி சில பொருள்பொதிந்த மொழிகளைப் பேசுகிறாள். தலைவனை நோக்கி, முன்பு உண்டான பொருள்கள் எல்லாம் கொடுத்துத் தொலைந்ததன் காரணமாக, தம்மிடம் வந்து இரப்பார்க்கு தம்மிடத்துப் பொருள் இல்லையென்று கூறிக் கொடாதிருத்தல் இளிவென்று கருதிப் பொருள்தேடச் செல்லும் தலைவனே! எனத் தோழி விளிக்கிறாள். இக்கூற்று பண்டைத் தமிழர்கள் பொருள் தேடியதற்கான உயர்ந்த நோக்கத்தைச் சுட்டுகிறது.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு[68]

என்னும் குறளின் மாண்பினைச் சங்கத் தமிழ் மக்கள் தம் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகியமை அவர்களின் செம்மாந்த வாழ்வியல் நெறியினைச் சுட்டுகிறது. வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும் என்னும் பொருள்பட தோழி, தலைவனிடம் உரையாடும் பகுதி இவண் சுட்டத்தக்கதாகும்.

இடனின்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவுஎன
கடன்இறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருள் ஆகுமோ
வடமீன்போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின்[69]

என்ற பாடலில் தம்முடைய இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் இல்லை என்று கூறிவந்து இரந்தவர்க்குச் சிறிதும் கொடாது இருத்தல் இழிவாகும்; என்று காட்டைக் கடந்து தேடிய பொருள் நன்கு மதிக்கப்படும் பொருளாகும். எனினும், அருந்ததிபோல், எல்லோரும் தொழுது வாழ்த்தும்படி விளங்கிய கற்பினை உடைய தலைவியின் பெருமை வாய்ந்த மெல்லிய தோளினைப் பிரியாதிருத்தல். நின்மனத்திற்குப் பொருளாய் இருக்குமாயின் அதுவே மிகச் சிறந்த பொருளாவதல்லது வேறு. பொருளாகுமே? எனத் தலைவனிடம் தோழி வினவுகிறாள். இக்கூற்று பெறுதற்கரிய இளமையைத் தொலைத்து பெரும் பொருளினும் சிறந்த பொருள் தலைவியுடன் இனிதிருந்து வாழ்தலே என்னும் வாழ்வியல் நெறியை உணர்த்துகிறது.

**பிரிவுத் துன்பம்**

இன்றைக்கு அதிநுகர்வுத் தன்மை பெருகிவிட்ட நிலையில் பொருளை மையமிட்டு வாழ்வில் பொருளுக்காக எதையும் செய்யும் மனநிலை மக்களிடம் ஏற்பட்டுள்ளது. கடல் கடந்து பல நாடுகளுக்குச் சென்று பொருள்தேடும் தலைவர்களும் அது பற்றியக் கவலை இல்லாத தலைவிகளும் இருக்கின்றனர். பொருளின்மீது கொண்ட அளவுகடந்த பற்றே இதற்குக் காரணம் எனலாம். தலைவன் உள்ளத்தே பிரியும் எண்ணம் உண்டானவுடன்; அது தலைவியால் உய்த்துணரப்பட்டு, தலைவி பெருந்துயருக்கு ஆளாகிறாள். அது கண்ட தோழி தலைவனிடம் தலைவியின் நிலையை எடுத்துரைக்கின்றாள். இதற்கு,

அன்பு அறமாறி யாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதியோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல் வினவின்
பகலின் விளங்கு நின் செம்மல் சிதைய
தவல் அருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டுஓர்
அவலம் படுதலும் உண்டு[70]

*என்ற பாடல் சான்றாகும். தலைவன் களவுக்காலத்தில் இனிய சொற்களைப் பேசி தலைவியைக் கவர்ந்து மணந்து கொண்டவன். ஆனால் இன்று கற்பு வாழ்வில் அவளைத் தனியே விடுத்துப் பொருள் தேடுவதற்காகப் பிரியக் கருதுகிறான். அவ்வாறு தலைவன் கருதியபடி செல்வானேயானால், அவ்விடத்தில் அவன் செயல் முடிந்து இங்கிருந்து வருவோரிடம் தலைவியின் நிலை எதுவோ என வினவக் கூடாது. வினவின் அவர்கள் உனக்கு தலைவி இறந்து பட்டாள் என்ற அவலச் செய்தியைக் கூறுவார்கள் என்கிறாள் தலைவி. இக்கூற்று நீ பிரிந்தால் இவள் வாழாள் எனத் தலைவனை எச்சரிப்பதாக அமைகிறது. இக்கூற்று,*

செல்லாமை உண்டேல் எமக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை[71]

*என்னும் குறளுடன் ஒப்பவைத்து எண்ணத்தக்கதாய் உள்ளது.*

**களவு வாழ்வும் கற்பு வாழ்வும்**

*களவுக் காலத்தில் பெற்ற இன்பத்தால் தலைவன் தலைவியைத் தினமும் காண விரும்புவதும், அவளிடம் மிகுந்த அன்பு கொண்டிருத்தலும் தலைவனின் இயல்பாகும். கற்பு வாழ்வில், தலைவி உடன் உறைவதால், காட்சிக்கு எளிமையாவதுடன், அவள் மீதுள்ள அன்பு சிறிது குறைவதும் உண்டு. இந்நிலையை நன்குணர்ந்தாள் தோழி. தலைவியைக் களவுக்காலத்தே புகழ்ந்து பாராட்டிய தலைவன், கற்பின்பாற்பட்டவுடன் பிரிய எண்ணுவதைக் கண்டு அவனைத் தடுத்துச் சில மொழிகளைக் கூறுகிறாள். அதற்கு,*

உன்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும்தாய்
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
ஏதிலார் கூறுவது அவனோ. . .[72]

என்ற பாடலடிகள் சான்றாகும். காதல், உடன் திருமணம், விரைவில் திருமண முறிவு என இன்றைய சமூகத்தில் சிலரின் வாழ்வியல் நிகழ்வாக உள்ளது. இந்நிலைக்குக் காதல் பெரும்பான்மையும் பொருள் அடிப்படையில் அமைவதே காரணம் எனலாம். திருமணத்திற்குப் பிந்தைய வாழ்விலும் பொருளே முக்கியப்பங்கு வகிக்கிறது. அப்பொருளிற்காகக் கணவனும் மனைவியும் பிரிந்து தொலைதூரம் சென்று வேலை பார்ப்பதாகும். இச்சூழலால் கணவன் மற்றும் மனைவியிடையே அன்பு குறைந்து நெறியில்லாத நடத்தைகளுக்கு வழிவகுப்பதுடன் அவர்களுடைய சந்ததியையும் பாதிப்படையச் செய்கிறது. பாலைக்கலியைக் கூர்ந்து நோக்கின் தலைவனின் பொருள்வயிற் பிரிவைத் தலைவியாலும், தோழியாலும் தவிர்க்குமாறு வேண்டப்படுகிறது. பகைவயிற்பிரிவு மற்றும் தூதிற்பிரிவு ஆகியவை எவ்விடத்தும் தடுக்கப்பட்டதாகப் பாடப்படவில்லை. எனவே நாடு காக்க வேண்டியும் நாட்டு நன்மை கருதியும் பிரிவதைச் சங்கத் தலைவிகள் தடுக்கவில்லை. ஏனென்றால் நாடு காப்பது ஆடவர்களின் கடமையாக எண்ணிப் போற்றியுள்ளனர். இல்லறம் என்பது தலைவனும் தலைவியும் பிரிவின்றி இணைந்து இருந்து ஆற்றும் நல்லறம் என்ற கருத்து பாலைக்கலி முழுவதும் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## வெறியாட்டு

தெய்வ வழிபாடுகளில் ஒன்று வெறியாட்டு. வெறியாட்டு நிகழ்ச்சியை நடத்தி வைக்க படிமத்தான் எனப்படும் வேலனை அழைப்பர். இவன் முருகனை வழிபடுவதற்கு உரித்தாகக் கொள்ளுமிடம் வெறியர் களம் எனப்படும். இது பெரும்பாலும் வீட்டின் முற்றமாக அமைந்திருக்கும். அம்முற்றம் நறுமணல் பரப்பப்பட்டு நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அக்களத்தின் ஒருபால் முருகப்பெருமானுக்குரிய கோழிக்கொடி நட்டு வைக்கப்பட்டிருக்கும். பூவும் மாலையும் அதற்கு அணிவித்து, நறும்புகை காட்டி முருகப்பெருமானை வேலன் எழுந்தருளச் செய்வான். வேலன் முருகனைப் புகழ்ந்து பாடுவான். அப்பூசையில் ஆட்டு மறியை அறுத்து அதிலிருந்து பெருகும் குருதியுடன் செந்தினையைக் கலந்து பலியாகத் தூவுவான். பல்வகை இயங்கள் முழங்க முருகப்பெருமான் புகழ் கூறி

*வழிபடுவான். இவ்வழிபாடு இரவின் சாமப்பொழுதில் நிகழ்ந்ததாகத் தெரிய வருகின்றது. இதற்கு,*

வேலன் புனைந்த வெறி அயர் களம்தொறும்
செந்நெல் வான் பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம் ஊர் வியன் துறை[73]

*என்பது சான்றாகும். தலைவனே! முற்றத்திலுள்ள அரும்பு முதிர்ந்த புன்னை மரத்தின் மலர்கள் உதிர்ந்து பரந்த வெள்ளிய மணற்பரப்பில் வேலனால் அமைக்கப்பட்ட வெறியாட்டெடுக்கும் இடந்தோறும் செந்நெல்லினது வெள்ளிய பொறி சிதறினாற் போன்ற தோற்றத்தைத் தரும் என்று குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது. மேலும்,*

செல்வன் பெரும்பெயர் ஏத்தி வேலன்
வெறிஅயர் வியன்களம் பொற்ப, வல்லோன்[74]

*என்கிறது. தலைவியை ஓவியம் போன்று அழகு செய்யப்பட்ட வீட்டில் பாவையைப் போன்ற பலராலும் ஆராய்ந்து கண்டு மகிழத் தகுந்த மாட்சிமையுடைய அழகானது என் மகளுக்கு முன்பு போலவே சிறப்புறுக என்று முருகப்பெருமானை வேண்டி நற்றாய் கூறுவது குறிப்பிடத்தக்கது.*

### வேலனின் கழங்குக்குறி

*கட்டுவிச்சியிடம் நெற்குறி பார்ப்பதைப் போலவே வேலனை அழைத்துக் கழங்குக்குறி பார்ப்பதும் உண்டு. கழற்சி விதைகளை முருகன் முன்னிலையில் பரப்பி, வேலன் தன் கையிலுள்ள சிறு பைகள் கட்டிய கோலினால் அக்காய்களை அள்ளி எடுக்கும்போது, நேரும் குறிப்புக் கண்டு கூறுவதாகும். இதனை,*

பெய்ம் மணல் முற்றம் கடிகொண்டு
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மெய்ம் மலி கழங்கின் வேலற் தந்தே[75]

*என்ற பாடல் வழி அறியமுடிகிறது. மேலும்,*

பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி
மலைவான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினான் அறிகுவதென்றால்
நன்றால் அம்ம நின்ற இவள் நலனே![76]

*என்ற பாடல் தலைவியின் கற்பினை கழங்கினால் அளக்க இயலாது என எடுத்துரைக்கிறது.*

பெய்ம் மணல் வரைப்பில் கழங்குபடுத்து அன்னைக்கு
முருகென மொழியும் வேலன்; மற்றவன்
வாழிய - இலங்கும் அருவிச்
சூர்மலை நாடனை அறியாதோனே[77]

*என்ற பாடல் வேலன் கூறிய மாற்றத்தை உண்மையெனத் தாய் கேட்கத் தோழி கூறுவதாக அமைகிறது.*

பொய்படுபு அறியாக் கழங்கே - மெய்யே
மணிவரைக் கட்சி மடமயில் ஆலும்நம்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோன்
ஆண்டகை விறல்வேள் அல்லன்[78]

*எனும் இப்பாட்டு தலைவிக்கு வந்த நோய் முருகனால் வந்ததென்று இக்கழங்கு கூறுகிறது என்று வேலன் சொல்வதாகச் சுட்டுகிறது. இதனைக் கேட்ட தோழி அக்கழங்கிற்கு உரைப்பாளாய்ச் செவிலி தாய்க்கு எடுத்துரைப்பதாக உள்ளது.*

**குரவைக்கூத்து**

*வேலன் வெறியாட்டு தனிப்பட நிகழ்த்தலேயன்றி பலருடன் கூடி ஊர்மன்றத்தில் வேங்கை மரத்தின் அடியில் குரவைக்கூத்து ஆடி வழிபாடு நிகழ்த்துதலும் உண்டு. குரவையாடும் வழக்கம் ஆயர்களிடத்தும் அமைந்து இருப்பதை,*

விலை வேண்டார், எம் இனத்து ஆயர் மகளிர்
கொலை ஏற்றுக் கோட்டிடை, தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப் போல, புகின்
ஆங்கு
குரவை தழீஇ, யாம், மரபுரி பாடி[79]

*என்ற பாடலில் காணப்பெறுகிறது. முல்லை நிலத்தில் ஏறு தழுவுதல் நிகழ்ந்த போது அக்காட்சிகளைத் தோழி தலைவிக்குக் காட்டுகின்றாள். பின் நிகழ இருக்கும் குரவைக்கூத்தில் நாமும் சேர்ந்து பாண்டியனைப் புகழ்ந்து பாடுவோம் என்று கூறுகிறாள். மேலும்,*

தொழுவினுள் கொண்ட ஏறு எல்லாம் புலம்புக தண்டாச்சீர்
வாங்கு எழில், நல்லாரும் மைந்தரும், மல்லல்ஊர்
ஆங்கண் அயர்வர், தழூஉ[80]

*என்கிறாள். அந்தத் தொழுவில் தழுவிக்கொண்ட காளைகள் எல்லாம் மேயும் நிலத்தில் போக அமையாத சிறப்பையும் பார்த்தவர் கண்ணைக் கவர்ந்து கொள்ளும் அழகையும் உடைய ஆய்ச்சியரும் ஆயரும் வளமையுடைய ஊரில் குரவை ஆடுவர் என்று தோழி தலைவிக்குக் காட்டிச் சொன்னாள் என்பது மேற்கண்ட பாடலின் கருத்தாகும்.*

தொண்டகச் சிறு பறைக் குரவை அயர.[81]

*என்ற பாடலடி தொண்டகமாகிய சிறு பறையின் தாளத்துக்கு ஏற்பக் குரவைக் கூத்தாடும் வழக்கம் இருந்துள்ளது என்பதைச் சுட்டுகிறது. மேலும்,*

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடு இன்இயம் கறங்க நேர்நிறுத்து
கார் மலர்க் குறிஞ்சி சூடி கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணி தழூஉப் பிணையூஉ
மன்றுதொறும் நின்று குரவை சேரிதொறும்[82]

*என்றும் கூறப்பெறுகிறது. இப்பாடல் அச்சத்தைச் செய்யும் வேலன் இத்தீமை முருகனால் தலைவிக்கு ஏற்பட்டது என்று கூற, அதனைக் கேட்டவரை வளைத்துக் கொண்டு இனிய இசைக்கருவிகளை முழங்க, முருகனை முன்னிலையாக்கிக் குறிஞ்சி மலரைக் கடப்ப மரத்தில் சூட்டி, ஆங்குப் புகழ்மிக்க முருகனை வழிபட்டான். ஆதலால் மகளிர் தழுவிக் கை கோத்து மன்றங்கள் தோறும் நின்று குரவை ஆடினர் என்கிறது.*

## கடவுள் வழிபாடு

*மக்கள் எந்தச் செயலைச் செய்யத் தொடங்கினாலும் முதலில் கடவுள் வணக்கம் செய்த பின்பே தொடங்கினர். சங்க காலத்தில் திருமண நிகழ்ச்சிக்கு முன்பு கடவுள் வழிபாடு இயற்றியுள்ளனர் என்பதை,*

கடிநகர் புனைந்து, கடவுள் பேணி[83]

*என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.*

*பாணர்கள் தாங்கள் இசையை இசைக்கத் தொடங்கும் முன் முதன்முதலில் கடவுள் வாழ்த்தை இசைத்துப் பின் பாடத் தொடங்கியுள்ளனர். நாள்தோறும் காலையில் கடவுளைப் பாடுவதை,*

வலை வலந்தன்ன மென்நிழல் மருங்கில்
காடு உறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை[84]

*என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது.*

அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை.[85]

*என்பதிலிருந்து அரசவையில் கூட அரசரை வாழ்த்தும் முன் கடவுள் வணக்கம் செய்த பின்னரே மன்னரைப் புகழ்ந்தனர் என எடுத்துரைக்கின்றது.*

### நாள்கோள் பார்த்தல்

*சங்ககால மக்கள் தாம் செய்யப் போகும் எந்த நிகழ்ச்சிகளையும் தொடங்கும் முன் நாள், கோள் நோக்கியும் பல்வகை நிமித்தங்களை ஆராய்ந்த பின்னரே செயல்படத் தொடங்கினர் என்பதை,*

புள்ளும் பொழுதும் பழித்தல், அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்[86]

*எனக் கூறப்படுகின்றது. மேலும்,*

நாள் அன்று போகி, புள் இடை தட்ப[87]

*என்ற பாடலடி இவ்வழக்கத்தைப் புலப்படுத்துகின்றது. திருமணத்திற்குத் தீய கிரகங்களின் சேர்க்கையில்லாத காலத்தினைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இதற்கு,*

கனை இருள் அகன்ற கவின்பெறு காலை
கோள் கால் நீங்கிய கொடுவெண் திங்கள்[88]

*என்ற பாடலடிகள் சான்றாகும். சந்திரன் சுடர்விட்டு ரோகிணியுடன் கூடும் பெருநாளான முழுமதி நாளை நன்னாளாகத் தேர்ந்தெடுத்துள்ளதை அறியமுடிகிறது.*

### விரிச்சி கேட்டல்

*விரிச்சி என்பது நற்சொல்லைக் குறிக்கும். விரிச்சி கேட்போர் மனையிலுள்ள பெருமுது பெண்டிராய் இருப்பர். மாலைக் காலத்தில் ஊரின் ஒருபால் சென்று விரிச்சி கேட்டலும், காவல் பொருந்திய தன் மனையில் உள்ள*

*மணலைப் பரப்பியப் பந்தரில் சென்று விரிச்சி கேட்டலும் நிகழ்ந்துள்ளது. மணி ஒலிக்க நாழியில் கொண்ட நெல்லுடனே சென்று; அந்நெல்லையும் முல்லைப்பூவையும் நீருடன் சொரிந்து விரிச்சியை நோக்கி நிற்பர் என்பதற்கு,*

புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்[89]

*என்ற அடி சான்றாகும். புள் நிமித்தத்தைப் போலவே விரிச்சி கேட்டலும் வழக்கமாய் இருந்ததைச் சங்ககால மக்களிடம் காணமுடிகிறது.*

பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கில் போகி
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப[90]

*என்பதிலிருந்து பெருமுதுப்பெண்டிர் விரிச்சி கேட்டு நின்றபொழுது, பசுவைப் பிரிந்த கன்றை நோக்கி, ஓர் ஆய்மகள் "இன்னே வருகுவர் தாயர்" என்று சொன்ன சொல்லைக் கேட்டு நல்மொழியாகப் போற்றியச் செய்தி முல்லைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.*

**பல்லி சொல் பலன் கேட்டல்**

*மாந்தர் வாய் பிறக்கும் நற்சொல் கேட்பது போலவே பல்லி எழுப்பும் ஓசையையும் நன்நிமித்தமாகக் கருதினர். தலைவியை விட்டுப் பொருள் தேடப் பிரிந்த நிலையில், அவன் சென்றது முதல் ஒவ்வொரு நாளும் சுவரில் குறியிட்டு அதனை நாள்தோறும் எண்ணிக் கொண்டு வருத்தத்துடன் வாழ்கிறாள். அந்த வருத்தத்தின் காரணமாகத் தன் முன் கையைக் கன்னத்துடன் சேர்த்து ஊன்றிக் கொண்டு படுக்கையில் பிரிவை எண்ணி அழுத கண்ணினளாய் வருந்தியிருக்கிறாள். இந்நிலையில் அவளுடைய துயரத்தை நீக்குவதைப் போலப் பல்லி ஒலித்ததாம். இதனை,*

இனைநலம் உடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர்; மனைவியின்
பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன
நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே[91]

*என்னும் பாடலால் அறியலாம். மேலும்,*

மணி ஓர்த் தன்ன தெண்குரல்

கணிவாய்ப் பல்லிய காடு இறந் தோரே![92]

*என்ற பாடல் தலைவன் சென்ற காட்டில் கரடுமுரடான இடத்தில் விழுந்துள்ள நிழலில் கள்ளிச்செடி உள்ளது. அது முள்ளை உடையது. அதன் அடிப்பகுதியில் தங்கியிருந்து சிறிது இளைப்பாறி அவ்வழியில் செல்பவர்க்குப் பல்லி வருங்காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. மேலும்,*

நயவரு குரல பல்லி

நள்ளென் யாமத்து, உள்ளுதொறும் படுமே[93]

*என்ற பாடலடிகள் ஓங்கிய இடத்திலுள்ள உயர்ந்த புகழையுடைய நல்ல இல்லத்தில் விளக்கமான சுவரில் பொருந்தியிருந்து நன்மை வருவதாகக் கூறும் குரலையுடைய பல்லி, இருள்செறிந்த யாமத்தும் யாம் நம் காதலரை நினைக்குந்தோறும் ஒலிக்கும் என்று தலைவி எண்ணுவதாகக் கூறுகிறது.*

இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி

சிறிய தெற்றுவது ஆயின், ‘பெரிய

ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும்

நின்றாங்குப் பெயரும் கானம்

சென்றோர்மன்’ என இருக்கிற் போர்க்கே[94]

*என்ற இப்பாடலில் மகளிரேயன்றி விலங்குகளும் கூடப் பல்லி ஓசையைக் கேட்டு உணர்ந்து செயல்பட்டதாகக் கூறுகிறது.*

**தொகுப்புரை**

- *ஒவ்வொரு மனிதனும் சக மனிதர்களோடு நட்புறவுகொண்டு வாழும் அமைப்பு முறையைச் சமுதாயம் என்கிறோம்.*
- *சமுதாயம் பற்றி அறிஞர்கள் கூறும் விளக்கம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றோடு வாழ்வியற் களஞ்சியம், அகராதிகள் கூறும் விளக்கமும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.*
- *காதல் என்பது கருத்தொருமித்த இருவர் உள்ளங்களின் இணைவாகும். மேலும் தலைவியின் காதலை ஊர் அலர் தூற்றி விடும் என்று*

பயம்கொண்ட நிலை தாய்க்குத் தெரிய வரும்போது தலைவிபடும் துயரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- விருந்தோம்பல் தமிழ்ப் பண்பாட்டின் உயிர்நாடி என்பதைச் சங்க அக இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. மேலும் இல்லறத் தலைவியின் கடமையாக விருந்தோம்பல் இருக்கிறது என்பதை நற்றிணைப் பாடல் தெளிவுறுத்துகிறது.
- நிலாவைக் காட்டித் தாய் குழந்தைக்குச் சோறு ஊட்டும் நிகழ்வு, சிறுவர்கள் தெருவில் ஓடிப்பிடித்து விளையாடும் நிகழ்வு, மூன்று சக்கர வண்டிகளைச் சிறுவர்கள் உருட்டி விளையாடும் நிகழ்வு, இளம் பெண்கள் ஊசல் கட்டி விளையாடும் நிகழ்வு, தலைவன் தலைவி மலைப்பகுதியில் ஒருவர் பெயர் கூற அதன் எதிரொலிச் சத்தம் கேட்டு இன்புறும் நிகழ்வு, கடற்கரைப் பகுதியில் நண்டுபிடித்து விளையாடும் நிகழ்வு, சூதாட்ட நிகழ்வு, சிற்றில் சிதைத்து ஆடும் நிகழ்வு எனப் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளைச் சங்க அக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளதை எடுத்துக் கூறப்பெற்றுள்ளது.
- தன் குடும்ப வருவாய்க்கு ஏற்றாற் போல கணவனின் நிலை அறிந்து மனைவி இல்வாழ்க்கை நடத்தும் உயரிய பண்பு நெறிப் பெற்றுத் திகழ்ந்தனர் என்பது சுட்டப்பெற்றுள்ளது.
- நிலையில்லாதப் பொருட்செல்வத்தை விட தலைவியின் அன்புச் செல்வமே உயர்ந்தது என்று கூறித் தலைவனைச் செலவழுங்குவிக்கும் பாங்கு தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- வேலன் வெறியாட்டு நிகழ்த்துதல், வேலனிடம் கலங்குக்குறி கேட்டல், குரவைக்கூத்து ஆடுதல், கடவுளை வழிபட்ட பின் தம் செயல்களைத் தொடங்குதல், நல்ல நாள்கோள் பார்த்தல், புள் நிமித்தம், விரிச்சி கேட்டல் முதலிய பழக்கவழக்கங்கள் சங்கத் தமிழ் மக்களிடம் காணப்பெற்றுள்ள விதம் விளக்கமாக எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

## சான்றெண் குறிப்புகள்


1. மு.அருணாச்சலம், **தமிழ்ப் புதினங்களில் தொன்மங்கள்**, ப.138.
2. **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 8**, ப.469.
3. **சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழகராதி**, ப.961.
4. நா.நளினிதேவி, **ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் சமுதாய மாற்றம்**, ப.24.
5. பட்டாபிராமன் (ப.ஆ.), **கவியமுது**, ப.255.
6. **பாரதியார் கவிதைகள்**, ப.239.
7. கதரைவேற்பிள்ளை, **தமிழ்மொழியகராதி**, ப.427.
8. பதிப்புக்குழு, **கிரியாவின் தற்காலத் தமிழகராதி**, ப.427.
9. இராஜம் ராஜேந்திரன், **மலேசியப் புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்**, ப.223.
10. **நற்றிணை**, பா.223.
11. மேலது., பா.149.
12. மேலது., பா.223.
13. மேலது., பா.11.
14. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.150.
15. **நற்றிணை**, பா.81:6-9.
16. மேலது., பா.41:6-10.
17. **கலித்தொகை**, பா.59:20-21.
18. மேலது., பா.75-17.
19. இளங்கோவடிகள், **சிலப்பதிகாரம்**, புறஞ்சேரி இருத்த காதை, பா.35-38.
20. **குறள்.996.**
21. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.996.
22. வ.சுப.மாணிக்கம், **தமிழ்க் காதல்**, ப.97.
23. **கலித்தொகை**, பா.139.
24. மேலது., பா.138.
25. மேலது., பா.139.
26. மேலது., பா.138.
27. மேலது., பா.140.

28. **கலித்தொகை**, பா.139.

29. மேலது., பா.140.

30. மேலது., பா.138.

31. மேலது., பா.141.

32. **குறள்**.680.

33. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.90.

34. மேலது., பா.135.

35. **அகநானூறு**, நூ.136:4-8.

36. மேலது., நூ.86:5-17.

37. மேலது., நூ.207.

38. தொல்காப்பியர், **தொல்காப்பியம், களவியல்**, நூ.1045.

39. **குறுந்தொகை**, பா.28.

40. மேலது., பா.158.

41. மேலது., பா.29.

42. மேலது., பா.388.

43. மேலது., பா.23.

44. மேலது., பா.15.

45. மேலது., பா.39.

46. மேலது., பா.43.

47. மேலது., பா.99.

48. வ.சுப.மாணிக்கம், **தமிழ்க் காதல்**, ப.86.

49. **குறுந்தொகை**, பா.80.

50. மேலது., பா.80.

51. **கலித்தொகை**, பா.80.

52. மேலது., பா.83.

53. மேலது., பா.81.

54. மேலது., பா.37.

55. மேலது., பா.51.

56. மேலது., பா.46.

57. மேலது., பா.136.

58. **கலித்தொகை**, பா.136.

59. மேலது., பா.151.

60. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.1036.

61. **குறள்**.41.

62. **நற்றிணை**, பா.314:3-6.

63. **குறள்**.1108.

64. **நற்றிணை**, பா.110:9-13.

65. **குறள்**.96.

66. **நற்றிணை**, பா.252.

67. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.44.

68. **குறள்**.231.

69. **கலித்தொகை, பாலைக்கலி**, அடி.19-22.

70. மேலது., அடி.9-15.

71. **குறள்**.1151.

72. **கலித்தொகை, பாலைக்கலி**, பா.22:1-8.

73. **குறுந்தொகை**, பா.53.

74. **அகநானூறு**, பா.98:18-19.

75. **நற்றிணை**, பா.268:8-9.

76. **ஐங்குறுநூறு**, பா.248.

77. மேலது., பா.249.

78. மேலது., பா.250.

79. **கலித்தொகை**, பா.103.

80. மேலது., பா.104.

81. **திருமுருகாற்றுப்படை**, பா.197.

82. **மதுரைக்காஞ்சி**, பா.611-615.

83. **அகநானூறு**, பா.136:6.

84. **பொருநராற்றுப்படை**, பா.48-49.

85. **மலைபடுகடாம்**, பா.538.

86. **புறநானூறு**, பா.204:10-11.

87. மேலது., பா.24:1.

88. அகநானூறு, பா.865:7.

89. குறுந்தொகை, பா.218:3.

90. முல்லைப்பாட்டு, பா.6-11.

91. கலித்தொகை, பா.11:19-22.

92. அகநானூறு, பா.151:14-15.

93. நற்றிணை, பா.333:11-12.

94. அகநானூறு, பா.387.

# முடிவுரை

ஒவ்வொரு இயல்கள்தோறும் ஆய்வாளர் கண்டுணர்ந்த மெய்ம்மைகள் தொகுப்புரையாக வழங்கப்பெற்றுள்ளன. அத்தொகுப்புரைகளில் கூறப்பட்டுள்ள முடிபுகளைத் தொகுத்து முடிவுரையாக இவண் அளிக்கப் பெறுகிறது.

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்திய மக்கள் இயற்கையை வழிபட்டனர். இயற்கையைப் பாடத் தலைப்பட்டனர். இயற்கையைப் பாடத் தலைப்பட்டதின் விளைவாய் தோன்றியப் பாடல்கள்தான் சங்க இலக்கியங்களாகும்.

சங்ககாலத் தமிழறிஞர்கள் நுண்மாணுழைபுலம் மிக்கப் புலவர் பெருமக்கள். மனித வாழ்க்கையைக் கலைக் கண்ணோட்டத்துடனும், செம்மாந்த வாழ்க்கைக் குறிக்கோளுடனும் அணுகியவர்கள். அதனால்தான் இயற்கை சார்ந்தச் செம்மையான நிகழ்வுகளை மானுட வாழ்க்கையோடு இணைத்தப் பல பாடல்களை வடித்துத் தந்துள்ளனர்.

ஒவ்வொரு நிகழ்வுகளின் பின்புலமாக முதற், கரு, உரிப்பொருள்கள் இருக்கின்றன என்று தொல்காப்பியர் விளக்கம் தருகிறார். நிகழ்வுகளை தனிமனித நிகழ்வுகள், சமுதாய நிகழ்வுகள் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன. தனிமனித நிகழ்வுகள் காதல், குடும்பப் பின்னணி, தன்மன உணர்வுகள் என்ற முப்பெரும் பிரிவுகளாக விளக்கப்பட்டுள்ளன. சமுதாய நிகழ்வுகளில் தாய்மையின் சிறப்புகள், பெண்கள் எதிர் நோக்கும் சிக்கல்கள், கல்வியின் பயன்கள், மாணவர்களின் நிலை, வேலையில்லாத் திண்டாட்டம் எனப் பல சமுதாய நிகழ்வுகள் பொது நிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் தலைவன், தலைவி, தோழி, செவிலி ஆகியோர் கூற்று நிகழ்வுகளின் தன்மையும் சிறப்பும் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

களவு, கற்பு காலத்து ஒழுகலாறுகள் தலைமகளுக்குப் பொருந்தி வருவன பற்றி விளக்கப்பட்டுள்ளன. தலைவி தலைவனோடு இணைந்து அறச்செயலில் ஈடுபட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகின்றது. தலைவனைப் பிரிந்த தலைவி காமநோயால் ஆற்றாமையால் வருந்தும் நிலை, தலைவன் மடலூர்ந்து வந்து தலைவியை அடையும் விதம் ஆகியவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தலைவன் வரைவினை வற்புறுத்தும் தோழிக்கு கூறல், வரைவு மலிந்த தலைவிக்குக் கூறல், தலைவி தோழிக்கு வாயில் மறுத்தல், தலைவி தோழிக்கு வாயில் மறுத்தல் முதலிய நிகழ்வுகள் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களில் தலைவன், தலைவியை அடுத்துச் சிறப்பிடம் பெறுபவள் தோழி ஆவாள். தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் பாலமாக இருந்து உறவினைத் தோழி மேம்படுத்துவதும், அறத்தொடு நிற்கும் நிலையும் சுட்டப்பட்டுள்ளது. நொதுமலர் வரைவு, அலர் பெருக்கம் முதலியவற்றால் தலைவிக்கு நேரும் துயரம் பெருகுகிறது. இந்நிலையில் தமரின் துணையின்றித் தலைவியுடன் சேர்ந்து இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடத்த உடன்போக்கு மேற்கொள்ளுமாறு தலைவனுக்குத் தோழி அறிவுரை கூறுகிறாள். ஆணும் பெண்ணும் அன்பு செய்தல் என்ற நிலையில் தொடங்கி அந்த ஆழமாக வேரூன்றிப் பரவி மிகுந்த அன்பாகிப் பின் காதலாகிக் கசிந்து ஒருவர் மேல் ஒருவர் உள்ளம் ஈர்த்து அதன்வழி அவர்கள் பெறுகின்ற இன்பத்தையும் பிரிதல் ஏற்படுகின்றபொழுது அவர்கள் அடைகின்ற துன்பத்தினையும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. தோழி தலைவியின் இல்வாழ்வு நல்வாழ்வாக அமைந்தது கண்டு மகிழும் நிகழ்வு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அக்கால மக்களின் அரசியல், சமுதாய நிலை, கல்வி, நாகரிகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, வாணிபம் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அறவழியும் இல்லாமல், மரபு வழியும் இல்லாமல் மதிலின் ஒரு புறத்தே ஒதுங்கிக் கிடப்பது வீரமாகாது என்று புற இலக்கியங்கள் உரைக்கின்றன. வாழிடங்களைத் தீயிட்டு அழித்தல், உடைமைகளை சிதைத்தல், மதில்களை அழித்தல், மன்னனின் உளப்பாங்கு, அவன் பண்பு, பரிசுப் பொருள்கள்,

மன்னனை வாழ்த்துதல், வேள்வியும் விருந்தும் ஆகிய நிகழ்வுகளைப் புற நிகழ்வுகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பண்டைய சமூகத்தில் பெண்கள் கல்வி கற்கும் உரிமையையும், இல்லறத் தொழிலுரிமையையும், ஓரளவு ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தனர் என்பது சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

தலைவன் தலைவி இருவரும் உள்ளம் ஒருமித்து அன்பு வயப்பட்டால் மடலேறுதல் நிகழ்வு நடைபெறாது. ஆனால் தலைவனின் காதலை தலைவி ஏற்காமல் போனால் மடலேறுதல் நிகழ்வு நடைபெறும். எனினும் கடலெனக் காமம் உழந்தபோதும் பெண்கள் மடலேறியதாக நிகழ்வு இல்லை என்பது எடுத்தியம்பப்பட்டுள்ளது. பழங்கால மக்கள் இயற்கையை தெய்வமாகப் போற்றி வாழ்ந்தனர். வெறியாட்டு, கழங்குகுறி, குரவைக் கூத்து, கடவுள் வழிபாடு, நாள்கோள் பார்த்தல், விரிச்சி கேட்டல், பல்லி சொல் பலன் கேட்டல், நல்நிமித்தம் பார்த்தல், தீ நிமித்தம் தவிர்த்தல் ஆகிய பழக்கங்களும் நம்பிக்கைகளும் பண்டைத் தமிழர்களிடம் இருந்துள்ளன என்பது தெளிவாக எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. பெண்களுக்குக் காதலிக்கும் உரிமை இருந்தாலும் காதலை ஏற்றுக் கொள்ளாத நிலையில் தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிடும் நிலை காணப்பெறுகிறது. பெண் அடிமைத்தனம் சங்க காலத்தில் நிலவியதும் கூறப்பெற்றுள்ளது. குறிப்பாகக் கணவனை இழந்த பெண்களின் நிலை, பெண்கள் ஈமத்தீயில் மூழ்குதல், பெண்களைப் பரத்தையராகப் பார்த்தல் ஆகியவற்றைப் பெண்ணடிமைத்தனத்திற்கு சான்று காட்டலாம்.

சங்க இலக்கியங்களை உளவியல் நோக்கில் சங்க இலக்கியம் என்றும், சங்க இலக்கியம் காட்டும் சமூகம் என்றும், சங்க இலக்கியத்தின் தனித்தன்மைகள் (தனித்துவம்) என்றும், சங்க இலக்கியத்தின் வாழ்வியல் நெறிகள் என்றும், சங்க இலக்கியத்தில் உலகப் பொதுமைச் சிந்தனைகள் எனப் பல்வேறு தலைப்புகளில் ஆய்வதற்குரிய களமும், தரவும் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகிறது என்பது ஆய்வாளர் தம் பரிந்துரையாகும்.

# முன்னுரை

உலக மொழிகளின் வரலாற்றில் தொன்மை வரிசையில் முன் நிற்பதும் செம்மொழியாய் விளங்குவதும் தமிழேயாம். இம்மொழி 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக்குடி' மக்களால் பேசப்படும் என்னும் பெருமைக்குரியது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

என்ற பாரதியின் கூற்று தமிழின் தனித்தன்மையை எடுத்துரைக்கின்றது. தமிழ் இலக்கியங்களில் பெருமைக்கும் சிறப்புக்கும் உரியன சங்க இலக்கியங்கள். பண்டைத் தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் துணைபுரியும் சங்கப் பாடல்களைத் தமிழ் நாகரிகத்தின் நினைவுச் சின்னங்கள் என்று குறிப்பிடலாம்.

## தலைப்புத் தேர்வு

சங்க இலக்கியத்தை பலவகைத் திறனாய்வு நோக்குகளில் ஆய்வு செய்ய இயலும். எனினும் சங்க இலக்கியப் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி ஆகியோர் கூற்றுக்களில் அக நிகழ்வுகள், புற நிகழ்வுகள், இன்னபிற நிகழ்வுகள் மிகுந்திருப்பதை ஆய்வாளர் அறிந்தாலும், சங்க இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டதாலும் "சங்க இலக்கியத்தில் நிகழ்வுகள்" என்னும் தலைப்புத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பெற்றது.

## களம்

இலக்கியத்துறை விரிவடைந்து அதன் எல்லைகள் பெருக்கிவரும் நிலையில் இலக்கியங்களுக்கு முன்னோடியாக விளங்கும் சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களை மட்டும் களமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தூண்டல்

சங்க இலக்கியத்தினைப் பல்வேறு நிலைகளில் ஆராய்ந்துள்ளனர். அவற்றில் நிகழ்வுகள் என்னும் பகுதி இந்த ஆய்வுக்குத் தூண்டுகோலாய் அமைந்தது.

## ஆய்வு நோக்கம்

சங்க இலக்கியங்கள் மனித வாழ்வின் பல்வேறு தளங்களையும் சூழல்களையும் எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகின்றன. அவற்றைப் பயிலுங்கால் அதன் மெய்பொருளையும், மானிட வாழ்வின் குறிக்கோள்களையும், சமுதாய வளர்ச்சிக்குத் துணை செய்யும் விதத்தையும் கண்டறிந்து வெளிப்படுத்துவதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு எல்லை

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்கள் மட்டும் ஆய்வு எல்லையாக அமைகின்றன.

## ஆய்வு ஆதாரங்கள்

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்கள் மட்டும் முதன்மை சான்றாதாரங்களாக அமைகின்றன. சங்க இலக்கியம் தொடர்பான ஆய்வு நூல்கள், இலக்கணம், கட்டுரைகள், ஆய்வேடுகள், இதழ்கள், கருத்தரங்க மலர்கள், கலைக்களஞ்சியங்கள் முதலியவை இவ்ஆய்விற்குத் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

## முன்னர் நிகழ்த்தப் பெற்றுள்ள ஆய்வுகள்

மு.வ.வின் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை', ச.அகத்தியலிங்கம் என்பாரின் 'சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே', மலையமான் என்பாரின் 'செவ்வியல் மொழி தமிழ்', ச.வே.சுப்ரமணியன் என்பாரின் 'சங்க இலக்கியம்', முனைவர்பட்ட ஆய்வாளர்களால் எழுதப்பெற்றுள்ள ஆய்வேடுகள் ஆகியன இவ்ஆய்வுக்கு முன்னோடிகளாகக் கொள்ளப்பட்டன.

## கருதுகோள்

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்கள் பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வியலையும், காதல், வீரம் சார்ந்த நிகழ்வுகளையும், சமுதாய நிகழ்வுகளையும் உள்ளடக்கமாகக் கொண்டு அமைந்துள்ளன. அவற்றை நுணுகி ஆராய்ந்து கண்டறிந்து புலப்படுத்துவது இவ்ஆய்வின் கருதுகோளாகும்.

## ஆய்வு அணுகுமுறை

சங்க இலக்கியங்களின் உள்ளடக்கத்தைப் பகுத்து ஆராய்வதற்குப் பகுப்புமுறை ஆய்வும், சங்க இலக்கிய நிகழ்வுகளை விளக்கி கூறும் வகையில் விளக்கமுறை ஆய்வும், ஏனைய இலக்கிய நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் கூறும் வகையில் ஒப்பீட்டு முறை ஆய்வும், சங்க இலக்கிய மாந்தர்களின் மனநிலையை அறிய உளவியல் முறை ஆய்வும் இவ்ஆய்வின் அணுகுமுறைகளாக அமைகின்றன.

## ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. நிகழ்வுகள் - ஒரு பார்வை
2. தலைவன், தலைவி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள்
3. தோழி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள்
4. புற இலக்கியங்களில் நிகழ்வுகள்
5. சமுதாய நிகழ்வுகள்

என்பனவாகும்.

முன்னுரை என்ற பகுதி தலைப்புத் தேர்வு, களம், தூண்டல், ஆய்வின் நோக்கம், ஆய்வு ஆதாரங்கள், முன்னர் நிகழ்த்தப் பெற்ற ஆய்வு, ஆய்வு எல்லை, கருதுகோள், இயலில் கூறப்படும் கருத்துகள், இயல்களின் வைப்புமுறை, ஆய்வியல் அணுகுமுறை முதலியவற்றைத் தரும் பகுதியாக அமைகிறது.

**‘நிகழ்வுகள் - ஒரு பார்வை’** என்னும் முதல் இயலில் நிகழ்வுகள் என்பதன் விளக்கம், நிகழ்வுகள் பற்றிய அறிஞர்களின் கருத்துகள், நிகழ்வுகள் குறித்து அகராதிகள் குறிப்பிடுவன ஆகியவை பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

**‘தலைவன், தலைவி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள்’** என்னும் இரண்டாம் இயலில் தலைவனின் களவு வாழ்வு, தலைவியின் பால்

கொண்டுள்ள அன்பு தலைவியை விட்டுப் பிரிந்து சொல்லும் நிகழ்வு முதலியவை கூறப்பெறுகின்றது. தலைவி என்பவள் களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் தலைமைப் பொறுப்பு ஏற்பவள் என்று வரையறை செய்யப்பட்டுள்ள விதம், அறத்தொடு நிற்றல், தலைவனோடு ஊடல் நிகழுமிடம், ஒழுகலாறுகள், தலைவியின் ஆற்றாமை, தலைவன் தலைவி நிகழ்த்துகின்ற நிகழ்வுகள் பற்றி விளக்கப்பெற்றுள்ளன.

**'தோழி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள்'** என்னும் மூன்றாம் இயலில் தோழி சிறுவயதிலிருந்தே தலைமகளுக்குச் சிறந்த நட்பினளாகத் திகழ்வது, அவளோடு உடனிருந்து அறிவுரை கூறுவது எடுத்தக்காட்டப் பெறுகின்றன. மேலும் தோழி என்ற சொல்லிற்கு நிகண்டுகள் தரும் விளக்கம், அன்பு செய்தல், தற்காத்தல், விருந்தோம்பல் போன்ற நிலைகளில் தோழி கூற்று சிறப்பிக்கப்படுகின்றன. தோழியின் திறன், குறியிடம் சுட்டல், குறியிடம் மறுத்தல், அறத்தொடு நிற்றல், செலவழுங்குவித்தல், வரைவு கடாதல் முதலிய நிகழ்வுகள் இவ்வியலில் ஆராய்ந்து எடுத்தியம்பப்பட்டுள்ளன.

**'புற இலக்கியங்களில் நிகழ்வுகள்'** என்னும் நான்காம் இயலில் மூவேந்தர்களின் சிறப்புகளும், குறுநில மன்னர், வேளிர், போரின் அழிவுகள், கையறுநிலை, நடுகல், மகளிர் தீப்பாய்தல், அரசருக்கும் பிறருக்கும் அறநிலையை எடுத்துரைத்தல் போன்ற நிகழ்வுகள் ஆராயப்பட்டுள்ளன.

**'சமுதாய நிகழ்வுகள்'** என்னும் ஐந்தாம் இயலில் சங்ககால மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குமுறைகள், கட்டுவிச்சியிடம் குறி கேட்டல், வேலனின் கழங்குக் குறி பார்த்தல், வெறியாட்டு நிகழ்த்துதல், குரவைக் கூத்தாடுதல், கடவுள் வழிபாடு நிகழ்த்துதல் முதலியனவும் நாள்கோள் பார்த்தல், புள் நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல், பல்லி சொற்பலன் கேட்டல் போன்ற நிகழ்வுகளும் விரிவாக ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் அவ்வியலில் காணப்பெறும் தரவுகள் தொகுப்புரையாகவும் அவ்வியலுக்குப் பயன்பட்ட நூல்கள் சான்றெண் விளக்கம் என்னும் பகுதியிலும் வழங்கப்பெற்றுள்ளன.

இவ்வாய்வின் மூலம் அறியலாகும் குறிப்பிடத்தக்க செய்திகளைத் தொகுத்து தரும் நிலையிலும் திறனாய்வு அடிப்படையில் வழங்கும் கருத்துக்களும் முடிவுரை என்ற பகுதியில் இடம்பெறுகின்றன.

“சங்க இலக்கியத்தில் நிகழ்வுகள்” என்ற தலைப்பில் நிகழ்த்தப் பெற்ற இவ்வாய்வின்வழி எதிர்வரும் ஆய்வாளர்கள் அணுகும் விதம் குறித்தப் பரிந்துரைகள் தரப்பெற்றுள்ளன.

ஆய்விற்குத் துணைநின்ற முதன்மை ஆதார நூல்களில் இடம்பெற்ற நூல்களின் பட்டியல், துணைமை ஆதார நூல்களின் பட்டியல், கட்டுரைகள், கலைக்களஞ்சியங்கள் போன்றவை தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

# இயல் 1

# நிகழ்வுகள் - ஒரு பார்வை

உலகத்தில் மனித இனம் தோன்றிய நாளிலிருந்து ஒவ்வொரு நிகழ்வுகளும் வரலாறுகளாகப் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் வாழ்ந்த வாழ்க்கை நிகழ்வுகளைச் சங்க இலக்கியங்கள் விளக்கி நிற்கின்றன.

**நிகழ்வு என்பதன் விளக்கம்**

நிகழ்வு என்பது ‘சம்பவம்’, ‘நேர்வு’, ‘செயல்’, ‘நடத்துதல்’ என்று தமிழ் அகராதி கூறுகின்றது.[1] ‘நிகழ்ச்சியமை’, ‘செயல் திட்டம் வரை’ என்றும் ‘நிகழ்ச்சி’, ‘நிகழ்ச்சி நிரல்’, ‘செயல்முறை’[2] என்று மெகா அகராதி விளக்கம் தருகிறது.

அபிதான சிந்தாமணி ஆசிரியர் சிங்காரவேலு முதலியார் நிகழ்வினவிற்சியணி என்று விளக்கம் தருகிறார்.

> இது முன் நடந்ததையேனும், பின் நடப்பதையேனும் அப்போது நடக்கிறதாகச் சொல்லுதலாம். இதனை பாவிகாலங்காரம் என்பர்.[3]
>
> நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே.[4]

நிகழ்ந்த ஒழுகலாறும் நிகழும் ஒழுகலாறும் உரிப்பொருளாக அமைந்து திணையாதலேயன்றி முன்னர் நிகழ்ந்ததொரு ஒழுகலாற்றினை நினைந்து அதனை எடுத்துக் கூறி நிற்றலும் திணையாக அமையும் என்பது பொருளாகும் என்று தொல்காப்பிய நூற்பா நிகழ்வுகள் பற்றி எடுத்துரைக்கின்றது.

இன்ன இடத்து இன்னசூழலில் நடந்த நிகழ்ச்சி என்பதை அறியக் ‘களன்’ என்னும் உறுப்பைச் சுட்டுகிறார் தொல்காப்பியர். அந்நிகழ்விற்குப் பின்புலமாக அமையப்பெறும் முதல், கரு, உரிப்பொருள்களை உள்ளடக்கிய ஒன்றினைத் ‘தின்ன’ என்னும் உறுப்பாகச் சுட்டுகிறார். அகப்பாடல்களைப் புலவர்கள் தாம் கூறுவதுபோல அமைப்பின் அது நாடக அமைப்பில் அமையாது எனக்கருதி, பாடல்களுள் பயின்றுவரும் மாந்தர் கூறுவது போல்

அமைத்து உள்ளனர். அகத்திணை நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கென்று மாந்தர் பலரை உருவாக்கி அவர்களுள் ஒருவர் சொல்ல மற்றொருவர் கேட்குமாறு பாடல் புனையவேண்டும் என விதித்து உள்ளனர்.

நிகழ்ச்சி, நிகழும் சூழலைப் பொறுத்து மாந்தர்கள் அமைவர். மேலும் அகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து அகத்திணை நிகழ்வுகளை வரிசைப்படுத்துவர். பெரும்பாலும் கூற்று, கேட்போர் நிலையில் நிகழும் நிகழ்வுகளைச் சங்க இலக்கியங்கள் பிரித்துக் காட்டுகிறது.

### நிகழ்வுகளின் வகைகள்

நிகழ்ந்த, நிகழுகின்ற நிகழ்வுகளைப் பின்வருமாறு வகைப்படுத்துவர். அவையாவன,

1. தனிமனித நிகழ்வுகள்
2. சமுதாய நிகழ்வுகள்

என்பனவாகும்.

### 1. தனிமனித நிகழ்வுகள்

தனிமனித வாழ்வில் நடக்கின்ற ஒவ்வொரு செயலும் ஒரு நிகழ்வுகளைக் குறிக்கும். தனிமனித பல்வேறு சூழல் சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும். இந்நிகழ்வுகள்,

1. காதல்
2. குடும்பப் பின்னணி
3. தன்மன உணர்வுகள்

ஆகிய நிலைகளில் தனிமனித வாழ்வில் நடைபெறலாம். ஒவ்வொரு மனிதனின் வாழ்நாளில் தனிமைத்துவச் சூழலில் பல நிகழ்வுகள் நிகழ்கின்றன. சோகம், மகிழ்ச்சி, முகச்சுழிப்பு, நடை, உடை, பாவனை, உணவு உண்ணும் முறை என்று பல்வேறு நிலைகளை மற்றவர்கள் பிறரை உற்றுநோக்கும் போதும் பிறரை மற்றவர்களை உற்றுநோக்கும் போதும் தனிமனித நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மனிதர்களின் வாழ்வில் நடக்கும் சிறுசிறு சம்பவங்கள் அனைத்தும் தனிமனித நிகழ்வுகளாகக் கொள்ளலாம்.

## 1. காதல்

*காதல் என்பது தனிமனித உள்ளத்தின் இலட்சிய வேட்கையைத் தூண்டும் சக்தியாகும். இது மனித குலத்திற்கு புத்துயிரும், புதுமலர்ச்சியும், நாகரிகத்தன்மையையும், சமுதாய உணர்ச்சியையும் வழங்கக்கூடியது. உடலையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்தி மனிதவாழ்வைப் புனிதமாக்குவது. ஆணும் பெண்ணும் தம்முள் கருத்தொருமித்துக் கலந்து பழகும் பழக்கத்திற்குக் காதல் எனக் கூறலாம்.*

> காதல் அது தேவையான தவிர்க்க முடியாத துன்பம். ஆனால் அது
> வேறொரு பிறப்புக்கான காரியம்[5]

*என்று காதலைப் பற்றி பட்டாபிராமன் தெளிவுபடக் கூறியுள்ளார்.*

*காதல் பலவகையான கருத்துக்களை உணர்த்தும் களமாகவும், களஞ்சியமாகவும் விளங்குவதனைத் தெரிவிப்பதோடு ஆறு களங்களில் காதல் தனிமனித நிகழ்வுகளாக அமைகின்றன. அவையாவன,*

1. *காதல் சிறப்புரைக்கும்*
2. *காதல் மனவலிமைப்படுத்தும்*
3. *காதலினால் பிரிவு ஏற்படும்*
4. *பிரிவினால் ஏக்கம் ஏற்படும்*
5. *காதலன் தன்னைத் திருமணம் செய்வாரா என்று ஏங்கும் காதலியின் நிலைப்பாடு*
6. *காதலினால் ஏற்படும் சீர்கேடு*

*என்பனவாகும். இவ்ஆறு நிலைகளில் காதலால் ஏற்படும் தனிமனித நிகழ்வுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன. மேலும் சமூகம் எதிர்பார்ப்பது என்னவெனில் தூய்மையான அன்பினை உருவாக்கும் காதலின் மேன்மையினையும், பயன்பாட்டினையும் மானிடர்கள் முழுவதுமாக உணர்ந்து காதலைச் சிறப்பித்து வாழவேண்டும் என்பதே ஆகும். காதல் எனும் பெயரால் தீவினைகளில் ஈடுபட்டு அவற்றின் தன்மையைச் சீர்குலைக்க வேண்டாம் என வலியுறுத்துகிறது.*

## 2. குடும்பப் பின்னணி

குடும்பம் என்ற அமைப்பு, ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழவும் ஒருவருக்கொருவர் பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், ஆணுக்குச் சந்ததி பெருக்கவும் உள்ளதென்று கொள்ளப்படுகிறது. எனினும் ஆண் முதன்மைச் சமுதாயத்தில் அவனுக்குத் துணையாக இருந்து அவன் தேவைகளனைத்தையும் குறிப்பறிந்து நிறைவேற்றி வைக்கவும், மக்களைப் பெற்றுத் தரவும் பெண் படைக்கப்பட்டிருக்கிறாள் என்ற கருத்து நிலைப்படுத்தப்பட்டுள்ளன. குடும்பம் என்ற அமைப்பில் ஆணுக்கு அவளும் பிள்ளைகளும் அடங்கியவர்கள். இச்சூழலில் பெண் மக்களுக்கு எந்த உரிமையும் தனித்துவமும் வழங்கப்பெறுவதில்லை. இராஜம் கிருஷ்ணன் என்பவர் குடும்ப அமைப்பு பற்றி விவரிக்கும்போது,

> குடும்பப் பராமரிப்பு, வீடு, துணிமணிகள், சுத்தம் செய்தல், சமையல் போன்ற அனைத்துப் பணிகளுமே இருபாலரும் பகிர்ந்து கொள்ளும் கடமையாக இருக்க வேண்டும். பாலியல் சார்ந்து அவள் பலவீனமாய், எந்த நிலையிலும் அவள் ஆணின் ஆளுகைக்குள் தான் இருக்க வேண்டும் என்ற கருத்தைத் திணிக்கும் ஆணாதிக்கப் போக்கும், பொருளியல் சார்ந்து அவளைப் பொருளுக்காக மட்டும் பேரம் பேசும் திருமண வழக்கங்களும் அறவே ஒழிக்கப்பட வேண்டும்[6]

என்று எடுத்துரைக்கிறார்.

ஒரு பெண்ணுக்கு ஆண் துணை அவசியம் என்று கருதுமளவுக்கு ஆணுக்குப் பெண் துணை அவசியமாகிறது. ஒரு பெண் தனித்து வாழ விரும்பினால் அதைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டு அவளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். இத்தகைய மனிதநேய அடிப்படையிலான மதிப்பைப் பெண்ணுக்கு அளிப்பதன் வாயிலாகக் குடும்ப அமைப்பில் குழந்தைகள் நல்ல மனவளத்துடனும், உடல்வளத்துடனும் வாழ்வார்கள். அனைவருக்கும் சம உரிமை, சமத்துவம் என்ற நிலை ஏற்படும். இத்தகைய குடும்பச்சூழலில் தான் சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும் எனலாம். குடும்பம் என்னும் அமைப்பில் கீழ்க்கண்டோர் உறவுடையவர்களாகச் சுட்டப்பெறுகின்றனர்.

1. கணவன்
2. பெற்றோர்
3. காதலன்
4. ஆண் பெண் உறவுகள்

போன்ற நிலைகள் குடும்ப உறவு நிலையில் சித்தரிக்கப்படுகின்றது.

### 1. கணவன்

ஒரு பெண்ணுக்குக் கணவன் மட்டுமல்ல. குடும்பத்தலைவன் என்ற பொறுப்பையும் ஏற்கக்கூடியவன். ஆணாதிக்கம் தலைக்கு ஏறி தலைமைப் பாத்திரமாகச் செயல்படத் துணியும் போது,

1. பெண்ணை அடிமையாய் நினைத்தல்,
2. குடும்பச் செலவிற்குப் பணம் கேட்கும் மனைவியிடம் கோபம் கொள்ளல்,
3. மனைவியைச் சந்தேகிக்கும் உளப்பாங்கு

என்ற மூன்று நிலைகளில் கணவனின் நிலையில் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

### 2. பெற்றோர்

பெற்றோர்கள் என்பவர்கள் பிள்ளைகள் பாதுகாவலர்கள் என்பதோடு மட்டுமல்லாமல் பிள்ளைகளின் வாழ்க்கையைத் தீர்மானித்துக் கொடுப்பவர்கள் என்றால் சாலப்பொருந்தும். தாயம்மாள் அறவாணன் என்பவர் பெற்றோர்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு எடுத்தியம்புகிறார்.

> தம் குழந்தைப் பருவத்தில் தம்மை வளர்க்க அரும்பாடுபட்டவர்கள் பெற்றோர்கள். கண்விழித்து நோயினின்றும் காத்தவர்கள் பெற்றோர்கள். தமக்கென வாழாது பிள்ளைகளுக்காகத் தம்மைத் தியாகம் செய்வார்கள் என்ற எண்ணம் குழந்தைகளுக்கு வேண்டும். பெற்றோர் தம் குழந்தையைக் காத்தது போல அவர்களின் முதுமையைக் காத்தல் பிள்ளைகளின் கடமை[7]

என்கிறார். பிள்ளைகளைப் பாதுகாத்தல், பிள்ளைகளின் வாழ்வாதாரங்களைப் பற்றி நினைத்தல், குடும்பம் என்ற அமைப்பு தழைத்தோங்கி நிற்றல் என்ற பல

நிலைகளில் பெற்றோர்கள் பிள்ளைகளின் மேல் அக்கறை கொண்டு தனிமையில் சிந்திக்கத் தொடங்குகிறார்கள். தான், தனது என்ற நிலைகளில் சிந்திக்கின்ற பிள்ளைகளால் பெற்றோர்கள் அனாதைகளாக்கப்படுகின்றார்கள். அதன் உச்சநிலைதான் முதியோர் இல்லங்கள் மிகுதியாக உருவானதற்கு காரணம் எனலாம்.

**காதலன்**

அழகும், பாலியல் தேவையும் முதன்மையாகக் கொண்டு செயல்படும் காதலனுக்குப் பொழுதுபோக்காக அமைபவள் காதலி என்பவள். காதலனுக்கு ஏற்படும் காதல் நிகழ்வுகள் எல்லாம் தனிமனித நிகழ்வுகள் என்று கூறப்பெறுகிறது.

- காதலியின் வருமானம்
- காதலியைச் சந்தித்தல்
- காதலியோடு சுற்றுலா செல்லுதல்
- காதலிக்காகக் காயப்படுத்துதல்

எனப் பல நிலைப்பாடுகளில் காதலன் செயல்படுகிறான். காதலனாக இருப்பவன் கணவனாக மாறி குடும்பத் தலைவனாக உருவாகிறான். அவ்வாறு உருவாகும்போது சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க அங்கத்தினனாகின்றான். பின்னர் சமுதாயம் நன்முறையில் இயங்குவதற்கு உறுதுணை செய்பவனாகவும் அல்லது தீங்கு விளைவிப்பவனாகவும் மாறிவிடுகிறான். இச்சூழலில் அவனின் செயல்பாடுகள் அவனது இருப்பை உறுதி செய்கின்றன எனலாம்.

## ஆண் பெண் உறவுகள்

குடும்ப உறவுகளில் பல்வேறு மனிதர்களைச் சந்திக்கிறோம். ஒருவர் மனம் போலவே இன்னொருவர் மனம் இருக்க வேண்டும் என்று எண்ணுவது கூடாது. பெண்கள் தங்கள் இனத்திற்குள் பாகுபாடு பார்த்துக் கொண்டு உறவுக்குள் பகைமையை வளர்த்துக் கொள்கின்றனர். இதனால் ஆண்கள் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை அமைத்துக் கொள்கின்றனர்.

1. மாமியார்
2. மைத்துனி

3. மகள்
4. மருமகள்
5. மகன்

என்ற ஐந்து நிலைகளில் உறவுமுறைகளில் வரும் பிரச்சினைகளைத் தனிமனித நிகழ்வுகளாகக் கூறலாம்.

சமூக வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் அழிவிற்கும் அடிப்படையாக விளங்குவது எண்ணங்களாகும். இதனை மையமாகக் கொண்டுதான் பிற காரணிகள் அமைகின்றன. தனிமனிதனின் மனம், அறிவு, செயல், சமூகம், பண்பாடு சார்ந்தவையாக இருக்கின்றன. இவற்றுள் சமூகம், பண்பாடு ஆகிய இவ்விரண்டு காரணிகளும் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் இவ்விரண்டிற்கும் ஒத்தும் சிலவற்றில் வேறுபட்டும் அமைகின்றன. கல்வி, நகர்மயமாதல், தொழில்மயமாதல், வாழ்க்கைத் துணைத் தேர்வில் சுதந்திரம், திருமணம் பற்றிய மனப்பான்மை பொருளாதார நிலைகளில் தனிமனித நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

### 3. தன்மன உணர்வுகள்

நனவோடை என்பதுதான் மன உணர்வுகள். சொற்களும், சொற்றொடர்களும் அன்றியும், உத்திகளும் உளவியல் திறனாய்வில் பெருங்கவனத்தைப் பெற்றுள்ளன. கதைமாந்தரின் செயல்கள் மற்றும் உணர்வுகளின் முறைமை, படைப்பாளியின் நோக்கம் இவை காரணமாகச் சொல்லுகிற பாணியிலும் வடிவமைப்பிலும் வேறுபாடுகள் காணப்படும். தி.சு.நடராசன் நனவோடை உத்தி பற்றி,

> நனவோடை மனத்தோடு நனவில் மனம் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது. பொதுமையிலிருந்து தூலப்படுத்துதலை நோக்கி அது தொடர்ந்து தாவுகிறது. அப்போது தூலமான அற்புதங்களை அது காண்கிறது. இத்தகைய நனவிலி மனம் ஒரே சீராக நேர்க்கோட்டில் அமைவதில்லை. ஒன்றனைத் தொட்டு ஒன்று படர்வதாக அமைகிற அதன் திசைகள் எண்ணிறைந்தன. வேகம் அளவு கடந்தது. நனவிலி மனத்தின் இந்தப் பண்புகளின் பின்னணியில் அதனோடு தொடர்ந்து

> போராடுகிற நனவுடை மனத்தின் நானாவித இயங்கு திசைகளைச் சித்தரிப்பது. நனவோடை உத்தி (Stream of consciousness) ஆகும்[8]

என தி.சு.நடராசன் விளக்கம் தருகிறார்.

இவ்வுத்திமுறை உளவியல் வாழ்க்கையையும் அவற்றின் முனைப்புகளையும் அவற்றின் போக்கிலேயே சென்று சித்திரிக்கிறது. நிகழ்ச்சிகளையும், அனுபவங்களையும் சொல்லுகின்ற போது அவற்றை நேர்வரிசை முறையில் அல்லாமல் அவை உணரப்படுகின்ற முறையில் ஒன்றனைத் தொட்டு ஒன்று தாவியும் உருண்டு போகிற முறையில் சொல்லுகிறது. இது தமிழில் அதிகம் காணப்படுகிறது. குறிப்பிட்ட நினைவிலிருந்து காட்சிகள் பின்னோக்கிச் செல்வதாக அமைகிறது.

- கடிதத்தில் எழுதி மன உணர்வுகளை ஆற்றிக் கொள்வது.
- முதியோர் இல்லத்தில் இருக்கும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நிலையை நினைத்து வருந்துதல்.
- காதலில் தோல்வியுற்றவன் கவிதை எழுதுதல்.
- பிறரைத் திட்டித் தீர்த்துவிட முடியாதவன் மனதில் திட்டித் தீர்த்துக் கொள்ளுதல்.
- மனக்கோட்டைக் கட்டி வாழுதல் எனப் பல்வேறு நிலைகளில் தன்மன உணர்வுகள் மூலம் தனிமனித நிகழ்வுகள் நடைபெறுகிறது.

## 2. சமுதாய நிகழ்வுகள்

மனிதன் ஒரு சமுதாயப் பிராணி ஆவான். ஒவ்வொரு மனிதனும் சக மனிதர்களோடு உறவு கொண்டு வாழும் அமைப்பு முறையைச் சமூகம் என்கின்றோம். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் சமூக அமைப்பு சமுதாயம் எனப்படும். மக்கள் இனம் ஒன்று சேர்ந்து வாழும் அமைப்பினைச் சமுதாயம் எனச் சுட்டலாம்.

> தனிமனிதர் குடும்பங்களாக, குழுமங்களாக, குழுக்களாக, குடிகளைச் சேர்ந்து, ஒருவரையொருவர் வாழ்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும்,

> வளர்ச்சிக்காகவும், பெருக்கத்திற்காகவும் சார்ந்தும் சேர்ந்தும் வாழும் போது சமுதாயம் உருவாகிறது[9]

என்று சமுதாயம் உருவான அமைப்பினை அன்னிதாமசு என்பவர் எடுத்துக்காட்டுகின்றார்.

சமுதாய நிகழ்வுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவையாவன,

1. தாய்மைச் சிறப்புகள்
2. பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்
3. கல்வியின் பயன்பாடு
4. ஆசிரியர்
5. மாணவர்
6. குழந்தைத் தொழிலாளர் நிலை
7. வேலையில்லாத் திண்டாட்டம்
8. வறுமை
9. சாதி
10. வரதட்சணை
11. தொழிலாளர்கள்

என்பனவாகும்.

### 1. தாய்மையின் சிறப்புகள்

உலகில் உள்ள உறவுகளில் தாய் எனும் உறவு புனிதமானதாகும். எவ்விதப் பிரதிபலனும் சுயநலமும் கருதாமல் அன்பையும், கருணையையும் மட்டும் வழங்கும் தெய்வத்தன்மைக் கொண்டவளாகத் தாய் விளங்குகிறாள்.

பெண் என்பவள் மகளாக, மருமகளாக, சகோதரியாக, மனைவியாக, மாமியாராக இப்படி எத்தனை உறவுகளில் பங்கு கொண்ட போதிலும் தாய் எனும் உறவில்தான் அவள் கடைசி மூச்சுவரை இருந்து முழுமைபெற்று உயிர்விடுகிறாள்.

சங்க இலக்கியத்தில் நற்றாய், செவிலித்தாய் என்ற சிறந்த பாத்திரங்கள் எடுத்துக்காட்டப்படுகிறது.

சமுதாய நோக்கில் தாய்மையின் நிலை உற்றுநோக்கத்தக்கது. தாய்மையின் பணி, தாய்மையின் சிறப்புகள் என்ற இருநிலையில் சமுதாய நிகழ்வுகள் எடுத்துக்காட்டப்படுகிறது.

## 2. பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள்

சமுதாயத்தில் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதிலேயே பெண்களின் வாழ்க்கை முடிவடைந்து விடுகிறது. சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் சிக்கல்களைச் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

1. பாலியல் சார்ந்த சிக்கல்கள்
2. வேலைக்குச் செல்லுமிடங்களில் ஏற்படும் சிக்கல்கள்
3. குடும்பம் சார்ந்த நிறுவனங்களில் எதிர்கொள்ளும் சிக்கல்கள்
4. சமுதாய நிலைகளில் எதிர்கொள்ளும் சிக்கல்கள்
5. உழைப்புச் சுரண்டல் சார்ந்த சிக்கல்கள்

என்ற வகைப்பாடுகளில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் சமுதாய நிகழ்வுகளாகக் கூறலாம்.

### 1. பாலியல் சார்ந்த சிக்கல்கள்

பெண்களுக்கு ஆணினத்தால் ஏற்படும் பாலியல் சார்ந்த துன்பங்களையும், அதனால் பெண்களின் மனம் வருந்தும் நிலைப்பாட்டினையும் எடுத்துரைக்கப்படுகிறது. பெண்களின் உணர்வுக்கு மதிப்பளிக்காது அவர்கள் உடல்மீது காமப்பசிகொண்டு திரியும் காமுகர்களின் தீய செயல்பாடுகள் எடுத்துரைக்கப்படுகிறது. ஆண் இனம், பெண்களுக்கு ஏற்படுத்தும் தீய செயல்களைப் பெண்கள் மனவலிமையுடன் எதிர்கொண்டு சிக்கல்களைப் போக்குவதற்கு முயலவேண்டும்.

### 2. வேலைக்குச் செல்லுமிடங்களில் ஏற்படும் சிக்கல்கள்

பணிபுரியும் இடங்களில் பெண்களுக்குத் துன்பம் விளைவிக்கப்படுகிறது. வேலைக்குச் செல்லும் பெண்கள் பொதுவெளியில்

பாலியல் கொடுமைகளுக்கு அதிக அளவில் ஆளாகின்றனர். இவற்றிற்குக் காரணம் ஆண் இனத்தில் தீயவர்கள் நிறைய இருப்பதாகும். இவற்றைத் தீர்க்கப் பெண்களுக்கான சட்டங்கள் இருப்பதை அறிந்து விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும்.

### 3. குடும்பம் சார்ந்த நிறுவனங்களில் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் ஒருவரையொருவர் புரிந்து நடக்க வேண்டும். குடும்பம் சீராகச் செயல்படுவதற்குக் கணவன், மனைவி இருவரும் விட்டுக் கொடுத்து வாழும் பண்பைப் பெற வேண்டும். ஏனென்றால் குடும்பநலன் மீது தலைவன் அக்கறை கொள்ளாமல் மது குடித்து விட்டுத் தீய செயலில் ஈடுபடுவதன் மூலம் குடும்ப அமைப்பு சீர்குலையும் நிகழ்வுகள் நடக்கின்றன.

### 4. சமுதாயம் சார்ந்த நிறுவனங்களில் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

குடும்பங்களில் பல இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் எதிர்கொண்டு வாழும் பெண்கள் குடும்பத்திற்கு வெளியேயும் பல அவலங்களைச் சந்திக்கின்றனர். சமுதாயத்தில் வாழும் ஆண் சமூகத்தினாலும், பெண் சமூகத்தினாலும் பெண்கள் பல இடர்ப்பாடுகளுக்கு ஆளாகின்றனர். இதனை,

1. ஆண்களால் பெண்கள் ஏமாற்றப்படல்
2. வரதட்சணைவழி எதிர்கொள்ளும் சிக்கல்கள்
3. விதவைப் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்
4. விலைமகளிர் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

எனும் நான்கு நிலைகளில் வகைப்படுத்தலாம்.

### 3. கல்வியின் பயன்கள்

கல்வி தனிமனிதன், குடும்பம், சமுதாயம், நாடு போன்றவற்றின் வளர்ச்சியினை அளவிட்டு நிர்ணயம் செய்யும் கருவியாகும். பண்டைய காலம் தொடங்கி இன்றுவரை மானிடர்கள் கல்வியோடு தொடர்பு கொண்டு பல்வேறு முன்னேற்றங்களைப் பெற்று வருகின்றனர். முதற்காலக் குருகுலக்

கல்வியிலிருந்து இன்றைய கால அறிவியல் தொழிற்நுட்பக்கல்வி வரை சமுதாயத்திற்கு எழுத்தறிவையும், உலகியலறிவையும் ஊட்டி வருகின்றது.

‘உலகில் வாழும் மக்களையெல்லாம் சமூகப்படுத்துவது கல்வியாகும். கல்வி இல்லையென்றால் மனிதர்கள் விலங்கினத்தைப் போன்றே வாழநேரிடும். கல்வி மனிதர்களில் பகுத்தறிவைத் தூண்டிச் சமுதாயத்தை வழிப்படுத்துகின்றது. சமுதாயத்தில் மறுமலர்ச்சியைக் கொண்டு வருகின்றது. எதிர்காலச் சமுதாயத்தை வடிவமைக்கின்றது’ என்று கல்வியின் மேன்மையினை மு.அருணாசலம் என்பார் எடுத்துரைக்கின்றார்.

சமுதாயத்தில் அடிமைகளாய் வாழக்கூடிய மானிடர்களுக்கு விடிவு காலத்தினை ஏற்படுத்தி மறு வாழ்வினை அளிப்பது கல்வியாகும். கல்வி மாணவர்களின் ஆளுமைத் திறனை வளர்க்கவும், அச்சத்தினை அகற்றவும், நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் துணை நிற்கின்றது. மேலும் சுயசிந்தனையை வளர்ப்பதற்கும், விமர்சனப் பார்வையை உருவாக்குவதற்கும், சமூகத்தோடு சில பிணைப்புகளை மாணவர்கள் உருவாக்கிக் கொள்வதோடு படைப்பாற்றலையும் வெளிக்கொணரப் பயன்படுகிறது.

கல்வி என்பது மாணவர்களின் எதிர்காலக் குடும்ப நலனுக்கு முன்கூட்டியே சேமித்து வைக்கும் மூலதனமாகும். நம்பிக்கை உணர்வோடு கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பிற்காலத்தில் பொருளாதாரம் சார்ந்த நிலையிலும் வாழ்வியல் சார்ந்த நிலையிலும் பயன்தரும் எனலாம்.

### 4. ஆசிரியர்கள்

ஆசிரியர்கள் சமுதாய ஒழுங்குமுறைக்கும் முன்னேற்றத்திற்கும் தேவைப்படும் ஆற்றலையும், வேகத்தையும், வழிமுறையையும் தோற்றுவிப்பவர்கள். மாணவர்கள் மனத்தில் இயற்கையாகப் புதையுண்டு கிடக்கும் ஆற்றல் வாய்ந்த திறன்களை நல்நெறியோடு வெளிக்கொணரும் தன்மை கொண்டவர்கள். சமுதாய நலனுக்கு தங்களை முழுமையாக

அர்ப்பணிக்கும் திறன் கொண்ட ஆசிரியர்கள் சமுதாயத்தின் சிற்பிகளாகத் திகழவேண்டும்.

மாணவர் ஒவ்வொருவரையும் சிறந்த கல்வியின்மூலம் உயர்ந்த இடத்திற்கு ஏற்றிச் செல்லும் ஆசிரியர்கள் தங்களின் சுயநலப் போக்கினால் கடமை மறந்தவர்களாக விளங்கும் நிலையினைச் சுட்டிக்காட்டலாம். இவை,

1. ஆசிரியர்களின் அடக்குமுறை
2. ஆசிரியர்களின் பொறுப்பின்மை

எனும் இருநிலைகளில் அமைகிறது.

மாணவர்கள் நலனிலும் சமுதாய நலனிலும் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பது உண்மையாகும்.

### 5. மாணவர்கள்

கல்வி பயில அடியெடுத்து வைக்கும் இன்றைய மாணவர்கள் எதிர்காலச் சமுதாயத்தை மாற்றியமைக்கும் சக்தி படைத்தவர்கள். சமுதாய நன் ஒழுங்குமுறைக்கும் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழிவகுக்கக் கூடியவர்கள்.

1. மாணவர்களின் ஆர்வநிலை
2. மாணவர்களின் வறுமைநிலை

என்று இருநிலைகளில் எடுத்துக்காட்டப்படுகிறது. மேலும் மாணவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் சமுதாய நிகழ்வுகளாகப் பார்க்கப்படுகிறது.

### 6. குழந்தைகள்

மானிடர்களின் வாழ்வில் இனிய உணர்வுகளாகவும் உறவுகளாகவும் விளங்கும் குழந்தையின் சிறப்பியல்புகளையும் தனித்தன்மைகளையும் பண்டைய கால இலக்கியங்கள் உணர்த்துகின்றன. குழந்தைகள் மனத்தில் புதைந்து கிடக்கும் மெல்லிய உணர்வுகளை அன்பின் உணர்வுகளை அணுகி எடுத்துக்காட்டப்படுகிறது. குழந்தைகள் பங்குகொள்ளும் அனைத்துத் தளங்களிலும் பெரியவர்கள் தன்னையொரு குழந்தையாகவே பாவித்துக்

கொண்டு குழந்தைகள் உள்ளத்தில் காணப்படும் அன்பியல் சார்ந்த உணர்வுகளை வெளிக்கொணர வேண்டும். குழந்தைகளின் தன்மைகளை,

1. குழந்தைகளின் சிறப்புகள்
2. குழந்தைகளின் குறும்புகள்
3. குழந்தைகளின் விளையாட்டுத் திறன்கள்
4. குழந்தைகளின் மனவிருப்ப நிலை
5. குழந்தைத் தொழிலாளர் நிலை

என ஐந்து நிலைகளில் பிரித்துக் காணலாம்.

## 7. வேலையில்லாத் திண்டாட்டம்

கல்விக்கற்று வெளியேறும் மாணவர் சமுதாயத்தை இன்னலுக்குள்ளாக்கும் பல்வேறு பிரச்சினைகளுள் தலையாயது வேலையில்லாத் திண்டாட்டமாகும். இந்தியாவிலும் பிற நாடுகளிலும் இப்பிரச்சினை பெரிய அளவில் நடந்தேறி வருகின்றது. இந்நிலைக்கு அடிப்படைக் காரணமாக விளங்கக் கூடியவை மக்கள் தொகைப் பெருக்கமும் நடைமுறைக்குப் பொருத்தமில்லாத சீரற்ற கல்விமுறையும் ஆகும்.

கல்வி நிலையங்களில் படித்து முடித்து விட்டு வெளியே வரும்போது வேலை தேடும் இளைஞர்கள் வேலை கிடைக்காத போது விரக்தியடைகின்றனர். இவ்விரக்தியின் உச்சநிலைக்குச் செல்லும் இளைஞர்கள் சீர்கேடான தீயசெயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இத்தீய செயல்பாடானது அவ்விளைஞர்களையும் அவர்களைச் சார்ந்த குடும்பங்களையும் சமுதாயத்தையும் பிறவற்றையும் பாதிக்கின்றன.

> தகுதியுள்ள பட்டதாரிகள் பலர் புறக்கணிக்கப்படுவதும் தகுதியில்லாத பலர் பணம், பரிந்துறை காரணமாகப் பதவியில் அமர்வதும் தற்கால நிகழ்வுகள் ஆகின்றன. எத்தனைப் படித்தும் நிறையப் பட்டங்கள் பெற்றும் உரிய தகுதிகள் இருந்தும் பணிவாய்ப்புகள் கிடைக்காமல் அல்லல்பட நேர்கிறது[10]

என்று வேலையின்மை உருவாகுவதற்குரிய காரணங்களை இரா.தமிழரசி என்பவர் எடுத்துக் காட்டுகிறார்.

1. வேலை தேடுதல்
2. வேலையில்லாதவர்களின் மனநிலை
3. வேலையில் உள்ளோர் இல்லாதவர் நிலை

என மூன்று நிலைகளில் அமைகிறது.

**வறுமை**

சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களில் தீராத சிக்கலாகக் கருதப்படுவது வறுமை ஆகும். வறுமையினால் மானிடர்கள் பலநிலைகளில் துன்ப வாழ்க்கையினையே வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். சமுதாயம் தோற்றம் பெற்ற நாள்தொட்டு இன்றுவரையில் வறுமை மனிதர்களோடு சம்பந்தப்பட்டு வருகின்றது. ‘கொடிது கொடிது வறுமை கொடிது’ என்ற முதுமொழி இன்றளவும் உயிர்ப்போடு இருக்கும் அவலநிலைக்கு இச்சமுதாயம் தள்ளப்பட்டுள்ளது.

> ஒரு சமுதாயத்தின் ஒரு பிரிவினர்க்கு ஆடம்பரப் பொருளாகக் கருதப்படும் பொருள் மற்றொரு பிரிவினருக்குக் கேள்விப்பட்டறியாத பொருளாகக் கூட இருக்கலாம் எனச் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினர்க்கும் உரிய பொருள் கிடைக்கப்பெறாத நிலையே வறுமை எனப்படும்[11]

என்று வறுமையைப் பற்றி வீ.உண்ணாமலை என்பவர் எடுத்துரைக்கின்றார்.

வறுமை எனும் கொடிய நோய் உலகம் தொடங்கிய காலம் தொட்டு இன்று வரையும் நிலவி வருகின்றது. வறுமை குறித்து பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் நவீன கால இலக்கியங்கள் வரை பேசுகின்றன. சமுதாயத்தில் வறுமை ஏற்படுவதற்கான காரணங்கள் பல. அவை, ஆட்சித் திறமையில்லாமை, இயற்கை அழிவு, விளைச்சல் குறைவு, உணவுப் பொருள் இன்மை, தனிமனித ஒழுங்கின்மை போன்றவை சமுதாயத்தில் வறுமைநிலை பெறுவதற்குரிய காரணங்கள் எனக் கொள்ளலாம்.

சமுதாயத்தில் ஏற்படும் வறுமை நிலையினை அமிர்த்தியாசென் என்னும் பொருளியலாளர் பஞ்சமும் வறுமையும் நூலில் நான்கு நிலைகளில்

வகைப்படுத்துகின்றார். எனினும் சமுதாய வறுமை, சுழற்சி வறுமை, தனியாள் வறுமை, குறிக்கோள் வறுமை என்னும் நிலைகளில் வகைப்படுத்திக் காட்டுகின்றனர்.

1. காலந்தோறும் வறுமை
2. உணவின்மையால் ஏற்படும் வறுமை
3. பொருளாதார சமமின்மையால் ஏற்படும் வறுமை
4. இயற்கை அழிவால் ஏற்படும் வறுமை

என நான்கு நிலைகளில் வறுமை பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன.

## 9. சாதி

சாதி என்பது சமுதாயத்தைப் பாகுபடுத்திச் சீர்குலைத்து வரும் தீய கருவியாகும். வளர்ச்சி பெற்று வரும் சமுதாயத்தில் எவ்வளவோ மாறுபாடுகளும் முன்னேற்றங்களும் ஏற்பட்டபோதும் சாதி வரையறைக்குள்ளிருந்து மட்டும் மானிடர்கள் விடுபடவில்லை. ஒவ்வொரு சாதியினரும் தங்களுக்கென ஒரு அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டு சாதியை வளர்ப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்தி வருகின்றனர். மேல்நாட்டாரின் கலாச்சாரமும் கல்வியும் பரவிச் சாதிய தீமைகளைச் சுட்டிக் காட்டிய பொழுதும் சாதி தன் வலுவை இழக்காமலே நிலைபெற்று வருகிறது. இதனை,

1. சாதிக்கொடுமை
2. சாதி வேறுபாடு
3. சாதிவெறி
4. சாதிப் பிரிவினால் ஏற்படும் விளைவுகள்

எனும் நான்கு நிலைகளில் காணப்படுகிறது.

சமுதாயத்தில் சாதிப்பூசல், சாதியக்கொலை, கலவரம், வன்முறை என நிகழ்வதைக் காணலாம். இந்நிகழ்வுகள் மானுட சமுதாய வளர்ச்சிக்குப் பெரும் தடையாக உள்ளன எனலாம்.

## 10. வரதட்சணை

பெண் கேட்கச் செல்லும் மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டாரின் பொருளாதார நிலையையே முதலில் கருத்தில் கொள்கின்றனர். பெண் வீட்டாரிடம் எவ்வளவு பொருட்களைப் பெற இயலுமோ அவ்வளவையும் வரதட்சணை எனும் பெயரில் வாங்கிவிடுகின்றனர். பணம், நகை, கார், வீடு மற்றும் பிற அடிப்படைப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் பெண் வீட்டாரிடமே பெற முற்படுகின்றனர். இன்றைய சமுதாயத்தில் மிக வேகமாக வரதட்சணைக் கொடுமைகள் பரவிவருகின்றன.

பெண்ணையும், பெண் வீட்டாரையும் சுரண்டும் நோக்கிலேயே இன்றைய சமுதாயத்தில் திருமணங்கள் நடந்தேறி வருகின்றன. மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டாரின் வசதி நிலையினையும், மனநிலையினையும் புரிந்து கொள்ளாது அவர்களிடமிருந்து பல்வேறு வகையான பொருட்களைச் சுரண்ட நினைக்கும் தீயபோக்கு சமூகத்தில் இருக்கின்றன. இந்நிலை,

1. வரதட்சணைக் கேட்டல்
2. வரதட்சணைக் கொடுமை
3. வரதட்சணையால் ஏற்படும் அவமானம்

என மூன்று தளங்களில் அமைகிறது. வரதட்சணைக் கொடுமையால் குடும்பமும் சமுதாயமும் பல சீர்கேடுகளையும், உயிரிழப்புகளையும், எதிர்கொள்கின்றன. இந்த நிலையை மானிடர்கள் உணர்ந்து வரதட்சணையற்ற நல்ல சமுதாயத்தினை உருவாக்க வேண்டும்.

## 11. தொழிலாளர்கள்

தொழிலாளர்கள் சமுதாயத்தின் உயிர்நாடியாக விளங்கக் கூடியவர்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆணிவேராகவும், முதுகெலும்பாகவும், படிக்கற்களாகவும் விளங்க வல்லவர்கள். உழைப்பின் சிறப்பினையும், உழைப்பாளர்களின் மேன்மையையும் அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும், சிக்கல்களையும் எடுத்து இயம்புவது இலக்கியங்களின் தலைசிறந்த கடமையாகும்.

இலக்கியப் படைப்பாளர்கள் உழைப்பாளர்களோடு ஓர் இணக்கமான உறவினை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் வாழ்வியலைப் பிரதிபலித்துக் காட்டுகின்றனர். அக்கால இலக்கியங்கள் முதல் நவீனகால இலக்கியங்கள் வரை தொழிலாளர்களின் உடல் உளம்சார்ந்த நிலைப்பாடுகளையும் புலப்படுத்திக் காட்டுவதில் முன்னிலை வகிக்கின்றன. மேலும் உழைப்பாளர்களின் நலன்கருதி போராடும் கூக்குரலாக இன்றைய இலக்கியங்கள் வெளிவருகின்றன.

1. உழைப்பின் மேன்மை
2. அலுவலகப் பணியாளர் எதிர்கொள்ளும் சிக்கல்
3. கூலிப்பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்

என மூன்று பிரிவுகளில் சுட்டிக்காட்டலாம். சமுதாய நிகழ்வுகளில் தொழிலாளர் பிரச்சினை பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

## தொகுப்புரை

- நிகழ்வுகள் என்பது நிகழ்ச்சியமை, நிகழ்ச்சி நிரல் என்று மெகா அகராதி விளக்கம் தருகிறது.
- நிகழ்வுகளின் பின்புலமாக முதற், கரு, உரிப்பொருள்கள் இருக்கின்றன என்று தொல்காப்பியர் விளக்கம் தருகிறார்.
- நிகழ்வுகளைத் தனிமனித நிகழ்வுகள், சமுதாய நிகழ்வுகள் என இருவகையாகப் பாகுபடுத்துகின்றனர்.
- தனிமனித நிகழ்வுகளில் காதல், குடும்பப் பின்னணி, தன்மான உணர்வுகள் என்ற முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து விளக்கப் பெற்றுள்ளது.
- சமுதாய நிகழ்வுகளைப் பன்முறையில் பகுத்து அதன் விளைவுகள் சுட்டிக்காட்டப்பெற்றுள்ளன.
- தாய்மையின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் கல்வியின் பயன்கள், ஆசிரியர் நிலைப்பாடு, மாணவர்களின் நிலை, குழந்தைத் தொழிலாளர், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, சாதி, வரதட்சணைக் கொடுமை, விருந்தோம்பல் பண்பு என பன்முகப் பார்வையில் சமுதாய நிகழ்வுகள் விரிவடைவது இவண் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சான்றெண் குறிப்புகள்

1. ***தமிழ் அகராதி***, *ப.657.*
2. **A Mega Dictionary**, p.773.
3. *சிங்காரவேலு முதலியார்*, ***அபிதான சிந்தாமணி***, *ப.1181.*
4. *தொல்காப்பியர்*, ***தொல்காப்பியம்***, *நூ.46.*
5. *துரை.பட்டாபிராமன் (ப.ஆ.)*, ***கவிவளம்***, *ப.155.*
6. *இராஜம் கிருஷ்ணன்*, ***புதியதோர் உலகம் செய்வோம்***, *ப.34.*
7. *தாயம்மாள் அறவாணன்*, ***பெண்மையாய்***, *ப.63.*
8. *தி.சு.நடராஜன்*, ***இலக்கிய இசங்கள்***, *ப.24.*
9. *அன்னிதாமசு*, ***தமிழர் சமூகவியல்***, *ப.1.*
10. *இரா.தமிழரசி*, ***ஐக்கூவில் சமூகமும் உத்திகளும்***, *ப.19.*
11. *வீ.உண்ணாமலை*, ***புதுக்கவிதைகளில் சமுதாயம்***, *ப.14.*

# இயல் 2

# தலைவன், தலைவி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள்

எட்டுத்தொகை அகநூல்களில் இடம்பெறும் தலைவன், தலைவி கூற்றுப் பாடல்களில் இடம்பெறும் நிகழ்வுகளை இவ்வியல் ஆராய்கிறது.

**தலைவன் கூற்று நிகழ்வுகள்**

அகவாழ்வின் தலைமை நிலையில் விளங்கும் ஆண்மகன் என்ற பொருளில் காதலன் தலைமகன் எனப் பெயர் பெறுகின்றான். களவொழுக்கத்தின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் காரணமானவனாகத் தலைமகன் விளங்குகிறான்.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன[1]

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. களவுக்காலத்தில் தலைவியிடம் மிகுந்த அன்புடையவனாகவும், அவளைச் சந்திப்பதற்கு ஏற்படும் தடைகளைக் கடந்து வரும் துணிவுடையவனாகவும் சுட்டப்பெறுகின்றான். வரைவிடை வைத்துப் பொருள்தேடிச் செல்பவன் கற்புநெறி வாழ்விலும் பொருள் ஈட்டுவதற்குத் தலைவியைப் பிரிந்து செல்லும் இயல்புடையவன். அவ்வாறு பல்வேறு காரணங்களினால் தலைவியைப் பிரிந்து சென்றாலும் விரைந்து வந்து தலைவியைச் சந்திப்பதில் பெருவிருப்பம் உடையனவாகவே சுட்டப்பெறுகின்றான். எனினும் கற்புக்காலத்தில் தலைவியை நீங்கிப் பரத்தையை நாடும் தன்மை உடையவனாக உள்ளான். பின்னர்த் தான் செய்த பிழைக்காகத் தன்னிடம் ஊடல் கொள்ளும் தலைவி முன் பணிந்து பேசும் பண்பும் கொண்டவனாக இருக்கிறான். எனவே ஒப்புயர்வற்ற ஆண்மைச் சிறப்பும், ஈடிணையற்ற எழில்நலமும் கொண்ட தன்னிகரில்லாத் தன்மையினை உடையனவாய்ச் சங்க இலக்கியத் தலைவன் திகழ்கிறான்.

**தலைவன்**

இலக்கியத்தில் தலைவன் தனிச்சிறப்பிடம் பெறுகிறான். தலைவனுக்கு அமைந்த அனைத்து சூழல்களிலும் அவனது மனத்திரையில் நிழலாகக் காட்டப்படும் உருவம் தலைவி ஆவாள்.

> தலைவியின் இன்பம் தலைவனது குறிக்கோளாகும். அவளது இனிய நினைவு அவனது இன்ப ஊற்று[2]

என்கிறார் ஆ.இராமகிருஷ்ணன்.

தலைவன் தலைவியுடன் இருக்கும் பொழுதும் அவளைப் பிரிந்து இருக்கும் போதும் அவனின் மனம் தலைவியைச் சுற்றியே அமைந்துள்ளது. தலைவியின் நினைவே தலைவனின் உயிர்த் துடிப்பாகும். தலைவனைப் பிரிந்து தலைவி வருந்துவது போலத் தலைவனும் வருத்தமுறுவான். தலைவனின் வருத்தத்தினை இலக்கியங்கள் கூறாது போனாலும் தலைவியைக் காணும்போது அவன் கொள்ளும் மகிழ்வு கூற்று முழுவதும் பரந்துபட்டு காணப்படுகின்றது. மாறாக எல்லா நிலைகளிலும் தலைவியின் பிரிவால் வருந்துகின்ற அல்லது நினைவால் மகிழ்கின்ற தலைவனையே இலக்கியங்கள் காட்டுகின்றன.

தலைவனின் கூற்றாக, தலைவன் தோழியை இரந்து பின் நிற்கும் தலைவன், புணர்ந்து நீங்கும் தலைவன், இடித்துரைக்கும் பாங்கன் முன் தலைவன், மடல் வலித்த தலைவன், உடன்போக்குச் செல்லும் தலைவன், பிரிவு வலித்த தலைவன், இடைச்சுரத்து நின்ற தலைவன், பாசறைக்கண் இருக்கும் தலைவன், வினை முடித்து மீளும் தலைவன் எனப் பல்வேறு சூழ்நிலைகளில் அமைந்த தலைவனின் நிலை இவண் எடுத்துக் காட்டப்படுகின்றது.

### 1. தோழியை இரந்து பின் சென்ற தலைவன்

தலைவன், தலைவியோடு கொண்ட களவு வாழ்க்கையை நீட்டிக்க விரும்புகின்றான். அதற்காகத் தோழியின் துணையை நாடும் போது அவளை இரந்து நிற்கின்றான். அவ்வாறு தலைவன் தோழியிடம் கூற்று நிகழ்த்தும் போது மேற்கொள்ளும் அணுகுமுறைகள், அவன் தலைவியோடு கொண்ட களவின் அளவினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

*தலைவன், தோழியிடம் தலைவியின் அழகு நலத்தையும் அவளின் அமிழ்தூறும் செவ்வாயும், பூவின் மணம் கமழும் கூந்தல், முறுவலோடு கூடிய இனிய சொற்கள் முதலியவற்றை எடுத்துரைக்கின்றான். அவள் தன்னொடு கொண்ட புணர்வையும், மனமகிழ்வையும் குறிப்பால் காட்டுகிறான். தலைவியின் நலத்தைப் பின்வருமாறு புனைந்துரைக்கின்றான்.*

இலங்கு முத்துரைக்கும் எயிறுகெழு துவர்வாய்
அரம்போழ் அல்வளைக் குறுமகள்
நரம்பார்த்தன்ன தீங்கிளவி யனே[3]

*என்கிறான். தலைவன் தன் குறைமிக்க நிலையினைத் தோழி நீ விரும்பி அருளாவிட்டால் தலைவியின் கூந்தலும் தோளும் பாராட்டி வாழும் இல்வாழ்க்கை எனக்குக் கிட்டாது. அதற்கு உதவிபுரிய வேண்டும் எனத் தோழியிடம் இரந்துபின் நிற்கின்றான்.*

## 2. புணர்ந்து நீங்கும் தலைவன் தலைவிக்கு உரைத்தல்

*தலைவன், தலைவியை இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் இடந்தலைப்பாட்டில் காணுகின்றான். தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் தலைவியின் நிலைகண்டு கூறுவதாகச் சில பாடல்கள் அமைந்துள்ளன. தலைவன், தலைவியைக் கூடுவதற்கு முன்பு கொண்ட சாயல்களில் நாட்டம் கொண்டு தலைவனையே எண்ணி நிற்கிறாள். அவ்வாறு நிற்கும் தலைவியைப் பார்த்துத் தனிமை கொள்ளும் மாலைப்பொழுது மறைந்தபின் நன்மை பொருந்திய மார்பினை நல்குவாள் என்பதனை,*

இலங்குவளை தெளிர்ப்ப அலவனாட்டி
முகம்புதை கதுப்பினள், இறைஞ்சி நின்றோளே
புலம்புகொள் மாலை மறைய
நலங்கேழாக நல்குவ ளெனக்கே![4]

*என்கிறாள். இதனால் புணர்ந்து நீங்கும் தலைவனால் மேலும் புணர்தல் நிகழும் என்பது குறிப்பாகப் புலப்படுத்தப்படுகிறது. இதனால் தலைவனின் ஆளுமைத் திறன் வெளிப்படுகிறது.*

### 3. பாசறைக்கண் இருக்கும் தலைவனின் நிலை

*களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவன் கற்பில் (குடும்பம்) தலைமை வகிக்கும்போது தலைவி நலன் சார்ந்து வாழ விரும்புகிறான். போரின் காரணமாகப் பிரிந்த தலைவனின் நிலையை,*

விரைப்பரி வருந்திய வீங்கு செலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்பு அழித்து அசைஇ
வேண்டு அமர் நடையர், மென்மெல வருக!
தீண்டாவை முள் தீண்டி நாம் செலற்கு
ஏமதி, வலவ, தேரே! உதுக்காண்
உருக்குறு நறு நெய் பால் விதிர்த்தன்ன
அரிக்குரல் மிடற்ற அம் நுண் பல் பொறிக்
காமரு தகைய கானவாரணம்
பெயல்நீர் போகிய வியன் நெடும் புறவில்
புலரா ஈர்மணல் மலிரக் கெண்டி
நாளிரை கவர மாட்டித்
தன்பெடை நோக்கிய பெருந்தகு நிலையே[5]

*என்ற பாடல் விளக்குகிறது. இப்பாடல் ஈரமணலைக் கிளரி நாங்கூழ்ப் புழுவைக் கவர்ந்த கானக்கோழி தன் பெடைக்குக் கொடுக்கும் செயலைத் தேர்பாகனிடம் கூறுகிறான். தலைவனின் நினைப்பு தலைவி தனிமையில் இருக்கிறாள் என்பதை உணர்த்துகிறது. தலைவியைப் பிரிந்த காலமோ மழை பொழிந்து பூமியில் கோடையில் விழுந்த வித்து முளைவிடும் காலமாகும். இந்தக் காலத்தில் தலைவியைப் பிரிந்து வாழ்தல் கூடாது என்பதை எடுத்துக்காட்டுகிறது.*

### 4. பரத்தையற் பிரிவு மேற்சென்ற தலைவன்

*சங்க இலக்கியங்களில் காணப்பெறும் வாழ்க்கை பெரும்பான்மையும் காதல் (களவு + கற்பு) வாழ்க்கை ஆகும். இவ்வாழ்வில் தலைவனும் தலைவியும் மனம் ஒன்றுபட்டு வாழ்கின்றனர். இதனிடையே தலைவன் பரத்தையற் பிரிவு என்று இன்னொரு பெண்ணையும் நாடிச் செல்கிறான். அவ்வாறு நாடிச் செல்வதைச் சமுதாயம் தவறாகச் சுட்டவில்லை. ஆனால்,*

*தோழி தலைவியைத் தவறாகச் சுட்டுகின்றனர். தலைவன், பரத்தையிடம் சென்றதைத் தோழி,*

கண்டனென் - மகிழ்ந! - கண்டு எவன் செய்கோ?
பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்,
ஏர்தரு தெருவின், எதிர்ச்சி நோக்கி,
நின், மார்புதலைக் கொண்ட மாணிழை மகளிர்
கவலே முற்ற வெய்துவீழ் அரிப்பனி
காலே முற்ற பைதரு காலை[6]

*என்கிறாள். பரத்தையர்கள் தலைவன் கையைப் பிடித்து, தம் இல்லிற்கு வா வென்று அழைத்து இழுத்ததாகவும், அப்போது தலைவன் வருந்தியதாகவும் தோழி கூறுகிறாள். மேலும்,*

புனிறுநாறு செவிலியோடு புதல்வன் துஞ்ச
ஐயவி யணிந்த நெய்யாட் டீரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த
நள்ளென் கங்குற் கள்வன் போல
அகன்துறை யூரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே[7]

*என்னும் பாடல் தலைவன், தனக்குக் குழந்தைப் பிறந்ததைப் பார்க்கக் கள்வன்போல் இரவில் வருகிறான் என்று பரத்தை குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.*

*மருத நிலத்தில் வாழும் தலைவன் பரத்தையிடம் செல்லுதல், தவறான நடத்தை என்றாலும், அக்காலக்கட்டம் ஆண்களை விடப் பெண்கள் அதிகமாக (போரின் பொருட்டு ஆண் இறத்தல்) இருந்ததால், பரத்தையற் பிரிவு சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்டு இருந்திருக்கலாம் என எண்ண வேண்டியிருக்கிறது.*

## 5. பிரிவு

*தலைவன் களவொழுக்கக் காலத்தில் மட்டும் பொருள்வயிற் பிரிவு நிகழ்கிறது. ஆனால் கற்பொழுக்கக் காலத்தில் தலைவன் பொருள் ஈட்டும் பொருட்டு மட்டுமின்றி வினைவயிற் காரணமாகவும் பிரிவு நிகழ்கிறது. மேலும் பரத்தையற் பிரிவும் நிகழ்கிறது. களவில் தலைவியைப் பிரிந்தத் தலைவனுக்கு அவள் நினைவே இன்பம் தரும் என்பதை,*

மருண்டனென் அல்லெனோ, உலகத்துப் பண்பே
நீடிய மராஅத்த கோடு தோய் மலிர்நிறை
இறைத்து உணச் சென்று அற்றாங்கு
உள்ளினென் அல்லனோ யானே உள்ளி
நினைந்தனென் அல்லனோ பெரிதே நினைந்து
அனைப்பெருங் காமம் ஈண்டுக்கடைக்
கொளவே[8]

*என்ற பாடல் சுட்டுகிறது. வினைமுற்றி மீண்ட தலைவனிடம் தலைவி நெஞ்சுருகி நீ பிரிந்தவிடத்து எம்மை நினைத்தீரோ? என்று கேட்கிறாள். அதற்குத் தலைவன் உயர்ந்த மரத்தின் கிளையைத் தொட்டு ஓடும் வெள்ளத்தைப் போன்று உன்மீது கொண்ட அன்பு, என்றும் காமநோய் இங்கே யான்வந்து உன்னைச் சந்தித்ததன் மூலம் முற்றுப்பெற்றது என்கிறான். அவ்வாறு முடியுறும்படி உம்மை இடையறாது உள்ளத்தில் நினைத்தேன். மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்தேன் என்று குறுந்தொகைத் தலைவன் பதிலுரைக்கின்றான்.*

## உடன்போக்குச் செல்லும் தலைவன்

*அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்களில் உடன்போக்குக் குறித்த பாடல்கள் 35 உள்ளன. அதில் தலைவன் கூற்றுப் பாடல்கள் 99, 257, 261 ஆகிய மூன்று பாடல்களாகும்.*

*களவு காலத் தலைவனின் பருவம் விடலை எனக் கொள்ளப்படுகிறது. அப்பருவ வயது 17-30 என வரையறை செய்யப்பட்டுள்ளது. உடன்போக்குச் செல்லும் தலைவனும் தலைவியும் ஒரே திணையைச் சேர்ந்தவர்களாக*

*இல்லை. தலைவன் பாலைத் திணைக்கு உரியனவாகவும் தலைவி குறிஞ்சி நிலத்திற்கு உரியவளாகவும் பாடலில் குறிப்புக் கிடைக்கிறது.*

புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி
ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்
ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த
துயத்தலை வெண்காழ் பெறூஉறு
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே[9]

*என்ற பாடலில் தலைவி குறிஞ்சி நிலத்திற்குரிய கானவன் மகளென குறிக்கப் பெறுகிறாள். இப்பாடலில் குறிஞ்சிக்குரிய கருப்பொருள்கள் 1. புலிப்பல் - விலங்கு, 2. பலா - மரம், 3. சிறுகுடி - ஊர் போன்ற குறிப்புகள் வந்துள்ளன. இதன் மூலம் தலைவி குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்தவள் என்பதை அறியமுடிகிறது. இவ்வாறான குறிப்புகள் கிடைப்பதன் மூலம் தலைவன் தலைவி வெவ்வேறான நிலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்பதை அறியலாம்.*

ஏதிலன் பொய்ம்மொழி நம்பி, ஏர்வினை
வளம்கெழு திருநகர் புலம்பப் போகி[10]
அறனி லாளன் தோண்ட வெய்துயிர்த்துப்[11]
நலம்புனைந் தெடத்தவென் பொலந்
தொடிக் குறுமகள்
அறனி லாளனோ புறந்தனள் இனியென[12]

*என்ற பாடல் அடிகள் தலைவனை அறம் இல்லாதவன் என்று கூறுகின்றது. தலைவி உடன்போக்குச் சென்றவிடத்து தலைவனைச் செவிலி இகழ்கிறாள். இது தலைவன் அறமில்லாதவன் என்று எண்ணத் தோன்றுகிறது. அதே நேரத்தில் உடன்போக்கு காலத்தில் திருமண முறைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுதான். பழந்தமிழரின் திருமண வாழ்க்கை எனக் கொண்டால் உடன்போக்குச் சென்றவர்களைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது.*

*ஒருசில பாடல்களில் உடன்போக்கு ஏற்றுக் கொள்ளும் தன்மையில் இருந்தாலும் பெரும்பான்மையானப் பாடல்களில் செவிலி, நற்றாயின்*

புலம்பலை மையமாகக் கொண்டு உடன்போக்கை வெறுக்கும் நிலையையும் காணமுடிகின்றது.

தலைவனை ‘அறம் இல்லாதவன்’, ‘ஏதும் இல்லாதவன்’ என்றோ புலவர் குறிப்பிடவில்லை. இவ்வாறானச் சொற்கள் தலைவனின் பண்பையும் செல்வத்தையும் மையமாகக் கொண்டுள்ளன என்பதை வைத்துப் பார்க்கும் போது, தலைவன் செல்வச் செழிப்போடு கற்று அறம் உடையவனாக இருக்கும் நேரத்தில் உடன்போன தலைவனும் தலைவியும் எப்போது வருவார் என்று ஏங்கும் செவிலியின் தவிப்பையும், மகிழ்ச்சியையும் காணமுடிகின்றது. எனவே இங்கு தலைவனின் அறம் மற்றும் செல்வ நிலையும் புலம்பலுக்குக் காரணமாக அமைவதை செவிலி பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது.

## 6. ஊடல் தணிக்கும் புதல்வன்

தலைவி தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தின் காரணமாக மிகுந்த கோபம் கொள்கிறாள். தலைவன் தலைவியின் ஊடல் தணிக்கும் பொருட்டு வேண்டுகின்றான். எனினும், அவனின் ஊடலைத் தலைவி ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். தலைவன் தன் புதல்வன் மீதுள்ள பாசத்தினால் அவனோடு கண்துயில்கிறான். இதனால், தலைவி தலைவனை ஏற்றுக் கொள்கிறாள். இவ்வாறு தலைவன் தலைவியின் ஊடல் நீக்கம் சிறந்த வாயிலாகப் புதல்வன் அமைகிறான். இதனை,

பகல்ஆண்டு அல்கினை பரத்த என்றுயான்
இகலி இருப்பே னாயின் தான்தன்
முதல்வன் பெம்பெயர் முறையுளிப்பெற்ற
புதல்வன் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்[13]

என்ற பாடல் உணர்த்துகின்றது.

## 7. தலைவன் நாணத்தை இழத்தல்

தலைவியை விரும்பிய தலைவன் தன் நாணத்தை இழந்து ஊரார் முன் புலம்புவதையும், தலைவன் படும் பாட்டையும் கலித்தொகைப் பாடலும் குறட்பாக்களும் அழகுறச் சித்திரிக்கின்றன.

மடலேறுவேன் என்று தலைவன் தன்னைச் சுற்றி நின்ற மக்களைப் பார்த்து, நீ ஒன்றுபடு என்று கூறுவீராயின், எப்படியாயினும் சிறிது பாடவும் வல்லேன். அம்மடன்மா மீதிருந்து ஆடுக என்று கூறுவீராயின் ஆடவும் செய்யேன். இது மடல் அன்று குதிரை என்று உணருங்கள். தலையிலும் மார்பிலும் கிடக்கின்ற இவை பூவல்ல, யான் விரும்பி அணிந்திருக்கும் பூமாலை என்று கூறும் நிலையை,

கண்டவிர் எல்லாம் கதுமென வந்து, ஆங்கே
பண்டு அறியாதீர் போல நோக்குவீர்; கொண்டது
பிடி அமை நூலொடு பெய்ம் மணிகட்டி
அடர் பொன் அவிர் ஏய்க்கும் ஆவிரங் கண்ணி
நெடியோன் மகன் நயந்து தந்து, ஆங்கனைய்
மா என்று உணர்மின் மடல்அன்று மற்றுஇவை
பூ அல்ல பூளை உழிஞையோடு யாத்த
புனவரை இட்ட வயங்கு தார்ப்பீலி[14]

எனும் கலித்தொகைப் பாடல் படம்பிடித்துக் காட்டுகிறது. இதனை வள்ளுவரும்,

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புனை[15]

என்ற குறட்பா மூலம் எடுத்துரைக்கிறார். நாணமும் நல்ல ஆண்மையுமாகிய தோணிகளைக் காமம் என்னும் கடுமையான வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது எனச் சுட்டுகின்றார்.

தலைவன் தன்னை வருத்திக் கொள்வதன் மூலம் தன்னுடைய நாணத்தையும் ஆண்மையையும் மறந்து தன் காதலின் ஆழத்தை ஊரில் உள்ளோர்க்கு அறிவித்து அவர்களின் அனுதாபத்தினைப் பெற்றுத் தலைவியை மணம்புரியும் உத்தியாகவும் மடலேறுதல் திகழ்கின்றது.

**தலைவி கூற்று**

தலைவி என்பவள் குடும்ப வாழ்விலும், காதல் வாழ்விலும், தலைமைப் பொறுப்பு ஏற்பவள் ஆவாள்.

அகத்திணை வட்டத்தின் மையப்புள்ளி தலைவி எனலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளின் உரிப்பொருளாகிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய ஐவகை உணர்வுகளும் தலைவியை மையமாகக் கொண்டவையே[16]

என்பர்.

*அகத்திணையில் வரும் பிற கூற்றுக்கள் தலைவியின் கருத்தைப் பிரதிபலிப்பவை. தலைவியின் கூற்றுக்கு ஒளி ஊட்டுபவை. அம்மாந்தர்களுக்கு அமைந்த பின்புலங்கள் தலைவியின் மன உணர்வுகளை விளக்கி நிற்கின்றன.*

*மகட்போக்கியதாய், தலைவியைப் பிரிந்த தலைவன் இடைச்சுரத்து நின்று நெஞ்சழிதல் ஆகியோரின் தனிமைப் போராட்டங்களில் தலைவியின் நினைவே முழுவதும் காட்டப்பெறுகிறது. தலைவியின் கூற்றுக்கள் பெரும்பாலானவை பிரிவுக்கான மனநிலையை எடுத்துரைக்கின்றது.*

*தலைவியின் கூற்று நிகழும் இடங்களான, அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவரும் வேள்வி செய்யுங்கால் தத்தம் மரபிற்கேற்பத் தலைமகளிருள் ஒருத்திக்கு உரிமை கொடுக்குங்கால், தலைவியர் ஏற்றுக் கொள்ளுமிடத்தும், அறமும் பொருளும் காரணமாகத் தலைவன் பிரிந்துறையும்போது அப்பிரிவின்கண் தம் வேட்கை மிகுதிப் பெருகியவிடத்தும், தலைவன் எதிர்ப்பட்ட போது இன்பமும், அவனைப் பிரிந்த போது துன்பமும், உளவாகிய விடத்தும், மகப்பெற்ற போது தன் மெய்யணி காண விரும்பிய தலைவனிடத்து அவன் அதுகாறும் பிரிந்திருந்தமையைக் கூறி வருந்துமிடத்தும், பரத்தையர் இடத்துப் பிரிந்து வந்த தலைவனிடத்து தன் நெஞ்சு நெகிழவும், அதனை மீட்டுக் கொண்டு அவனது பரத்தையருள் ஒருத்தியை (கண்டாள் போல) வாயில் மறுத்து அதனால் நயந்தவிடத்தும் தலைவியின் கூற்றுகள் நிகழும்.*

**தலைவியின் பண்பு**

*தலைவனின் இல்லற ஒழுக்கம் பிறழ்ந்தபோதும் அவனை ஏற்றுக்கொண்டு இனியேனும் இவ்வாறு ஒழுகுவாயாக என்று தாய்போலத்*

*தலைவனிடத்து அறிவுரைகூறி அவனிடத்துப் பண்டுபோல் இயைந்து ஒழுகுவது தலைவியின் பண்பாகும். தான் நிகழ்த்துகின்ற இல்லறத்தால் தலைவனுக்கு இழுக்கு நேராமல் பாதுகாப்பது தலைவியின் கடமை எனக் கூறப்படுகின்றது. இதனால் தலைவனுக்குரியப் பின்முறை வதுவைப் பெருக்குலக் கிழத்தியையும் ஒப்பக்கருதி ஏற்றுக்கோடல் தலைவியது இயல்பாகும். தலைவியினிடத்துத் தாய்போலத் தழுவிக் கோடலும், மகன் தாய் உயர்வு தன் உயர்வாகக் கருதிக் கூறலும் அல்லாதவிடத்துத் தன்னைப் பற்றிப் புகழான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

**தலைவி கூற்றிற்குரிய சிறப்பு விதி**

*தலைவி கூற்றிற்குரியச் சிறப்பு விதியாகத் தொல்காப்பியர்,*

புணர்ந்துடன் போகிய இழவோள் மனையிருந்து
இடைச்சுரத் திறைச்சியும் வினையுஞ்சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக் கச்சமாகும்[17]

*என்கிறார். களவு காலத்துப் புணர்ந்து உடன்போகிய தலைவி, கற்புக்காலத்து இல்லின்கண் இருந்து, தலைவனுடன் சென்ற காலத்துக் கூட்டின்கண் கண்ட கருப்பொருள்களையும் தலைவன் தன்மேல் அன்பு செய்வதற்குத் தக்க கருப்பொருளின் தொழில்களையும் கருதிக் கூறுதல் தானே தலைவன் எடுத்துக் கொண்ட காரியத்திற்கு முடித்தலாற்றான். சொவென்று அஞ்சும் அச்சமாம் என்று உரை கூறுவர்.*

**தலைவியின் குணநலன்**

*தலைவியின் நற்குணங்களாக,*

அவன் சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்
மகன் தாய் உயர்வும் தன்உயர் பாகும்
செல்வன் பணிமொழி இயல்பாக லான[18]

*என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. தலைவன் சோர்வைப் போக்கிக் காத்தல் தலைவி கடமை ஆதலால் மகன் உயர்வைத் தாய் கருதுவது போல் செயல்படுவாள் தலைவி. அவன் பணிந்த மொழியினனாக இருத்தல் இயல்பாகும் என்கிறது. மேலும், தான் நிகழ்த்துகின்ற இல்லறத்தால்*

*தலைவற்கு இழுக்கு நேராமற் பாதுகாத்தல் தலைவிக்குக் கடப்பாடென்று கூறப்படுவதால், மகன் தாயாகிய மாற்றாளைத் தன்னை இழிந்தனனாகக் கருதி தன்னோடு ஒப்ப உயர்ந்தானாகக் கொண்டொழுகுதல் தலைவியின் உயர்ச்சியாகும். தலைவன் இவ்வாறொழுக வென்று தமக்குப் பணிந்தமொழி நூலிலக்கணந்தான் ஆன மொழியாகலாம் என உரை கூறுவர் இளம்பூரணர்.*

*கற்பியலில் இலக்கிய மாந்தருள் தலைவனுக்குத் தகுந்தாற் போல ஒத்த நிலையில் வருபவள் தலைவியாவாள். அவ்விருவருமே முதன்மை இலக்கிய மாந்தர் (அ) முக்கிய பாத்திரங்கள் எனலாம். தலைவி கூற்று நிகழும் இடங்களாக 1. கூடற் சூழ்நிலை ஐந்தும் 2. ஊடற் சூழ்நிலை பதினான்கும் ஆகப் பத்தொன்பது சூழ்நிலைகள் சுட்டப்பெறுகிறது.*

**தலைவி கூற்றில் நிகழ்வுகள்**

*தலைமகள் அறத்தொடு நிற்கும் முறை பற்றி நம்பியகப்பொருள் விளக்குகிறது. தலைவன் ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்து பொருள்வயிற் பிரிதல், இரவில் தலைவியைக் காணவரும் தலைவனைச் செவிலி குறியிடத்துக் காணுதல், தலைவி தலைவனைக் காண முடியாதபடி கட்டுக்காவல் மிகுதல் ஆகிய இந்நான்கு செயல்களின் காரணமாகத் தான்படும் துன்பம் குறித்து வினவினாலும், வினவா விட்டாலும் அன்னம் போன்ற நடையை உடைய தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்பாள் என்பது,*

ஒருபுணர்வு ஒழிந்தவற்று ஒழிவழித்தனப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரியவும்
இறைவனைச் செவிலி குறிவயிற் காணவும்
மனைவயின் செறிப்பவும் வருத்தம் கூறின்
வினவியக் கண்ணும் வினவாக்கண்ணும்
அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்[19]

*என்ற நூற்பாவழி அறியமுடிகிறது.*

**தலைவிக்கு ஊடல் நிகழும் இடம்**

*தலைவன் அயன்மனைப்பிரிவு முதலாகிய பிரிவுகளில் பிற பெண்களோடு தொடர்பு கொள்வான். இதனை அறிந்து தலைவி*

வருத்தமுறுவாள். அதன் காரணமாகத் தலைவிக்குத் தலைவனோடு மனப்பிணக்கு ஏற்படும். அதுவே ஊடல் எனக் குறிக்கப்படுகிறது.

ஊடல் அவ்வழிக்கூடும் கிழத்திக்கு[20]

என்பதிலிருந்து அயன்மனைப்பிரிவு, அயற்சேரிப்பிரிவு, புறநகர்ப்போக்கு என்று மூவகைப் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவிக்குத் தலைவனோடு ஊடல் ஏற்படும் எனக் கூறப்பெறுகிறது.

## கற்பில் தலைமகளுக்கு உரிய ஒழுகலாறுகள்

தலைவி, தான் பூப்படைந்ததைச் சேடிப்பெண்கள் வாயிலாகத் தலைவனுக்கு உணர்த்துதல், தன்னைப் பிரிந்தமையைப் பொறுக்க மாட்டாமல் தலைவனைப் பழித்துப்பேசும் காமக்கிழத்திக்கு அறிவுரை கூறுதல், தலைவனை இடித்துக்கூறுதல், பின்முறையாகிய மனையாளொடும் வரும் தன் கணவனை எதிர்கொள்ளுதல், தலைவனையும், பாங்கனையும், பரத்தையையும் பழித்துப் பேசுதல், தலைவனோடு நகரை விட்டு நீங்கிய தலைவி மலர்மிகுந்த சோலை, பொழில், கழனி, அருவி, மலை, காடு ஆகியவற்றைக் கண்டு விளையாடுவதோடு ஆற்றிலும், வயலிலும், குளத்திலும் விளையாடி மகிழ்தல். இந்நிலைகள் அனைத்தும் கற்புக் காலத்தில் தலைமகளுக்குப் பொருந்திவரும் ஒழுகலாறுகள் ஆகும். இதனை,

பூத்தமை சேடியிற் புரவலர்க்கு உணர்த்தலும்
நீத்தமை பொறாது நின்றுகிழ வோனைப்
பழிக்கும் காமக் கிழத்தியைக் கழறலும்
கிழவோர் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்துஎதிர்கோடலும் அவனொடு
பாங்கொடு பரத்தையைப் பழித்தலும் நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையும் காவும் மாலையும் கழனியும்
மாலைவெள் அருவியும் மலையும் கானமும்
கண்டுவிளை யாடலும் கடும்புனல் ஆறும்
வண்டிமிர் கமல வாவியும் குளனும்
ஆடிவிளை யாடலும் கூடும் கிழத்திக்கு[21]

என்று நம்பியகப்பொருள் பாடல் தெளிவுபடுத்துகிறது.

**தலைவி அறத்தொடு நிற்றல்**

*தலைவி, தோழிக்கு அறத்தொடு நின்று இறுதியில் நம் குடிக்கு குற்றம் நேராமல் கற்புக்கடம்பூண்ட செய்தியை உரியவர்பால் உரை என்று கூறுவதை,*

நம்நகர்
அருங்கடி நீவாமை கூறின் நன்றென
நின்னொடு சூழ்வல் தோழி நயம்புரிந்து
மன்னா வுலகத்து மன்னுவது புரைமே[22]

*என்பதன்வழித் தலைவியின் ஒழுக்கநிலை எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

**அறநெறியின் மேன்மை**

*பண்டைத் தமிழர் காதல் ஒழுக்கத்தை அகம் என்றும், புற ஒழுக்கமான வீரத்தைப் புறம் என்றும் போற்றினர். கணவனும் மனைவியும் இணைந்து வாழ்வதுதான் வாழ்க்கை என்றாலும் தன் வாழ்வு முழுவதுமே இணைந்தே அச்செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தைச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. அதுதான் அறநெறியின் குறிக்கோள் ஆகும்.*

**இல்லறமே தலையாய அறம்**

*உடன்போக்கில் சென்ற தலைமக்களைச் செவிலி பின்தொடர்ந்து தேடிச் சென்றபோது தலைமகளின் இயல்பை முக்கோற்பகவர் எடுத்துரைத்து உலக இயல்பைக் கூறுகின்றனர்.*

இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடஇச் சென்றனள்
அறம் தலைப்பிரியா ஆறும் மற்று அதுவே[23]

*என்பர். தலைவி மிகச்சிறந்த கற்பினை உடையவள், தன் கணவனை வழிபட்டு, அவன்பின்னே செல்வாள். அவ்வகையான இல்லறமே அறங்களில் தலையாய நல்லறமாகும்.*

**கற்பின் பெருமை**

*தலைவன் பொருளீட்டச் செல்லும் வழியில் துன்பம் அடையாதிருக்கும் வண்ணம் தலைவி வழிபடு தெய்வத்தை வேண்டுகிறாள். தலைவன் நலம்*

*வேண்டி மழையையும், கனலையும், காற்றையும் வழிபட விரும்பிய தலைவிக்கு அறக்கடவுள் உதவும் என்பதை,*

செய்பொருள் சிறப்பு எண்ணிச் செல்வார்மாட்டு இணையன
தெய்வத்துத் திறன்நோக்கி தெருமரல் தேமொழி
உறன்ஒடின வையகத்து வான்தரும் கற்பினாள்
திறம்ஓடிப் பசப்பு ஊர்தல் உண்டு என
அறன் ஓடி விலங்கின்று[24]

*என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. தெய்வம் கடவுள் பற்றியக் கோட்பாடு தொல்காப்பியர் காலத்தும் சங்க காலத்தும் இருந்து வந்துள்ளது. அதன்வழிக் கடவுள் வழிபாட்டினும் கற்பு அறமே சிறந்ததாகப் போற்றப் பெற்றது இவண் சுட்டத்தக்கதாகும்.*

**இல்லறத்தின் ஈகை**

*இல்வாழ்க்கை நடத்துபவர் தம் இல்லம் நோக்கி வந்து இரப்பவர்களுக்குத் தன்னிடம் பொருள் இல்லையெனக் கூறுவதும், தன்னிடமுள்ள பொருளில் சிறிதுகூடக் கொடாமல் இருப்பது இழிவாகக் கூறப்படுகிறது. இல்வாழ்க்கையின் நன்னெறியைத் தொல்காப்பியர்,*

ஒன்றாத் தமரினும் . . .
நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இழிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்றியது அருமையும்
ஒன்றியப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்[25]

*என்கிறார். எனவே, இல்வாழ்க்கையில் அறநெறிப்படி வாழ்வதற்குத் தலைவன் அறவழியில் ஈட்டியப் பொருளைத் தன்னை நாடிவந்த இரந்தோர்க்குக் கொடுக்க வேண்டும் என்பதாகும். பிறர்க்குப் பொருள் கொடுப்பதற்காகவே தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கிறான் என்றும் கலித்தொகை கூறுகிறது. ஈயாமையின் இழிவு குறித்து,*

தொலைவாகி வந்து இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு[26]

*எனவும்,*

இகல் என இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு[27]

*எனவும் கூறப்பெறுகிறது. ஈகையின் சிறப்பையும் அதன் பயனையும்,*

கல் இறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ
வடமீன்போல தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின்[28]
வறியார்க் கொன்று ஈவதே ஈகை[29]

*என்று கூறப்படுகிறது. இல்வாழ்க்கையின் அடிப்படை இரந்து வருபவர்களுக்குக் கொடுப்பதே சிறந்த அறமாகும். அவ்வாறு கொடுக்காமல் இருப்பது இழிவாகும் என்னும் உயரியக் கோட்பாட்டினை இப்பாடல் உணர்த்துகின்றது.*

அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்[30]

*என்று இல்லறத் தலைவியின் கடமையைக் கலித்தொகை எடுத்துரைக்கின்றது. அறத்தினால் பொருள் ஆக்கி அப்பொருளால் காமம் நுகர்வோன் எனப் பொருளீட்டச் செல்லும் பிரிவை மன உறுதியோடு தாங்கும் மனப்பான்மையைக் காணமுடிகின்றது.*

## தலைவியின் ஆற்றாமை

*பிரிவு என்பது தலைவன், தலைவியை விட்டுப் பிரிவதைக் குறிப்பதாகும். பொதுவாகக் கல்விக்காகவும், பொருள் தேடவும், பல்வேறு காரணங்களுக்காகவும் தலைவன் தலைவியை விட்டுப் பிரிகிறான். அவ்வாறு தலைவன் தலைவியை விட்டுப் பிரிவதை,*

பரத்தையிற் பிரிதல் ஓதற்குப் - படர்தல்
அருட்டகு காவலோடு தூதிற் கதறல்
உதவிக் கேகல் நிதியிற் கிளத்தலென்
நுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே[31]

*என்று நம்பியகப்பொருள் நூற்பா விளக்குகிறது.*

## தலைவியின் ஆற்றாமை

*தலைவனைப் பிரிந்த தலைவி அவனது பிரிவை ஆற்றாமல் காமநோயால் வருந்துகிறாள். இதனால் தலைவியின் கைவளை*

*நெகிழ்கின்றது. காமநோயால் பசலை படர்ந்து பொலிவிழந்து காணப்படுகின்றாள். தலைவனின் பிரிவை எண்ணி எண்ணித் தலைவியின் உள்ளம் சிதைந்து மெலிந்த தேகத்துடன் காணப்படுவதை,*

பொறைநில்லா நோயொடு புல்லென்ற நுதல்இவள்
விறல்நலன் இழைப்பவும் வினைவேட்டாய்[32]

*என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. தலைவியின் ஆற்றாமையை,*

இனியவர் வரினும் நோய் மருந்தல்வாய் வாரார்
அவணர் ஆகுக[33]

*என்று நற்றிணைப் பாடல் அடியும் குறிப்பிடுகின்றது.*

### தலைவியின் வேண்டுதல்

*தலைவன் மடலூர்ந்து வந்து தன்னைப் பெறுதல் வேண்டுமென்று தலைவி கூறுவதாக,*

பனைஈன்ற மாஊர்ந்து அவன்வரகாமன்
கணை இரப்பேன்[34]

*எனும் கலித்தொகைப் பாடல் சுட்டுகிறது. தலைவன் தலைவியை மடலேறிப் பெறும் வழக்கம் பண்டு நிலவியதையும், தலைவி தன் இல்லத்தைக் கடந்து வந்து ஊரில் உள்ளவரை விளித்துக் கூறுவது ஐந்திணை நெறிபிறழ்ந்து விளங்குவதால் இது பெருந்திணை நெறியாகக் கருதப்படுகின்றது.*

### அகநானூற்றில் தலைவி கூற்று நிகழ்வுகள்

*அகநானூற்றுப் பாடல்களில் காணப்பெறும் தலைவி கூற்றுப் பாடல்களில் இடம்பெறும் நிகழ்வுகள் பின்வருமாறு,*

1. *தலைவியின் துயரக்காட்சி*
2. *பிரிவு*
3. *நம்பிக்கையுடன் தலைவி கூற்று*
4. *தலைவன் சென்ற வழியில் நான்செல்வேன்*
5. *தலைவன் தலைவியின் செழுமிய உறவுநிலை*

*என்ற நிலையில் தலைவி கூற்று நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.*

**1. தலைவியின் துயரக்காட்சி**

*தலைவியின் உள்ளத்தினை அறியாமல் தலைவன் பொருளீட்டப் புறப்படுகிறான். அவனை வழியனுப்ப வரும் தலைவி தன் மகனை மார்போடு அணைத்துக் கொண்டு வெளியே வருகின்றாள். தலைவன் பிரிவை நினைத்துக் கலங்குகின்றாள். இல்லில் இருந்து வரும் தலைவி அழகுமிக்க தன் சிவந்த அடிகள் நிலத்தில் சுவடுபட நடந்து வருகிறாள். தலைவன் தன்னொடு இருந்த பொழுதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறாள். அதாவது தன் உற்றாரை மறந்து தலைவனைத் துணையாகக் கருதி வாழ்பவள். தலைவன் பிரிவால் தன்னுடைய தனிமையை நினைத்துப் பார்க்கிறாள். தலைவன் மீது கொண்ட அன்பு பொங்கித் ததும்புகிறது. பொய்யான முறுவல் ஒன்றைத் தோற்றுவித்து தன் வருத்தத்தை மறைக்கிறாள். இக்காட்சியைப் புலவர்,*

அளிநிலை பொறா அதமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளான் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை.[35]

*என்று சித்திரித்துள்ளார். இப்பாடலில் தலைவி வருத்தம் அடைவதற்குக் காரணம் தலைவன் செல்லும் பாதை கடுமையாகும். ஓமை மரங்கள் உயர்ந்து நிற்கும் அக்காடு கரிந்த நிலையில் நிழலின்றி இருப்பது விளக்கப்படுகிறது. மலைமேடுகளில் பளிங்குபோல நெல்லிக்கனிகள் உதிர்ந்து கிடக்கின்றன. கூர்மையான பருக்கைக் கற்கள் கால்விரல் முனைகளைப் புண்படுத்துவனவாய்ப் பரப்பி வைத்தார்போல மேட்டு நிலங்களில் கிடக்கின்றன. வறண்ட பூமியில் செல்லும் தலைமகன் உன்னைப் பிரிய மாட்டேன், பிரிந்தால் அச்செயல் அறச்செயலாகாது என்று முதல் நாள் கூறியதை நினைத்துப் பார்ப்பான் என்று தலைவி எண்ணிப் பார்க்கிறாள். பாலை வழியில் செல்லும் தலைவன் சோர்ந்தால் நிழல்தரும் மரங்கள் இல்லை. நீர்வேட்கை ஏற்பட்டால் நெல்லிக்கனியை உண்ணலாம். நெல்லிக்கனி பார்ப்பதற்கு சூதாடும் கருவிபோல் தோன்றுகிறது. அவரது பிரிவு வஞ்சமோ சூதோ என எண்ணும்படி அவளது நெஞ்சை கவலைக்குள்ளாக்குகிறது. பாதையில் கிடக்கும் பருக்கைக் கற்கள் மேட்டு*

நிலத்தைக் கடந்து செல்வோரைத் துன்புறுத்தக் கூடியது. எனினும் ஆடவருக்கு உயிராகக் கருதப்படும் வினைமுடிதல் பொருட்டு அத்துன்பத்தைத் தலைவன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என உணர்கிறாள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் தலைவியின் துன்பநிலையை,

பரல்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதி ராயின் அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்னவாக என்னுநள் போல[36]

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. தலைவனின் பிரிதல் என்னும் நிகழ்வால் தலைவிக்கு மனத்துயரம் ஏற்படுகிறது. துன்பத்தை மறைக்க முயல்கிறாள். ஆனால் அத்துன்பம் பொங்கிப் பெருகுகின்றது. எனினும் தலைவி தன் துயரை வெளிப்படுத்திக் காட்டவில்லை. தன் துயரைக் கூற எழுந்த நாவினைத் தடுத்துக் கொண்டாள். ஆனால் துன்பத்தை குறிப்பால் புலப்படுத்தும் தன் நெஞ்சையும் கண்ணையும் முகத்தையும் தடைசெய்ய இயலவில்லை. பெருகிவரும் கண்ணீரை இமைவிட்டு கீழே இறங்காதபடி தாங்கிக் கொள்கிறாள். இமையைத் தீப்பது போலும் வெம்மை சுடுகின்றது. கண்ணில் பாவை தெரியாதபடி நீர்பரந்து கண்ணெல்லாம் ததும்பி நிற்கின்றது. இவ்வாறு தலைவியின் வருத்தத்தைக் குறிப்பால் புலவர் உணர்த்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பிரிவு**

தலைவன் பொருள்தேடும் பொருட்டும் வினையின் பொருட்டும் தலைவியைப் பிரிந்து செல்கிறான். தலைவனின் பிரிவைத் தலைவி ஆற்றியிருக்கிறாள். தலைவன் குறிப்பிட்ட காலம் வந்தும் திரும்பி வரவில்லை. இதனால் ஆற்றாளாகிய தலைவி, தலைவன் பிரிவை எண்ணி வருந்துகின்றாள். தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச்சென்ற காலம் திரும்பி விட்டதைப் பாலைநிலப் பொருள்கள் தலைவிக்கு ஏதுகாட்டுகின்றன. இதனைக் கண்டு வருந்திய தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுபவளாய்த் தன் தோழிக்குச் சொல்கிறாள். தலைவி தோழியிடம்,

விசும்பு விசைந்து எறிந்த கூதளங் கோதையின்
பசுங்கால் வெண்குருகு வாட்பறை வளைஇ

ஆர்கலி வளவயின் போதொடு பரப்ப
புலம்புனிறு தீர்த்த புதுவரல் அற்சிரம்
நிலம்கவர் பசலை நலியவும், நம்துயர்
அறியார் கொல்லோ, தாமே[37]

*என்று கூறுவதாக அகநானூறு காட்டுகிறது. மேலும் வாடைக்காற்றானது முடிவின்றி வீசுகின்றது. இதனால் தலைவியை காமநோய் வாட்டுகிறது. தலைவியின் தளர்ச்சியான நெஞ்சத்தைக் கண்டு ஊரார் அலர் தூற்றுகின்றனர். நிலத்தின் எல்லை எல்லாம் பரவிக் கவிந்து அலர் என்னும் மலர்களைச் சொறிந்து, முன்பனிக்காலம் நம்மை வருத்த, நம் துயரத்தைத் தலைவர் அறியவில்லை என்று தன் உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள்.*

**தலைவியின் நம்பிக்கை**

*தலைமகன் பொருள்வயிற் பிரிந்து செல்கின்றான், தலைவனின் பிரிவைத் தலைவி ஆற்றமாட்டாள் எனக் கருதிய தோழியிடம், தலைவனின் பிரிவை ஆற்றியிருப்பேன் எனத் தலைவி கூறுகிறாள். வானில் உலகம் வியக்கின்ற ஒளியையுடைய கதிரவன் தீயைப் போன்று சுடுவதால் வெப்பமானது கானல் நீராகத் திகழும். அரும்பு இல்லாமல் மலர்ந்த இலவ மரங்கள், ஆரவாரம் உடைய மகளிர் கூட்டம் மகிழ்ந்து எடுத்த கார்த்திகை விளக்குகள் போல வரிசையாய் விளங்கி நிற்கின்றன. அங்குக் குளங்கள் துகள் படிந்திருக்கும். மழைவளம் தவறிய காடு, அத்தகைய காட்டில் நம் தலைவர் நம்மை உடன் அழைத்துச் சென்றால் நேரும் விளைவுகளை,*

கயம்துகள் ஆகியபயம் தழிகானம்
எம்மோடு புகுந்தனர் ஆயின், கம்மென
உம்பு விரித்தன்ன பொங்கு மணற் கான்யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயில்இனர் எக்தர்
மெய்புகுவு அன்னகை கவர் முயக்கம்
அவரும் பெகுவர் மன்னே[38]

*என்று தலைவியின் கூற்றாக ஔவையார் பாடுகின்றார். மேலும் தலைவனுடன் முயக்கத்தை அடைவரால் என் குற்றமில்லாத கண்கள் நீரைச் சிந்தும் மலரைப் போன்று உள்ளன. நீர் வற்றிய குளத்தை நிறைக்கும் கால்வாய் போன்ற நாள்தோறும் அழுது கண்ணீர் வடித்தலைப்*

பொருந்தாதவளாய் இன்பம் உண்டாகத் துயில்வோம். தலைவன் இன்பம் உண்டாகும் செயலைச் செய்யாததால் வருந்துகிறேன். தலைவனின் பிரிவினால் வருந்தவில்லை என்கிறாள். தலைவனுடன் தலைவி செல்ல விரும்புவதையும் தலைவனின் இன்ப, துன்பங்களில் பங்கேற்ப விழையும் தலைவியின் மனநிலையையும் மேற்கண்ட பாடலில் புலப்படுத்துகின்றார்.

வினையே ஆடவர்க்கு உயிர் என்பதையும் பொருள் இன்றேல் இல்லறம் இல்லை என்பதையும் உணர்ந்த தலைவி தலைவனுடன் விரைவில் கூட வேண்டும் என்ற நிலையில் இருப்பதை இப்பாடல் விளக்குகிறது.

**தலைவன் சென்ற வழியில் நான் செல்வேன்**

தலைவன் பொருள் ஈட்டத் தலைவியைப் பிரிந்து செல்கிறான். இதனால் ஓரியின் மலையிலுள்ள அருவியின் ஒலியைப் போன்று தலைவியின் காமம் அலராயிற்று. அதைக்கேட்டு நெஞ்சம் வருந்த தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியதாக இப்பாடல் அமைகின்றது. பேயைக் கனவில் கண்ட கோழை, தன் கோழைத்தன்மை பிறர் அறியக்கூடாது என்பதற்காக, தன் கனவைப் பிறரிடம் கூறாது மறைக்கின்றான். அதுபோல நாம் நமது ஆற்றாமையை மறைத்தும், பல சிறப்புகளை உடைய காமமானது நம்மையும் அறியாதபடி பிறருக்குப் புலனாகி விட்டது. மேகம் விரும்பி மழைபெய்த கொல்லிமலையின் உச்சியில் இருந்து விழும் அருவியின் ஒலியைப் போல அலர் வெளிப்பட்டது. இவ்வாறாக நம்மைப் பிரிந்து தலைவர் மீண்டு வருவார் என்பதை,

வரைபுரை களிற்றொடு நன்கலம் ஈயும்
வருவார் என்று உணர்ந்த மடம்கெழுநெஞ்சம்[39]

என்று தலைவி கூறுவதாக அமைந்துள்ளது.

தலைவன் மீண்டும் வருவார் என்று அறியாமையால் மூழ்கிய நெஞ்சே ஐயம் நீங்கித் தெளிவுபெறுக. வற்றிய மரத்தில் பொருந்திய சிள்வண்டு என்னும் வண்டுகள் கூடி உப்பு வணிகர்களின் வண்டி எருதுகளின் மணியைப் போன்று ஒலிக்கும். இத்தன்மையுடைய பாலைவழியில் உள்ள ஓடைகளில் நீரானது வற்ற, மீன்கள் வேறு இடத்திற்குச் செல்லும். அதைப்போல தானும் செல்லப்

*போவதாகத் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவன் மீதுள்ள அன்பின் காரணமாகவும் தலைவனைத் தேடிச் செல்லப் போவதாக இப்பாடல் புனையப்பெற்றுள்ளது.*

**தலைவன் தலைவியின் கெழுமிய உறவுநிலை**

*தலைவன் வினைவயிற் பிரிந்து செல்லத் தலைவி வருந்துகின்றாள். தன் துன்பத்திற்கு மருந்து இல்லை. அதனால் செயலற்ற தலைவி தன் கணவனைக் காட்டித் தோழியிடம் கூறுகிறாள். தலைவன் நம்மைப் பிரிந்தால் தலைவி பலவற்றையும் உண்ணாது வெறுத்து ஒதுக்குகின்றாள். அதனால் தலைவியின் உயிர் பிரியுமளவிற்குத் தோள்களும் உடலும் பழைய அழகினை இழந்துள்ளன. தலைவியின் பிரிவுத் துயரைப் போக்க மருந்தின்மையால் அழுது அழுது தலைவி செயலற்ற நிலையை அடைந்தாள். அத்துயர் நீங்க,*

ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த[40]

*எனத் தலைவி கூறுகின்றாள். பெண்புலியின் பசியைப் போக்க ஆண்புலியானது மானை எதிர்நோக்கிக் காத்திருக்கும் காட்சியினைக் காணும் தலைவர் விரைவில் தன்னைக் காண வருவார் எனத் தலைவி குறிப்பாகக் கூறுகின்றாள்.*

**தலைவி கூற்றுப் பாடல்களில் உள்ளுறை வழி வாழ்வியல்**

**உள்ளுறை விளக்கம்**

*உள்ளுறை என்ற சொல் உள் + உறை எனப் பிரியும். இச்சொல்லுக்கு மறைபொருள் என்று கழகத் தமிழகராதி பொருள் தருகிறது. உள்ளுறை என்பது கூற்றினைச் சிறப்பிக்க வரும் கூறு என்பர் தமிழண்ணல். வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பொருளின் உள்ளே உறையும் பொருள் உள்ளுறையாயிற்று எனலாம்.*

> அகமும் புறமும் பற்றிய ஒழுகலாறுகளைச் செய்யுளில் வடிக்கும் புலவன், அகத்திணை நிகழ்ச்சி புலப்படுவதற்கு ஏற்பதான் கருதிய பொருளைக் கருப்பொருள் வாயிலாக அச்செய்யுள் தொடர்களில் உள்ளுறை அமைத்துக் கூறுதலே உள்ளுறை ஆகும்[41]

என்று வாழ்வியற் களஞ்சியம் கூறுகிறது. உள்ளுறை என்பதற்குத் தனியே இலக்கணம் கூறவில்லை என்றாலும், அவற்றின் மரபுகளில் ஒன்றாகிய உவமத்துடன் சேர்த்து அவற்றை உள்ளுறை உவமம் என்றே கையாளுகிறார் தொல்காப்பியர். அவற்றிற்கு இலக்கணமாக,

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்[42]

என்று கூறுகிறார். இதில் ஒத்து என்னும் சொல் உவமத்துக்குரியது. மற்றையன உள்ளுறைக்கே உரியன எனக் கொள்ளலாம். அகப்பாடல் செய்வான் ஒரு புலவன் அப்பாடலில் கருப்பொருள் அமைத்து அதனால் கூறப்படும் கருத்துப் பொருளோடு கூற நினைத்த, ஆனால் கூறப்படாத ஒரு கருத்துப்பொருள் முடிவதாக எனப் பாட்டின் உள்ளே அமைத்து முடிப்பது உள்ளுறையாகும் என்று அச்சூத்திரத்துக்கு உரையாசிரியர் இளம்பூரணர் பொருள் உரைக்கின்றார். இவ்வுள்ளுறை உவமமானது கருப்பொருட்களில் தெய்வம் நீங்கிய ஏனைய கருப்பொருட்கள் கொண்டு அமையும் எனலாம்.

தொல்காப்பியர் உள்ளுறைக் கோட்பாடு பற்றிக் கூறும் சில அடிப்படைத் தன்மைகளாகத் தமிழண்ணல் தமது ‘சங்க இலக்கிய ஒப்பீடு’ என்ற நூலில்,

1. இஃது அகத்திணை இலக்கியத்திற்கு மட்டுமே உரியது.
2. இது பொருளைத் தெளிவுபடுத்துவதற்கு மட்டுமல்லாமல் முடிவுற்ற இன்பத்தைத் தருவதற்காகவும் இலக்கியத்தில் இடம்பெறுகிறது.
3. இது ஐந்து வகைப்படும். உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு இவற்றுள் உள்ளுறை உவமமே பெருவழக்கிற்று எனக் கூறுகிறார்.

**இல்லறமே நல்லறம்**

களவுக்காலத்தில் திருமண முயற்சிகளை விரைந்து மேற்கொள்ளாமல் தலைவியைக் கண்டு இன்புற்று மகிழ்வதிலேயே எண்ணம் கொண்டுள்ள தலைவன் சிறைப்புறத்தானாக நிற்கின்றான். அதனைக் கண்ட தலைவி தோழிக்குக் கூறுபவளாய்த் தலைவனுக்குக் கூறுவதாகப் பல பாடல்கள் அமைந்துள்ளன. இதனால் களவு வெளிப்பட்டு அலர் எழுகின்றது. அலருக்கு

உட்படுபவர்கள் தலைவன் தலைவியாக இருந்தாலும் மிகவும் பாதிக்கப்படுபவள் தலைவியே ஆவாள். இவ்வலர் அறிந்த அன்னை, யான் இகலில் இருக்குந்தோறும் கூறும் கடுஞ்சொல்லால் துன்பம் மிகுகின்றது என்பதனை,

நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ்சூழ் வெண்குருகு
உலவுத்திரை ஓதம் வெரூஉம்[43]

என்ற பாடலில் உள்ளுறை வழியாக உணர்த்தப்பெறுகிறது. தலைவன் விரைவில் மணந்து கொள் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றாள். மேலும் தலைவி தோழியிடம், வரைய நினைத்த தலைவன் என் உள்ளத்தினின்று நீங்காதவன். ஆதலால் யான் கூறும் உள்ளுறையைக் கேட்டு தேரோடு வேற்றுநாட்டிற்குச் சென்று பொருளீட்டி வந்து முன்றிலிலே குவித்து எம்மனைக்கண் உள்ள சுற்றத்தாரோடு மகிழ்ந்து மணம் செய்து கொள்வான். அப்போது அவன் என் நலனை நுகர்வதால் பசலை நீங்கும் என்று தோழியிடம் தலைவி கூறுவதாகப் பாடல் அமைகிறது. இப்பாடலில் புலவர் உள்ளுறையை அமைத்துக் கற்பு வாழ்க்கையை விரைவில் மேற்கொள்ள வேண்டும் எனப் பாடியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு,

திண்திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ
நடுநாள் வேட்டம் போகி வைகறைக்
கடல்மீன் தந்து கானல் குலைஇ
ஓங்கிவரும் புன்னை வரிநிழல் இருந்து
தேங்கமழ் தேறல் கிளையொட மாந்தி[44]

என்பதாகும்.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் வாழ்வியல் பண்புகளில் தலைசிறந்ததாகக் கருதப்படுவது விருந்தோம்பலாகும். இல்லம் நாடி வந்தவர் பகைவரேயாயினும் வரவேற்று விருந்து போற்றல் தமிழர் பண்பாடாகும். இல்லற மகளிரின் மாண்புகளைக் கூறும் தொல்காப்பியர், விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும் என்று விருந்தை முதன்மைப்படுத்துகிறார். தொல்காப்பியரின் கருத்தையொட்டி வள்ளுவரும்,

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு[45]

என்று குறள்வழி விளக்குகிறார். தலைவன் பரத்தையிற் பிரிந்து திரும்பும் போது தலைவியின் ஊடலைத் தணிக்கத் தோழியை வாயிலாக அனுப்புகிறான். தலைவியிடம் தோழி, தலைவனிடம் கொண்ட ஊடலைப் போக்கி ஏற்றுக் கொள் என்று கூறுகிறாள். அதற்குத் தலைவி மறுமொழியாகத் தலைவனைப் பற்றிக் கூறும்போது, பரத்தையால் வெறுக்கப்பட்ட பின் தன்னிடம் வருவதாகக் கூறி இகழ்கிறாள். இதனை,

கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழங் கொக்கின்
கூம்புநிலை அன்ன முகைய ஆம்பல்[46]

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. மேலும், எம்முடைய இல்லத்திற்கு விருந்தினர் வந்துள்ளமையாலும், அவர்களுக்கு விருந்து அயர்ந்து மகிழ்ந்தமையாலும் தலைவனிடம் தனக்கு ஏற்பட்ட புலவி தணிந்தது என்பதை, 'நன்மனை வருவிருந்து அயரும்', 'கைதூது இன்மையின் எய்தா மாறே' என்று உள்ளுறையாகத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது.

**பரத்தமை மறுப்பு**

பரத்தமை மறுப்பு பற்றிய சிந்தனை நேரடியாகத் திருக்குறளில்தான் தொடங்குகிறது; என்றாலும் அச்சிந்தனை பற்றிய கருத்தாக்கங்கள் சங்கப் பாடல்களில் உள்ளுறையாக நிறையக் கிடைக்கின்றன என்பதை நற்றிணைப் பாடல்கள் காட்டுகின்றன. சங்ககால ஆடவர் மேற்கொண்ட பரத்தமை ஒழுக்கத்தை மறுக்கப் புலவர்கள் உள்ளுறையைக் கையாண்டுள்ளனர்.

சான்றாக, நெய்தல்திணைத் தலைவி ஒருத்தி புதல்வனைப் பெறுங்காலத்துத் தலைவன் பரத்தையிற் பிரிகிறான். பின்னர் தலைவி நெய்யாடிய பின் அவளின் ஊடலைத் தீர்க்கப் பாணனை வாயிலாக விடுக்கிறான். தலைவி பாணனிடம் அவன் எமக்கு அயலவன் ஆயினான். நட்புடையவன் அல்லன் என்கிறாள். ஏனெனில், அவனால் விரும்பப்படும் பரத்தையானவள் அச்சேர்ப்பனுக்கு மனைக்கிழத்தியாயினாள் என ஊரில் அலர் எழுகின்றது. அவற்றை நீக்குதல் எளிதல்ல என்பதை உணர்ந்து

அவ்வலரைப் பொய்யாக்கும் பொருட்டுத் தான்கற்ற சூழ்ச்சியை ஒரு தூது வழியே விடுத்து என்னை அவன் வயமாக்க எண்ணி அச்சூழ்ச்சியை உனக்குக் கற்பித்து வாயிலாக விடுத்துள்ளான் என்பதை உள்ளுறை மூலமாக,

வடிகதிர் திரித்த வன்ஞான் பெருவலை . . .

சிறுவீ ஞாழல் பெருங்கடற் சேர்ப்பன்[47]

என்கிறாள். தலைவன் இனியன் என்று இகழ்ச்சிக் குறிப்பாகவும், அவன் பிரிந்த ஞான்று தனக்கு நேர்ந்த பிரிவச்சத்தைத் தலைவன் உணர வேண்டும் என்பதற்காகவே தலைவி தோழியிடம் கூறுவதாகப் பரத்தமை ஒழுக்கத்தைக் கடிந்துள்ளார் புலவர்.

மேற்கண்ட பாடல் வரிகளில் காணப்படும் உள்ளுறைப் பொருளை ஆராயுங்கால், தலைவனின் ஒழுக்கக்கேடுகளைக் கூறுவனவாகவே உள்ளன. களவுக்காலத்தை நீட்டிப்பது பரத்தமையை மேற்கொள்வது ஆகிய இழிசெயல்களிலிருந்து தலைவனைத் திருத்துவதற்காகத் தலைவி கூற்றின் வாயிலாக உள்ளுறையைப் பயன்படுத்தி, இத்தகையச் செயல்களைச் செய்தல் துன்பம் தரும் என்பதைப் புலவர்கள் உத்திமுறையால் கூறுகின்றனர் எனலாம்.

**சிலம்பு அணிதல் - காரணம்**

தற்காலங்களில் பிறந்த குழந்தைகளுக்குத் ‘தண்டை’ எனும் அணிகலனைக் காலில் அணிகின்றனர். அக்குழந்தை தவழவும் நடக்கவும் தொடங்கும்போது மகிழும் பெற்றோரும் சுற்றத்தாரும் ஒலியெழுப்பும் கொலுசுகளை அணிவது வழக்கம். இவ்வாறு குழந்தை நடக்கப் பயிலும் போது கொலுசுகளை அணிவிப்பதன் காரணம், கொலுசின் ஒலியைக் கொண்டு அக்குழந்தை இருக்கும் இடத்தை அறிந்து குழந்தையின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகும். அவ்வாறே சங்ககாலத் தாயாரும் தம் குழந்தையைப் பாதுகாப்புடன் வளர்ப்பதற்காகத் தம் பெண்டிரின் காலில் சிலம்பணிவிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். இவற்றைச் சங்க இலக்கியப் பாக்கள் சில எடுத்துரைக்கின்றன. உடன்போக்குச் சென்ற தன் மகளை நினைத்த செவிலித்தாய் ஒருத்தி ‘தலைவி’ உடன்போக்கு செல்லத் துணிந்த செயலை முன்பே அறிந்திருந்தால் சிலம்பு ஒலிக்க அவள்

விளையாடும் இடங்களுக்கெல்லாம் நிழல்போல் பின் தொடர்ந்து சென்றிருப்பேன் என்கிறாள். இதனை,

செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல்போல
கோதை ஆயமொடு ஒரைதழீ
தோடுஅமை அரிச்சிலம்பு ஒலிப்ப, அவள்
ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே[48]

என அகநானூற்றுப் பாலைத் திணைப்பாடல் ஒன்று சுட்டியுள்ளது. குறிஞ்சித் தலைவி ஒருத்தி தன் தலைவனை இரவுக்குறியில் காணச் செல்லும்போது சிலம்பு ஒலியெழுப்பாத வண்ணம் சென்று தலைவனோடு முயங்கித் திரும்பிய செயலை,

அம்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சுஊர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்[49]

எனப் பரணர் தம் அகநானூற்றுப் பாடலில் விவரித்துள்ளார். நற்றிணையில் உடன்போக்கு மேற்கொள்ளத் துணிந்த தலைவி தன்காற்சிலம்புகளைக் கழற்றி வைத்த காட்சி விளக்கம் பெற்றுள்ளது. இவ்வாறே அகநானூற்றுத் தலைவியும் தன் தாய்க்கு அஞ்சிச் சிலம்பைக் கழற்றி வைத்து விட்டு உடன்போக்குச் சென்றமையை,

அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீ
யாய்அறி வுறுதல் அஞ்சி
வேய்உயர் பிறங்கல் மலை இறந்தோளே[50]

எனக் கயமனார் தம் பாடலில் காட்சிப்படுத்தியுள்ளார். இப்பாக்கள் அனைத்தும் மேற்கூறப்பெற்ற கருத்தை வெளிப்படுத்துகின்றன. தாயார் தம் மகளைக் கண்காணித்துப் போற்றி வளர்க்கும் எண்ணத்துடன் மணமாகாத பெண்டிர்க்கு மட்டும் சிலம்பணிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் அவளுக்குத் திருமணம் முடிந்தவுடன் சிலம்பு கழீஇ நோன்பு நிகழ்த்திச் சிலம்பை நீக்கி உள்ளனர் என்பது சங்கப் பாடல்கள் மூலம் அறியப்பெறுகிறது.

### சிலம்பு கழீஇ - பொருள் விளக்கம்

'சிலம்பு கழீஇ'ச் சடங்கைக் குறிக்கும் பாக்கள் அனைத்தும் தலைவி உடன்போக்குச் சென்றபின் தாயார் புலம்பிப் பாடிய மனைமருட்சிப் பாக்களாகும். சிலம்பு கழீஇ நோன்பென்பது திருமணத்திற்கு முன்

தலைவியின் காலில் அணியப்பெற்றிருந்த சிலம்பைக் கழற்றி நீக்கிவிடும் சடங்கைக் குறிக்கும் பெயரீடாகும்.

சங்ககால வழக்கப்படி தாயார் மனையில்தான் சிலம்பு கழீஇ நோன்பும் வதுவையும் நிகழ்ந்திருக்க வேண்டும். இதனைச் 'சிலம்பு கழீஇய செல்வம் என் மனையில் நிகழாது, பிறர் மனையில் நிகழுமாறு நடக்க வேண்டியதாயிற்றே' என்றும், 'வதுவைச் சடங்காவது எம்மனையில் நிகழ்த்துமாறு கூறினால் என்ன?' என்றும் மனைமருண்டு புலம்பிய தாயாரின் கூற்றுகள் தெரிவிக்கின்றன.

'சிலம்பு கழீஇ என்பது, சிலம்பு கழற்றப் பெறுதலைக் குறிக்கவில்லை; சிலம்பு கழுவப்பெற்றதையே குறிக்கும்' என்று கூறுவாரும் உளர். ஆனால் 'கழீஇ' என்ற சொல் சிலம்பு கழற்றி நீக்கப்பெற்றதையே குறிக்கும் என்பதை உறுதிப்படுத்தும் முகமாகக் கீழ்க்காணும் நற்றிணைப் பாடல் காணப்பெறுகிறது.

வைகுபுலர் விடியல் மெய்கரந்து, தன்கால்
ஆரிஅமை சிலம்பு கழீஇ பல் மாண்
வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்[51]

என்பது அப்பாடலாகும். தலைவி தன் சிலம்பைக் கழற்றிப் பல்மாண் வரிபுணை பந்தொடு வைக்கச் சென்றமையைக்கூறும் இப்பாடலடிகள் சிலம்பைக் கழற்றி நீக்கிய நிகழ்வையே சிலம்பு கழீஇ' என்ற சொற்றொடர் தெரிவிக்கிறது என்பதைத் தெளிவாக்குகின்றன. சிலம்பு கழுவப்பெறுதலே சிலம்பு கழீஇ நோன்பென்றும், சிலம்பைக் கழற்றி நீக்கிவிடும் முறைமை இருந்திருப்பின் மணமான பெண்டிரான சிலப்பதிகாரத்தின் கதைத் தலைவி கண்ணகியும் பாண்டிய அரசி கோப்பெருந்தேவியும் காலில் சிலம்பு அணிந்திருந்தமை ஏன்? என்ற வினா எழுகின்றது. சிலம்பு அணிந்த தலைவியரைப் பற்றிய சங்கப் பாக்கள் அனைத்துமே உடன்போக்கைப் பாடுபொருளாகக் கொண்ட பாலைப் பாக்களாகவோ அல்லது களவுக் காதலைப் பாடுபொருளாகக் கொண்ட தொல் தமிழர் வாழ்ந்த குறிஞ்சி, நெய்தல் திணைப் பாக்களாகவோ அமைந்து உள்ளன. ஆனால் கண்ணகியும்

கோப்பெருந்தேவியும் முறையே பெருங்குடியினர் என்பதை மனத்திற் கொள்ள வேண்டும். சங்ககாலத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு திணைகளின் வாழ்க்கை முறைமைகளுள் ஒன்றோடொன்று வேறுபட்டவை. அதனால்தான் சங்கப்பாக்களைத் தொகுக்கும் போது திணைபகுப்பு மேற்கொள்ளப்பெற்றது. எனவே மருதநிலப் பெருங்குடியினரின் வாழ்வைத் தொல்குடியினரின் வாழ்க்கை முறையுடன் பொருத்திப் பார்த்தல் என்பது இயலாது. சிலம்பு கழீஇ என்ற சொல் சிலம்பு கழற்றி நீக்கப் பெற்றதையே குறித்து நிற்கும் சொல் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**சிலம்பும் கழலும் - குறியீடுகளே**

*தலைவி சிலம்பணிந்தவளாகக் காட்டப்பெற்றுள்ள பாக்களனைத்தும் தலைவி மணமாகாதவள் என்ற செய்தியைக் குறிப்பால் உணர்த்துவதோடு மற்றொரு செய்தியையும் மறைமுகமாக உணர்த்துகிறது. என்னவெனின் தலைவி பொருளாதார உயர்நிலையில் உள்ள செல்வப்பெண் என்பதைக் காட்டும் குறியீடாகவே சிலம்பைப் பற்றிய குறிப்பைப் புலவர்கள் தந்துள்ளனர். பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் செல்வப் பெண்டிரின் தோற்றத்தைப்,*

பீலி மஞ்ஞையின் இயலிக் கால
தமனிரப் பொற்சிலம்பு ஒலிப்பஇ உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்துப்பைய - பெரும்[52]

*எனக் குறிப்பிட்டுள்ளார். மதுரைக்காஞ்சியிலும் மாங்குடி மருதனார் செல்வப் பெண்டிர் நிலையைக் கூறுமிடத்து,*

தெள்ளரிப் பொற்சிலம்பு ஒலிப்ப ஒள்ளழல்
தாஅற விளங்கிய ஆய்பொன் அவிர்இழை
அணங்குவீழ் வன்னபூந்தொடி மகளிர்மதுரை[53]

*எனச் செல்வ மகளிர் சிலம்பும் தொடியும் அணிந்து காணப்பெறுவர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். உடன்போக்குச் சென்ற மகளை நினைத்து புலம்பிய தாயாரின் கூற்றுகளில் தலைவி செல்வமுடையவளாகவும் தலைவன் வறுமை நிலையினனாகவும் கூறிய கூற்றுகளே பெரும்பாலும் மனைமருட்சிப்*

பாக்களாக அமைந்துள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு எடுத்துக் கூறப்பெறுகின்றது.

பெரிய புகழையும் பெயரையும் உடைய பாண்டியனின் கூடல்நகரைப் போன்றும் மிகுதியான காவலை உடைய எங்கள் வீட்டில் காற்சிலம்பு கழிக்கும் சடங்கினைச் செய்யாதவளாய் நீண்ட தொலைவு சென்றாள். வதக்கிய ஊனை முன்றிலில் வைத்துண்ணும் தேக்கின் அகன்ற இலையைக் கவிழ்த்தாள் போன்ற குடிசையில் தங்கியிருப்பாளோ என்றும், சீரும் சிறப்புமின்றி உள்ள சிற்றூரில் வறுமைமிக்க பெண்கள் இருக்கும் புல் வேய்ந்த குடிசையில் ஒரே ஒரு பசு ஒன்றைத் தூணியில் கட்டியிருக்கும் வறிய மனையில் தன் சிலம்பினை நீக்கி அவனுடன் மணம் பொருந்தினாளோ? என்று சொல்லப்பெறுகிறது. இவ்வாறு வரும் கூற்றுகளை உய்த்துணரும் போது, தலைமக்களிடையேயான செல்வநிலை வேறுபாட்டால் அவர்தம் வரைவுக்குத் தமர் உடன்பட மாட்டார் என்ற காரணத்தினாலேயே கூட தலைமக்கள் உடன்போக்கு மேற்கொண்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. தொல்காப்பியரும் தலைமக்களுக்கான பத்து பொருத்தங்களாகப்,

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே[54]

எனக் கூறியுள்ள மெய்ப்பாட்டியல் நூற்பாவில் பத்தாவது பொருத்தமாகச் செல்வநிலைப் பொருத்தத்தைக் கூறியுள்ளார். செல்வ நிலையால் வேறுபடுவதுடன் குடிமை நிலையில் வேறுபடுவதாலும் வரைவு தமரால் மறுக்கப் பெறும் நிலையிருந்திருக்க வேண்டும். ஏனெனில், உடன்போக்குப் பாக்களின் தலைவன் வில், வேல் போன்றவற்றை உடைய வீரனாக விடலை, காளை என்றே பெரும்பாலும் குறிக்கப் பெற்றுள்ளான். தலைவன் மறக்குடியைச் சார்ந்த சிற்றூரினான் என்ற செய்தி உடன்போக்குப் பாக்களில் பரவலாகக் குறிக்கப்பெற்றுள்ளது. தலைவன் வீரன் என்பதைக் காட்டும் குறியீடாகவே உடன்போக்குப் பாக்களில் கழல் குறிக்கப்பெற்றுள்ளது. குறுந்தொகையின் உடன்போக்குப் பாடலான,

வில்லோன் காலன கழலே தொடியோள்

மெல்லடி மேலவும் சிலம்பே[55]

என்ற அடிகளில் தலைவியின் காலில் மணமாகாத பெண்டிர்க்குரிய அடையாளமான சிலம்பு காணப்பெற்றமையால் உடன்போக்குச் செல்லும் தலைவனின் கால் அணிகலனான கழலும் மணமாகாதவன் என்பதைக் குறிக்கும் அடையாளமெனக் கருதுவோரும் உள்ளனர். ஆனால் அதியமான் தன் புதல்வனின் முகத்தைக் காணும் நிலையிலும் போர்ச்சினம் மாறாமல் நின்ற தோற்றத்தை விவரிக்கும் ஔவையார் 'கையது வேலே காலன புனைகழல்' எனக் காட்சிப்படுத்தியிருக்கும் அடிகளும் வையாவிக் கோப்பெரும்பேகனை அவன்தன் மனைவி கண்ணகியின் துயர் துடைக்குமாறு வேண்டுமிடத்துப் பரணர் அவனைக் 'கடாஅயானை கழற்கால் பேகன்' எனக் குறித்துள்ள அடியும் மேலே கூறப்பெற்றமை ஐயத்திற்குரிய கருதுகோளே என்பதைத் துணிந்துரைக்க ஏதுவாகின்றன. மேலும் 'கழல்' என்பது வீரத்தின் அடையாளமாகவே அணியப்பெற்றமையை 'வாடாவள்ளி வாயவ் ஏத்திய ஒடாக்கழல் நிலை' எனத் தொல்காப்பியப் புறப்பொருளிலக்கணப் புறத்துறைகளும் உறுதிப்படுத்துகின்றன.

**மை அணல் காளை**

'மை அணல் காளை' என்ற சொற்றொடர் உடன்போக்குச் சென்ற தலைவரைக் குறிப்பதற்காக மட்டும் நான்கு பாக்களில் கையாளப் பெற்றுள்ளது. வேறு எந்த ஆடவரையும் மை அணல் என்ற அடையுடன் இலக்கியங்கள் குறிக்கவில்லை. அணல் என்பதற்குக் கன்னம் என்பது பொருள். உரிய உரோமம் வளர்ந்த அக்கன்னப் பகுதியை அதாவது தாடியைக் குறிக்க மை அணல் என்றனர். உரோமம் அரும்பத் தொடங்கிய நிலையில் இளையரின் தாடியைப் புல் அணல் என்றனர் பெரும்பாணாற்றுப்படையில்,

வலிக்கூட்டு உணவின் வாட்குடிப் பிறந்த

புலிப் போந்தன்ன புல் அணல் காளை[56]

என்ற அடிகளில் புலிக்குட்டியைப் போன்ற இளையனைப்புல் அணற்காலை எனப் புலவர் குறித்துள்ளார்.

மறக்குடியினருள்ளும் வாள்பயிற்சி உடைய வாட்குடியினர் வில்பயிற்சி உடைய பிற குடியினர் எனக் குடிப்பிரிவுகள் இருந்துள்ளன. இன்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வாழ்(ள்) விற்குடி என்ற பெயர்களில் ஊர்கள் உள்ளன. இளையோர்க்கு வெட்சிப்போரே முதன்மைப்போர் என்பதால் வெட்சிப்போரில் பங்குபெற்ற இளையன் ஒருவனைப் புல் அணற்காளை எனப் புறநானூறு குறித்துள்ளது. புறநானூற்றில் நக்கண்ணையாரின் கைக்கிளைக் கூற்றான,

அடிபுனை தொடுகழல் மைஅணல் காளைக்குஎன்
தொடிகழுத் திடுதல்யான் யாய்அஞ் சுவலே[57]

என்பதில் சிலம்பு கழிக்கும் வழக்கத்தைப் போன்று தொடி கழிக்கும் வழக்கமும் இருந்தமையைத் தெரிவிக்கின்றது. இப்பாடலடிகளில் கழலணிந்த கரிய தாடியை உடைய காளையைத் தான் விரும்பியதால் தன் தாய் அஞ்சுவாள் என்ற குறிப்பு தரப்பெற்றுள்ளது. நற்றிணைப் பாடலோ 'மை அணல் காளை எனத் தெரிந்திருக்கும் தன் மகள் உடன்போகத் துணிந்தமைக்குக் காரணம் அக்காளையானவன் பொய் புகன்றிருக்க வேண்டும் என்று நற்றாய் அனுமானித்துக் கூறியமையை,

மை அணற் காளை பொய் புகலாக
அருஞ்சுரம் இறந்தனள் என்ப[58]

என்று தெரிவிக்கின்றன. மை அணல் காளையைத் தன் மகள் விரும்பியதை அறிந்திருந்தால் தாயார் ஏன் அஞ்சவேண்டும்? உடன்போக்கு நிகழ்த்திய தலைவனை மட்டும் மை அணல் காளை என்றமையும் மை அணல் காளையுடன் தன் மகள் உடன்போயினள் எனக் கேட்டு அஞ்சியமையும் ஏன்? மையனள் காளை பொய் கூறித் தன் மகளைக் கூட்டிச் சென்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானது ஏன்? என்ற வினா எழுவது இயல்பாகும். இதற்குச் சிலம்பும் கழலும் போன்று மை அணலான கருந்தாடியை உடைய தலைவன் என்ற குறிப்பும் ஏதோ ஒன்றன் அடையாளத்தை உணர்த்தும் வகையில் குறிக்கப் பெற்றிருக்க வேண்டும் எனலாம். அதாவது மைஅணல் எனப் பெற்ற கருந்தாடி வளர்த்தல் ஒரு குறிப்பிட்ட ஆடவரால் பின்பற்றப்பெற்ற வழக்கமாக இருந்திருக்க வேண்டும். தலைவன் மறக்குடியினன், வறுமை நிலையினன் என்பதை ஏற்கனவே உணர்த்திய நிலையில் தாயார்க்கு அச்சத்தைத் தோற்றுவித்த மைஅனற்காளை என்ற குறிப்பு திருமணமான ஆடவரைக்

குறித்ததோ என்ற ஐயம் எழுகிறது. அதாவது திருமணமான ஆடவர் கரிய தாடியுடன் விளங்கினரோ என்று எண்ணுவதற்கு இடமளிக்கிறது எனலாம்.

## அச்சமுடைமை

உயிரைக் காட்டிலும் மேலான கற்பிற்கு அழிவு உண்டாகுமோ என அஞ்சுதல் அச்சமுடைமையாம். இது பெண்பாலரது இயல்பாகும். மகளிர்க்கு உரிய இக்கற்பு என்பது தங்கள் துணைவரிடம் செலுத்தும் ஆழ்ந்த அன்பின் அடையாளமாகும். இவ்வன்பு இப்பிறவியில் மட்டுமின்றி இனிவரும் பிறவிகளிலும் தொடர வேண்டும் என்ற பேரவாக் கொண்டோராகப் பெண்டிர் காணப்படுவர். அன்பின் தொடர்ச்சிக்குத் தடையேதும் நிகழுமோ என்று அஞ்சும் அவர்களது உள்ளத்தின் வெளிப்பாட்டை,

இம்மை மாறி மறுமை யாகினும்
நீயா கியரென் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே[59]

என்று குறுந்தொகையும்,

இம்மை பிறப்பிற் பிரிபலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனன்[60]

என்று திருக்குறளும் இத்தகு அச்சமுடைய மகளிரைப் பற்றிப் பாடுகின்றன. நற்றிணைப் பாடலில் வரும் தலைவியொருத்தியும் தன் கற்பிக்கு அழிவு நேருமோ என்று அஞ்சுகிறாள். எனினும், இறப்பிற்குத் தான் அஞ்சவில்லை என்றும், சாவு நிகழ்ந்தால் மானுடப் பிறவியல்லாது வேறு அஃறிணை உயிர்களாகப் பிறப்பெடுத்தாலோ அல்லது, உயர்திணையில் ஆணாகப் பிறக்கும் சூழல் உண்டானாலோ அதற்குத்தான் அஞ்சுவதாகக் கூறுகிறாள். ஏனெனில் பிரிந்து சென்ற காதலனை அப்பிறவியில் மறக்கும் நிலை உருவாகும் என்றும் தோழியிடம் கூறுகிறாள். அந்நிலை சிறிதும் விரும்பத்தக்கதன்று என இவள் உறுதியாக மொழிவதால் கற்பழிவுக்கு அஞ்சும் தலைவியின் அச்சமுடைமை புலனாகிறது. அம்மூவனார் என்னும் புலவர் காட்டும் இத்தலைவியின் கூற்றாக இடம்பெறும் பாடல்,

யாங்கா குவென்கொல் யானே ஈங்கோ
சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்

பிறப்புப்பிறி தாகுவத ஆயின்

மறக்குவேன் கொல்லென் காதலன்[61]

என்பதாகும்.

**பிரிவுத் துயரம்**

தனது களவொழுக்கம் பிறருக்குத் தெரிந்து விட்ட நிலையில் தலைவன் பகற்குறி, இரவுக்குறி இடங்களுக்குப் போய்வர அச்சம் கொள்கிறான். இதனால் தலைவனைப் பிரிந்து வருத்தமுறும் தலைவி தன் உள்ளக்குமுறலை நாரையிடத்தில் சொல்லி ஆறுதல் பெறும் செய்தியினைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங்குருகே

. . . . . . . . . . . . . . . . . . .

இழைநெகிழ் பருவல் செப்பா தோயே[62]

என்கிறது. இப்பாடல் தலைவனைக் காணாது உடல்மெலிந்து அணிகலன்கள் கழன்று கிடக்கும் என் நிலையை அவரிடம் சொல்வாயா? என்று தலைவி வினவுகின்ற அவளின் காதலியின் உள்ளப்பாங்கைக் காட்டுகிறது. நாரை வெள்ளிய நிறமுடையதாக இருக்கும் என்பதும் அது கெழுத்தி மீனை விரும்பி உண்ணும் என்பதும் இப்பாடல் மூலம் அறியப்படுகின்றது. மேலும்,

கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி[63]

எனத் தொடங்கும் மற்றொரு பாடலும் தலைவியின் பிரிவுத் துயரினைச் சிறப்புற எடுத்துக் காட்டுகிறது. தினைப்புனத்தில் எதிர்ப்பட்ட தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தை இனிய முறையில் மேற்கொள்கிறார்கள். சில நாட்களுக்குப் பின் தலைவனின் வருகை நின்று விடுகிறது. இதனால் வருத்தமுறும் தலைவி திணையைக் கவர வரும் கிளியினைத் தனக்காக தலைவனிடம் தூது சென்று தனது நிலையினைத் தெரிவிக்குமாறு கைகளை குவித்துத் தொழுது இரங்கிக் கேட்கிறாள். இக்கருத்து அன்பின் மிகுதியால் துடிக்கும் உள்ளத்தினை வெளிப்படுத்துகிறது. இரு கைகளைக் குவித்துத் தொழும் பழக்கம் அக்காலத்தில் இருந்து வருவதையும் இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

**பெண்ணின் பெருமை**

*பெண்களுக்குப் பெருமை சேர்ப்பது அவர்களின் கற்பும் பொறுமையும் ஆகும். மானமே மாதற்கு அணிகலன் என்பர். தன்மானத்துடன் கணவனின் மானத்தையும் தம் குலப்பெருமையையும் காத்து நிற்பவள் பெண். தமிழ்ப் பெண்கள் திண்மையும், நிறைந்த குணங்களும் பொருந்திய கற்புடையவர்களாக விளங்கினர். கணவனைப் பிரிந்த காலத்தும் தன் துன்பத்தை மறைத்துக் கணவனுக்குப் பழிச்சொல் வராதவாறு இருத்தலைக் கலைக்கோட்டுத் தண்டனார் என்பார்,*

துறந்தோர் தேஎத்து இருந்துநனி வருந்தி
. . . . . . . . . . பழிதான் உண்டோ[64]

*என்று பாடுகின்றார். தம்முயிர் அழிவதனாலும் அழியட்டும் தம் துயர் பிறருக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் பழிச்சொல் வந்து சேரும் என்று தோழிக்குத் தலைவி சொல்வதாகப் பாடியிருப்பது அறியத்தக்கது. கணவனுடைய குடும்பம் வறுமையடைந்த காலத்தில் அவள் தந்தை அனுப்பியிருந்த உணவுப் பொருளைக் கூடத் தலைவி பெரிதாகக் கருதமாட்டாள். இத்தகையச் சிறந்த பண்புடையவளாகப் பண்டைத் தமிழ்ப் பெண்கள் விளங்கினர் என்பதை,*

கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளார்[65]

*என்ற நற்றிணை அடிகள் தெளிவுபடுத்துகின்றன.*

**தலைவியின் துன்பநிலை**

*பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் தலைவியிடம் நான் யாரையும் அறியேன் என்று பொய்மொழி கூறுகின்றான். அதற்குத் தலைவி,*

ஐயகுறுமகள் கண்டிகும் வைகி
மகிழ்நன் மார்பில் துஞ்சி அவிழ் இணர்த
தேம்பாய் மராஅம் கமழும் கூந்தல்
துலங்கியல் அசைவர கலிங்கம் துயல்வர
செறிதொடி தெளிர்ப்ப வீசி மறுகிங்
பூம்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கிச்
சென்றனள் . . . . . . . . . . .[66]

*என்கிறாள்.*

இப்பாடலில் தலைவன் கூறுவது பொய்மொழி என்று பேசுகின்றாள். பின்னர் தலைவனுடன் உறவுகொண்ட பரத்தையை 'வாழிய மடந்தை' என்று வாழ்த்துகின்றாள். இப்பேச்சில் தலைவனை எதிர்க்க இயலாத தலைவியின் அடிமை நிலையும், பரத்தையைக் கண்டிக்க இயலாத போக்கும் ஆற்றாமையுடன் வெளிப்படுகிறது.

பரத்தையிடம் சென்று மீண்டு வரும் தலைவன் தன் தலைவியின் மனவுணர்வுகளைப் பொருட்படுத்தாதப் போக்கினை நற்றிணை தெரிவிக்கின்றது. தான் வேறொரு பெண்ணுடன் புணர்ச்சி மேற்கொண்டு வரும் நிலையில் தலைவியின் உள்ளச் சிதைவையும் மனத்துயரையும் தலைவன் உணர்வதில்லை. மாறாக, தன் பாலுணர்வுத் தேவைகளைத் தலைவியிடம் நிறைவேற்றிக் கொள்ள முற்படும் போது, தலைவி அதற்கு எதிர்பேசாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் போக்கை நற்றிணைப் பாடல் புலப்படுத்துகிறது. பரத்தையிடம் சென்று வந்த தலைவன் தலைவியைத் தழுவுகின்றான். அப்போது தலைவியால் அவனைத் தடுக்க இயலவில்லை. தன்னுடைய சினத்தை உள்ளடக்கிய நிலையில்,

> வெய்யை போன்று முயங்குதி முன்னைஎழத்
> . . . . . . . . . . . . . . . . . . . . . .
> ஒலியல் கூந்தல் நலம்பெற புனைந்த
> முகை அவிழ் கூந்தல் வாட்டிய
> பகைவன்மன் யான் மறந்து அலைகலனே[67]

என்று தலைவனிடம் உரைக்கின்றாள். நீ என்மேல் விருப்பம் உடையவன் போல் தழுவுகின்றாய். ஆனால், மூப்பு என் மாலை வாடுமாறு செய்த பகைவனும் நீ என்பதை நான் மறந்திலேன் என்று கூறுகின்றாள். பரத்தையரிடம் இன்பம் நுகர்ந்து வந்த தலைவன் தன்னைத் தழுவியபோது முழுவதுமாகத் தன் எதிர்ப்பைக் காட்ட இயலாமல் உள்ளக் குமுறலை மட்டும் வெளிப்படுத்தி அடங்கிப்போகும் அவலப்போக்கு பெண்ணடிமைத் தனத்தின் உச்சநிலையைக் காட்டுகிறது.

**மரபு மீறல்**

இலக்கியப் படைப்பாக்கத்திற்கு இலக்கணம் வரையறுத்துள்ள தொல்காப்பியம் அன்பின் தொடக்க நிலையான கைக்கிளையை சுட்டிச் செல்லவில்லை. பெண் தன் காதல் உணர்வுகளை வெளிப்படையாகக் கூறக்கூடாது என்ற ஆணாதிக்கச் சமூகத்தின் அடக்குமுறை காரணமாகவே பெண்பாற் கைக்கிளை விளக்கம் பெறவில்லை எனலாம். அகத்திணை வரையறையை மீறி ஔவையாரும் வெள்ளிவீதியாரும் தம் உணர்வுகளை வெளியிட்டது போன்றே இப்புலவரும் கைக்கிளையைப் பாடியுள்ளார். தன்னுடைய காமநோயை ஆற்றிக் கொள்ள முடியாத தலைவி ஒருத்தியின் நிலையை ஔவையார் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டு உள்ளார்.

முட்டுவென் கொல் தாக்குவெண் கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்
அலமர லசைவளி யலைப்ப வென்
உயவுநோய் அறியாது துஞ்சு மூர்க்கே[68]

என்பது அப்பாடலாகும். பெண்களுக்கு வரையறுக்கப் பெற்ற அச்சம், மடம், நாணம் முதலியவற்றைத் தாண்டிய உணர்வின் வெளிப்பாடாக இப்பாடல் அமைந்துள்ளது.

**ஆண் பரத்தமை**

ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் கற்பை வலியுறுத்திய ஆண்கள் பரத்தமை ஒழுக்கத்தைக் கைவிடாதவர்களாக இருந்துள்ளனர். பெண்களும் ஆண் சார்புநிலை வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டு விட்டதால் ஆண்களின் செயல்பாடுகள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டிருந்தனர். வெள்ளிவீதியார் காமத்தின் உச்சத்தைக் குறிப்பிட்டுக் காட்டியது போன்றே பரத்தமை மேற்கொண்டு திரும்பும் தலைவன் மீதான சினத்தின் உச்சத்தையும் காட்டியுள்ளார். பரத்தையிடம் சென்று திரும்பி வரும் தலைவனைப் பார்த்த தலைவி கோபத்தால் பற்களைக் கடிக்கிறாள். இதனால் அப்பற்கள் கொட்டிவிட்டன என்று குறிப்பிடுகின்றார் புலவர்,

சுரம் செல்யானைக் கல்வறு கோட்டின்

தெற்றென இறீஇயரோ ஐய மற்றுயாம்

நும்மொடு நக்க வால்வெள் எயிறே[69]

என்பது அக்கருத்துணர்த்தும் பாடல் அடிகளாகும். இவையன்றித் தலைவி வாயில் மறுத்தல், தோழி வாயில் மறுத்தலும் தலைவன் மீதான அவர்களின் கோபத்தின் வெளிப்பாடே ஆகும்.

**தலைவியின் கனவு**

சங்க இலக்கியங்களில் இரண்டு பாடல்களில் தலைவன் தலைவியை மணம் முடித்தல் காரணமாகப் பொருள்தேடச் செல்கின்றான். அவ்வாறு அவன் சென்றிருக்கும் காலங்களில் தலைவி தலைவனை நினைத்து வருந்துவதாகக் கூறப்படுகின்றது. அதனால் இயற்கையும் அவளது காமநோயினை மிகைபடுத்தக் காரணமாகியது என்று வருந்தித் தலைவி தோழியிடம் கூறுகிறாள். இதனை,

ஊர் ஊர் மாஅத்த முள்எயிற்று வாவல்

ஓங்கில் அம் சினைத் தூங்கு துயில்பொழுதின்

. . . . . . . . . . . . . . . . . . . . .

சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும்

பெருந்தண் கானலும், நினைத்த அப்பகலே[70]

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இப்பாடல் தலைவி தான்கண்ட கனவினைத் தோழிக்கு உரைப்பதாக அமைந்துள்ளது. அதாவது, வௌவால் தான் தூங்கும் போது தனக்குக் கிடைக்கப் பெறாத நெல்லிக்கனியின் புளிப்புச் சுவையினை கனவினில் பெற்றதுபோலக் கனவு காண்கிறது. அதுபோலத் தலைவி தலைவனுடன் பெறாத முயக்கத்தைக் கனவினில் பெற்றாள். ஆகவே கனவினில் தாம் பெற்ற இன்பமும் அரிதாகும். முன்பு தலைவன் தன்னை மணம்முடிக்க வேண்டும் என்று தலைவி தன் வேட்கையினை வெளிப்படுத்துவதாக நக்கண்ணையார் கூறுகின்றார். மற்றொரு பாடலில் தலைவன் பொருள்வயிற் பிரிகின்றான். இதனால் கவலையுற்ற தலைவி தோழியிடம், நேற்றுவந்த மாலைப்பொழுது இன்றும் வருமானால் எனக்கு ஏற்படுகின்ற காமவெள்ளத்தினை நீந்திக் கடக்க முடியாது என்று எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இக்கருத்தினை,

வாஅன் இழிதரும் வயங்கு வெள் அருவிக்
கங்கைஅம் பேர் யாற்றுக் கரை இறந்து இழிதரும்
சிறைஅடு கடும்புனல் அன்ன, என்
நிறை அடு காமம் நீந்துமாறே[71]

*என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றது. இப்பாடலைப் பாடியவர் நல்வெள்ளையார் ஆவார். மேற்கூறிய இரண்டு பாடல்களிலும் தலைவி தோழியிடம் தனது காம வேட்கையினை வெளிப்படையாக எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம் தோழியே தலைவியின் உள்ளத்தினை நன்கறிந்தவள். மேலும், பிறரிடம் சொல்ல முடியாத செய்தியைக்கூட தலைவி தோழியிடம் மட்டுமே வெளிப்படுத்துவாள். ஆகவே தான் தலைவி தன் உள்ளத்தில் தோன்றுகின்ற ஆசையினை வெளிப்படையாகக் கூறுவதாகப் புலவர் படைத்துள்ளார்.*

**தலைவன் பிரிவும் தலைவியின் துயரமும்**

*தலைவன் திருமணமானவுடன் பொருளீட்டும் நோக்குடன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான். இதனால் தலைவி மிகவும் வருந்துகின்றாள். அவள் வருத்தத்தை ஔவையார் பின்வரும் பாடல்வழி எடுத்துரைக்கின்றார்.*

நள்ளென்றன்றே யாமம்; சொல் அவிந்து
இனிது அடங்கினரே, மாக்கள்; முனிவுஇன்று,
நனந்தலை உலகமும் துஞ்சும்;
ஓர்யான் மன்ற துஞ்சாதேனே[72]

*என்ற பாடலில் தலைவி ஊர் துஞ்சுவதையும் தான் துஞ்சாமல் இருப்பதையும் கூறுகின்றாள். அதாவது சுழன்று வீசுகின்ற தென்றல் காற்று என்னை வருத்துகின்றது, என் துன்பத்திற்குக் காரணமாகிய காமநோயின் கொடுமையினை உணராமல் இவ்வூரில் உள்ளவர்களும் கவலையின்றி தூங்குகின்றனர் என்கிறாள்.*

*மேற்கூறிய பாடலில் தலைவி தலைவனைப் பிரிந்து, காமநோயினால் வருந்திக் கொண்டிருக்கும் போது வாடைக்காற்றும் அவளை வருத்துவதாகவும் ஊரிலுள்ள மக்கள் அவளது வருத்தத்தினை உணராமல் உறங்குவதாகவும்*

தலைவி மட்டும் தலைவனின் பிரிவால் உறங்காமல் துன்புறுவதாகவும் எடுத்துரைத்துள்ளாள்.

மற்றொரு பாடலில் வெள்ளிவீதியார் தலைவனது பிரிவால் வருந்தும் தலைவியின் நிலையை எடுத்துரைக்கின்றார். தலைவனிடம் காமவேட்கை மீதூர அளவிறந்த துன்பமுற்ற தலைவி, திங்களும் அழகுடன் காட்சித் தருகின்றது. அலையும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அன்றில் நரலும் யாழிசையும் நான் துயருருமாறு இசைகின்றது. இவ்அனைத்து நிகழ்வுகளும் எனக்கு உண்டான காமநோயினை பெருக்குவதாக உள்ளது என்கிறாள். அந்நோயினை களையக்கூடிய காதலரும் என் அருகில் இல்லை என்று தன் வருத்தத்தினை எடுத்துரைக்கின்றாள் தலைவி. இதனை,

திங்களும் திகழ் வான் ஏர்தரும் இமிழ்நீர்ப்

. . . . . . . . . . . . . . . . . . . . .

காமம் பெரிதே களைஞரோ இலரே[73]

என்ற பாடல் கூறுகின்றது. இப்பாடலைப் பாடியவர் வெள்ளிவீதியார். இயற்கை அனைத்தும் தலைவன், தலைவி சேர்ந்திருக்கும் போது இன்பத்தினைத் தருவதாகவும் பிரிந்திருக்கும் போது துன்பத்தினைத் தருவதாகவும் கூறப்பெறுகிறது.

தலைவன் பரத்தையுடன் வாழ்ந்துவிட்டுப் பின்பு தலைவியை நாடி வருகின்றான். தலைவி வாயில் மறுக்கின்றாள். அப்போது தோழி தலைவியிடம் புலத்தல் தகாது என்றும் தலைவன் பரத்தமையுடன் கூடி வாழ்ந்ததை மறந்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றாள். அதற்குத் தலைவி, அன்பில்லாத இடத்தில் புலத்தலால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று கூறித் தன்னுடைய அயன்மையைச் சுட்டிக் காட்டுகிறாள். இவ்வுண்மைக் குறிப்பு தலைவி வாயில் மறுத்தலைக் குறிப்பதாகும். அதாவது, தலைவன், தனக்குப் பெற்றோரைப் போலப் போற்றி மகிழ்வதற்கு மட்டுமே உரியவனாவான் என்கின்றாள். இக்கருத்தினை,

நல்நலம் தொலைய நலம் மிகச்சாஅய்

இன்உயிர் கழியினும் உரையல் அவர்நமக்கு

அன்னையும் அத்தனும் அல்லரோ?

புலவி அ∴து எவனோ, அன்பிலங்கடையே[74]

*என்ற பாடல்வழி அறியமுடிகின்றது. இப்பாடலை நன்முல்லையார் பாடியுள்ளார். இப்பாடலில் தலைவன் தவறு செய்தாலும் அத்தவறினைச் சுட்டிக் காட்டுகின்றாள் தலைவி. தலைவியானவள் தலைவன்மீது ஊடல் கொள்ளலாமே தவிர அவனை வெறுக்கக்கூடாது என்ற நிலையில் தலைவியின் கற்பு பேசப்படுகிறது.*

**கைம்மைத் துயர்**

*சங்க காலத்தில் கணவன் இறந்தவுடன் பெண்களும் உடன்கட்டையேறுகின்ற வழக்கம் இருந்துள்ளது. உடன்கட்டை ஏறுவதனால் பெண்ணுக்கு ஏற்படக்கூடிய இன்பத்தினையும் கைம்மை நோன்பினைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படக்கூடிய துன்பத்தினையும் பின்வரும் பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

பல்சான்றீரே பல்சான்றீரே

. . . . . . . . . . . . . .

வாள்இதழ் அவிழ்ந்த தாமரை

நள்இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே[75]

*என்ற பாடலைப் பாடியவர் பெருங்கோப்பெண்டாவார். இவர் பாண்டிய நாட்டரசன் பூதப்பாண்டியனின் மனைவி. இவர் தன் கணவன் இறந்ததும் சான்றோர்களைப் பார்த்துக் கேட்பதாக இப்பாடலைப் பாடியுள்ளார். அதாவது, அறிவில் சிறந்த சான்றோர்களே! என் கணவன் இறந்து விட்டான் ஆதலால் நீயும் செத்துவிடு என்று கூறாமல், என்னைச் சாகவிடாமல் தடுக்கின்ற கொடிய மனமுடையவர்களே! வெள்ளரிக்காயை அரிவாளால் வெட்டினால் விழுகின்ற விதைகளைப் போல நல்ல நெய் சேர்க்காத இலைகள் மேல் பரப்பிய கையால் பிழிந்தெடுத்த சோற்றுப் பருக்கைகளை, வெள்ளை எள்ளுத் துவையலுடன், புளியிட்டுச் சமைத்த வேலம் மற்றும் வெந்தயக் கீரைகளை உணவாக உட்கொண்டு படுக்கை விரிப்பில்லாமல், பருக்கைக் கல்லையே படுக்கையாகக் கொண்டு, கைம்மை நோன்பு பூண்டு துன்பப்படும் பெண்களைப் போல நான் உயிர் வாழ மாட்டேன். மேலும் சுடுகாட்டிலே உண்டாக்கப்பட்ட கட்டை விறகுப் படுக்கையானது உங்களுக்கு*

வேண்டுமானால் துன்பம் தருவதாக இருக்கலாம். ஆனால் கணவனைப் பிரிந்த எனக்குப் பெரிய இதழ்விரிந்த தாமரைப் பூத்தத் தடாகமும் அந்த ஈமத்தீ எரியும் விறகுப் படுக்கையும் ஒன்றுதான் என்கிறார். மேற்கூறிய பாடல் அக்காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவியும் தீயினுள் புகுவது இறப்பதே சிறந்தக் கற்பாகப் போற்றப்பட்டுள்ளது என்பதைக் கூறுகின்றது.

ஐங்குறுநூற்று நெய்தல் திணையில் தலைவியின் கூற்றாக 44 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தலைவியின் கூற்றுக்கள் பின்வருமாறு பகுக்கப்படுகின்றன.

1. சிறைப்புறமாகத் தலைவன் இருக்கத் தலைவி வெளியிடும் மன உணர்வுகள்
2. வரைவினை வற்புறுத்தும் தோழிக்குக் கூறல்
3. வரைவிடை ஆற்றாத தலைவி கூறல்
4. வரைவு மலிந்த தோழிக்குக் கூறல்
5. தலைவி தோழிக்கு வாயில் மறுத்தல்
6. தலைவி தோழிக்கு வாயில் நேர்தல்

என வரையறுக்கப்பட்டுள்ளன. தன் மன உணர்வுகளை வெளியிடும் களமாகச் சிறைப்புறக் கூற்றும் வரைவிடை ஆற்றாத தலைவி வருந்தும் நிலையும் தலைவி தன்னிடம் வரும் தோழி, வாயில், தலைவன் ஆகியோரின் வாயில்களை மறுப்பதுமாக அமைகின்றன.

## 1. சிறைப்புறமாகத் தலைவன் இருக்கத் தலைவி வெளியிடும் மன உணர்வுகள்

தலைவன் புணர்வினை நாடிச் சிறைப்புறமாக இருக்க, தலைவி கூறும் கூற்றுக்கள் அவனது மனநிலையை அடிப்படையாகக் கொண்டு மாறுபட்டு ஒலிக்கின்றன. தலைவனின் வரவினை எதிர்நோக்கும் தலைவி அவன் விரைவில் வரைந்து கொள்வான் என்று நம்பியும் அவனது அன்பிற்கு ஏங்கி நிற்பதாகக் குறிப்பிடுகின்றாள். ஆனால் வரைவை நீட்டித்து வந்தொழுகும் தலைவனிடம் தலைவி தன் துயரினைக் கூறி வரைவை வெளிப்படுத்துகின்றாள்.

தலைவியின் அன்பு மனம் முழுவதும் தலைவன் நிறைந்து நிற்கின்றான். ஆனால் தலைவியின் அச்ச உணர்வால் அவள் நினைவு முழுவதும் அன்னையிடம் பணிந்து நிற்கின்றது. இவ்விரு முரண்பட்ட நினைவுகளைச் சுமந்துள்ள தலைவியின் மன உளைச்சலைச் சிறைப்புறத்தில் இருக்கும் தலைவன் கேட்டு விரைவில் மணம்புரிய வேண்டும் என்பதே தலைவியின் நோக்கமாகும்.

தலைவி, தலைவன் சிறைப்புறமாக இருக்கும் தோழியிடம் கூறுவனவாகப் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தலைவி சிறைப்புறமாகக் கூறக் காரணம் நேரிடையாகக் கூறுவதை விட மறைமுகமாகக் கூறுவதில் பயன் அதிகம் உண்டு என்ற உளவியல் புலனாகிறது.

தலைவன் தலைவியை வரைந்து கொள்வதில் காலநீட்டிப்புச் செய்வதிலும் களவு வாழ்க்கையினைப் பெரிதும் விரும்புபவனாக உள்ளான். அப்போது தோழி, தலைவியிடம் உன்னை மணந்து கொள்வானா? என்று ஐயமுற்று கேட்கிறாள். அதற்குத் தலைவி, தலைவன் தன்னை மணந்து கொள்வான் என நம்பிக்கை கொண்ட தலைவி, பசுமை நிறைந்த இலைகளை உடைய செருந்தி மரத்தின் கிளைகள் பரவிய பெரிய கழியை உடைய சேர்ப்பன் உன்னைத் தெளிவித்த போது கூறியவற்றை நாணத்தால் முழுவதும் மறந்து விட்டோம் என்கிறாள்.

தலைவன் தன்னை என்றும் மறவாத மாண்புடைய மனம் உடையவன். ஆதலால் அவன் நம்மைத் தேடிவரக் காண்போம். அஞ்சாதே! என்று தோழிக்கு மட்டுமின்றித் தன் மனதிற்கும் தலைவன் மீது உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றாள். இதற்கு,

செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன்
தான்வரக் காண்குவம் நாமே
மறந்தோம் மன்ற நாணுடை நெஞ்சே[76]

என்ற பாடலடிகள் சான்றாகும்.

**அலர் பரவியதால் விரைவில் மணம் புரியவேண்டல்**

*ஊராரின் அலர் தூற்றலால் தலைவனுக்கு எவ்வித பழியும் நேர்வதில்லை. அலர் தூற்றுபவரும் தூற்றப்படுபவரும் பெண்களாக உள்ளனர். இதனால் அதிகக் கவலை உற்ற தலைவி வரைந்து கொள்ளாமல் களவில் மட்டும் வந்து ஒழுகும் தலைவனிடம் வீட்டில் நிகழ்ந்தது பற்றிக் கூறுகின்றாள். வெண்மையான மணல் பொருந்திய கரையை அலைக்கும் உயர்ந்த அலைகளை உடைய தலைவனை ஒப்பிட்டுப் பழி கூறினாள். அதனைக் கேள்வியுற்ற அன்னை, சினங்கொண்டு தலைவியை வினவுகின்றாள். அப்போது எம்மை என மெல்லக் கூறுகின்றாள் என்பதனை,*

ஊரார் பெண்டு என மொழிய என்னை
அது கேட்டு அன்னாய் என்றனள் அன்னை
பைய வெம்மை என் றனெள் யாகினி[77]

*என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இவற்றில் தலைவியின் மனநிலை உரைத்து அலர் மறைய வேண்டும் என்றால் விரைவில் மணம் புரிய வேண்டும் என்பதே தலைவியின் நோக்கமாக உள்ளது.*

**தலைவி தலைவனை வரைவு கடாயது**

*தலைவன், தலைவியின் களவுநெறி நற்றாய்க்குத் தெரிந்தவுடன், தலைவியை இற்செறிக்க முயல்கின்றனர். இதனை அறிந்த தலைவி, இற்செறிப்பு நிகழ்ந்ததால் தலைவனைக் காண முடியாது. அவ்வாறு காண முடியாவிட்டால் பிரிந்தும் வாழ முடியாது. விரைவில் மணம் புரிவதே சிறந்த வழி எனத் தலைவனை வரைவு கடாவுகின்றாள். இதை,*

பிரிந்தும் வாழ்துமோ நாமே
அருந்தவம் முயறல் ஆற்றாதேமே[78]

*என்ற அடிகள் உணர்த்துகின்றன. தலைவன் பிரிவைத் தாங்கி உயிர்வாழ முடியாது எனத் தலைவி தன்னிலையை வெளிப்படுத்துகின்றாள். தலைவன் இடையீடுபட்டு ஒழுகுகின்றான். தலைவி, வீட்டின் புறமாய்த் தலைவன் இருப்பதை அறிந்து, தோழியிடம் நெய்தல் தலைவனை உள்ளவழி நாமே போய் அடைவதற்குரிய உரிமை இல்லை என்கிறாள். ஆயினும் கடல் நாரைகள் வந்து தங்கி ஒலிக்கும், மடல் பொருந்திய பனைமரங்கள் நிறைந்த*

*அவன் நாட்டிற்குப் போய் வருவோமா? எனத் தோழியிடம் உரைக்கின்றாள். சிறைப்புறத்து உள்ள தலைவனுக்குத் தலைவி,*

நேரம் ஆயினும் செல்குவாம் கொல்லோ
கூலின் நாரை இரற்றும்
மடலம் பெண்ணை அவனுடை நாட்டே[79]

*என உரைத்து வரைவு கடாவ வேண்டுகிறாள்.*

*தலைவி வீட்டில் இற்செறிப்பு செய்யப்பட்ட பின்னும் தலைவன் தலைவியை மணந்து கொள்ளாதவனாய்ச் சந்திக்க வருகிறான். அதனைக் கண்ட தலைவி தோழியிடம் பலவகையான மாட்சிமைப்பட்ட நுட்பமான மணல் செறிந்த கடற்கரையில் நம்மோடு கூடி ஆடிய குளிர்ந்த துறைவன் மறைந்து வந்தான் என்கிறாள். மேலும் தான் இற்செறிக்கப்பட்டுள்ள நிலையை,*

தண்ணம் துறைவன் மறைஇ
அன்னை அருங்கடி வந்து நின்றோனே[80]

*எனக் கூறி காவலைக்கிடந்து வருவதற்கு அரிது என்கிறாள். எனவே வரைந்து கொண்டாலன்றிக் காமக்கூட்டம் நிகழாது என உணர்த்தி வரைவு கடாவ வேண்டுகின்றாள். இதன்மூலம் ஊரில் அலர் தோன்றியதாலும், காவல் அமைந்ததாலும் விரைவில் தன்னை மணம்புரிய வேண்டும் என உரைப்பது புலனாகின்றது.*

**மாலைப்பொழுது தலைவியை வருத்துதல்**

*தலைவன் மாலை நேரத்தில் தலைவியின் வீட்டின் புறமாக வந்து நிற்கின்றான். தலைவிக்கு மாலைப்பொழுது ஆற்றாமையைத் தருகிறது. தலைவன் அருளுவான் போல முன்பு வந்துகூடியவன் இப்போது வரையாமல் வந்து நிற்கின்றான் என்பதை,*

. . . . . . . நாம் அழ
நீல இருங்கழி நீலம் கம்பும்
மாலை வந்தன்று மன்ற
காலை அன்ன காலை முந்துறுத்தே[81]

என்கிறாள். தலைவி மாலைப்பொழுது கையறு மாலையாக விளங்குகின்றது எனவும் காலைப்பொழுது ஆற்றுவிக்கும் இயல்புடையது எனவும் கூறித் தன் வருத்தத்தைத் தலைவனுக்கு உரைக்கின்றாள்.

**தலைவன் மீது கொண்ட அன்பு**

தலைவியை மணந்து கொள்ளாமல் ஒழுகும் தலைவன் இற்புறத்தில் நிற்கின்றான். அப்போது புன்னைமரத்தின் அழகிய மலர்கள் துறைதோறும் அழகுபடுத்துவதைப் போல தலைவனின் புணர்ச்சியால் தலைவி நலம் பெறுவதாகக் கூறுகிறாள். தலைவன் தலைவியுடன் புணர்ந்தாலும் பிரிந்தாலும் அவற்றின் இயல்பினைத் தலைவியின் மேனி காட்டிவிடும் எனலாம். தலைவனால் தன் உடல் அழகு பெற்றதைத் தலைவி,

. . . . . . . . நலனே
இன்ன இனிதாகுதல் கொடிதே புன்னை
மணிநீர்ச் சேர்ப்பனை மறவாதிமே[82]

என்றுரைக்கின்றாள்.

**தலைவியின் குணநலன்**

துன்பம் செய்தவர்க்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்கு ஏற்பத் தலைவி தலைவன் செய்யும் தவறினை மன்னிக்கும் மாண்புடையவளாகக் காணப்படுகின்றாள். தலைவி தலைவன் மீது சினம் கொண்டு அறம் அற்ற தலைவனே! இனி இங்கு வராதே எனக் கூறுவதற்காகச் செல்கிறாள். ஆனால் அவ்வாறு கூறுவது தனக்கே இழிவு தரும் எனக்கருதி வருத்தமுற்று மீள்கிறாள். இதற்கு,

சினவுவென் தகைக்குவென் சென்றவென்
பின்நினைத் திரங்கிப் பெயர்தந்தேனே[83]

என்ற பாடலடிகள் சான்றாகும்.

**தலைவனை அன்பற்றவன் எனக்கூறல்**

தலைவன், தலைவியிடம் விரைந்து வந்து வரைந்து கொள்வேன் எனக் கூறியவன் பின்னர் அவற்றிற்குரிய எந்த முயற்சியும் செய்யவில்லை என்பதை

அறிந்து மனம் வெதும்புகிறாள். நெய்தல் நிலத்தை உடைய தலைவன் தன்னை மணந்து கொள்வதற்குரிய வழிமுறைகளைக் கைக்கொள்ளாமல் அதற்கு மாறான காலநீட்டிப்பு மேற்கொண்டு ஒழுகுகின்றான் தலைவன். இதனால் அவனை,

அன்பிலன் மன்ற பெரிதே[84]

என்கிறாள். தலைவியின் களவு வாழ்க்கை அலராக வெளிப்படும்போது கற்பு வாழ்க்கையை விரும்புவது இயல்பாகும். தலைவன் வரைவேன் எனக் கூறி வரையாது ஒழுகுவதால் அவனை அன்பற்றவன் என உரைப்பது புலனாகிறது.

### மணம் புரியத் தலைவன் வந்த வழி தலைவி மகிழ்ந்து கூறல்

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து சென்றவன் சிறைப்புறத்தில் இருக்க அவன் பொருட்டுப் பெற்ற இன்பத்தால் தன் உள்ளம் மட்டுமின்றி அழகிழந்த தோள்களும் முன்போல் நலம்பெற்றன என்கிறாள் தலைவி.

நல்ல ஆயின அளியமென்தோளே
மல்லல் இருங்கழி நீர்அறல் விரியும்
மெல்லம் புல்லன் வந்த மாறே[85]

என்று உரைக்கின்றாள். தலைவன் சிறைப்புறமாக இருக்கத் தலைவி பேசும் கூற்றுக்கள் தலைவன் வரையும் திறம் தெரிவிக்கவும், வரைவு கடாவுதலும், அலரில் ஏற்படும் நிலைமையும், மாலைப்பொழுது வருத்துவனவும், தலைவன் மேல் கொண்ட மென்மைக் குணமும், தலைவன் அன்பற்றவன் எனக் கூறுவதாக அமையும் சிறைப்புறக் கூற்றுக்கள் தலைவியின் மனநிலையை வெளிப்படுத்துகின்றன.

### வரைவிடை ஆற்றாத தலைவி கூறல்

தலைவன், தலைவியை வரைவிடை வைத்துப் பிரிந்து செல்கின்றான். வரைவிடை வைத்துப் பிரிதல் பெரும்பாலும் இல்லற வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கும், இரவலர்களுக்கு ஈவதற்காகவும் பொருளீட்டுவதற்காகவும் நிகழ்கின்றது. தலைவன் பொருள்தேடப் பிரிந்ததற்காக நீ வருந்த வேண்டாம். உன்னை மணந்து கொள்ளும் பொருட்டே பிரிந்து சென்றுள்ளான் எனத் தோழி கூறுமிடத்து தலைவி பின்வருமாறு கூறுகின்றாள்.

*நீரினால் அடித்து வரப்பட்ட மணல் பரந்த நிலத்தில் ஞாழலின் மலர் செருந்திப்பூவுடன் மணம் கமழ, குளிர்ந்த நீர்த்துறையில் வீசி பகை கொள்ளச் செய்கின்றன. இயற்கையே என்னை ஊறு செய்யும் போது நான் எப்படி வருந்தாமல் இருப்பது என்பதை,*

எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் துண்டுளி வீசிப்
பயலை செய்தன பனிபடுதுறையே[86]

*எனக் கூறித் தன் துன்பத்தை மிகுவிப்பதாகச் சுட்டிக்காட்டுகிறாள்.*

*வரையாது வந்தொழுகும் தலைமகன் இரவுக்குறியில் சிறைப்புறத்தானாக வருகின்றான். தலைவி உறங்காமல் இருக்கின்றாள். தோழியிடம், என் கண்கள் உறங்காமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று வினவுகிறாள். அதற்குத் தோழி உறங்க வேண்டும் என்றால் நீ தலைவனை மறக்க வேண்டும் என்று கூறுகிறாள். தலைவி, 'எக்கரில் நின்ற ஞாழலின் தாழ்ந்த மலர்க் கொத்துக்கள் பொருந்திய கிளையில் பறவைகள் வந்து தங்கும் துறையையுடைய தலைமகனை நினையாமல் இருப்பேன்' என்கிறாள். இனி தன்னுடைய கண்கள் உறங்கும் என்பதை,*

உள்ளேன் தோழி - படீ இயளான் கண்யே[87]

*என்கிறாள். தலைவன் களவினை மேற்கொண்டு வருவதால் தலைவியின் உடல் வேறுபட்டதைக் கண்ட தோழி தலைவியிடம் தலைவன் விரைவில் மணந்து கொள்ள வருவான் எனவும், அதனால் பசலை நீங்கி இன்புறுவாய் என்றும் கூறுகின்றாள்.*

*மணல்மேட்டில் நின்ற ஞாழலின் மலர்க்கொத்துக்கள் பொருந்திய சோலையில் துணையைப் பிரிந்து தனிமை அடைந்த குருகு உறக்கம் கொள்கிறது. ஆனால் தலைவன் பொருட்டாகப் பசப்புற்று இருந்த அழகு மேலும் பசந்ததை,*

இனிப் பசந்தன்று என் மாமைக் கவினே[88]

*எனக் கூறித் தலைவன் வரைவான் என்ற மொழியை மெய்யென்று நம்புதல் கூடாது என்கிறாள் தலைவி.*

தலைவன் வரைவைத் தலைவியின் உறவினர் மறுத்தனர். ஆதலால் தலைவன் காண்போரை மணம்பேச அனுப்பி வைத்தான். மணம் கூடியபோது தலைவி மணல்மேட்டில் உள்ள ஞாழலின் அரும்புகள் முற்றி மலர்ந்த மலர்க் கொத்துக்கள் நறுமணம் கமழும் துறைவன் பொருட்டு என் மாமையழகு பெற்றதை,

இனிய மன்ற என்மாமக் கவினே[89]

என்கிறாள்.

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பின்னர் தலைவியைப் பார்க்கத் திரும்பி வருகிறான். அவனைத் தலைவி காணாதது போல் இருக்கிறாள். இவ்வாறு நீ செய்யக் காரணம் என்ன? எனத் தோழி வினவுகிறாள். அதற்குத் தலைவி எக்கரில் உள்ள ஞாழல் மரத்தின் நறுமணம் பொருந்திய மலர்கள் உள்ள பெரிய கிளையைக் கடலின் திரைகள் வந்து கலக்கும் துறைவன் உள்ளப் புணர்ச்சியிலும் இன்பம் விளைவித்ததால் இன்று புணர்ந்தாலும் புணராதவனே ஆவான். ஆதலால் அவனை வினவுவதில் பயன் ஒன்றுமில்லை என்பதை,

புணரி திளைக்கும் துறைவன்
புணர்வின் இன்னான அரும்புணர்வினனே[90]

எனும் சிறைப்புறக் கூற்றில் தன்மனநிலையைக் காட்டுகிறாள் தலைவி.

**வரைவிடை ஆற்றாத தலைவி கூறல்**

வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைவி மாலைப்பொழுது வரக்கண்டு, அம்மாலைப் பொழுதை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றாள்.

தலைவன் என்னைப் பிரிவதால் நெறி பிறழ்தல் அமையுமாயினும் முன்பு போல் இன்றும் கடும்பகலில் வருகின்றாய். அது ஒழிந்து வளைவான உப்பங்கழியில் மலர்ந்த நெய்தல்மலர் இதழ் குவியக் காலை வரினும் வருக; உன்னை விலக்குவர் எவரும் இலர் என்பதை,

தண்கடற் சேர்ப்பன் பிரிந்தென, பண்டையின்

கடும்பகல் வருதி - கையறுமாலை

கொடுங்கழி நெய்தலும் கூம்ப

காலைவரினும் கலைஞரோ இலரே[91]

*என்கிறாள். மாலைப்பொழுது தலைவன் இருக்கும்போது இன்பமிகு மாலையாகவும், தலைவன் பிரிவால் கையறு நிலையாகவும் காட்சி அளிக்கின்றது எனத் தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த போது கூறுகின்றாள்.*

**வரைவினை வற்புறுத்தும் தோழிக்குக் கூறல்**

*தலைவன் தலைவியை வரைந்து கொள்வேன் எனக் கூறிப் பின் வரைவு நீட்டித்தவிடத்து தலைவி வருந்த தோழி அவளை ஆற்றுவிக்கும் பொருட்டுப் பலபட உரைக்கின்றாள். தலைவன் பிரியேன் எனக் கூறிவிட்டுப் பிரிந்து சென்றதால் தலைவனின் சொற்கள் வேறாயின. தலைவனின் சொற்கள் உண்மையினின்று மாறுபட்டு பொய்மையுடையதாக அமைகின்றது. தலைவனின் மாறுபட்ட பொய் மொழியைத் தோழி,*

பூக்கமிழ் பொதுபேர்ச் சேக்கும்

துறைவன் சொல்லோ பிற ஆயினவே.[92]

பயந்து நுதல் அழியச் சாஅய்

நயந்த நெஞ்சம் நோய்ப்பால் அ.:.தே[93]

*என்கிறாள். தலைவன் பிரிவால் தலைவி பசலை உற்ற தன்மையையும் உரைக்கின்றாள். தலைவனின் செயலை,*

பெருங்கடற்கரையது சிறுவெண்காக்கை

நிந்துநீர் இருங்கழி யாரை தேர்ந்துண்டு

பூங்கமழ் பொதும்பிற் சேர்க்கும் துறைவனோடு[94]

*எனக் குறுந்தொகைப் பாடலில் கூறுகின்றாள். இப்பாடலில் காக்கையுடன் தலைவனின் செயல்களை ஒப்பிட்டுப் பேசுகிறது.*

*தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலம், சிறிதாயினும் அதனால் வரும் துன்பம் பெரியதாகும். தலைவன் பிரிவால், தலைவியின்*

உடலும் உயிரும் வாடியதால் கை வளையலும் தன்னை விட்டு நீங்கிவிட்டதாகத் தலைவி கூறுகிறாள்.

துறைவன் துறந்தெனத் துறந்துஎன
இறையோர் முன்கை நீங்கிய வாளையே[95]

என்று தன் துயரினை எடுத்துரைக்கின்றாள்.

### வரைவு மலிந்த தோழிக்குக் கூறல்

தலைவன், தலைவியைத் திருமணம் செய்து கொள்வதற்கு வருகின்ற நற்செய்தியை அறிந்த தோழி அதனைத் தலைவிக்குக் கூறுவது வரைவு மெலிவு ஆகும். அவ்வாறு வரைவு மெலிந்த தோழிக்குத் தலைவி ஊரில் அலர் ஏற்பட்டு விடும் எனத் தான் அஞ்சியிருந்தது பற்றி உரைக்கின்றாள். தலைவி, நெய்தல் மலரைப் போன்ற கண்களை உடையவள். நுண்மையான இறைபொருந்திய வளையல் அணிந்த பருத்தத் தோளை உடைய தலைவியை விளையாடும் இளமகளிர் குவிந்த பெருமணலில் குரவைக்கூத்து ஆடும் துறையைப் பொருந்திய தலைவன் நம்மை மணந்து கொள்ளாதவனானான். இனி அலரினால் எம்மைத் தூற்றிய இவ்வூரில் வாழ்வதற்கு இயலுமா? என்றுரைக்கின்றாள். அலரினால் உண்டான வெறுப்பால் தலைவி தாம் வாழும் ஊரை,

வரைவினி தம்மஇல் அலங்கல் ஊரே[96]

என்கிறாள்.

### தலைவி தோழிக்கு வாயில் நேர்தல்

தலைவன் காதற் பரத்தையை விட்டு வேறு ஒருத்தியை விரும்பி ஒழுகினான். அவ்வாறு ஒழுகி நின்ற தலைமகன் வாயில் வேண்டித் தலைவியிடம் வந்தான். தலைவி என் கண்கள் பசந்ததற்குக் காரணம் பெரிய கடற்கரையில் வாழும் சிறுவெண்காக்கை பொன்போன்ற மலர்க் கொத்துக்களை உடைய ஞாழலை வெறுத்ததால், அரும்பி அவிழும் புன்னையின் பெரிய கிளையில் தங்கும் துறைவன் என் நெஞ்சத்து இருப்பதை அறிந்து வைத்தும், என் கண் பசலை கொண்டதை அறியேன் என்று தோழியிடம் கூறுகின்றாள். இதனை,

நெஞ்சத்து உண்மை அறிந்தும்
என்செய் பசக்கும் தோழிகண்ணே[97]

*எனக் கூறித் தோழியை வாயில் நேர்விக்கின்றாள்.*

**தலைவி தோழிக்கு வாயில் மறுத்தல்**

*தலைவன், தலைவியை இணைத்து வைக்கும் பொருட்டுத் தலைவியிடம் தோழி வாயில் வேண்டுகிறாள். தலைவி வாயில் மறுத்தலுக்குரிய காரணங்களைக் கூறுகிறாள். பரத்தையுடன் புணர்ந்ததால் அவனது புலவியைத் தன்னால் தணிக்க இயலாது என்கிறாள். தலைவன் தன்னிடம் வந்ததாக உணர்தல், காமன் சென்ற வழி வாயில்களைச் செல்லவிடுதல், தலைவியின் மகப்பேற்றிற்கு உரிய காலத்தில் உலகியல் குறித்தும், தலைவனின் பரத்தை பற்றிய அலர் அஞ்சி வருவதையும், தலைவனின் அன்பு மாறுபட்டமை, பிரியேன் என்று சூள் உரைத்துப் பின் பிரிந்தவை ஆகிய காரணங்களை வைத்துத் தோழியிடம் தலைவி வாயில் மறுக்கின்றாள்.*

*தலைவி தோழிக்கு வாயில் மறுப்பவையாகப் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தன் பார்ப்பு எனச் சென்ற மடம்பொருந்திய நடையை உடைய நாரை, தன் காலால் மிதிப்ப, அவற்றின் காரணமாக இதழ் விரியப் பெற்ற கண்ணைப் போன்ற நெய்தல் மலர்கள் தேன் மணம் வீசுதல் குறையாத தலைவன் பொருட்டுத் தன் நெஞ்சு உடைந்ததை,*

நெக்க நெஞ்சு நோக்கல் லேனே[98]

*என்கிறாள்.*

*தலைவி வாயில் மறுக்கின்ற நிலைக்குத் தலைவனின் பரத்தமையே காரணம் ஆகும். தலைவன் பரத்தையை மணப்பான் என ஊரார் அலர் கூறுகின்றனர். ஆதலால் அவன் அறம் உடையவன் அல்லன். அவனுக்கு அன்பு அருளும் ஆகும் என்பதை,*

துறைவன் வரையுமென்ப
அறவன் போலும் அருளுமார் அதுவே[99]

என எள்ளி நகைக்கின்றாள். தலைவன் புறத்தொழுக்கம் உடையவன், அவனை நல்லவன் என்று தோழி உரைக்கின்றாள். அதைக்கேட்ட தலைவி வெறுப்புற்று 'இவ்வூர்ப் பொய்க்கும்' என்கிறாள். இதனை,

யான் எவன் செய்கோ பொய்க்கும் இவ்வூரே[100]

என்கிறாள் தலைவி. தோழி பல வழியாலும் வாயில் நேராளாகிய தலைவி, பல வகையிலும் தலைவன் ஒழுக்கம் கூறி மறுத்தாள். மகப்பேற்றிற்குரியக் காலமும் கழிகின்றது. நீ இப்போதும் வாயில் மறுக்கின்றாயே, அதற்குக் காரணம் என்ன? என வினவுகின்றாள் தோழி.

வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தனதாக எண்ணிச் சென்ற நாரை சிறகு அடித்து அசைக்கின்றது. ஆதலால் நெருங்கிய நெய்தல் கழியில் பெருகி வரும் அலைகளுடன் நீங்கும் துறைவனுக்குக் களவு வாழ்வில் பைஞ்சாயப் பாவை பெற்றேன் என்பதை,

ஓதமொடு பெயருந் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென்யானே[101]

என்கிறாள். பாவையைக் கொண்டு அமைதி பெறுவேன் என்கிறாள் தலைவி.

தலைவன் தகுதி நம்மிடம் அமைந்தொழியாது பரத்தையிடமும் சென்று அலர் தருவதாயிற்று எனத் தலைவி வருந்தி,

தண்ணம் துறைவன் தகுதி
நம்மோடு அமையாது அலர்பயந்தன்றே[102]

என்கிறாள். அலரினால் தலைவனின் பரத்தமை எங்கும் பரவிய நிலையில் தலைவி, தோழியிடம் வாயில் மறுப்பதற்குக் காரணமாகின்றது.

தலைவி, தலைவன் கூறிய சூளுரையில் கூறிய பொய்ச் சொற்களால் இறை பொருந்திய அழகு பெற்றுத் திகழும் வளையல்கள் கழன்றதை,

நிறையேோர் எவ்வளை கொண்டு[103]

எனக் கூறித் தோழியிடம் வாயில் மறுக்கின்றாள்.

தலைவியிடம் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் வாயில்களை விடுத்தான். வாயில்களாய் வந்தவர்க்குத் தலைமகளின் கொடுமைகளைக் கூறி

*வாயில் மறுக்கின்றாள். பெரிய கடற்கரையில் உள்ள சிறுவெண்காக்கை உப்பங்கழியில் வாழும் இனமாகிய கொடிற்று மீனை உண்ணும் தலைவன் நமக்கு நன்மை செய்வதாகக் கூறி மறைந்தான். ஆயினும் அவன் நமக்கு நன்மை செய்து ஒழுகவேண்டியவன் ஆயினும் அவற்றை விட்டுச் சேரியில் வாழும் சிறப்பில்லாதப் பரத்தையை நுகர்ந்து ஒழுகுகின்றான் என்பதை,*

நல்கானாயினும், தொல்கேள் அன்னே[104]

*எனத் தன்னிலையையும் வெளிப்படுத்துகிறாள். ஆனால் தலைவி தலைவனின் செயலில் வெறுப்புடையவளாகி,*

நல்லன் என்றி ஆயின்
மல்லிதழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ[105]

*எனக் கூறித் தோழியிடம் வாயில் மறுக்கும் நிலை ஏற்படக் காரணம் தலைவன் பரத்தையர் பிரிவு மேற்கொண்டதாகும் என்கிறாள்.*

**தொகுப்புரை**

- *தலைவன் கூற்றுப் பாடல்களில் தலைவனின் நிலையாகத் தோழியிடம் இரந்து நிற்பது, புணர்ச்சிக்குப் பின் தலைவியிடம் தன்னிலை கூறுவது, பாசறைக்கண் தலைவன் இருக்கும் போது தலைவியை நினைத்தல், பரத்தையற் பிரிவு மேற்சென்ற தலைவனின் செயல், வாயில் வேண்டி இரந்து நிற்கும் நில ஆகியவை.*

- *தலைமகள் அறத்தொடு நிற்கும் முறை பற்றி நம்பியகப்பொருள் விளக்குகிறது. அயல்மனைப்பிரிவு, அயற்சேரிப்பிரிவு, புறநகர்ப்போக்கு என்று மூவகைப் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவிக்குத் தலைவனோடு ஊடல் ஏற்படுகிறது என்பது தெளிவாகிறது.*

- *தலைவி தோழிக்கு அறத்தொடு நின்று இறுதியில் மாசு வராமல் கற்புக்கடம் பூண்ட செய்தி எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தன் வாழ்நாள் முழுவதும் இணைந்த அறச்செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தைச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. அதுதான் குறிக்கோள் ஆகும்.*

* தலைவன், தலைவியின் உள்ளத்தினை அறியாமல் பொருளீட்டச் செல்வதால் தலைவிக்கு ஏற்படும் துயரக் காட்சி விளக்கப்பட்டுள்ளது. தலைவன் குறிப்பிட்ட காலம் வரை பொறுத்திருந்த தலைவி பின்னர் தலைவன் வராமையால் பிரிவை எண்ணி வருந்துகின்றாள்.

* வினையே ஆடவர்க்கு உயிர் என்பதனையும், பொருள் இன்றேல் இல்லறம் இல்லை என்பதனையும் உணர்ந்த தலைவி தலைவனுடன் விரைவில் கூடவேண்டும் என்று எண்ணும் மனநிலை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

* சங்ககால வழக்கப்படி தாயார் மனையில்தான் சிலம்புகழீஇ நோன்பும் வதுவையும் நிகழ்ந்திருக்க வேண்டும். இதனைச் சிலம்பு கழீஇ நோன்பும், என் மனையில் நிகழாது பிறர் மனையில் நிகழுமாறு நடக்க வேண்டியதாயிற்று என்றும், வதுவைச் சடங்காவது அம்மனையில் நிகழ்த்துமாறு மனை மருண்டு புலம்பிய தாயாரின் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

* தலைவி பொருளாதார உயர்நிலையில் உள்ள செல்வப்பெண் என்பதைக் காட்டும் குறிப்பாகவே சிலம்பைப் பற்றியக் குறிப்பைப் புலவர்கள் தந்துள்ளனர். தலைமக்களிடையேயான செல்வநிலை வேறுபாட்டால் அவர்தம் வரைவுக்குத் தமர் உடன்பட மாட்டார் என்ற காரணத்தினால் உடன்போக்கு நடைபெறக் காரணமாயிற்று என்பது புலப்படுகிறது.

* தலைவன் மறக்குடியினன், வறுமைநிலையினன் என்பதை ஏற்கனவே உணர்த்திய நிலையில் தாயார்க்கு அச்சத்தைத் தோற்றுவித்து மைஅணல்காளை என்ற குறிப்பு திருமணமான ஆடவரைக் குறிப்பதாக உள்ளது. அதாவது திருமணமான ஆடவர் கரிய தாடியுடன் விளங்கினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

* தம் மானத்தையும் தன் கணவன் மானத்தையும் தம் குலப்பெருமையும் காத்து நிற்பவள் பெண்; என்று பெண்ணின் பெருமை எடுத்துக் காட்டப்படுகிறது.

* பெண்களுக்கு வரையறுக்கப்பெற்ற அச்சம், மடம், நாணம் தாண்டிய உணர்வு வெளிப்பாடாகச் சுட்டப்படுகிறது. பெண்பாற் புலவர்களின் பாடல்கள் பெண்ணின் கற்பினை திருமணம், பிரிவு, ஊடல், கைம்மை என்ற நான்கு நிலைகளில் விளக்குகின்றது. சிறைப்புறமாகத் தலைவன் இருக்கத் தலைவி வெளியிடும் உணர்வுகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

## சான்றெண் குறிப்புகள்

1. **தொல். களவு.**, நூ.1044.
2. ஆ.இராமக்கிருஷ்ணன், **அகத்திணை மாந்தர்கள் ஓர் ஆய்வு**, ப.98.
3. **ஐங்குறுநூறு**, பா.183.
4. மேலது., பா.197.
5. **நற்றிணை**, பா.21.
6. மேலது., பா.30.
7. மேலது., பா.40.
8. **குறுந்தொகை**, பா.99.
9. **கயமனார் அகம்.**, பா.7:18-22.
10. **அகம்.**, பா.117.
11. மேலது., பா.207.
12. மேலது., பா.219:9-10.
13. **மருதக்கலி.**, பா.10:23-26.
14. **கலித்தொகை**, பா.140.
15. **குறள்**.1134.
16. ஆ.இராமகிருட்டினன், மு.நூ., ப.107.
17. தொல்காப்பியர், **தொல்காப்பியம், கற்பியல்**, நூ.7.
18. மேலது., நூ.33.
19. நம்பியாண்டார் நம்பி, **நம்பியகப்பொருள்**, நூ.49.
20. மேலது., நூ.67.
21. மேலது., நூ.94.
22. **குறிஞ்சிக்கலி**, பா.18:16-20.
23. **பாலைக்கலி**, பா.9:21-24.
24. **தொல். பொருளியல்**, நூ.35.
25. **தொல். அகத்திணையியல்**, நூ.44.
26. **பாலைக்கலி**, பா.2-11.
27. மேலது., பா.2-15.
28. மேலது., பா.2:22.

29. **பாலைக்கலி**, *பா.415.*

30. மேலது., *பா.11-24.*

31. நம்பியாண்டார் நம்பி, **நம்பியகப்பொருள்,** *நூ.61.*

32. **பாலைக்கலி**, *பா.4-5.*

33. **நற்றிணை**, *பா.64.*

34. **நெய்தல் கலி**, *பா.147.*

35. **அகம்.**, *பா.5:1-6.*

36. மேலது., *பா.5:15-20.*

37. மேலது., *பா.273:1-5.*

38. மேலது., *பா.11:5-10.*

39. மேலது., *பா.308:9-15.*

40. மேலது., *பா.147:110.*

41. **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 5**, *ப.399.*

42. **தொல். அகத்திணையியல்,** *நூ.48.*

43. **நற்றிணை**, *பா.31.*

44. மேலது., *பா.388.*

45. **குறள்**.*81.*

46. **நற்றிணை**, *பா.280.*

47. மேலது., *பா.74.*

48. **அகம்.**, *பா.49.*

49. மேலது., *பா.198.*

50. மேலது., *பா.321.*

51. **நற்றிணை**, *பா.12.*

52. **பெரும்பாணாற்றுப்படை,** *பா.334.*

53. **மதுரைக்காஞ்சி**, *பா.443-446.*

54. **தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்,** *நூ.25.*

55. **குறுந்தொகை**, *பா.7-12.*

56. **பெரும்பாணாற்றுப்படை,** *பா.138-139.*

57. **புறம்.**, *பா.83.*

58. **நற்றிணை**, *பா.179:8-9.*

59. **குறுந்தொகை**, *பா.49.*

60. **குறள்**.*1315.*

61. **நற்றிணை**, *பா.397.*

62. மேலது., *பா.70.*

63. மேலது., *பா.102.*

64. மேலது., *பா.382.*

65. மேலது., *பா.11.*

66. மேலது., *பா.20.*

67. மேலது., *பா.260.*

68. **குறுந்தொகை**, *பா.28.*

69. மேலது., *பா.169.*

70. **நற்றிணை**, *பா.87.*

71. மேலது., *பா.369:8-11.*

72. **குறுந்தொகை**, *பா.5.*

73. **நற்றிணை**, *பா.355.*

74. **குறுந்தொகை**, *பா.93.*

75. **புறம்**., *பா.246.*

76. **ஐங்குறுநூறு**, *பா.112.*

77. மேலது., *பா.113.*

78. மேலது., *பா.113.*

79. மேலது., *பா.114.*

80. மேலது., *பா.115.*

81. மேலது., *பா.116.*

82. மேலது., *பா.117.*

83. மேலது., *பா.118.*

84. மேலது., *பா.119.*

85. மேலது., *பா.120.*

86. மேலது., *பா.141.*

87. மேலது., *பா.142.*

88. மேலது., *பா.144.*

89. **ஐங்குறுநூறு**, *பா.146.*

90. மேலது., *பா.150.*

91. மேலது., *பா.183.*

92. மேலது., *பா.162.*

93. மேலது., *பா.161.*

94. **குறுந்தொகை**, *பா.313.*

95. **ஐங்குறுநூறு**, *பா.163.*

96. மேலது., *பா.181.*

97. மேலது., *பா.169.*

98. மேலது., *பா.151.*

99. மேலது., *பா.152.*

100. மேலது., *பா.154.*

101. மேலது., *பா.155.*

102. மேலது., *பா.164.*

103. மேலது., *பா.165.*

104. மேலது., *பா.167.*

105. மேலது., *பா.170.*

# இயல் 3

## தோழி கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள்

*அகத்திணை மாந்தர்களில் தலைவன், தலைவியை அடுத்துச் சிறப்பிடம் பெறுபவள் தோழி ஆவாள். களவு, கற்பு என்னும் இருவகைக்கோள்களிலும் பெரும்பங்கு வகிப்பவள் தோழி. அகத்திணையின் முதன்மையான துறைகளிலும், அகத்திணையில் பிற மாந்தர்கள் இடம்பெறும் சூழல்களிலும் முன் நிற்பவள். எனவே தோழி கூற்றுப் பாடல்களில் இடம்பெறும் நிகழ்வுகள் குறித்து இவ்வியல் ஆராய்கிறது.*

*தோழி இளமையில் இருந்தே தலைமகட்குச் சிறந்த நட்பினள். அவளோடு உடன் இருந்து வாழ்பவள்.*

ஒன்றிய தோழி[1]

ஒன்றித் தோன்றும் தோழி[2]

*எனும் தொடர்கள் தலைவியின் உள்ளத்தோடு உள்ளம் இணைந்த நட்பினை உடையவள் என்பதை உணர்த்துகின்றன. தோழி செவிலியின் மகள் ஆவாள்.*

தோழி தானே செவிலியது மகளே[3]

*என்று தோழியின் பிறப்பு பற்றியும் உறவுநிலை பற்றியும் தொல்காப்பியம் சுட்டுகிறது.*

தோழி என்றது காதல் தோழியே! தலைமகனின் பால் பலருள்ளும்
இவளே களவுக்குச் சிறந்தவள்[4]

*என்பார் புலவர் குழந்தை.*

*சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்னும் பொருளடிப்படையில் பாடப்பெற்றவை. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்களாகும். எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களில் உள்ள பாடல்கள் அகம் சார்ந்தவை. இப்பாடல்கள் மாந்தர் கூற்றுமுறை சார்ந்தவை. இம்முறையில் அகப்பாடல்களைப் பாடும் போது புலவர்கள் பல வகையானப் புனைவு முறைகளைக் கையாண்டுள்ளார்.*

சங்க இலக்கியங்கள் பெரிதும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பின்பற்றி அமைந்தவை. ஆதலின், மாந்தர் கூற்றுமுறை தொடர்பாகத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கூறும் இலக்கண விதிகளும் இவ்ஆய்விற்குத் துணைபுரிகின்றன.

> அகப்பொருள் பரந்துபட்ட வரலாறு உடையது. பல்வேறு சூழல்களைக் கொண்டது. ஒவ்வொரு சூழலிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழும். அவ்வாறு நிகழும் நிகழ்ச்சிகள் பலவற்றை ஒருங்கு சேர்த்து அகப்பாடலில் பாடப் பெற வேண்டும்[5]

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

அகநிகழ்ச்சியைப் புலவர்கள் பாடலில் அமைத்துப் பாடும்போதும் தாம் கூறியது போலப் பாடக்கூடாது. அகப்பொருள் நிகழ்ச்சியைக் கூறுவதற்கு என்றே மாந்தர் பலர் படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கூறுமாறே அந்நிகழ்ச்சி பாடப்பெற வேண்டும். அவர்கள் ஒருவர் கேட்குமாறு பாடப்பெற வேண்டும். இவ்வாறாக வரையறுத்த மரபுகளைத் தொல்காப்பியர் கூற்று தொடர்பாக எடுத்துக் கூறுகின்றார். இம்மரபுகளின் வழிநின்று பாடல் அமைத்துப் பாடப்படும் போது அப்பாடல்கள் ஒரு சின்னஞ்சிறு நாடகமாகப் போக்கில் அமைந்துவிடுகின்றன.

அகப்பொருளில் களவில் கூற்று நிகழ்த்துவதற்குரியர் என்று சிலரும், கற்பில் கூற்று நிகழ்த்துவதற்குரியர் பலரும் வரையறுக்கப்பட்டுள்ளனர். தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன் அறுவரும் களவில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவராவர். இவ்அறுவரும் மற்றும் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய ஆறு பேருமாகப் பன்னிருவரும் கற்பில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர் ஆவர். இம்மாந்தர்கள் கூறுவது போலவே சங்க அகப்பாடல்கள் அமைந்துள்ளன.

> புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்[6]

ஒருவரை ஒருவர் முன் அறியாத நிலையிலும் கூட ஒத்த கருத்தினால் ஒருமித்தலே நல்ல நட்பாகும் என்பது வள்ளுவம். சங்க இலக்கியத்தில் தலைவிக்கு நட்பாகப் படைக்கப்பட்டு இருப்பவள் தோழி. தோழமையோடு

பழகித் தான் வேறு, தலைவிவேறு என்று எண்ணாது இருவரும் இருதலைப்புள்ளில் ஓர் உயிர்போல் சங்க இலக்கியத் தோழியும் தலைவியும் வாழ்பவர்கள்.

**தோழி கூற்றில் நிகழ்வுகள்**

சங்க இலக்கியத்தில் தோழி கூற்று சிறப்பிடம் பெறுகிறது. தலைவியின் நலனைத் தன்னலனாகக் கருதித் தலைவி வருகின்ற இடமெல்லாம் தோழி வருவாள். தலைவியின் காதலுக்கு உறுதுணையாகவும் அக்காதல் திருமணத்தில் முடியும் வரைக்கும் தோழியே காரணமாக அமைகிறாள். தலைவன், தலைவியர் வாழ்வை நெறிப்படுத்தும் பாத்திரமாகத் தோழி திகழ்கிறாள். அகவாழ்வின் பல நிகழ்வுகளிலும் கூற்றுக்குரியர் ஆவர். தோழி கூற்று என்றும் சுட்டப்பெறுவர். கூற்று என்பது ஈண்டு ஆகுபெயராகக் கூற்றிற்கு உரியாரைக் குறித்தது எனலாம்.

தலைவி வழி அறிந்த காதலைப் பாங்கி செவிலித் தாய்க்கு உரைப்பது பாங்கி அறத்தொடு நிற்றல் ஆகும்.

எறிவளை வேற்றுமைக்கு ஏதுவினா வினும்
வெறிவிலக்கிய வழி வினவினாலும் பாங்கி
பூவே புணலே களிறே என்றிவை
ஏதுவாகத் தலைப்பாடு இயம்பும்[7]

என்ற தொல்காப்பிய நூற்பாவழி அறியமுடிகிறது.

ஒலிக்கின்ற வளையல் அணிந்த தலைமகளின் வேறுபாட்டிற்கு உரிய காரணத்தைச் செவிலிக் கேட்டல், தோழி வெறியாட்டு விலக்கிய இடத்து காரணம் கேட்டல், பாங்கி பூத்தரு புணர்ச்சியால் உண்டான புணர்ச்சியைக் கூறி அறத்தொடு நிற்றல், களிறால் ஏற்பட்ட புணர்ச்சியைக் கூறி அறத்தொடு நிற்றல் என்னும் இவ்வைந்தானும் பாங்கி அறத்தொடு நிற்பாள். தலைவியிடம் காணப்படும் வேறுபாட்டைக் கண்ட செவிலி அதுபற்றித் தோழியிடம் வினவுவாள். அதற்குத் தோழி தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நிகழ்ந்த உள்ளப்புணர்ச்சி வெளிப்படுத்துவாள். இப்புணர்ச்சி ஏற்பட்ட காரணத்தைத் தோழி கூறுவாள்.

*புணர்ச்சிக்குரியக் காரணங்கள் மூன்றாவன. அவை,*

1. *பூத்தரு புணர்ச்சி*
2. *அனல்தரு புணர்ச்சி*
3. *களிறுதரு புணர்ச்சி*

*என்பனவாகும்.*

**தொல்காப்பியம் காட்டும் தோழி**

*தொல்காப்பியம் காட்டும் தோழி அன்பும், பண்பும் மிக்கவள். கூர்ந்த மதியும், நாவன்மையும் நிரம்பியவள். பொறுப்புணர்வும், கடமையுணர்வும், உரிமையுணர்வும் உடையவள்; களவுக்கு அடித்தளம் இட்டு கற்புக்குத் துணைநின்று தலைவியின் வாழ்வில் இன்றியமையாத இடம் பெறுபவள்; அறிவே உருவாக வந்து, தன்னலமின்றித் தலைவியின் நலத்தை நாடும் உயர்ந்த குணம் உடையவளாகத் தொல்காப்பியர் படைப்பில் விளக்குகிறார்.*

**வரைவுகடாதல்**

*அறிவு முதிர்ச்சியும் தெளிந்த சிந்தனையும் கொண்ட தோழி, தலைவியை மணம் செய்து கொள்ளுமாறு குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ தலைவனைக் கேட்பதே வரைவு கடாதல் எனப்படும். வரைவு கடாதலில் தோழியின் அறிவு நுட்பத்தினையும் நாவன்மையினையும் ஒரு சேரக் காண முடிகின்றது. தோழி வரைவு கடாவும் முறையினைத் தொல்காப்பியம்,*

ஆற்றது தீமை யறிவுறு கலக்கமும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
ஐயச் செய்கை தாக்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பதும்[8]

பொழுதும் ஆறுங் காப்புமென் றிவற்றின்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
வரைதல் வேட்கைப் பொருள என்ப[9]

எனப் பொருளியலில் கூறுகிறது. உலகியல் உணர்ந்த தோழி தன்னுடைய கூர்த்த மதியினால் தலைவன் உள்ளம் கொள்ளும் வகையில் வரைவை முன்வைக்கிறாள்.

**உடன்போக்குவித்தல்**

நொதுமலர் வரைவு, அலர்ப்பெருக்கம் முதலியவற்றினால் தலைவிக்குத் துயரம் பெருகுகிறது. இந்நிலையில் தமரின் துணையின்றித் தலைவியுடன் சேர்ந்து இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடத்த உடன்போக்கை மேற்கொள்ளுமாறு தலைவனிடம் தோழி வேண்டுகிறாள். தலைவியையும் உடன்போக்கிற்கு உடன்படுத்துகிறாள். தலைவி உடன்பட்டதை அறிந்த தோழி தலைவனை நோக்கி, பல ஓம்படைச் சொற்களைக் கூறுகிறாள். உடன்போக்கின் போது பகரும் மொழிகளுக்கு,

தலைவரும் விழும நிலைஎடுத் துரைப்பினும்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

தாய்நிலை நோக்கித் தலைபெயர்த்துக் கொளினும்[10]

என்ற நூற்பா சான்றாகும். தலைவி மீது கொண்ட பாசம், தாய்மையுணர்வு முதலியன பலவும் உடன்போக்கின் போது தோழி கூறும் மொழிகளாகும்.

**தலைவியை ஆற்றுவித்தல்**

மதி நலம் உடைய தோழி இல்லறக் கடமையை உணர்ந்தவளாகச் செயல்படுகிறாள். தலைவன் தன்னுடைய முயற்சியால் பொருளை ஈட்டவும், பகைமையைத் தணிக்கவும், தலைவியைப் பிரிந்து செல்ல எண்ணும்போது தலைவி வருத்தம் கொள்கிறாள். தவிர்க்க முடியாத நிலையில் அப்பிரிவு நிகழும் போது வருந்தும் தலைவியைத் தோழி ஆற்றுவிக்கிறாள். இதனை,

உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரிய தாகுந் தோழிக்கண் உரனே[11]

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தலைவியை ஆற்றுவிக்கும் முகமாக, தலைவனை எதிர்நின்று சாற்றி அவன் செலவினைத் தவிர்க்குமாறும் வேண்டுகிறாள்.

### தோழி என்ற சொல்லிற்குத் தமிழ் நிகண்டுகள் கூறும் பொருள்

‘தோழி’ என்ற சொல்லிற்குச் சூடாமணி, பிங்கலம், திவாகரம் ஆகிய நிகண்டுகள் கூறும் பொருளைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

| தோழி | சூடாமணி | பிங்கலம் | திவாகரம் |
|---|---|---|---|
| தோழி | சிலதி, சகி, பாங்கி சேடி, இகுளை | சிலதி பாங்கி, சேடி, இணங்கி, துணைவி, இகுளை, சகி | ஓரை, பொய்தல், இகுளை, தோழி, சேடி, பாங்கி[12] |

என்பனவாகும்.

மாந்தர் பற்றிய படைப்பாக்க நிலையில் தலைவன், தலைவி, செவிலி, நற்றாய், தந்தை, பரத்தை, பொதுமக்கள் எனப் பகுக்கலாம். இவற்றில் முதன்மை இடத்தைத் தலைவன், தலைவி, தோழி ஆகியோர் வகிக்கின்றனர். இவற்றுள் தோழியின் பாத்திரம் களவு, கற்பு ஆகிய இருநிலைகளிலும் பிரிக்க இயலாத வண்ணம் படைக்கப்பட்டுள்ளது. இது தோழியின் இன்றியமையாமையை உணர்த்துகிறது.

தலைவனின் வாழ்க்கைத் தொடக்கம் தோழியை நம்பியே உள்ளது. தோழி இல்லையேல் தலைவன் தலைவியரின் வாழ்க்கை ஒழுங்கு பெறாது. களவு அவ்விருவரிடையே தோன்றி மலர்ந்து கற்பாவது வரை தோழியின் அறிவுக் கூர்மைதான் அடிப்படைத் தேவையாகின்றது.

### நற்றிணையில் தோழி கூற்று நிகழ்வுகள்

9 அடி முதல் 12 அடி வரையிலும் நற்றிணைப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. இந்நூலைத் தொகுத்தவர் இன்னார் என்பது தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியார். ‘திணை’ என்ற சொல் அகப்பொருள் கூறும் நூல்களுக்கு அமைந்த பெயராகும். மேலும் ‘திணை’ என்பது ‘ஒழுக்கம்’ என்றும் பெயர் பெறும். திணை என்ற பெயரோடு இந்நூலுக்கு ‘நல்’ என்னும் அடையும் சேர்ந்து

வழங்குகிறது. முதன் முதலில் நூலைத் தொகுத்தவரே 'நற்றிணை' என்று பெயர் இட்டிருக்க வேண்டும்.

நற்றிணையின் அகச்சுவை கெழுமிய பாடல்களில் மக்கள் அறவாழ்வு, மன்னர் கொடை, ஆட்சித் திறம், ஒருமைப்பாடு, பழந்தமிழர் பழக்க வழக்கங்கள், உவமைத் திறம், உள்ளுறை, இறைச்சிப் பொருள்களின் அமைப்பு முதலியவற்றைக் காணலாம்.

நற்றிணையைப் பாடிய புலவர் இருநூற்றெழுபத்து ஐவர். அவர்களில் தாங்கள் பாடிய பாடல்களின் பாவடித் தொடர்களாலே பெயர் பெற்ற புலவர்கள் வண்ணப்புற சுந்தரத்தனார், மலையனார், தனிமகனார், விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் என்பவராவர். நற்றிணையில் இடம்பெறும் தோழி கூற்றுக்களைப் பின்வருமாறு பகுக்கலாம். அவையாவன,

1. தோழி இகழ்ந்து கூறல்
2. தோழியின் திறன்
3. குறியிடம் சுட்டல்
4. குறியிடம் மறுத்தல் அல்லது சேட்படுத்தல்
5. அறத்தொடு நிற்றல்
6. செலவழுங்குவித்தல்
7. வரைவுகடாதல்

என்பனவாகும்.

### தோழி இகழ்ந்து கூறல்

தலைவன் தலைவி கூறிய வாய்மொழிகளிலிருந்து பிறழின் அவர்களைத் தட்டிக் கேட்கும் உரிமை பெற்றிருப்பவள் தோழி. உரிமையோடு இகழ்ந்து பேசித் தலைவனை ஊக்கப்படுத்தித் தலைவியை மணந்து கொள்ளச் செய்ய முனைபவள் - தோழி என்பதை,

சுடர்த்தொடிக் ஆயம் கைதொழுதா அங்கு . . .
. . . . . . அட்டில் ஓலை தெட்டனை நின்மே[13]

என்று மருதத்திணைப் பாடல் தெரிவிக்கிறது. இந்தப் பாடலில் தலைவியை மணம் செய்து கொள்ள வேறொரு தலைவன் பரிசில்களுடன் வந்து நிற்கிறான். அப்போது தலைவனைப் பார்த்து நீ இன்னும் எங்கள் வீட்டுச் சமையல் அறையில் பனையோலையால் வேயப்பட்ட கூறையினைத் தொட்டுக் கொண்டு ஒதுங்கி நிற்கிறாய்! நீ அப்படியே நிற்பாயாக! வேறு என்ன செய்யப் போகிறாய்? என்று தோழி பிறர் வரைவின் மேலிட்டு வந்ததைத் தலைவனிடம் குறிப்பாக உணர்த்தி அவனது இயலாமையை இகழ்ந்து கூறி விரைவில் மணம் முடிக்க வருமாறு வேண்டுகிறாள்.

## தோழியின் திறன்

தோழி, காதல் வயப்பட்ட தலைவியின் உடல் மாற்றத்தையும், செயல் மாற்றத்தையும் கண்டு அவள் மாற்றத்திற்குக் காரணம் என்ன என்பதை ஆய்ந்து கண்டறியும் திறமை உடையவள். தலைவி, தலைவனைச் சந்தித்த முதல் சந்திப்பிலேயே அவளது உடல், மனம் எல்லாம் மாறுபட்டும் வேறுபட்டும் விடுகிறது. இதனைக் கண்ட தோழி தலைவியை ஆராய்தலும் உற்ற துணையாக இருத்தலும் ஆகிய இரு தலையாயக் கடமைகளைச் செய்து முடிப்பாள். இதனை,

> எழாஅ ஆகலின் எழில்நலம் தொலைய
>
> . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
>
> பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே[14]

என்னும் குறிஞ்சித் திணைப்பாடலில் காணமுடிகிறது. முதல் சந்திப்புக்குப் பின்னர் தலைவி, தலைவன் நினைவாகவே இருக்கிறாள். தினைக்கதிர்களைக் கவர்ந்து செல்லும் கிளிகளைக் கூட விரட்ட மறந்து அழுது கொண்டிருந்தாள். அப்போது அவளது நிலையை ஆராய்ந்து கண்ட தோழி அவளைத் தேற்றும் திறன் குறிப்பிடத்தக்கதாகும்.

## குறியிடம் சுட்டல்

தலைமக்களிடையே இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின், முதல்நாள் கண்ட இன்பத்தினால் மறுநாளும் சந்திக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அதனால் தோழி, அவர்கள் இருவரும் சந்திக்கக் குறியிடம் ஒன்றைச்

சுட்டுவாள். இக்குறி இரவுக்குறி, பகற்குறி என இருவகைப்படும். இரவுக் குறியானது இல்லத்தின் ஒரு புறத்தே யாரும் அறியாது வீட்டில் உள்ளோர் பேசுவது கேட்கும் தூரத்தே இருக்கும். இந்த இரவுக் குறியில் தலைவனை வரக் கூறும் உரிமையைப் பெற்றிருந்தாள் தோழி என்பதை,

சிறுகண் யானைப் பெருங்கை ஈர்இனம்
குளவித் தண்கயம் குழையைத் தீண்டி
சோழை வாழை முளைஇ அயலது
வேரல் வேலிச் சிறுகுடி அலற
செங்காற் பலவின் தீம்பழம் மிகையும்
மாமலை நாட காமம் நல்கென
வேண்டுதும் வாழிய எந்தை வேங்கை
வீஉக வரிந்த முன்றில்
கல்கெழு பாக்கத்து - அல்கிளை செலினே[15]

என்ற நற்றிணைப் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

பகற்குறி வந்தால் தலைவனின் வருகையைப் பிறர் அறியக்கூடும் என்பதை உணர்ந்து, பகற்குறி மறுத்து இரவுக்குறியைத் தோழி தேர்ந்தெடுப்பாள்.

## குறியிடம் மறுத்தல் அல்லது சேட்படுத்தல்

இரவுக் குறியிடம் சுட்டிய தோழி அதனை மறுத்துச் சேட்படுத்துவாள் என்பதையும் நற்றிணையில் காணமுடிகிறது. சேட்படுத்தல் என்றால் சேய்மைப்படுத்தல் என்று பொருள். தலைமக்கள் இருவரும் களவுக் காலத்திலே காலத்தைக் கழிக்காமல் கற்பு வாழ்க்கையிலும் ஈடுபட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தலைவனுக்குக் குறிமறுத்துத் தோழி சேட்படுத்துகிறாள். ஏனெனில் தலைமக்களின் காதலைச் சிலர் அறிந்து கொண்டு அம்பல் தோன்றிப் பின் பலர் அறியும் அலராகித் தலைவியை இல்லத்திலே செறித்து வைத்தற்கிடமான சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் தலைவனுக்கு குறிமறுக்கிறாள் தோழி. இதற்கு,

உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்
மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கன்

திரைதரு புணரியின் கழூஉம்

மலிதீரைச் சேர்ப்பனொடு அமைந்த நம்தொடர்பே[16]

என்ற பாடல் சான்றாகும். இப்பாடலில், சேற்றில் ஓடும் குதிரைகளின் கால்கள், கடல் நீரால் கழுவப்படும் என்று கூறப்பெற்றிருப்பது களவொழுக்கத்தில் உள்ள தலைமக்கள் பற்றிய அலர். அவர்களின் திருமணத்தால் தீரும் என்ற உள்ளுறை உவமை மூலமாக அலர் தோன்றியதை உணர்த்திச் சேட்படுத்துவதாகப் பாடியுள்ளார்.

## அறத்தொடு நிற்றல்

ஊர் மக்கள் அலர் பேசுவதால் தலைமக்களின் களவு நிகழ்வை, செவிலி அறிந்து விடுகிறாள். தலைவியின் காதல் பற்றித் தோழியிடம் கேட்கிறாள். தோழி தலைவியின் காதலை செவிலியிடம் வரையறைக்குட்பட்டு எடுத்துரைப்பாள். இதற்கு அறத்தொடு நிற்றல் என்று பெயர். தோழியானவள் தலைவியின் காதலை எவ்வளவு நுட்பமாகத் தெரிவிக்க முடியுமோ அவ்வளவு நுட்பமாகத் தெரிவிப்பாள் என்பது,

குன்றத்து அன்ன குவவுமணல நீந்தி

வந்தனர் பெயர்வரி கொல்தாமே அல்கல்[17]

என்னும் நற்றிணை அடிகள் வாயிலாக அறியமுடிகிறது.

## செலவழுங்குவித்தல்

தலைவன் பொருள் ஈட்டுவதற் பொருட்டுப் பிரிய நினைக்கிறான். இதனைத் தலைவியிடம் கூறத் தயங்கித் தோழியிடம் கூறுகிறான். ஏனெனில், தோழி தலைவியிடம் பக்குவமாக எடுத்துக் கூறி ஆற்றுவிப்பாள் என்பதேயாகும். ஆனால், தோழியும் தலைவியும் ஈருடல் ஓருயிர் என்பதால் தலைவன் பிரிவுணர்த்தியபோது தன்னாலேயே தலைவனது பிரிவைத் தாங்க முடியாமல் இருக்கும்போது தலைவியால் எங்ஙனம் தாங்க இயலும் என்று தலைவனைச் செலவு தவிர்க்க எனக் கூறுதல் செலவு அழுங்குவித்தல் ஆகும். இதற்குச் சான்றாக,

ஆறு இடையிட்ட அளவைக்கு வேறுணர்ந்து

என்றாழ் விடர் அகம் சிலம்ப

புனிதலை மடப்பிடி புலம்பியே குரலே[18]

என்ற பாடலைக் கூறலாம். இப்பாடலில் ஆண்யானை பெண் யானையை வேறொன்றாகக் கருதிக் காலம் தாழ்த்தியதால் மாறுபாடாக உணர்ந்த பெண் யானை துன்பத்தால் பிளிறியது. அதுபோல நீ சென்ற இடத்தில் தங்கிவிட்டால் தலைவி துன்புற்று இறந்து போவாள். மேலும் தலைவனது பிரிவை ஆற்ற இயலாதவள் தலைவி என்கிறாள். தலைவி இல்லையேல் தானும் இல்லை என்பதை உணர்த்தவே தானும் இறந்துபடுவதாகக் கூறுகிறாள்.

**வரைவு கடாதல்**

கடாதல் என்பது தலைமக்களின் களவு அனைவருக்கும் தெரிந்தபிறகு தோழி தலைவனிடம் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளத் தூண்டுதல் வரைவுகடாதல் எனப்படும். சான்றாக,

சேந்தனை சென்மதி செல்லாது நீயே பெருமலை
வாங்கமனைப் பழுறிய நறவு உண்டு
வேங்கை முன்றில் குரவையும் கண்டே[19]

என்னும் பாடல் அடிகளைச் சுட்டலாம். தலைவனிடம் தோழி, தானும் தலைவியும் மலையகத்து வாழும் குறமக்கள் என்றும், தலைவனை அவன் ஊருக்குச் செல்லாது தங்கள் ஊருக்கு வந்து தங்கித் தேன் உண்டு குரவைக் கூத்துக் காண்பாயாக என்கிறாள். மேலும் தலைவியை விரைவில் மணம் முடிக்க வேண்டும் என வற்புறுத்துகிறாள் தோழி.

தலைமக்களின் களவு வாழ்க்கையிலும் கற்பு வாழ்க்கையிலும் அவர்களுக்குத் துணைநின்று உதவி புரிபவளாகச் சங்க இலக்கியங்கள் மட்டுமின்றி இலக்கண நூல்களும் தோழியைச் சித்திரித்துள்ளன. தலைவிக்கு தாய், தந்தையரின் அன்பு ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரையில் மட்டுமே கிடைக்கும். ஆனால் தோழியின் நட்பானது தலைவியின் இயற்கைப் புணர்ச்சி தொடங்கி, இல்வாழ்க்கை வரை வளர்ந்து துணையாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**குறுந்தொகையில் தோழி கூற்றில் அலர்**

இது ‘நல்ல’ குறுந்தொகை எனப் பாராட்டப்படும். தொகை நூல்களிலேயே முதன் முதலாகத் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இந்நூல் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடைய அகவற்பாக்களைக் கொண்டது. அகப்பொருளாலும் அடியளவாலும் நோக்கப்பட்டு, பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளது. பாடிய புலவர்கள் இருநூற்றவைர். பிற்கால இலக்கிய இலக்கண உரையாசிரியர்கள், மற்ற தொகை நூற்பாடல்களைவிடப் குறுந்தொகைப் பாடல்களையே மிகுதியாகச் சான்று காட்டியுள்ளனர். குறுந்தொகையின் முதல் 380 பாட்டுக்களுக்குப் பேராசிரியரும், இறுதி இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை கண்டுள்ளனர்.

குறுந்தொகைப் பாடல்களில் இயற்பெயரும், சிறப்புப் பெயரும் ஒருங்கே அமைந்த புலவர்களாக ஐந்து புலவர்களும், தத்தம் பாடலில் கூறிய உவமை நயத்தால் பெயர் பெற்றவர்களாகப் பதினெண்மரும் காணப்படுகின்றனர். பரணர் பாடும் பாடல்கள் பெரும்பாலானவற்றில் அரிய வரலாற்றுக் குறிப்புகளைக் காணமுடிகிறது.

தோழி, அலர் கண்டு அஞ்சிய தலைவியைத் தேற்றுவதாகப் பின்வரும் பாடலடிகள் சுட்டுகிறது.

நல்கிய நாள்தவச் சிலவே அலரே
வில்கெழு தானை சிச்சியர் பெருமகன்[20]

என்ற பரணரின் பாடல், பொருள் வயின் பிரிந்த தலைவன் வரைவோடு புகுவான், ஊரார் அலரும் பெரிதாயிற்று வருந்தற்க எனத் தோழி தலைவியைத் தேற்றுவதாக அமைந்துள்ளது. பரணரின் மற்றொரு பாடல் அலரின் ஆரவாரத்தைப் போரின் ஆரவாரத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவதாக உள்ளது.

தலைவன் நின்னைத் தழுவிய நாட்கள் சிறியதாயினும் வாட்படையுடைய கொங்கரின் ஆரவாரத்தைப் போல அலர் தூற்றும் ஆரவாரமும் மிகப் பெரிதாக இருக்கிறது என்பதனைத் தோழி,

மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாள்தவச் சிலவே அலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவ லதிகன்

களிறொடு பட்ட ஞான்றை

ஒளிறுவாட் பொங்கர் ஆர்ப்பினும் பெரிதே[21]

என்ற பாடலில் கூறுவதாகப் பரணர் பாடியுள்ளார். மேலும், தோழி தலைவனுக்கு வாயில் மறுத்துக் கூறும் நிலையை,

களிறுகவர் கம்பலை போல

அலரா கின்றது பலர் வாய்ப் பட்டே[22]

என்னும் அடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு பகை வேந்தர்களின் களிறுகளைக் கவர்ந்த போது எழுந்த ஆரவாரம் போல, பலர் வாயினும் பொருந்தி எழுந்து அலர் அம்பலாக நின்றது என அலர், போர்க்கள ஆரவாரத்திற்கு ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது.

வள்ளுவர் திருக்குறளில் அலர் குறித்து விளக்கியுள்ளார். தலைவன் வரைவு நீட்டித்த வழி ஆற்றாளாகியத் தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானாக இருப்பதை அறிந்த தோழி ஊரவர் தூற்றும் அலரும் அன்னை சொல்லும் நோக்கி ஆற்றியிருத்தல் வேண்டும் எனச் சொல்கிறாள். ஊரவரின் அலர் காதல் பயிருக்கு எருவாகவும் அன்னையின் வார்த்தை அப்பயிருக்கு நீராகவும் அமையக் காதல் நோய் படர்கிறது என்கிறாள் தோழி. இதனை,

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்

நீராக நீளுமிந் நோய்[23]

என்ற குறளில் எடுத்துரைத்துள்ளார்.

தலைவியின் காதல் வாழ்விற்கு உறுதுணையாக நிற்கும் தோழி ஊர் அலர்தூற்றும் பழிச்சொல்லைக் குறித்து விரிவாகப் பேசுகின்றாள். அலர் பற்றிய அன்னையின் பேச்சைத் தோழி கூற்றின் வாயிலாக அறிய இயலுகின்றது.

**ஐங்குறுநூறு**

இந்நூல் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் உடைய 500 அகவற்பாக்களால் ஆனது. மற்ற தொகை நூல்களின் பாக்களைக் காட்டிலும் குறைந்த அடிகளைக் கொண்ட நூறு நூறு பாக்களைக் கொண்டது. ஐந்திணை ஒழுக்கங்களைச் சிறப்பிக்கின்றமையால் இது ஐங்குறுநூறு எனப் பெயர் பெற்றது என்பர். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற வரிசையில் இதன் ஐந்து பகுதிகளும் அமைந்துள்ளன. இவற்றைப் பாடியவர்கள் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்னும் ஐவராவார். இதனை,

மருதம் ஓரம்போகி, நெய்தல் அம்மூவன்
கருதுங்குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓதுஐங் குறுநூறு[24]

என்ற பழம்பாடல் தெரிவிக்கின்றது.

இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை. இந்நூலைத் தொகுத்த கூடலூர் கிழார், சேர மன்னன் ஆதன் அவினியின் பெயர் வரும் மருதத்திணையை முதலில் வைத்துத் தொகுத்துள்ளார். தொகுத்தவரும், தொகுப்பித்தவரும் சேரநாட்டினர். ஆதலால் இந்நூல் சேரநாட்டில் தொகுக்கப்பெற்றுப் பாண்டிய நாட்டிற்குக் கொண்டு வரப்பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு நூலும் பத்துப்பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளாக உள்ளன. ஆகையால் ஒவ்வொன்றும் ‘பத்து’ என்று குறிக்கப்பெறுகின்றது. ஐங்குறுநூற்றின் பத்துக்கள் பொருளமைப்பினாலும் சொல்லமைப்பினாலும் பெயர்பெற்று சிறக்கின்றன.

*'வேட்டைப்பத்து', 'களவின்பத்து' முதலியன சொல்லமைப்பினால் பெயர் பெற்றவை. 'பருவங்கண்டு கிழத்தி உரைத்த 'பத்து' தோழி வற்புறுத்த பத்து முதலியன பொருளமைப்பினால் பெயர் பெற்றவை. 129, 130 ஆகிய பாடல்கள் கிடைக்கவில்லை. மேலும் 416, 490 ஆகிய பாடல்களில் சில சீர்கள் காணப்படவில்லை. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது.*

*ஐங்குறுநூற்று நெய்தல் திணையில் தோழி கூற்றாக 34 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை செவிலிக்கு அறத்தொடு நிற்றல், குறிவந்து நீங்கும் தலைவனிடம் வரைவு கடாதல், வரையாது வந்தொழுகும் தலைவனிடம் வரைவு கடாதல், பிரிவிடை ஆற்றாத தலைவியை ஆற்றுவித்தல், தலைவனின் வரைவு மலிவு, தோழி தலைவனுக்கு வாயில் நேர்தல், வாயில் மறுத்தல் என்பனவெல்லாம் தோழியின் செயற்பாட்டினை உணர்த்தும் நிகழ்வுகளாகும்.*

**தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்**

*தோழியின் செயல்திறனில் சிறப்பும், தெளிவும் உடையது அறத்தொடு நிற்றலாகும். தோழி அறத்தொடு நிற்கும் மரபு வகையைப் பற்றித் தொல்காப்பியர்,*

அறத்தொடு நிற்கும் காலத்தோன்றி
அறத்தொடு மரபிலன் தோழி என்ப[25]

*என்றும்,*

எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்
கூறுதல் உசாதல் ஏதீரு தலைப்பாடு
உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ
இவ்வெழு வகைய என்மனார் புலவர்[26]

*என்றும் கூறுகிறார். அறத்தொடு நிற்றல் குறித்து சரளா இராசகோபாலன் தம் நூலில்,*

அறத்தொடு நிலையானது தான் கொண்ட ஒழுக்கத்தின் கண் நிற்றல் - அறம் - ஒழுக்கம். அதாவது களவொழுக்கம் முதிர்ந்து கற்பொழுக்கம் ஒழுகுதல், நிலைபெற எண்ணுதல், கற்பொழுக்கத்தின்கண் நிற்றலை வெளிப்படுத்தவாய் தலைவனையே மணந்து கொள்கிறேன் என்னும் தன் கருத்தைத் தலைவி கூறுதலென்பார்[27]

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,

> களவு நிலைக் காதலில் ஈடுபட்ட தலைவி இனிக் கற்பு நிலைக் காதலில் நிற்க வேண்டிய முறையினை அல்லது ஒழுக்கத்தினைப் பின்பற்றல் 'அறத்தொடு நிற்றல்' என விரித்துப் பொருள் கூறலாம்[28]

என்கிறார் ஈ.கே.பாஸ்கரதாஸ்.

தோழி அறத்தொடு நிற்றற்குரிய இடங்களாக இறையனார் அகப்பொருளுரை,

> காப்புக் கையிக்கு காமம் பெருகினும்
> நொதுமலர் வரையுங் பருவமாயினும்
> வரைவவெதிர் கொள்ளாத மறுப்பினும்
> அவனு றஞ்சுங் காலமாயினும்
> அந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ
> அறத்தொடு நிற்றல் தோழிக்கு உரித்தே[29]

என்கிறது.

தோழி தலைவி தன் உள்ளம் கவர்ந்த தலைவனுடன் நட்புக் கொண்டு கற்புக்கடம் பூண்டாள் என்பதைச் சொல்லி செவிலித்தாய், நற்றாய் முதலியோர்க்குத் தெரியப்படுத்துதல் அறத்தொடு நிற்றலாகும்.

தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தமையன் முதலானவர்களுக்கு அறத்தொடு நிற்பர். ஐங்குறுநூற்றில் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கக் காரணமாக வேற்று வரைவும், தலைவியின் தோற்றத்தில் ஏற்படுகின்ற மாற்றமும் காரணமாகின்றன.

தலைவன் வரைந்து கொள்ள வந்த வழியும், தோழி அறத்தொடு நிற்கும் நிலையில் தலைவியின் பூப்போன்ற கண்ணில் பரவிய பசலை நோயை நீக்கும் தலைவன் தேரில் வருவதைச் செவிலியிடம் கூறி அறத்தொடு நிற்கின்றாள். தலைவனின் தேர் வருவதனை,

நெய்தல் மயக்கி வந்தன்று நின்மகள்

பூப்போல் உண்கண் மரீஇய

நோய்க்கு மருந்தாகிய கொண்கண் தேரே[30]

*என்கிறாள். தலைவன் மணம் செய்து கொள்ளும் பொருட்டுப் பிரிந்து இப்போது திரும்பி வரும் தலைவனுடைய தேரில் கட்டிய மணி, ஒலி, துன்பத்தை மிகுதிப்படுத்தும் பிரிவுத்துயர் நீங்கவும் இன்பம் மிகவும் இடைவிடாது ஒலிக்கின்றது என்பதை,*

துன்புற இசைக்கு மலர்தேர் மணிக்குரலே[31]

*எனக் கூறிச் செவிலியே காண்பாய் என்கிறாள் தோழி.*

*அறத்தொடு நின்ற பின்னரும் வரைவால் பிரிந்த தலைவன் வராமையால் செவிலி ஐயுறுகின்றாள். அவ்வாறு ஐயுற்றவளைத் தோழி, தலைவன் கூறிய சொற்கள் என் மனதில் தோன்றிய வண்ணம் உள்ளது என்பதை,*

என்தோள் துறந்த காலை எவன்கொள்

பன்னாள் வரும் அவள் அளித்த போழ்தே[32]

*எனக் கூறி அவன்மேல் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றாள் தோழி.*

**குறிவந்து நீங்கும் தலைவனிடம் வரைவு கடாதல்**

*தலைவியை மணம் புரியும்படித் தலைவனைத் தோழி வேண்டுதல் வரைவு கடாதல் எனப்படும். களவு வாழ்க்கை வாழும் காதலர்கள் கற்பு வாழ்வைத் தொடங்க வேண்டும் என்ற அகத்திணை நோக்கத்தை நிறைவு செய்யத் தோழி எடுக்கும் முன்னேற்பாடு வரைவு கடாதல் ஆகும். தலைமக்களின் களவு வாழ்வில் ஒரு திருப்பு மையமாகவும், தோழியின் செயல்திறனில் மணிமகுடமாக அமைவது இத்துறையாகும். வரைவு கடாதல் எனும் இத்துறையில்தான் தோழியின் முழு ஆற்றலும் வெளிப்படுகின்றது.*

*அலரினால் பெரும் பாதிப்புக்கு தலைவி உள்ளாவதால் விரைவில் மணம் முடிக்க வேண்டும் எனத் தோழி தலைவனைத் தூண்டுகிறாள். அவள் செயல் வரைவு கடாதலாகத் தோன்றி வெளிப்படுகின்றது. குறிவந்து நீங்கும் தலைவனிடம் தோழி, நண்டுகள் தாக்குவதால் துறையில் வாழும் இறால் மீன்*

பிறழ்வது போலத் தலைவியின் நெற்றியில் பசலை தோன்றியதால் களவு, வாழ்க்கை புற உலகத்தார்க்குப் புலனாகின்றது. அவ்வாறு வெளிப்படும்போது நாணம் மிக்க தலைவி உயிரை விட்டு விடுவாள். ஆகையால் தலைவியின் உயிரைக் காக்க வேண்டும் எனில் வரைவு கடாதலே சிறந்தது என்கிறாள் தோழி. இதனை,

நின்னலது இல்லா இவள் சிறுநுதலே[33]

நன்னுதல் இன்றுமால் செல்தென்[34]

என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

### வரையாது வந்தொழுகும் தலைவனிடம் வரைவு கடாதல்

தலைவன், தலைவியைக் காலம் தாழ்த்தி வரைந்து கொள்ள எண்ணுகிறாள். அதை உணர்ந்த தோழி தலைவியை விரைவாக மணந்து கொண்டு அவளின் அழகினைத் துய்ப்பாயாக என்று கூறுகின்றாள். இதற்கு,

சிறு நனி வரைந்தனை கொண்டுமோ[35]

என்ற பாடலடி சான்றாகும்.

தலைவனிடம் விரைவில் தலைவியை மணம் புரியாவிட்டால் வேற்றுவரைவும் நிகழலாம் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றாள் தோழி. வரையாது வந்தொழுகும் தலைவன் தலைவிக்குப் பரிசாக வளையல்களைக் கொண்டு வருகின்றான். அப்போது தோழி இவை முன்னைய வளையல்போல அன்றி மெலிந்தபோது அணியக்கூடியது என்கிறாள். இவ்வாறு தலைவியின் மெலிவினைத் தோழி,

அறைபுலன் வால்வளை நல்லவோதாமே[36]

எனத் தலைவனிடம் எடுத்துக்கூறி விரைவில் மணந்து கொள்ளும்படி வற்புறுத்துகின்றாள்.

### வரைவு மலிதல்

தலைவன், தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வரும் நற்செய்தியை அறிந்த தோழி தலைவிக்குக் கூறுவது வரைவுமலிவு ஆகும். ஐங்குறுநூற்று நெய்தல் திணைத் தலைவன் வரைந்து கொள்ளும் பொருட்டுத் தோழி வரைவு மலிவதாக இரண்டு பாடல்கள் அமைந்துள்ளன.

*தலைவன் மணம் பேச வந்து சுற்றத்தார்க்குப் பரிசுப் பொருள் நல்கியதை,*

ஒண்டலை அயரும் துறைவன்,

தண்டழை விலையென நல்கினன் நாடே[37]

*என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.*

## தோழி தலைவனுக்கு வாயில் நேர்தல்

*தோழி, தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தினைக் கூறி வாயில் நேர்கின்றாள். தலைவனிடம் தோழி தலைவியின் பெரிய தோள்கள் களவு காலத்தில் உனக்கு இனியவற்றைச் செய்தது என்கிறாள். ஆனால் இப்போது பரத்தையின் உறவினால் தலைவியின் தோள்கள் வெறுப்பானவற்றைச் செய்தது எனத் தோழி கூறுகிறாள். இதற்கு,*

முன்பு செய்த இவள் தடமென் தோளே[38]

*என்ற வரி சான்றாக உள்ளது.*

## வாயில் மறுத்தல்

*தோழி தலைவியின் மன உணர்வினையும் தலைவனின் புறத்தொழுக்க ஈடுபாட்டையும் மனதில் கொண்டு வாயில் மறுத்தல் என்ற நிகழ்வினைச் செய்கின்றாள். தோழி வாயில் மறுக்கும் காரணங்களாகப் பின்வரும் கூற்று எடுத்துரைக்கின்றது.*

> வாயில் மறுக்க காரணங்களாக தலைவன் வரவில்லை, பரத்தை ஊடி வாயில் மறுத்தால் வேறு வழியின்றி வருகின்றான் என அறிந்தமை, ஒரே காலத்தில் பல பரத்தையுடன் கொள்ளும் காமப் பெருக்கம், நாடும் புதிய பரத்தையின் நலம் துய்க்கும் புதுமை நாட்டம், தலைவன் கொண்டதாகத் தோழி உணர்ந்தமை, அஞ்சாது கொள்ளும் தன் புறத்தொழுக்கால் தலைவனே அவரைப் பெரிதும் பரப்பி நின்றமை வாயில் மறுக்க காரணமாகின்றன[39]

*என்பர். பரத்தையைத் தலைவன் புணர்ந்தவுடன் தலைவியைத் தேடி வருகின்றான். தலைவன் பரத்தையிடம் கூடி இன்பம் துய்த்தப் பின் ஊடல் கொண்டு தலைவியைத் தேடி வருகின்றான் என்பதை அறிந்த தோழி, அவனுக்கு வாயில் மறுக்கின்றாள்.* இதற்கு,

தண்ணம் துறைவன் கண்டிகும்

அம்மா மேனி எம் தோழியது துயரே[40]

*என்ற பாடலடி சான்றாகும். அழகான மாந்தளிர் போன்ற மேனியையும் எம் தலைவியின் துயரினைக் கண்டு அதைப் போக்க வருக எனவும், எம்மைவிட அவள் ஆற்றாமை மிக உடையவள் எனக் கூறித் தோழி வாயில் மறுப்பது சுட்டப்பெறுகிறது.*

### தோழி தலைவியின் இல்வாழ்வு கண்டு மகிழ்தல்

*தோழி களவு, வாழ்வில் எத்தகைய துன்பம் உண்டாகுமோ என அஞ்சிய அச்சம் நீங்கத் திருமணம் நிகழ்த்தப் பெற்றது. பின்னர் தலைமகளைப் பள்ளியிடத்துச் செலுத்தும் தோழி,*

வீ இனிது கமழும் துறைவனை

நீ யினிது முயங்குமதி, காதலோயே[41]

*எனக் கூறி மகிழ்கின்றாள். இது தோழியின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது.*

### பரத்தை

*ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ள எட்டுப் பாடல்களும் சிறப்பில்லாத பரத்தை கூற்று நிகழ்த்துவதால் இது கிழவதற்கு உரைத்த பத்து எனப்படுகிறது. இது தோழி கூறியது எனவும் கூறப்படுகின்றது.*

*பரத்தை என்பவர்கள் தலைவனுடன் வாழ்வினைப் பகிர்ந்து வாழ்பவர்கள் ஆவர். தொல்காப்பியத்தில் பரத்தை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. தலைவன், தலைவி இருவர் தம் கற்பு வாழ்க்கையில் இடையிடையே ஏற்படும் ஊடற் பூசல்களைத் தீர்த்து வைக்கும் வாயில்களுள் ஒரு பிரிவனராகப் பரத்தையர் காணப்படுகின்றனர்.*

*பரத்தை தலைவியைப் பற்றி நன்கு அறிந்தவளாகவே படைக்கப்பட்டுள்ளாள். தலைவி தளிமுள்ளி மலரை அணிந்து கடலில் நீராடினாள். அப்போது தலைவியின் அணிகலன் மணலில் விழுந்து விட்டதால்*

அவள் வெள்ளாங்குருகினை வினவினாள். இதனைக் கண்ட பரத்தைத் தலைவியின் அறியாமையினை எண்ணி நகைக்கிறாள் என்பது,

ஒள்ளிழை உணர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவுவோளே[42]

என்ற பாடலடிகளால் உணர்த்தப்பெறுகிறது. இவற்றிலிருந்து தலைவியின் ஒவ்வொரு செயலையும் நன்கு அறிந்தவளாகவே பரத்தையைப் பார்க்க முடிகிறது. தலைவி கடற்கரை மணலில் வண்டல் பாவை செய்து விளையாடியபோது அலை அடித்துச் சென்றதைத் தோழி,

வண்டல் பாவை வௌவயின்
ஒண்டொடி அளை இக்கடல் தூர்ப்போமே[43]

என்ற அடிகளில் வெளிப்படுத்துகின்றாள்.

தோழி அறத்தொடு நிற்கும் நிலை காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்பச் செயல்படும் அறிவு நிலையைச் சுட்டுகின்றது. தலைவன் தலைவியின் காதல் வாழ்வில் பெருந்துணை புரிந்து சேர்த்து வைக்கும் தோழியின் செயல்திறன் அளப்பரியதாகிறது. தலைவன் தலைவியரை ஒன்றுபடுத்தி வாழவைக்கும் தோழியின் படைப்பு அகப்பாடல்களில் சிறந்து விளங்குகின்றது.

**அலர் தரும் பயன்**

அலர் குறித்துப் பின்வரும் கருத்து குறிப்பிடத்தக்கதாகும்.

> அலரைத் தவிர்க்க முடியாது. ஊர்வாயை மூட முடியாது என்ற எண்ணத்தால், காதலர்களுக்குத் திருமண நினைவு பெருகுகின்றது. மணப்பது உறுதி என்ற துணிவாலும், இனிமேல் களவொழுக்கம் கிடைக்கப்பெறாது என்ற நகையாலும் சில ஆடவர்களுக்குக் களவின்பத்தை நீடிக்கும் மனப்பாங்கு வருதலுண்டு[44]

என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகின்றார்.

அலர் உண்டாயின் தலைவியை மணம் முடிக்கலாம் எனத் தலைவன் எண்ணுகிறான். ஆனால் பரத்தை மணமுடிக்கும் பொருட்டு அலர் உண்டாகத் தலைவனை தன்னோடு நீராட அழைக்கின்றாள். மேலும் தலைவியோடு செல்லற்க என்றும் கூறுகின்றாள். இங்குப் பரத்தையின் கூற்று தலைவனைத்

*திருமணம் செய்ய விரும்பும் எண்ணத்தை மனத்தில் வைத்துப் பேசுவதாக அமைந்துள்ளது.*

பேரூர் அலரெழ நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புன லாடுது
மெம்மோடு சென்மோ செல்லனின் மனையே[45]

*எனும் அடிகள் மேற்கண்ட செய்தியினை வெளிப்படுத்துகின்றன.*

**அகநானூற்றில் தோழி கூற்று நிகழ்வுகள்**

*அகநானூறு எட்டுத்தொகை இலக்கியங்களுள் ஒன்று. அகம் பற்றி மிகுதியான செய்திகளைக் கொண்டதால் அக இலக்கியமாயிற்று. அகநானூற்றைத் தொகுத்தவர் உப்பிரிக்குடிக்கிழார் மகன் உருத்திரசன்மனார். தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. இறையனார் களவியலுரை ஆசிரியரால் 'நெடுந்தொகை நானூறு' எனச் சுட்டப்படும் இத்தொகை நூல் 13 அடிச் சிற்றெல்லையும் 31 அடிப் பேரெல்லையும் பெற்று விளங்குகின்றது. 'அகம்' என்னும் பெயரைப் பெற்ற நூல் இது ஒன்றேயாகும். இந்நூலை 'அகம்' அகப்பாட்டு என்ற பெயர்களாலும் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.*

*இந்நூற்பாயிரம் இதனை 'நெடுந்தொகை' என்றே அழைக்கின்றது. முன்னினர் தொகுத்த நல்நெடுந்தொகை என்பது பாயிரத்தொடர். இப்பாயிரத்தை இயற்றியவர் இடையளநாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்வதரையன் ஆவார். பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.*

*அகநானூற்றின் தொகுப்புமுறை ஒரு தனிச்சிறப்புடன் விளங்குகிறது. முதல் நூற்றிருபது (1-120) பாடல்களைக் கொண்ட பகுதி 'களிற்றியானை நிரை' எனப் பொருளால் பெயர் பெறுகின்றது. அடுத்த நூற்றெண்பது (121-300) பாடல்களைக் கொண்ட பகுதி மணிமிடைபவளம் எனச் செய்யுளும் பொருளும் ஒப்புமையால் பெயர் பெறுகின்றது. இறுதி நூறு (301-400) பாடல்களைக் கொண்ட பகுதி 'நித்திலக்கோவை' எனச் செய்யுளுடன் பெயர் பெறுகின்றது.*

*இந்நூலில் ஐந்திணை பற்றிய பாடல்களின் வைப்புமுறை திணைகளை எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. 1, 3, 5, 7 என ஒற்றை எண் பெற்று வரும் பாடல்களைப் பாலைத்திணை எனவும், 2, 8, 12, 18 என வரும் எண்களைக் கொண்ட பாடல்களைக் குறிஞ்சித்திணை எனவும், 4, 14, 24, 34 என நான்கில் முடியும் பாடல்களை முல்லைத்திணை எனவும், 6, 16, 26 என ஆறில் முடியும் பாடல்களை மருதத்திணை எனவும் 10, 20, 30 எனப் பத்தில் முடியும் பாடல்களை நெய்தல் திணை எனவும் பாகுபாடு செய்துள்ளனர். இதனை,*

பாலை வியம் எல்லாம்; பத்தாம் பனிநெய்தல்
நாலு நளி முல்லை; நாடுங்கால் - மேலையோர்
தேரும் இரண்டு, எட்டு இவை குறிஞ்சி; செந்தமிழின்
ஆறு மருதம் - அகம்[46]

*என்ற பழம்பாடல் புலப்படுத்துகின்றது.*

*இத்தகைய தொகுப்புமுறை குறுந்தொகையிலோ நற்றிணையிலோ இல்லை. எனவே, அவை இரண்டிற்கும் பின்னரே செம்மைப்படுத்திருக்க வேண்டும். அகநானூற்றுப் பாடல்களில் பாலைத்திணை பற்றியவை 200 பாடல்கள், குறிஞ்சித்திணை பற்றியவை 80 பாடல்கள், முல்லைத்திணை பற்றியவை 40 பாடல்கள், மருதத்திணை பற்றியவை 40 பாடல்கள், நெய்தல் திணைப் பற்றியவை 40 பாடல்கள்.*

**அகநானூற்றில் தோழிக்கூற்றுப் பாடல்களில் நிகழ்வுகள்**

1. *கணவனைப் பிரிந்தவர் நிலை*
2. *அன்பு செய்தல்*
3. *தற்காத்தல்*
4. *விருந்தோம்பல்*

*என்ற நான்கு நிலைகள் இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது.*

**1. கணவனைப் பிரிந்தவர் நிலை**

*இல்லறத்தில் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்தலே சிறப்பு. ஒருவருக்கொருவர் ஒத்துப் போகாத*

*நிலையில் பிரிவுத் துன்பம் ஏற்படுகிறது. சங்கத் தலைவன் பரத்தையின் பொருட்டு தலைவியைப் பிரிகிறான். அச்சூழலில் தலைவியின் நிலையை அகநானூறு எடுத்துக்காட்டுகிறது. தோழி தலைவிக்கு அறிவுறுத்துபவளாய்த் தலைவன் மனம் திருந்தி வரும்வழி அதனை ஏற்றுக் கொள்வதே அறிவுடைமையாகும் என்கிறாள். அதனை விடுத்து அவனை வெறுத்தால் குழந்தையும், தலைவியும் வறுமை உற்று வாழும் நிலை ஏற்படும் என்று கூறுகிறாள். சங்ககாலத்தில் பெண் ஒரு சார்பு உயிராகக் காட்டப்பெற்றுள்ளாள். இதனை வெளிப்படுத்தும் பாடல்,*

அது புலந்து உறைதல் வல்லியோரே
செய்யோள் நீங்க சில்பதம் கொழித்துத்
தாம்அட்டு உண்டு தமியர் ஆகி
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுநர் ஆகுதல் அறிந்தும்
அறியார் அம்ம அ்.து உடலுமோரே[47]

*என்பதாகும். இப்பாடலில் தோழி தலைவன் பரத்தமையை எண்ணி ஊடிப் பிரிந்து வாழும் வன்மை உடைய மகளிர் தம்மிடமிருந்து திருமகள் நீங்க, சிறிதளவு அரிசியைப் புடைத்துத் தாமே, சமைத்து உண்டு, கணவரைப் பிரிந்து வருந்துகின்றனர் என்கிறாள். தேன்போல் இனிய சொற்களைப் பேசும் தம் மக்கள், பால் இல்லாது இறங்கியக் கொங்கைகளைச் சுவைத்துப் பார்க்க வறியவராய் இருப்பதை நன்றாக அறிந்திருந்தும் தலைவனின் பரத்தமை குறித்து மனம் மாறுபடுபவர்கள் அறிவு அற்றவர்களே ஆவர். தலைவனுடன் ஊடுவதால் பயனில்லை என்று தோழி தலைவிக்கு அறிவுரை கூறுவதை மேற்கண்ட பாடலில் காணமுடிகிறது.*

*இவ்வாறாக அகநானூறு தலைவனைப் பிரிந்த தலைவியின் இல்லற நிகழ்வுகளை விவரித்துள்ளது.*

**அன்பு செய்தல்**

*மானுட வாழ்விற்கு அடிப்படையாக அமைய வேண்டியது அன்பாகும். அதனால் தான்,*

அன்பே சிவம்[48]

*என்றார் திருமூலர்.*

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது[49]

என்கிறார் வள்ளுவர்.

அகநானூறு ஆணும் பெண்ணும் ஒருவர் மேல் ஒருவர் கொள்கின்ற காதலையும் அதன்வழி அவர்கள் பெறுகின்ற இன்பத்தையும் பிரிவு ஏற்படுகின்றபொழுது அவர்கள் அடைகின்ற துன்பத்தினையும் எடுத்து இயம்புகின்றது. தலைவனும் தலைவியும் ஒருவர் மேல் ஒருவர் மாறாக் காதல் கொண்டாலும் தாங்களாகவே விரும்பிப் பிரிகின்ற அளவிற்கு அவர்களது பொறுப்புணர்ச்சியும் விளக்கப்பட்டுள்ளது.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே தோழியே தூதாகச் செல்கின்றாள். இருவர் நலனிலும் அக்கறை கொண்ட அவளது கூற்றுகள் படிப்போர்க்கு இன்பம் பயப்பனவாக அமைந்துள்ளன.

இல்லற வாழ்வில் நுழையும்வரை தமக்கான கடமைகள் மிகக் குறைவாகும். இல்வாழ்வில் நமக்குக் கிடைக்கும் அனுபவங்கள் நம்மை மிகுந்த பொறுப்புள்ளவர்களாக மாற்றுகின்றது. எத்தகைய இழப்பையும் ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவத்தையும் கொடுக்கின்றது என்பதை,

கணையிடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளி
குறுநெடுந் துணை மறிபுடையாடப்
புன்கண் கொண்ட திரிமருப் பிரலை
மேய்பதம் மறுத்த சிறுமையோடு நோய்கூர்ந்து
நெய்தலம் படுவில் சின்னீர் உண்ணாது
எஃகுறு மாந்தரின் இணைந்துகாண் படுக்கும்[50]

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. இப்பாடலில் ஆண் மானும், பெண்மானும் தம் குட்டிகளுடன் இரை தேடிச் செல்கையில் கொலை வில்லை ஏந்திய வேட்டுவன் தொடுத்த அம்பிற்கு பெண் மான் இலக்காகி இறந்துபடுகிறது. அதன் இறப்பைப் பொறுக்கமாட்டாத ஆண் மான் புல்லாகிய உணவை உண்ணவுமில்லை. நீர் பருகவும் இல்லை. செயல்படவும் இல்லை. ஏனென்றால் தன் உடலில் அம்பு பாய்ந்தது போன்ற துயர உணர்வு பெற்று

அந்த இடத்திலேயே சோர்ந்து கிடக்கின்றது எனினும் கையற்றுப்போன அந்தமான் தான் காக்க வேண்டிய குட்டிகள் இருப்பதை நினைத்து உயிர்விட வில்லை என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இளங்கீரனாரின் இப்பாடலில் ஆண் மான் பெண் மானிடத்தும் தன் குட்டிகளிடத்தும் கொண்ட அன்பும், பொறுப்பும் சிந்திக்க வைக்கின்றது.

**தற்காத்தல்**

ஒவ்வொரு உயிர்க்கும் அமைந்துள்ள இயற்கை உணர்வு தற்காப்பு. துன்பம் நேரும்போது தன்னைத் தானே அதிலிருந்து காத்துக் கொள்வதே தற்காப்பு. இல்லறம் சிறக்கத் தலைவன், தலைவியே ஆதாரம். இவ்விருவரும் இல்லறம் என்பது இன்பம் துய்ப்பது மட்டுமன்று என்பதை உணர்ந்து இருவரில் ஒருவருக்குத் துன்பம் நேர்கையில் மற்றவர் முயன்று அத்துன்பத்தைக் களைந்து இருவரும் ஒன்றி இருத்தல் அவசியமாகிறது.

பெருங்குன்றூர் கிழார் இயற்றிய கீழ்வரும் பாடலில் ஒரு நிகழ்ச்சி எடுத்துரைக்கப்படுகின்றது. அப்பாடல்,

கழைநரல் சிலம்பின் ஆங்கன் வழையொடு
வாழை ஓங்கிய தாழ்கண் அகம்பில்
படுகடுங் களிற்றின் வருத்தம் சொலிய
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்[51]

என்பதாகும். இப்பாடலில், இரைதேடி ஆண் யானையும், பெண் யானையும் செல்கின்றன. வாழையும் புன்னையும் தழைத்திருந்த பகுதிக்குச் சென்றபோது நீர்நிறைந்த ஒரு குழிக்குள் ஆண்யானை தவறி விழுந்து விடுகிறது. உடனே செய்வதறியாது திகைத்த பெண் யானை ஒரு பெரிய மரத்தை முறித்து குழிக்குள் போடுகிறது. அதன் வழியே கரையேறி ஆண் யானை தப்பிப் பிழைத்தது என்ற கருத்து முன்வைக்கப்பெறுகிறது.

இப்பாடலின்வழித் தலைவனுக்குத் துன்பம் நேர்கையில், தலைவி மனத்துணிவோடு செயல்பட்டு அத்துன்பத்திலிருந்து மீட்க வேண்டும் என்னும் வாழ்க்கைநெறி உணர்த்தப்படுகின்றது.

**விருந்தோம்பல் பண்பு**

பண்டைத் தமிழருக்கே உரிய தனிப்பண்பு விருந்தோம்பல். தன் வீட்டிற்கு வரும் விருந்தினரை, இன்முகம் காட்டி வரவேற்று இன்சொல் கூறித் தம்மிடம் உள்ளதை ஆர்வமுடன் பகுத்துக் கொடுத்து மகிழ்ந்தவர்கள் சங்கத் தமிழர்கள்.

விருந்தோம்பலைத் தலைவிக்கு உரிய சிறந்த கடமைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோர் மாண்புகள்[52]

என்கிறார். தலைவியைப் பிரிந்த தலைவன், தலைவியைக் காண வேண்டும் என்ற ஆவலுடன் தேரில் அமர்ந்தான். தேர் விரைவாகச் சென்று சிறிது நேரத்தில் வீட்டை அடைந்தது. தேர்ப்பாகன் தேர் செலுத்திய விதத்தைப் பாராட்டி தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்து கொடுத்ததை,

வான் வழங்கு இயற்கை வளிபூட்டி னையோ
மான் உரு ஆகநின் மனம்பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ என தன்
வரைமருள் மார்பின் களிப்பனன் முயங்கி
மனைக் கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்துஞர் பெற்றளன் திருந்திழை யோளே[53]

என்ற பாடல் கூறுகிறது. தலைவனையும், தேர்ப்பாகனையும் பார்த்து மகிழ்ச்சியுற்ற தலைவி, வீட்டின் உள்ளே அழைத்து விருந்து கொடுத்தாள். விருந்து உபசரித்ததை எண்ணி இருவரும் வியப்பில் ஆழ்ந்தனர். இதன் மூலம் சங்க காலத்தில் இருந்தே விருந்தோம்பல் பண்பு தலைவிக்கே உரியதாக அமைந்து உள்ளது. தமிழருக்கே உரிய பண்பான தனித்துவம் வாய்ந்த விருந்தோம்பல் பண்பு குறித்து இப்பாட்டில் விளக்கப்பட்டுள்ளது.

**கலித்தொகையில் தோழி கூற்று நிகழ்வுகள்**

இத்தொகைநூல் கடவுள் வாழ்த்தொடு 150 கலிபாக்களைக் கொண்டுள்ளது. பரிபாடல் போன்று இதுவும் பாவின் பெயரைப் பெற்ற தொகைநூலாகும்.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியோ பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர்[54]

என்று தொல்காப்பியர் கூறுவதற்கு ஏற்ப அகப்பொருட் செய்திகளைப் பாடுவதற்குத் தகுதிபெற்ற பாவாக இது அமைந்துள்ளது. மேலும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே அகப்பொருள் பாடுவதற்குக் கலியும் பரிபாடலும் முதன்மைப் பெற்றிருந்தன என்பதும் புலனாகிறது. 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி. கல்வி வலார் கண்ட கலி' என்று சிறப்பிக்கப்படும் இந்நூலை உரையாசிரியர்கள் இசைப்பாட்டு என்கின்றனர். இந்நூல் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார். இந்நூல் ஐந்து திணைகளைக் கொண்டது. தொகுத்தவர் நல்லந்துவனார். கலித்தொகையை முதன்முதலாகப் பதிப்பித்த சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களும் 'நல்லந்துவனார் கலித்தொகை' என்றே குறித்துள்ளார்.

பாலைத்திணை பற்றிய 35 பாடல்களைப் பாலை பாடிய பெருங்கடுங்கோவும், குறிஞ்சித்திணை பற்றிய 29 பாடல்களைக் கபிலரும், மருதத்திணை பற்றிய 35 பாடல்களை மருதனிளநாகனாரும், முல்லைத்திணை பற்றிய 17 பாடல்களைச் சோழன் நல்லுருத்திரனும் பாடியுள்ளனர். கடவுள் வாழ்த்தைப் பாடியவர் இவரே. ஐந்திணைகளுக்கும் உரிய உரிப்பொருள்களை ஒழுகலாறுகளை இந்நூல் செவ்வனே எடுத்தியம்புகிறது. திணைகளுக்குரிய உரிப்பொருள்களையும் இந்நூல் கோக்கப்பட்ட முறையை,

போக்கெல்லாம் பாலை; புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமலி ஊடல் அணிமருதம்; நோக்கொன்றி
இல்லிருத்தல் முல்லை; இரங்கிய போக் கோர்நெய்தல்
புல்லுங் கலிமுறை கோப்பு[55]

என்ற பழம்பாடல் புலப்படுத்துகிறது.

### தோழி கூற்றில் உள்ளுறை

தோழி கூற்றில் உள்ளுறையை அமைத்துப் புலவர்கள் பாடியுள்ளனர். அதற்கு,

மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்து ஆடும் அன்னம்தன
அணிமிகு சேவலை அகல்அடை மறைத்தென
கதுமெனக் காணாது, கலங்கி, அம்மடப்பெடை
மதிநிழல் நீருள் கண்டு, அது என உவந்துஓடி
துன்னத் தன் எதிர் வரூஉம் துணைகண்டு மிக
பல் மலரிடைப் புஉம் பழனம் சேர் ஊர நாணி[56]

என்ற பாடலைச் சுட்டலாம். இப்பாடலில், மணியினது நிறம் போன்ற நீரினையும், மலர்களையும் உடைய பொய்கையிலே, வேலோடு விளையாடும் அன்னப்பெடை, தனது அழகுமிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரை இலைமறைத்து விடவே அதனைக் காணாமல் கலங்குகிறது. அறியாமையுடைய அப்பெடை முழுமதியின் நிழலை நீரினுள் கண்டது. உடனே அதைச் சேவல் எனக் கருதி மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்றது. அந்நிலையிலே தன்னை சேருவதற்கு எதிரே வருகின்ற வேலைக் கண்டு மிகவும் நாணம் கொண்டு பல மலர்கள் செறிந்துள்ள இடத்தில் போய் ஒளிந்து கொண்டது. இத்தகைய நிலம் சூழ்ந்த தலைவனே என்று உள்ளுறையாகக் கூறப்பட்டுள்ளது.

பொய்கையில் சேவலோடு அன்னப்பறவை சேர்ந்து உறையும். அவ்வாறு உறையும்போது சேவலை தாமரை இலை மறைத்ததை நினைத்து அதனைக் காணாமல் அன்னம் வருந்துவதைப் போன்று பரத்தைச் சேரியிலே தலைவன் காணாமல் போக இன்னொரு பரத்தை கலங்குகிறாள் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

### தலைவியின் அன்பே சிறந்ததென்று விளக்கும் தோழி

தலைவன், தலைவி, தோழி, பாங்கன், நற்றாய், செவிலித்தாய், ஊரார் என வரும் அகத்திணை மாந்தர்களுள் தலைவன், தலைவியை அடுத்து இன்றியமையாத இடம்பெறுபவள் தோழி. தோழி அக இலக்கிய முக்கோண வடிவத்தின் மேல் முனையாக விளங்குபவள். அவள் தலைவன், தலைவி என்ற

இரு கரைகளை இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறாள் எனத் தோழியின் சிறப்பை கவிஞர் கூறுவர். நம்மிடம் வந்து இரப்போர்க்கு இல்லை என்று கூறுவது இழுக்கு, ஈஎன இரத்தல் இழிந்தன்று, ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று என்பது தமிழர் கொள்கையாகும்.

எனவே, இரந்தோர்க்கு ஈதல் வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் பொருள் தேடச் செல்லும் தலைவனிடம், அந்த உயர்ந்த எண்ணத்தைவிட உயர்ந்தது ஒன்றுள்ளது. அது தலைவி அவன் மீது கொண்ட அன்பு என்பதாகும் என்பதைத் தோழி,

இரந்தோர்க் கொன்றீயாமை இழினை மலைஇறந்து
செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
இல்லென இரந்தார்க்கு ஒன்று ஈயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
இடன் இன்றி இரந்தார்க்கு ஒன்று ஈயாமை இழியெனக்
கடன் இறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ[57]

என்ற பாடலின் மூலம் உணர்த்துகிறாள். இப்பாடலில் தோழி தலைவன் தேடிச் செல்லும் பொருளைவிடத் தலைவியின் அன்பே சாலச்சிறந்தது என்கிறாள். தலைவனைத் தலைவியுடன் இருக்கச் செய்யும் தோழியின் அறிவாற்றல் சிறப்பிற்குரியது. பிறர்க்குக் கொடுத்து வாழப் பொருள் தேவை. எனினும் தலைவியின் அன்புக்கு இணையாகாது அப்பொருட்செல்வம் என்பதனைத் தலைவனின் உள்ளத்தில் படுமாறு தோழி உணர்த்துகிறாள்.

தலைவனின் ஆண்மைக்கு இழுக்கு வராமலும் தலைவியின் பெண்மையின் சிறப்புக்கும் களங்கம் வராமலும் அவர்களின் இல்லற வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்கு நன்முறையில் தீர்வு காண்கிறாள் தோழி.

### தோழிக் கூற்றில் அம்பலும் அலரும்

அம்பல், அலர் என்னும் இவ்விரண்டு சொற்களும் வேறுபட்ட பொருள் அடிப்படையில் வழங்கப்படும். ‘அம்பல்’ என்பது மலரின் மொட்டைக் குறிக்கும். ‘அலர்’ என்பது அம்மொட்டு மலர்ந்து மணம் வீசுவதாகும்.

இதற்குப் பலர் அறியப் பழி தூற்றுதல் எனப் பொருள்படும். அம்பல் என்பதற்கு அரும்பல் என்றும் பொருள் கூறுவர். தலைவியின் முகக்குறிப்பிலிருந்து அவர்தம் களவுக் காதலைச் சிலர் மட்டும் அறிவது அம்பல். இன்னானை இன்னாள் விரும்புகின்றாள் என்று களவுக்காதலைப் பலரும் அறிய வெளிப்படையாகத் தூற்றிப் பேசுதல் அலர்.

மலரின் பல்வேறு நிலைகளான 'அரும்பு, போது, மலர், அலர், வீ' என்பனவற்றில் தொல்காப்பியரும் சங்கப்புலவர் பெருமக்களும் 'போது, மலர்' ஆகிய இரண்டு நிலைகளையும் சேர்த்துக் கொண்டு அவற்றிற்கு இணையான அம்பல், அலர் என்ற இரு சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். இச்சொற்களை இவர்கள் நேரடியாகப் பயன்படுத்தாமல் அம்பல் என்பது போது என்ற நிலை, அலர் என்பது மலர் மலர்ந்து மணம் பரவும் நிலை என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளனர். எனினும்,

அம்பலும் அலரும் களவு[58]

என்பர்.

தொல்காப்பியர் அம்பல் என்பதற்கு,

அம்பலும் அலருங் களவுவெளிப்படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவனாரும்[59]

என்றும், அலர் என்பதற்கு,

களவுங் கற்பும் அலர்வரை வின்றே[60]
அலரில் தோன்றும் காமத்து மிகுதி[61]

என்றும் இலக்கணம் வகுத்துள்ளார். மேலும்,

> அம்பல் என்பது சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்லுவதாயிற்று. இன்னதின் கண்ணது என்பது அறியலாகாது என்பது. அலர் என்பது இன்னாலோடு இன்னாளிடை இதுபோலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது. அம்பல் என்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க மலரும் என நிற்பது. அலர் என்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமையென வேற்றுமை சொல்லப்பட்டதாம்[62]

என்ற கூற்று இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

**தொகுப்புரை**

- ✷ அகத்திணை மாந்தர்களில் தலைவன் தலைவியை அடுத்துச் சிறப்பிடம் பெறுபவள் தோழி ஆவாள். தோழி இளமையில் இருந்தே தலைமகட்குச் சிறந்தநட்பினளாகத் திகழ்பவள்.
- ✷ ஒலிக்கின்ற வளையில் அணிந்த தலைமகளின் வேற்றுமைக்கு உரிய காரணத்தைச் செவிலி கேட்டல், தோழி வெறி விலக்கிய இடத்துக் காரணம் கேட்டல், பாங்கி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல், களிறால் ஏற்பட்ட புணர்ச்சியைக் கூறி அறத்தொடு நிற்றல் என்னும் இவ்வைந்தாலும் பாங்கி அறத்தொடு நிற்கும் நிலை சுட்டப்பட்டுள்ளது.
- ✷ தொல்காப்பியம் காட்டும் தோழி அன்பும், பண்பும் மிக்கவள், நாவன்மையும் நிரம்பியவள் என்பது கூறப்பெற்றுள்ளது.
- ✷ அறிவு முதிர்ச்சியும் தெளிந்த சிந்தனையும் கொண்ட தோழி தலைவியை மணம் செய்து கொள்ளுமாறு வெளிப்படையாகவே தலைவனைக் கேட்பதே வரைவு கடாதல் எனப்படும்.
- ✷ தோழி என்ற சொல்லிற்குத் தமிழ் நிகண்டுகள் கூறும் பொருள்கள் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.
- ✷ ஒவ்வொரு உயிர்க்கும் அமைந்துள்ள இயற்கை உணர்வு தற்காப்பு ஆகும். விருந்தோம்பலைத் தலைவிக்கு உரிய சிறந்த கடமைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.
- ✷ பொய்கையில் சேவலோடு அன்னப்பறவை சேர்ந்து வரும். அவ்வாறு வரும்போது சேவலை தாமரை இலை மறைந்ததை நினைத்து அதனைக் காணாமல் அன்னம் வருந்துவதைப் போன்று பரத்தைச் சேரியிலே தலைவன் காணாமல் போக இன்னொரு பரத்தை கலங்குவது கூறப்பட்டுள்ளது. தலைவன் அன்பே சிறந்ததென்று தோழி விளக்குகிறாள்.
- ✷ தலைவன் நின்னைத் தழுவிய நாட்கள் சிறிதாயினும் வாட்படையுடைய கொங்கரின் ஆரவாரத்தைப் போல அலர் தூற்றும் ஆரவாரமும் மிகப்பெரிதாக இருக்கிறது என்பதனை தோழி வாயிலாக அறியமுடிகிறது.
- ✷ தலைவன் வரைவோடு வந்த வழியும், அறத்தொடு நிற்கும் தலைவியின் பூப்போன்ற கண்ணில் பரவிய பசலை நோய் நீக்கும் தலைவன் நேரில்

வருவதைக் கூறிச் செவிலி அறத்தொடு நிற்கிறாள் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

* குறிவந்து நீங்கும் தலைவனிடம் தோழி, அவ்வாறு புலனானால் நாணம் மிக்க தலைவி உயிரைவிட்டு விடுவாள் என்பதை கூறியும் தலைவியைக் காக்க வேண்டும் என்று கூறுகிறாள்.
* வரையாது வந்தொழுகும் தலைவனிடம் வரைவு கடாதல் நிகழ்வு சுட்டிக்காட்டப்படும் விதம் எடுத்துக் கூறப்பெற்றுள்ளது. தலைவன், தலைவியைத் திருமணம் செய்து கொள்ளுவதற்கு வருகின்ற நற்செய்தியை அறிந்த தோழி தலைவிக்குக் கூறி அறிவித்தது வரைவுமலிவு ஆகும்.
* தோழி, தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தினைக் கூறி வாயில் நேர்கிறாள். தோழி தலைவியின் மன உணர்வினையும் தலைவனின் புறத்தொழுக்க ஈடுபாட்டையும் மனதில் கொண்டு வாயில் மறுத்தல் என்ற முடிவினை எடுக்கின்றாள். அலர் உண்டாயின் தலைவியொடு மணம் முடிக்கலாம் என்று அலரின் பயன் எடுத்துக்காட்டப்படுகின்றன.

## சான்றெண் குறிப்புகள்

1. தொல்காப்பியர், **தொல்காப்பியம் (பொருள்.) உரை வளம்,** ப.58.
2. மேலது., ப.50.
3. மேலது., ப.150.
4. புலவர் குழந்தை, **குறுந்தொகையில் தோழி ஓர் ஆய்வு,** ப.9.
5. தொல்காப்பியர், **தொல்காப்பியம் (பொருள்.),** நூ.502.
6. **குறள்.**785.
7. நம்பியாண்டார் நம்பி, **நம்பியகப்பொருள்,** நூ.177.
8. தொல்காப்பியர், **தொல்காப்பியம், பொருள்.,** நூ.29:38.
9. மேலது., நூ.210.
10. மேலது., நூ.42.
11. மேலது., நூ.239.
12. **தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை,** ப.285.
13. **நற்றிணை,** பா.300.
14. மேலது., பா.13.
15. மேலது., பா.332.
16. மேலது., பா.63:1-10.
17. மேலது., பா.207.
18. மேலது., பா.318.
19. மேலது., பா.276.
20. **குறுந்தொகை,** பா.328.
21. மேலது., பா.393.
22. மேலது., பா.96.
23. குறள்.1147.
24. அ.ஜெயம், சந்திரலேகா வைத்தியநாதன், **தமிழ் இலக்கிய வரலாறு,** ப.21.
25. தொல்காப்பியர், **தொல்காப்பியம், பொருள்.,** ப.32.
26. மேலது., ப.33.
27. சரளா இராசகோபாலன், **சங்க இலக்கியத்தில் தோழி,** ப.65.
28. ஈ.கே.பாஸ்கரதாஸ், **அகப்பாடல்களில் தோழி,** ப.61.

29. **இறையனார் அகப்பொருளுரை**, ப.40.

30. **ஐங்குறுநூறு**, பா.101.

31. மேலது., பா.102.

32. மேலது., பா.109.

33. மேலது., பா.179.

34. மேலது., பா.194.

35. மேலது., பா.180.

36. மேலது., பா.193.

37. மேலது., பா.147.

38. மேலது., பா.143.

39. ஆ.இராமகிருஷ்ணன், **அகத்திணை மாந்தர்கள் ஓர் ஆய்வு**, ப.98.

40. **ஐங்குறுநூறு**, பா.58.

41. மேலது., பா.148.

42. மேலது., பா.122.

43. மேலது., பா.124.

44. வ.சுப.மாணிக்கம், **தமிழ்க்காதல்**, ப.418.

45. **ஐங்குறுநூறு**, பா.70.

46. சி.அ.இலட்சுமணன், **தமிழ் இலக்கிய வரலாறு**, ப.39.

47. **அகநானூறு**, பா.316:11-17.

48. திருமூலர், **திருமந்திரம்**, பா.12.

49. **குறள்**.45.

50. **அகநானூறு**, பா.371:3-8.

51. மேலது., பா.8:8-11.

52. தொல்காப்பியர், **தொல்காப்பியம், கற்பியல்**, நூ.11.

53. **அகநானூறு**, பா.384:9-14.

54. தொல்காப்பியர், **தொல்காப்பியம், அகத்திணையியல்**, நூ.53.

55. அ.ஜெயம், சந்திரலேகா வைத்தியநாதன், **தமிழ் இலக்கிய வரலாறு**, ப.29.

56. **கலித்தொகை**, பா.70.

57. மேலது., பாலைக்கலி, பா.2:11-16.

58. **இறையனார் களவியல்**, ப.22.

*59.* தொல்காப்பியர், **தொல்காப்பியம், பொருள்.,** *நூ.137.*

*60.* மேலது., *நூ.160.*

*61.* மேலது., *நூ.161.*

*62.* ந.சுப்புரெட்டியார், **தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை,** *பக்.125-126.*

# இயல் 4

# புற இலக்கியங்களில் நிகழ்வுகள்

தம் அனுபவத்தைப் பாடுவன எல்லாம் புறப்பாட்டு. வீரம் என்பது மனம் மட்டும் உணரும் சுவை அனுபவம். ஆனால் தனி நின்ற ஒருவனைப் பத்துபேர் தாக்கும்போது, பின் வாங்காமல் அவர்களைத் தடுத்து நிறுத்தி பின் அவர்களை ஓடவும் செய்கிறான். அவனுடைய வீரம் புறக்காட்சியாகிறது. இந்தப் புறநிலையில் இவன் இத்தகையவன் என்பதை விளக்கிவிடலாம். அவ்வாறு விளக்குவது வீரத்தை உணர இன்றியமையாததாகும். ஆனால், ஒருவன் ஒருத்தியைத் தன் உயிராகக் கொண்டு அன்பு கொள்கிறான் என்பதைப் புறநிலை கொண்டு விளக்க முடியாது. அன்பு காட்டுவது போல ஏமாற்றுதலும் உண்டு. அவ்வாறில்லாமல் உணர்வது உள்ளத்தால் மட்டுமேயாகும். பாத்திரப் பேச்சில் அந்த உள்ளம் வெளியாவதைக் காணலாம். ஏமாற்றமின்மையை உள்ளத்தாலேயே உய்த்தறிய வேண்டும். இத்தகைய காதலை வெளிப்படுத்துவது அகப்பாடல்களாகும். ஒருவனின் வீரம், கொடை, ஈகைப் பண்பு, வெற்றிச் சிறப்பு முதலியவற்றைப் புறத்தார் அறியும் வண்ணம் வெளிப்படுத்துவது புறப்பாடல்களாகும். அப்பாடல்களில் இடம்பெறும் நிகழ்வுகளை இவ்வியல் ஆராய்கிறது.

### புற இலக்கியக் கோட்பாடுகள்

பண்டைத் தமிழ் அறிஞர்கள் இலக்கியங்களை அகம், புறம் என இருவகையாகப் பிரித்தனர். அகத்துறை இலக்கியம் காதலைப் பற்றியும், புறத்துறை இலக்கியம் காதல் தொடர்பாக அகத்திணை ஏழனுக்கேற்பப் புறத்திணையும் ஏழு என்பதைப் புறத்திணை இயலில் கூறத் தொடங்கிய முதல் நூற்பாவில் தொல்காப்பியர்,

அகத்திணை மருங்கின் அரிதல்ப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளம்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே[1]

என்று கூறியுள்ளார். சங்கப் பாடல்களில் ‘ஒழுக்கம்’ என்ற பொருளில் வழங்கும் திணை அகத்திணை, புறத்திணை என இருவகையாக இலங்கும். அகத்திணை ஏழு என்றும் அதற்கேற்பப் புறத்திணை ஏழு என்றும் இலக்கணம் செய்துள்ளார். அவையாவன,

| **அகம்** | - | **புறம்** |
|---|---|---|
| கைக்கிளை | - | பாடாண் |
| முல்லை | - | வஞ்சி |
| குறிஞ்சி | - | வெட்சி |
| பாலை | - | வாகை |
| மருதம் | - | உழிஞை |
| நெய்தல் | - | தும்பை |
| பெருந்திணை | - | காஞ்சி |

புறத்திணை இலக்கியங்களில் நடப்பியல் போக்கும் உண்மை நிகழ்ச்சிகளும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. அந்த உண்மை நிகழ்ச்சிகளை சுவைபடக் கூறுவதில் மட்டும் கற்பனைகள் இடம்பெறுகின்றன.

சங்க புற இலக்கியங்களில் அரசு, அறம், வீர உணர்வுகள், அனுபவங்கள், குறிக்கோள் சுட்டல், தியாக நெஞ்சம், நட்பு நவிலல் முதலான இன்னபிற வகைகளிலும் சங்கப்புற இலக்கியங்கள் சிறந்து விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கனவாகும்.

**புறநானூற்றில் நிகழ்வுகள்**

புறநானூறு போன்று புறப்பொருள் பற்றிய 400 அகவற்பாக்களால் ஆனது. எனவே பொருளாலும், அளவாலும் புறநானூறு என்று பெயர்பெற்றது. இது புறம், புறப்பாட்டு என்று வழங்கப்பெறும். இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை. இது நான்கடி முதல் நாற்பது அடிவரையுள்ள பாடல்களைக் கொண்டுள்ளன. இதனை 160 புலவர்கள் பாடியுள்ளனர். ஔவை. துரைசாமிப்பிள்ளை அவர்கள் நூல் முழுமைக்கும் உரை எழுதி வெளியிட்டுள்ளார்.

அக்கால மக்களின் அரசியல், சமுதாயநிலை, கல்வி, நாகரிகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, ஆடை அணிகலன், பழக்கவழக்கங்கள் வாணிபம் ஆகிய பலவற்றையும் அறிய உதவும் ஓர் இலக்கியப் பேழையாக இந்நூல் திகழ்கின்றது. இந்நூல் பெண்கள் மங்கல அணி அணிதல், இறந்தவரைத் தாழியில் கவித்தல், நடுகல் நடல், நட்டகல்லைச் சுற்றி மயிற்பீழி அணிவித்து. மது வார்த்தல், கணவனை இழந்த பெண்கள் அணிகளைக் களைந்து கைம்மை நோற்றல் முதலியவற்றை புறநானூறு எடுத்தியம்புகிறது.

## புற ஒழுக்கம்

ஒழுக்கம் யாரிடமெல்லாம் நிலையாக நிலைத்து நிற்கின்றதோ, அவர்கள் இருக்கும் நிலமும் நல்லநிலமாக இருக்கும் என்பர். நிலனே நீ நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும், மேடாக இருந்தாலும் எங்கே ஆண்மக்கள் நல்ல ஒழுக்கமுடையவர்களாக உள்ளனரோ அங்கே நீயும் நல்ல நிலமாகக் காட்சி அளிக்கின்றாய். எனவே உனக்கென்று தனியாக ஓர் இயல்பில்லை என்பார் ஔவையார். அப்பாடல்,

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிகையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழி நிலனே[2]

என்பதாகும். தண்டமிழ் மக்கள் கண்ட நூல்களுள் சங்கமேறிச் சிறப்புப்பெற்றவை பற்பல. அவற்றுள் இறந்தனபோக இன்றளவும் நின்று புகழொளி வீசுவனச் சில. அவற்றுள் பாட்டும், தொகையும் ஆகிய மேற்கணக்கு நூல்களுக்கு அடுத்த நிலையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைக் குறிப்பிடலாம். இந்நூல் தொகுப்பில் புறம் பற்றிய நூல்களே அதிகம். இந்நூல்களும் மானுட ஒழுக்கத்தைக்கூறி, அது நிலைபெறுவதற்கு உறுதுணையாக இருந்திருக்கின்றன.

பெருந்தன்மை, மென்மை, ஒழுக்கம் ஆகிய மூன்றும் உயர்வு பொருந்திய குடியில் பிறந்தவர்க்கு அல்லது மிக்க செல்வம் உண்டான காலத்தும் பிறர்க்கு உண்டாகாது என்பதைப் பின்வரும் நாலடியார் பாடல் உணர்த்துகிறது.

சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது வான்றோயும்
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு[3]

*இப்பாடலின் மூலம் நல்லொழுக்கங்கள் உயர்க்குடிப் பிறந்தார்க்கு இயல்பாகவே அமையும் என்பது பெறப்படுகிறது. இவ்வாறே உயர்குடியில் பிறந்தவரே பெரியோரைக் கண்டால் பணிவு கொள்ளும் உயர்வினைப் பெற்றவர்களாவர் என்பதை,*

இருக்கை யெழலும் எதிர்செலவும் ஏணை
விடுப்ப ஒழிதலோ டின்ன - குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாகக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் நன்று[4]

*என்ற பாடல் சுட்டுகிறது. இப்பாடல், பெரியாரைக் கண்டால் தன் இருக்கையை விட்டு எழுதலும் சற்று எதிர் சென்று வரவேற்றலும், அவர் பிரியும்போது சற்றுப்பின் சென்று அவர் விடை தர பிரிந்து வருதலாகிய இத்தகைய பணிவானக் குணங்களை உயர்குடியில் பிறந்தார் கைவிடாத நல்லொழுக்கமாகக் கொண்டு ஒழுகுவர் என்கிறது.*

*ஐம்பொறிகளின் ஆசைகளை ஒழித்த கடவுளின் ஒழுக்கநெறியில் தவறாது நிற்பவரே நீண்ட காலம் நலமுடன் வாழ்வர் என்பார் வள்ளுவர். அவர்,*

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்[5]

*என்கிறார். மேலும், நல்லொழுக்க நெறியில் நின்று உலகப் பற்றுகளை ஒழித்தவர்களின் பெருமைகளையே சிறந்த நூல்கள் எடுத்தியம்பும் என்பதை,*

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு[6]

*என்ற குறளில் சுட்டுகிறார்.*

**ஒழுக்க வழு**

சமுதாயத்தில் உள்ள எல்லா மக்களுமே ஒழுக்கத்தின் உறைவிடமாக இருத்தல் இயலாது. ஒருசிலர் ஒழுக்கத்திலிருந்து பிறழ்ந்தும் காணப்படுகின்றனர். இது மன்னர்களிடத்தும் காணப்படும் என்பது,

சான்றாவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்

தாங்காது மன்னோ பொறை[7]

என்ற குறள் எடுத்துக்காட்டுகிறது. போர் ஒழுக்கம் படைத்த தமிழரிடையே போர் நிகழ்வது இயற்கையாகும். இப்போர்கள் எழுந்தமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் அளவுகடந்த மண்ணாசையால் போர் நிகழ்வதும் உண்டு. அக்காலத்தில் மூவேந்தரும் ஓயாது தம்முள் தாமும், பிற குறுநில மன்னர்களுடனும் போர் நிகழ்த்தியுள்ளனர். இதனை நோக்கின் தம்படைவலி தம் செங்கோல், தன் ஆணை முதலியவற்றை யாவரும் ஒப்புக்கொண்டு, தம் ஆட்சிக்கு அனைவரும் உட்பட்டிருக்கத் தாம் அரசருக்கு அரசராகத் திகழ வேண்டும் என்ற உட்கிடக்கையே அக்கால அரசர்களின் போர்கள் பலவற்றிற்குக் காரணமாக இருந்ததுள்ளது என்பதை அறியமுடிகிறது. வெண்ணிப் பறந்தலை, கருவூர், கூடல், வாகைப்பறந்தலை, நெய்தலங்கானம், தலையாலங்கானம், கானப்போர் முதலிய இடங்களில் இக்காரணம் பற்றியே போர்கள் நடைபெற்றன எனலாம்.

மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்

பாறர வந்த பழவிறர் தாயம்[8]

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் சான்று கூறுகின்றன. அரச உரிமையானது எப்பொழுதும் அமைதியாகவே நடந்தது என்று உறுதியாகக் கூறவியலாது. எனினும் சேர, பாண்டிய அரச பரம்பரையில் அரசுரிமை பற்றி சிக்கல் எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

பிறன் ஒருவனுடைய மகளிரைத் தனக்கு மணம் செய்து கொடுக்குமாறு அரசன் ஒருவனை வற்புறுத்தியபோதும் அம்மகளிரைத் தரமறுத்த போதும் போர் நிகழ்ந்துள்ளன. அரசன் தன் மகளை மணம் செய்து கொடுக்க மறுத்தபோது மணம் செய்விக்கக் கேட்ட அரசன் மிகுந்த சினமுற்று போருக்குப் போகும் முன் நீராடினான். நாளை அவ்வழகியைத் தான் மணமுடிக்காது போயின் அம்பு பொருந்திய தன் உடலை மண்ணில் வீழ்த்திப் பேரின்ப உலகம்

*புகுவேன் என்று வஞ்சினம் கூறி போருக்குச் சென்ற நிகழ்ச்சியைப் புறப்பாடல் ஒன்று எடுத்துரைக்கின்றது. அப்பாடல்,*

வேந்துகுறை யுறவுங் கொடாஅன்...
மறலிய சினத்தன்
பூக்கோ ளெனவேஎய்க் கயம்புக்கனனே
விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியற்
சுணங்கணி வனமுலை யவளொடு நாளை
மணம்புகு வைக லாகுதலொன்றோ
ஆரமருழக்கிய மறங்கிளர் முன்பின்
நீளிலை யெ.்.க மறுத்த உடம்பொடு
வாரா உலகம் புகுத லொன்றெனப்
படை தொட் டனனே[9]

*என்பதாகும். இவ்வாறு மண்ணுக்கும், அரசுரிமைக்கும், பெண்ணுக்கும் பண்டைய மன்னர்கள் போர் நிகழ்த்தியுள்ளனர். எனினும், போர் ஒழுக்கத்தை முறையாகக் கடைபிடித்தனர் என்பது புறநானூற்றுப் பாடல்வழி பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. நல்லொழுக்கம் குறித்து,*

> நல்லொழுக்கப் பண்புகள் ஒருவனிடம் இயல்பாகவே அமைந்த பண்புகள் அல்ல. ஒவ்வொருவரும் விரும்பியேற்று அமைத்துக் கொண்டவைகளே நல்லொழுக்கம் என அறநூல் சுட்டுகிறது. ஒருவன் ஒழுக்கத்தின்மூலம் அவன் அறிவு இத்தகையது என்பதை தெளிவுபடுத்துகின்றோம்[10]

*என்று இரா.ஜெகதீசன் என்பார் ஒழுக்கத்தின் சிறப்பினை எடுத்தியம்புகிறார்.*

**<u>உற்றுழி உதவல்</u>**

*அனைவரும் கல்விகற்க வேண்டும். கற்பிப்பவர்க்கு அவ்வப்போது உதவிகள் செய்தும், பொருள் கொடுத்தும் கற்க வேண்டும் என்ற பண்பு பண்டைத் தமிழரிடத்தே காணப்படுகிறது.*

*இதனை ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் பாடிய பாடல் ஒன்றால் அறியலாம். தன்னுடைய ஆசிரியர்க்கு ஓர் இடையூறு வந்துற்றுழி அதனைத் தீர்ப்பதற்காக ஓடிவந்து உதவியும், மிகுந்த பொருளைக் கொடுத்தும் அவரை வழிபட்டும், நீங்காது கற்றல் ஒருவர்க்கு அழகாகும்.*

ஏனெனில் ஒரு வயிற்றில் பிறந்தோருள்ளும் கல்வியின் சிறப்பால் பெற்ற தாயும் மனம் வேறுபடுவாள். ஒரு குடியில் பிறந்த பலருள்ளும் மூத்தோனை வருக என்று சொல்லாமல் அவருள் அறிவுடையோன் எவனோ அவன் சென்ற வழியிலே அரசனும் செல்வான். கற்றவன் கீழ்க்குலத்தவன் என்றாலும் அவனிடத்திலே குடிகொண்டுள்ள கல்வியின் பொருட்டு மேற்குலத்தவனும் அவனிடம் சென்று வழிபடுவான் என்று குறிப்பிட்டுள்ளார். அக்கருத்தை வெளிப்படுத்தும் பாடல்,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தலும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
மறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலான்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மேற்பா லொருவனும் அவன்கட்படுமே[11]

என்பதாகும்.

**மனித மாண்புகள்**

மனித மாண்புதான் மனிதனை தெய்வநிலைக்கு உயர்த்தும் அல்லது தெய்வமாக்கும் என்பதை வள்ளுவர்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்[12]

என்று கூறியுள்ளார். நேயம் மற்றும் நேசம் என்ற சொற்களுக்கு ‘அன்பு’ என்று தமிழ்ப்பேரகராதி பொருள் தருகின்றது. அன்பு என்பதற்குத் தொடர்புடையார் மாட்டும் உண்டாகும் பற்று, நேசம், கருணை என்று விளக்கம் தருகிறது.

**வீரம்**

பங்காளிச் சண்டை என்பதும் சகோதரயுத்தம் என்பதும் இந்த நூற்றாண்டில் மட்டுமல்ல 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பும் நடந்துள்ளன. இதற்குப் பண்டைகால சோழராட்சி நற்சான்றாக உள்ளது. உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன் நெடுங்கிள்ளி என்ற சோழன். இவனது ஆட்சிக்கு உட்பட்ட அவ்வூரை இதே சோழ மரபில் பிறந்த நலங்கிள்ளி முற்றுகையிட்டிருந்தான். நெடுங்கிள்ளியோ நலங்கிள்ளியை எதிர்த்துப் போர்

செய்யாமல், பலம் வாய்ந்த நெடிய கதவுகளைக் கொண்ட தனது கோட்டையின் ஒரு பகுதியில் ஒதுங்கி இருந்து விட்டான். இதனால் ஆட்சி நிர்வாகம் சீர்குலைந்தது. நெடுங்கிள்ளி ஆட்சி செய்த பகுதியில் குழந்தைகள் பாலின்றி அழுதனர். போர் நிகழுமா இல்லையா என்பது உறுதியில்லாமல் வீரர்கள் பாசறையிலேயே இருந்தனர்.

வீட்டில் இருந்த வீரர்களின் மனைவியரோ கூந்தலில் பூ முடிக்காமல் வெறுந்தலையோடு இருந்தனர். அழகாகக் கட்டப்பட்ட வீடுகளில் இருந்த மக்களிடமிருந்து துன்பக் குரல் கேட்கிறது. ஆண்யானைகள், பெண் யானைகளின் கூட்டத்தோடு நீர்நிலையில் குளித்து மகிழவில்லை. யானைகளுக்கு நெய் இட்டுச் சமைக்கப்பட்ட சோற்றுக்கவளம் கிடைக்கப்பெறவில்லை. அதனால் வருத்தமடைந்து யானைகள் துதிக்கையால் வெப்பத்துடன் மூச்சுவிட்டபடி அவை நிலத்தில் புரளுகின்றன. அந்த யானைகள் பிளிறுவது இடியோசைபோல் கேட்கிறது.

இவற்றை எதையும் பொருட்படுத்தாமல் கோட்டைக்குள் இனிமையாய் இருக்கும் நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் காண்கிறார். நெடுங்கிள்ளியைப் பார்த்து அவர் வலிமைமிக்க குதிரைகளை ஏராளமாகக் கொண்ட மன்னனே! அவனும் உனது மரபினன் தான். நீ அறத்துக்கு மதிப்பளிப்பாயானால் இந்த ஊரும் உன்னுடையது தானே! போரெல்லாம் எதற்கு எனக் கூறிக் கோட்டைக் கதவைத் திறந்து வரவேற்பு கொடு அல்லது வீரம்தான் முக்கியம் என்றால் போரில் சந்திப்பதற்காகக் கோட்டையின் நெடுங்கதவைத் திறந்திடு. இப்படி இரண்டில் ஒன்றைச் செய்யாமல் அறவழியும் இல்லாமல், மறவழியும் இல்லாமல் நீண்டிருக்கும் கோட்டை மதிலின் ஒரு புறத்தே ஒடுங்கிக் கிடப்பதைக் கண்டால் வெட்கப்பட வேண்டியுள்ளது என்று புலவர் கோவூர்கிழார் கூறுகிறார். இதனை விளக்கும் பாடல்,

அறவை யாயின் நினைதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்

நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்

நாணுத் தகவுடைத்து இதுகாணுங்கலே[13]

*என்பதாகும். இப்பாடல் உரிமை கோருதல் என்று வந்து விட்டால் ஒன்று போரிட்டு வெற்றியால் அதை நிலைநாட்ட வேண்டும். இயலாது போனால் சரணடைந்து உரிமையை விட்டுக்கொடுத்து விடவேண்டும். இரண்டும் இயலாத நிலையில் ஒரு மன்னன் இருப்பது அவனுக்கு மட்டுமன்று மக்களுக்கும் நல்லதன்று என்பதைச் சொல்லுகிறது. சரணடைதலை அறம் என்கிறார் புலவர். இது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. வள்ளுவர்,*

விழுப்புண் படாத நாள்எல்லாம் வழுக்கினுள்

வைக்கும்தன் நாளை எடுத்து[14]

*என்று ஒரு வீரன் விழுப்புண் படாத நாட்களைத் தன் வாழ்நாளில் பயன்படாத நாட்களாகக் கருதுவான் என்கிறார்.*

**போர் நெறிகள்**

*எல்லாரொடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்கும் பெருமித உணர்வே வீரமென்றும், இவ்வுணர்வு கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய நாற்பண்பு பற்றி பிறக்குமென்றும் கூறுவர். யானை மதம்போலும் உடல் தினவும், பிறரைப் பகைக்கும் உளச்செருக்கும் மனித இனத்தின் தொடக்க காலத்தில் வீரமாக மதிக்கப்பட்டன.*

குழுக்குழுவாக வாழ்கின்ற வாய்ப்புடைய இடங்களெல்லாம் போர் என்பது தவிர்க்க முடியாததாகவே இருந்திருக்கிறது[15]

*என்பர். இப்போர்க் குணம்மிக்க ஆடவரை வீரர், மறவர், மன்னர், பொருநர், மழவர் எனப் பல சொற்களால் குறிப்பதன்றியும், புலி, சிங்கம், சிறுத்தை ஆகியவற்றோடும் வெள்ளம், தீ ஆகியவற்றோடும் உவமித்தும் உருவகித்தும் புலவர் பாடியுள்ளனர்.*

செற்றன் றாயினும் செயிர்த்தன் றாயினும்

உற்றன் றாயினு முய்வின்று மாதோ

பாடுநர் போலக் கைதொழு தேத்தி

இரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்

மண்டமர்க் கடக்குந்த தானை

திண்டேர் வளவற் கொண்ட கூற்றே[16]

எனப் பெருவீரனின் உயிரிழப்பும் அவனது கொடைப் பண்பினால் நேர்ந்ததாகப் புறநானூற்றுப் புலவர் பாடுகிறார். முகத்திலும் மார்பிலும் விழுப்புண்படுகின்ற அருஞ்செய் ஆடவர், உயர்ந்தோர் உலகத்தைச் சேர்வர் என்றும், அரசக்குடிப் பிறந்தார் இத்தகு இறப்படைதலே நேரியதென்றும், களச்சாவு பெறாது மூத்தும், நோயுற்றும் விளிந்தாரை வாள்போழ்ந்தடக்குதல் வேண்டுமென்றும் தெளிவுப்படுத்துகின்றன. இவ்வாறே செர்மானிய இலக்கியத்திலும் வீரப்பண்பு போற்றப்பட்டுள்ளது. இதற்கு,

> இத்தகைய வீரர் கன்னியர் ஏவல் செய்யும் 'வல்லரல்லா' எனப்படும் இன்ப உலகை எய்தும் பேறு பெறுவரென்று செர்மானிய இலக்கியம் கூறுவதை அறிஞர் காட்டுவர்[17]

என்ற கூற்று சான்றாகும். குடும்ப உறுப்பினர்கள் போரில் பலர் மாய்ந்த பின்னர் ஒரு மகனைப் பெற்ற இல்லாள் தன் மகனைப் போர்க்கனுப்பும் காட்சியையும் வளர்த்து ஆளாக்கிய சமூகத்துக்குக் கடமை புரியும் வகையில் ஆடவன் களம் சென்று களிறெறிந்து பெயர்ந்து வரவேண்டிய தேவையினையும் புறப்பாடல்கள் நன்கெடுத்துக் காட்டுகின்றன.

## போர்க்குரிய காரணங்கள்

> போர்க்குரிய காரணங்களாகப் பற்பல உரைக்கப் பெறுகின்றன. இயல்பான மறப்பண்பு, மண்ணாசை, இடஞ்சிறிதென்னும் ஊக்க மேலீடு, அரசர்க்கரசராகத் திகழும் உட்கோள், அரசுரிமை யார்க்கெனும் சிக்கல் மானக்குறைவு உண்டாக மற்றையோர் நடத்தல், மகள் மறுத்தல் ஆகிய காரணங்களால் போர் தோன்றக் கூடுமென்பர்[18]

அறிஞர் வித்தியானந்தன். பழைய இந்து சமூகத்தில் போர்கள் நடைபெற்றமைக்குரிய உளவியற் காரணங்களாக 1. சாதி மனநிலை, 2.போர்த்தொழிலின்றி வாளா அமைய இயலாத மனநிலை, 3.வீரச்செயல்களில் நாட்டம், 4. உடல் வலிமை, 5. தற்காப்பு எண்ணம், 6.வெகுளியும் பொறாமையும், 7. பிறர்மீது ஆளுகை செலுத்தும் நோக்கம் ஆகியவற்றை ஆய்வறிஞர் குறிக்கின்றனர். கோ.கேசவன் 'மண்ணும் மனித உறவுகளும்' என்னும் தம் நூலில்,

> அரசுகள் தோன்றுவதற்கு முன்னர், இனக்குழு மக்களிடையே செல்வப் பொருளாக விளங்கிய ஆனிரைகளைக் கவரும் மாடுபிடிச் சண்டையே

> அரசுகளும், அதிகாரமும் தோன்றிய பின்னர் 'பிரதேச' உணர்வின் அடிப்படையில் நாடுபிடிச் சண்டையாகியிருக்க வேண்டுமென்று கூறுவதும் எண்ணுவதற்குரியது[19]

என்கிறார். வீரம் நிறைந்த எச்சமூகத்திலும் தலைவன் ஒப்பிலா வலிமையும், ஆற்றலும் உடையவனாகக் கூறப்படுகிறான். சான்றாக,

> களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர்எதிர்ந்து
> எம்முளும் உளன்ஒரு பொருநன்; வைகல்
> எண்டேர் செய்யுந் தச்சன்
> திங்கள் வலித்த காலன் னோனே[20]

எனத் தலைவனின் பேராற்றல் புறப்பாடலில் உரைக்கப்பெறுகிறது. உடல் வலிமையும், பேராற்றலும் வீர உணர்வுமே தலைமைக்கும் போற்றுதலுக்கும் புகழுக்கும் உரியவனாயின என்பது உணர்த்தப்பெறுகிறது. இத்தகையச் சமூக அமைப்பில் வீர உணர்வே எல்லாவற்றுக்கும் உரிய தகுதியாகக் கருதப்பட்டிருக்கிறது. களிறுதரு புணர்ச்சி பெறும் காதலனும், கொல்லேற்றுக் கோடஞ்சாதவனையே கணவனாக வரிக்கும் ஆயமகளும், காளை அடக்கும் வீரனைத் திருமணம் செய்து கொண்ட நிகழ்வினை முல்லைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

> யானை தாக்கினும் அரவுமேற் செலினம்
> நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்[21]

என்று பெரும்பாணாற்றுப்படை வீரனின் திறத்தைச் சுட்டுகிறது. மேலும், அஞ்சாச் சூல்மகளும், புலிசேர்ந்து போகிய கல்லளை என வீரனைப் பெற்ற தன் வயிற்றைக் குறிக்கும் தாயும், மார்புப் புண்ணேற்று மடிந்த மகனைக் கண்டு ஈன்ற ஞான்றினும் பெரிதுவக்கும் முதியவளும், களத்தில் புண்கிழித்து முடியும் மற மைந்தரும் பண்டைச் சமூகத்தின் வீரமிக்கவர்களாகப் போற்றப் பெற்றுள்ளனர்.

சமூகத் தலைவர்களான மன்னர்கள் இயல்பாகவே வீரக் குடிப்பிறப்பினராவர் தன்கீழ்படைஞராகிய மன்னரும், மறவரும் தங்கள் தலைவனெனப் போற்ற விழையும் உள்ளத் துடிப்பினர். நிமிர்ந்த கோலுக்கு அஞ்சாது எதிர்மண்டுகின்றவரும், போரெனிற் புகலும், மறவருமாகிய வீரர், போர்க்களத்திலேயே பொழுதைக் கழிக்கவும், களத்திலேயே வீரச்சாவு

பெறவும் நினைப்புடையவராக இருந்திருக்கின்றனர். தலைவன் போர்க்கருவிகளின் வடிவில் சிறுவர்க்கு ஐம்படைத்தாலி அணிவிக்கும் வீரக் குடியினர்க்கும், புலிப்பல்லால் ஆன தாலியைச் சிறுவர்க்கு அணிவிக்கும் மறக்குடியினர்க்கு வேந்தராக அமைந்தவன். தன் வாழ்நாளில் பல போர்களைப் புரியவும் அதன் வழியே தலைமைப் புகழ் பெறவும் விரும்பி வாழ்ந்திருக்கின்றனர். அம்மன்னர்களின் இயல்பினை,

சிறப்புடை மரபிற்பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம்போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே[22]

என்று புலவர் குறிப்பிடுகின்றார். இப்பாடல், நகரின்கண் இருத்தலை விட்டு பாசறையிருப்பை விரும்பும் வேந்தனைக் காட்டுகிறது. தலைமை பூண்ட மன்னரும், போர்த் தொழிற்குரிய மறவரும், இவரன்றி மறப்பெண்டிரும் போற்றப்பட்டுள்ளனர். வீரப்பண்பு ஏனைப் பண்புகள் யாவற்றிலும் தலைச்சிறந்ததாகக் கருதப்பட்ட நிலையைச் சங்க இலக்கியம் காட்டுகின்றது. இதனைப் புலவர்கள் மேலும் புகழ்ந்து பாடியிருக்கின்றனர் என்பதை இவ்விலக்கியங்களின் சில பாடல்கள் தெளிவுறக் காட்டுகின்றன என்பதற்கு,

வாடுக விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே[23]

என்றும்,

கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னாடு ஒள்ளெரி ஊட்டினை[24]

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் சான்றுகளாகும். மாற்றார் நாட்டைத் தீ மடுத்த புகழ் பாடுவர் ‘எரிபரந்தெடுத்தல்’ என்ற வஞ்சித்திணைத் துறையே இச்செயலைப் பேரிலக்கணத்திற்கு உரியதாகக் காட்டுகிறது. “பகைவர் நாட்டின் அழிவிற் கிரங்குதல்” என்னும் பொருண்மையுடைய கொற்றவள்ளைத்துறை கூட, உண்மையில் மாற்றார் அழிவிற்கிரங்குவதாக அமையாது வென்றவனின் அழிவுத்திறம் பேசுவதாகவே அமைகிறது.

வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேலைபூத்
தூரறிய லாகா கிடந்தனவே - போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினார் நாடு[25]

*இப்பாடலுக்கும் இதனையொத்த பிற பாடல்களுக்கும் 'பகைப்புலம் பழித்தல்' என்று புறத்திரட்டு நூல் தலைப்பளிக்கக் காணலாம்.*

*அரசர்கள் தங்கள் வாழ்நாளில் செய்த அறப்பணிகளினும், கொடைச் செயல்களினும் போர்க்களத்தில் தாம் பெற்ற பெரு வெற்றிகளை மிக மதித்துப் போற்றியுள்ளனர்; என்பதற்குப் பிற்காலச் சோழரின் மெய்க்கீர்த்திகள் தக்கச் சான்றாகும். இதற்கு,*

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்[26]

*என்ற மெய்கீர்த்தியைச் சுட்டலாம். இவ்வாறு சமய உணர்வு மிகுந்த பிற்காலச் சோழர் காலத்திலேயே போர் வெற்றிகளே மெய்க்கீர்த்தியாகக் கருதப்பட்டனவெனின் வீரநிலைக்காலப் பண்புகள் முழுவதும் ஓய்ந்து போகாத சங்க காலத்தில் போர் வெற்றியே மிகுதியும் பாடுபொருளானதில் வியப்பில்லை எனலாம். புறநானூற்றுக் காஞ்சித் திணைப் பாடல்கள் போர்ச் செயல்களைக் குறிப்பனவாகும். இத்திணைக்குரிய முப்பத்தொரு பாடல்களன்றிப் பதிற்றுப்பத்தில் போர்ச் செய்தி குறித்தனவும் கணக்கிடப்படின் போர்ச் செயல்கட்கும், வீரவுணர்வுக்குமே சங்ககாலப் புறத்திணைப் பாடல்கள் முதன்மை பெற்று விளங்குகின்றன. எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் பாடாண் திணைக்குரியதாகக் காட்டப்பெறும் பின்வரும் பாடல் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியின் போர்ச் செயலையும் வீர உணர்வும் உரைக்கக் காணலாம். அப்பாடல்,*

இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய

எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்

மறலியன்ன களிற்றுமிசை யோனே[27]

என்பதாகும். இவ்வகைப் பாடல்கள் பலவற்றில் வேந்தனின் கொடைப் பண்போடு வீரவுணர்வும், படை வலியும் இணைத்துப் பேசப்பெறுகின்றன.

**மகள் மறுத்தல்**

பெண் காரணமாகப் போரெழுந்ததைக் கூறுவனவாகக் கருதப்படும் பாடல்கட்குரிய மகள் மறுத்தல்துறை ஆய்விற்குரியதாகும். இத்துறைக்குரிய மூன்று பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. இம்மூன்றும் பாரியைக் கபிலர் பாடியன. இம்மூன்று பாடல்களிலோ, சங்கப் பாடல்கள் பிறவற்றிலோ மூவேந்தர் பாரியிடம் மகட்கொடை வேண்டியதாகவோ பாரி மறுத்ததாகவோ குறிப்பில்லை.

மரந்தொறும் பிணித்த களிற்றனி ராயினும்

புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்

தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்

யானறி குவனது கொள்ளு மாறே[28]

என்றும்,

கடந்தடு தானை மூவிருங் கூடி

உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே[29]

என்றும் கூறுவதிலிருந்து, மூவேந்தரும் பிறர் நாடுகொள்ள வந்தவரே என்பதறியப்படும். இத்தகையப் போர்களின் குறிக்கோள் கொள்ளையடிப்பதே என்றும் நிலங்களின் விளைவுகளைக் கவர்வதே என்றும் கூறும் செய்திகள் மறுக்கத்தக்கனவாகும். போரிற் சினவெறி காரணமாக இவையும் ஒரேவழி நிகழ்ந்தன எனக் கொள்ளுதலே நேரியதாகும். மகள் மறுத்தல் துறையினவாகப் புறநானூற்றில் உள்ள மூன்று பாடல்களும் மகள் மறுத்த செயல் கூறுவன எனக் கருதுவர் பேராசிரியர் ரா.இராகவையங்கார். மேலும்,

> நொச்சித்திணையோ, மகள் மறுத்து மொழிதல் மறவர் கூற்றாக நிகழும்[30]

என்பர் வெண்பாமாலை உரையாசிரியர். ஆனால் புறநானூற்றின் மூன்று பாடல்கள் புலவர் கூற்றாக அமைந்துள்ளன. ஆகவே இம்மூன்று பாடல்களும்,

*இத்துறைக்குரியனவல்ல என எண்ண வேண்டியுள்ளது. பேராசிரியர் செ.வேங்கடராமச் செட்டியார்,*

> பறம்பு மலையும் நாடும் கொடுக்க மறுத்த செய்தியே இப்பாடல்களில் உள்ளது என்றும், துறை கிடைக்காமையால் ஒரு வகையான ஒற்றுமை நோக்கி மகண்மறுத்தல் என்னுந் துறைப்பாற்படுத்தி இவை உரைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், மதிற்குமரி என்னும் வழக்கு நோக்கி மதில் மறுத்த செயலை மகள் மறுக்கும் செயலோடு ஒப்ப வைத்துத் துறை வகுக்கப்பட்டிருக்குமென்றும் கூறுவன முற்றிலும் ஏற்கத்தக்க செய்திகளாகும்[31]

*என்று கூறுகிறார்.*

*அடுத்து மகட்பாற்காஞ்சித் திணைக்குரியனவாகப் புறநானூற்றில் பத்தொன்பது பாடல்கள் உள்ளன என்பர்.*

> இவற்றுள் பதினொன்று, மகள் மறுப்பதால் ஏற்படும் ஊரழிவு கூறுவன என்றும் ஐந்து பாடல்கள் உவமை வாயிலாகப் புலவர்கள் தாம் விரும்பிய மன்னரைப் புகழ்வன என்றும் பாகுப்படுத்திக் காணுகிறார்[32]

*என்கிறார் டாக்டர் ந.ஜெயராமன்.*

*பெரு வேந்தர்களுக்கும், புலவர்களுக்கும் இருந்த தொடர்பினும் குறுநிலமன்னர், சீறூர்த் தலைவர் ஆகியோர்க்கும் புலவர்களுக்கும் இருந்த தொடர்பே நெருக்கமும் இறுக்கமும் வாய்ந்ததாக இருந்திருக்கிறது. செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பதிற்றுப்பத்தில் போற்றத் தொடங்கும் கபிலர்,*

> புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ
> மலர்ந்த சாந்திற் புலரா வீகை
> மலர்ந்த மார்பின் மாவண் பாரி
> முழவுமண் புலர விரவல ரினைய
> வாராச் சேட்புலம் படர்ந்தோன்[33]

*எனப் பாரியை நினைந்து போற்றுவதை எண்ண வேண்டும். எனவே இப்புலவர்கள் எல்லாரும் பெருவேந்தரினும், குறுநில மன்னர்களையும் சீறூர் மறக்குடித் தலைவர்களையும் பாடுவதைப் பெருவிருப்பம் காட்டியுள்ளனர் என்பதை அறியலாம். இவ்வடிப்படையில் புறநானூற்றின் 300 ஆம் பாடல்*

தொடங்கி 366 ஆம் பாடல் முடியத் தும்பை, வாகை, காஞ்சித் திணைகளைக் குறித்து வரிசையாக அமையும் பாடல்களில், தனிமனித வீரத்தையும், மறக்குடியின் பெருமிதத்தையும் புலவர்கள் பாடக் காணலாம். புறநானூற்றின் மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் பெண் காரணமாக எழுந்தன அல்ல எனவும், வீரமும் புகழும் காரணமாகப் பாடப்பட்டவை என்பதும் உணரப்படும். தம் மேலாண்மையினையும் வீரத்தையும் ஒத்துக்கொண்ட மன்னரோடு போர் புரியத் தமிழ்வேந்தர்கள் முனைந்ததில்லை என்பதை,

இருநில மருங்கின் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமாவளவன்
வாளுங் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்[34]

என்ற பாடல் சுட்டுகிறது. இப்பாடல் சேர பாண்டியர் அடங்கிய நிலையில் போர் விருப்பம் காரணமாகக் கரிகாலன் வடதிசைக் கண் படையெடுத்துச் சென்றமை கூறப்படுகிறது. கரிகாலனது மேலாட்சியை ஏற்றுக்கொண்டே நேய அரசர்களான வச்சிர, மகத, அவந்தி நாட்டினன் அவனுக்குப் பல பொருட்களைப் பரிசளித்தனர். ஆகவே போர்க்குரியக் காரணங்கள் போர் செய்ய விழையும் வீரவுணர்வும், மறப்புகழின் மீதமைந்த பெருங்காதலுமேயாகும் எனலாம். மேலும்,

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடுவில் நீக்கிபுகழ் பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்[35]

என்ற பாடலில் தன் குடிமக்கள் உறைதற்கு நிலம் வேண்டிச் செய்த போரின் நோக்கமும் புகழ்பெறுதலே என்பதை ‘புகழ் பொறித்த’ என்ற தொடர் உணர்த்தக் காணலாம்.

தமிழ்வேந்தர்கள் புகழுக்கு மாறாக இகழ்ச்சி வருகின்ற நிலையை மானக்குறைவாகக் கருதிப் போரில் ஈடுபட்டிருக்கின்றனர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன்னைப் பகைவேந்தர்

'இளையன்' எனக் கூறிப் பழித்தமை பொறாது வஞ்சினம் மொழிந்து போரில் ஈடுபட்டிருக்கிறான்.

புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்[36]

என்பதிலிருந்து பண்டைத் தமிழ்வேந்தர் புகழின்மீது கொண்ட அவா புலனாகும். எனினும் அரசுரிமை காரணமாக ஒரு குடியிற் பிறந்த சோழவேந்தர் பகைத்துப் போர்க்கெழுந்த செயலையும், அரசுரிமை பெறவேண்டித் தந்தைக்கெதிராகப் போர் செய்ய முனைந்த கோப்பெருஞ்சோழனின் மக்கள் செயலையும் பண்டைத் தமிழ் வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. இவற்றுக்குக் காரணம் பிறர்மீது மேலாதிக்கம் செய்ய முனைகின்ற வீர உணர்வே ஆகும். மேலும்,

புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே[37]

என்று கூறுகின்ற புறநானூற்றுத் தாயும்,

விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்
ஓ. . . . . . .வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே[38]

என்று கூறுகின்ற மனைவியும் உறுப்பினர்களாக உள்ள சமூகத்தில் போர் ஓர் இன்றியமையாத் தேவையாகி விடுகிறது. ஆகவே மறவுணர்வு மிக்க ஒரு சமூகத்தின் மனவெழுச்சியான வீரமும், புகழுமே பண்டைத் தமிழர்களின் போர்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.

**மரபுகள்**

சங்ககாலத் தமிழகப் போர் முறைகளில் சில வியத்தகு மரபுகள் காணப்படுகின்றன. வேந்தர்கள் அடையாளப் பூச்சூடுவதோடு அவ்வப்போர் வினைக்கேற்ற பூவையும் சூடுதல், படை வீரர்கள் அடையாளப் பூச்சூடுதல் ஆகியன தொல்காப்பியரால் குறிக்கப்பெறுகின்றன. தமிழர் வாழ்வில் அகத்திலும், புறத்திலும் மலர்கள் குறியீடுகளாகவும், மங்கலப் பொருள்களாகவும், மகிழ்ச்சிக்குரியனவாகவும் விளங்கியிருக்கின்றன. கண்ணியும் கோதையும், தொடையலும் பிணையலும், தாரும் மாலையும்

ஆரமும் என்றின்ன பல்வகையால் மலர்களைச் சேரகட்டிப் புறத்திணை நிகழ்ச்சிகளில் ஆடவரும் அகத்திணை நிகழ்ச்சிகளில் மகளிரும் புனைந்து கொள்ளும் இயற்கை வாழ்நெறியைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. புறத்திணைப் போர் நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும் ஒரு குறிப்பிட்ட மலர்சூடும் வழக்கம் பிறமொழி இலக்கியங்களில் எங்கும் இல்லை என அறிஞர்கள் குறிப்படுவது கருதத்தக்கதாகும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்னும் ஆறுவகை மலர்கள் புறத்திணையில் இடம்பெறுவன. பண்டைக் கிரேக்க வீரர் வெற்றிக்குப்பின் தலைக்கவசத்தின் மேல் இறகு குடிகொள்ளும் வழக்கம் தமிழர் வாகை மலரைச்சூடும் வழக்கத்தை ஒத்துள்ளது எனினும்" போர்ச்செயல் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட மலர் சூடும் வழக்கம் வேறு எங்கும் இருந்ததில்லை. போருக்குப் புறப்படுவோன் ஊர்க்கயத்தில் நீராடி வெள்ளையாடை உடுத்தச் செல்லும் மரபை,

மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி
மன்ற வேம்பி னொண்குழை மலைந்து[39]

என்றும்,

வேங்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்[40]

என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. போர்க்குப் புறப்படுமுன் விரிச்சி கேட்டலும், புள் முதலியவற்றால் ஆன நிமித்தம் காணலும், உன்னமரத்தின் நிலை நோக்கலும், நிமித்தம் பார்த்தலும் ஆகிய நம்பிக்கைச் செயல்கள் உண்டெனினும் இவற்றைக் கருதாதவரும் இருந்திருக்கின்றனர் என்பதை,

காலனும் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே[41]

எனவும்,

புதுப்புள் வரினும் பழம்புட்போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை[42]

என்னும் புறப்பாடல் வரிகளும்,

புன்கல லுன்னத்துப் பகைவ னெங்கோ[43]

பதிற்றுப்பத்து அடியும் எடுத்துக்காட்டுகின்றன. களமும் மணலும் பரந்த பெருவெளிகளான பறந்தலை எனப்படும் இடங்களிலேயே வேந்தர் போர்க்களத்தை அமைத்துக் கொண்டனர் என்பது வாகைப் பறந்தலை,

வெண்ணிப் பறந்தலை, தலையாலங்கானம் ஆகிய களப் பெயர்களால் அறியப்படுகிறது. போர்கள் அனைத்தும் பகற்பொழுதிலேயே நடைபெற்றிருக்கின்றன. இரவுப் போதில் போர் தவிர்த்துப் பாசறை எனப்படும் கட்டூரின்கண் வீரர்கள் ஓய்வெடுப்பதும், புண்பட்ட வீரர்களைக் கண்டு தலைவன் ஆறுதல் கூறுவதும் வழக்கமென அறிகிறோம். போர்க்குரிய வேனிற்காலத்தில் பொருதலைத் தொடங்குவோர் கார்காலம் வந்தவுடன் போரை நிறுத்திவிட்டு ஊர் திரும்புவர். சில நேர்வுகளில் வாடைப் பாசறையில் தங்கியிருத்தலுமுண்டென்பர். கார்காலத்தில் இன்ப உணர்வு காரணமாகப் படைஞர் ஊர் திரும்புவர் ஏனெனில், கார் காலத்தில் படைகளின் இயக்கம் செம்மையாய் இராது என்பதால் போரை நிறுத்தி விட்டு ஊர் திரும்புவர் என்பது பொருத்தமான காரணமாகும்.

### அறக்கோட்பாடுகள்

உயிரிழப்பு மலிந்த போர்க்களத்தில் அற அடிப்படையிலான சில நெறிமுறைகள் சங்க காலத்தில் இருந்திருக்கின்றன. போர்க்குறிப்பு இல்லாதவனோடு பொருதல், தன் கருத்தை வெளிப்படுத்தாமல் நெடுங்காலம் கோட்டையை அடைத்து உள்ளே வாளாயிருத்தல் ஆகியன நாணத்தகவுடைய செயல்களாகக் கருதப்பட்டன. போர் தொடங்குவதற்கு முன்னர் போர் நெறியைக் கடைப்பிடித்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் சான்று காட்டுகிறது. அப்பாடல்,

> ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
> பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
> தென்புலம் வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
> எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
> அறத்தாறு நுவலும் பூட்கை.[44]

என்பதாகும். தமிழ்வேந்தர்கள் கருணையும் அறநெறியும் கொண்டவர்கள் என்பதை இப்புறநானூற்றுப் பாடல்வழி அறியப்படுகிறது. வீரநிலைக் காலப்போருக்கும், சங்க காலப்போருக்கும் வேறுபாடு உண்டென்பதை இப்பாடல் தெளிவுறக் காட்டுகின்றது. வீரநிலைக்காலப் போர்களில் ஆனிரை, பார்ப்பனர், பெண்டிர், மகப் பெறாதவர் என விலக்கிப் போர் மறவரோடு

மட்டும் போரிடும் நிலை இல்லை. சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தில் வைதிக சமயம் தன் கோட்பாடுகளைப் படரவிட்டதன் விளைவே ஆனிரை, பார்ப்பனர் உயிர்கட்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது என்ற எண்ணமாகும். சமண பௌத்தநெறிகள் உயிர்க் கொலையைக் கடுமையாகக் கண்டித்த சமயங்கள் ஆகும். இவற்றிடமிருந்து இவ்வருளற நெறியைப் பின்பற்றிய வைதிக சமயம், பசுவைத் தெய்வமாகவே வழிபட்டதன் விளைவாகப் பசுவைக் கொல்லுதல் என்பது கொடிய தீயவினையாகக் கருதப்பட்டது. எனினும் சங்கப் போர் வீரர்களின் செயலை,

வயவாள் எறிந்து வில்லின்நீக்கி
பயம்நிரை தழீஇய கடுங்கண் மழவர்
அம்புசேட் படுத்த வன்புலத் துய்த்தென
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிற்
கொழுப்புஆ எறிந்து குருதி தூஉய்
புலவுப் புழுக்குண்ட வான்கண் அகலறை[45]

என்ற பாடல் சுட்டுகிறது. இப்பாடல் மூலம் ஆ கோள் மறவர் கொழுத்த பசுவை வெட்டி உண்ணும் வழக்கத்தினராய் உள்ளனர் என்பதை அறியலாம். “ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்” என்ற புறப்பாட்டில் பசுவும் பார்ப்பனரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும், புதல்வரைப் பெறாதவரைப் போர் முகத்திலிருந்து விலக்கி விடுக என்பதும் தூய வைதிக சமய எண்ணங்களாகும். இப்பாடலிற் புகழப்பெறும் பாண்டி வேந்தன் வேத வேள்விகளில் விருப்பமுடையவனாகவும், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பெயருடையவனாகவும் இருந்திருக்கிறான் என்பதும் எண்ணத்தகும். போரிற் புறங்கொடுத்தல் இழிந்த செயலாகவும், அவ்வாறு புறமுதுகிட்டோர் மீது வாலோச்சுதல் அறக்கேடாகவும் கருதப்பட்டிருக்கிறது.

புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறங்கொடுத் தனவே[46]

எனப் போர் வீரர் புறங்கொடுப்பின் பெண்டிர் நகைப்பர். நாணுவர் என்ற கருத்தைப் பிடி, களிற்று யானைகளின் நிலைகளில் வைத்துக் கூறுவர். மண்டமர்க்கு உடைந்தனனாயின் உண்ட என் முலையறுத்திடுவேன் எனச் சீறிச் சினந்து நின்ற முதியவளைப் புறநானூறு காட்டுகின்றது. இவ்வாறு போரிற் பின்னிடலும், புறமுதுகு காட்டலும், முதுகிற் புண்படலும் நாணத்தக்க

*செயல்களாக வேறெந்த நாட்டு இலக்கியங்களிலும் கூறப்படவில்லை. போரிற் பின்னிட்டுப் பின்பு தாக்குதல் போர் வீரர்க்குரிய தந்திர நெறியாகவும் பிறநாடுகளில் கருதப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழர் மரபில் மார்பிற் புண்படுதலும், புண்மலிந்த உடம்பினன் ஆதலும் போர் வீரர்க்குப் பெரும் புகழைத்தரும் சொல்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. இதற்குப் பின்வரும் பாடலைச் சான்றாகக் கூறலாம்.*

நீயே, அமர்காணி னமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கட்கின் னாயே
அவரே நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக் கினியர் செவிக்கின் னாரே[47]

*எனப் போரில் விழுப்புண் பெற்றவர் சிறப்பும், பெறாதவர் இழிவும் கூறப்படுகின்றன. தன்னைக் குறித்துக் கரிகாற் பெருவளத்தான் எறிந்தவேல் தன் மார்பை ஊடுருவிப் புறம்போனதற்கு நாணிப் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்த செய்தியைப் புறநானூற்றில் இரு பாடல்களும், அகநானூற்றில் ஒரு பாடலும் காட்டுகின்றன.*

முன்குறித் தெறிந்த புறப்புண் ணாணி என்றது
மார்பில்தைத் துருவின் புண்ணும் புறப்புண்ணாதலை
யொக்குமென நாணியென்றதாகக் கொள்க[48]

*என்று புறநானூற்றின் பழைய உரை கூறுகிறது. பகைவரின் வேலுக்குத் தாம் ஆற்றாது போயினோம் என்னும் நினைவே வீரர்களை இவ்வாறு செய்யத் தூண்டியிருக்க வேண்டும். போர்க்களத்திலன்றிப் பிறவிடங்களிலும் வீரர்கள் தமக்கு மானக்குறைவு நேர்ந்தவிடத்து வடக்கிருத்தல் நிகழும் என்பது கோப்பெருஞ்சோழன் வரலாற்றால் அறியப்படுகிறது. இவ்வாறு வடக்கிருந்து உயிர் துறக்கும் வழக்கம் தமிழகத்தில் உருவான நிலையை,*

கல்லேகனை என்ற பட்டினி நோன்பு சமண தீர்த்தங்கரர்களால் வடநாட்டில் பெருஞ்சமயப் பதிகளில் மேற்கொள்ளப்பட்டதென்றும், அந்நோன்பிருந்து உயிரைத் துறக்கும் பழக்கம் பின்பு தமிழ்நாட்டில் சமண சமயத்தைச் சாராதவர்களாலும் பின்பற்றப்பட்டதென்றும்[49]

என்று மயிலை சீனி.வேங்கடசாமி கூறுகின்றார். இடையூறு ஒழிவில் நோய், மூப்பு ஆகிய இவை காரணமாகப் பட்டினி நோன்பு மேற்கொள்ளப்படுமென அருங்கலச் செப்பு கூறுகிறது. பழி வரும்போதும், மானக்குறைவு ஏற்படும் போதும் வடக்கிருத்தல் மேற்கொள்ளுதலைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. ஆகவே சமண சமயத்தின் அறக்கோட்பாடு தமிழர்களின் போர்த்துறையில் ஓர் அறக்கோட்பாடாக இடம்பிடித்துள்ளதை அறியலாம்.

### வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்

போரில் ஒரு பக்கம் வெற்றியும், மறுபக்கம் தோல்வியும் விளைந்தாலும் இருமருங்கிலும் உயிரிழப்பும் பொருளிழப்பும் ஏற்படும். போரின் பின்விளைவுகள் சான்றோர் உள்ளத்தில் துயரை ஏற்படுத்தியிருக்கின்றன. போர் விளைவுகளே மனித மனத்தில் நிலையாமை எண்ணத்தை அழுத்தமாக ஊன்றச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகு நிலையாமையைக் காஞ்சித் திணையென வகுத்தப் பழந்தமிழ்ப் புலவர்கள் அதன் துறைகளின் வழியே அரிய நீதிகளை உணர்த்தியுள்ளனர். மூவேந்தர்க்குரிய நிலத்தையும் பொதுமையின்றி ஆண்ட வேந்தரும் மாண்டனர். அவர் ஈட்டிய செல்வமும் அவர் பின்னே துணையாய் செல்லவில்லை. ஆகவே அற வினையை விதைப்பதே மறுமைக்கு உதவும் எனக் கூறுவர். போர்க் குறிப்பில்லாது தன்னூரகத்து இனிதிருக்கும் வேந்தனோடு போர்க்குச் செல்லுதல் நாணுத்தகவுடைத்து என்பார் ஆலத்தூர் கிழார். அந்தணர் முத்தீடுபோல மூவேந்தரும் பகையொழிந்து உடனிருந்த காட்சியை வாழ்த்துவர் ஔவையார்.

இகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல[50]

என்ற கபிலரின் அகப்பாட்டுவுவமம் அவருடைய போர் வேண்டாத உள்ளக்குறிப்பை உணர்த்துகின்றது.

முரசு முழங்கு தானை மூவருங்கூடி
யரசவை யிருந்த தோற்றம் போல[51]

என்ற முடத்தாமக் கண்ணியாரின் உவமை, மூவேந்தரும் பகையும் போருமின்றி ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதாகும். எனினும் முடியாட்சி உலகில் போர் தவிர்க்க முடியாததாயிற்று. வீரப்பண்பைப்

போற்றும் சமூகநிலை, ஒருவர் ஒருவரின் மேம்பட விளங்கும் புகழ் விருப்பம் ஆகியன போர்க்குரிய சூழல்களைப் படைத்தமை அரசக் குடியிற் பிறந்தார் போர்க்களச் சாவே பெறுதல் வேண்டுமென்றும், இயல்பாக இறந்துபடின் வாள்போழ்ந்தடக்குதல் வேண்டுமென்றும் கூறக் காண்கிறோம். வீரர்களுக்கே இனிய மறுமையுலகும் கிடைக்குமெனக் கூறப்படுகிறது. ஆகவே கொடுங்கோல் மலிந்த போர் அரசராலும் மறவராலும் விரும்பப்படும் நிலையைச் சங்கப் புறப்பாடல்கள் உணர்த்துகிறது.

பகைநாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதனைப் பலவகையாலும் பாழாக்குதல் வீரப் பண்பாகவும், புகழக்குரியதாகவும் கருதப்பட்டது. இதற்குச் சான்றாக,

இழிபறியாப் பெருந்தண்ணை
குரூஉக் கொடிய வெரிமேய
நாடெனும் போர்காடாக
வாசேந்தவழி மாசேப்ப
வூரிருந்தவழி பாழாக[52]

என்ற பாடலைக் கூறலாம். மதிலை அழிப்பர். அகழி தூர்ப்பர்: வளமனைகளை இடிப்பர். தேரோடுந் தெருக்களில் வெள்வாய்க் கழுதைகளைப் பூட்டி வெள்வரகு விதைப்பர். நீர்த்துறைகளில் யானைகளைப் படிவிப்பர் என போரின் விளைவுகள் சுட்டப்பெறுகின்றன.

**வீரநிலைக் காலமும் சங்ககாலமும்**

வீரநிலைக் காலப் பண்புகள் குறித்து சி.எம்.பௌரா வும் சாட்விக்கும் கூறும் கருத்துக்கள் இவண் குறிப்பிடத்தக்கனவாகும். அறிஞர் சாட்விக் வீரநிலைக்கால இலக்கியம் செய்யுளாகவோ, உரைநடையாகவோ அமையுமென்றும், அரசக் குடியினரின் அருஞ்செயல்களைப் புகழ்ந்துரைப்பனவாக இருக்குமென்றும் கூறுகின்றார். இவ்விலக்கியங்கள் வருணனை மிகுந்தனவாகவும், இன்பப் பொழுது போக்கிற்குரியனவாகவும், படைப்பாளிகளின் பெயரறியப்படாதனவாகவும், குறிப்பிட்ட யாப்பிற்குரியனவாகவும் இருக்கும் என்கிறார். சி.எம்.பௌரா, வீரநிலைக்கால இலக்கியங்கள் தலைமுறை தலைமுறையாக வரும்

*வாய்மொழி இலக்கியம் என்றும், வருணனை மிகுந்தனவாகவும் புறநிலைக் கூற்றாக அமைந்தனவாகவும், நாடகப் பேச்சு முறையில் உருப்பெற்றனவாகவும் இருக்குமென்பர். இவை கூறும் செய்திகள் உண்மையில் நிகழ்ந்தனவாக இருக்கவேண்டிய தேவையில்லையென்றும் கூறுவர். இத்தன்மைகளுள் சில சங்க இலக்கியங்களோடு ஒத்திருக்கும் நிலை கி.மு. நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டை ஒட்டித் தமிழகத்தின் வீரநிலைக் காலம் அமைந்தது என்றும், வாய்மொழியாக வழங்கி வந்த வீரநிலைக்கால இலக்கியங்களாகியப் பத்துப்பட்டும் எட்டுத்தொகையும் கி.பி.முதல் நூற்றாண்டில் எழுத்து வடிவம் பெற்றன என்றும் அறிஞர் கைலாசபதி கூறுவர். இம்மூவருடைய கருத்துக்களையும் ஆராய்ந்த நா.செயராமன்,*

> சங்க இலக்கியத்தில் பாடாண்திணை என்னும் நூலில், தொல்காப்பியர்க்கு முற்பட்டது வீரநிலைக்காலமென்றும், சங்க இலக்கியங்கள் பாடாண் கால இலக்கியங்கள்[53]

*என்று கூறுகிறார். வீரநிலைக் காலமென்பது நாகரிகமற்ற, முரட்டுத்தன்மை மிகுந்த காலமாகும் என்ற சாட்விக்கின் கூற்றை நன்கு எண்ணல் வேண்டும். மாற்றார் நாட்டை எரியூட்டுதல், விளைவயல்களைத் தீ மடுத்தல், மகளிர் கூந்தலறுத்தல் முதலிய ஈரமற்ற இன்னாச் செயல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படினும் இவற்றையே முழுதும் போற்றினர் எனக் கூறுதல் பொருந்தாததாகும். அருளும் அன்புமிக்க கொடை நிகழ்ச்சிகள், புலவர் இடித்துரையைக் கேட்டுப் போர் தவிர்க்கும் பெருந்தகவு, உயரிய அறப்பண்புகளைப் போற்றி ஒழுகிய வாழ்க்கை முறை ஆகியனவும் சங்கப்பாடல்களில் உரைக்கப்பெறுகின்றன. சங்க இலக்கியங்கள் பெரும்பான்மையும் தன்மை நவிற்சியுடையவை. குறிப்பாகப் புறப்பொருள் பாடல்களெல்லாம் பெரும்பாலும் வரலாற்று அடிப்படையில் அமைந்தவையாக உள்ளன.*

*வீரநிலைக்காலம் வரலாறு தழுவிய இலக்கியங்களைப் படைப்பதில்லை. சங்க இலக்கியங்களில் வாய்மொழி இலக்கியக் கூறுகள் காணப்பெறினும் முழுவதும் வாய்மொழி இலக்கியங்களாக அவை கருதப்படுவதற்கில்லை. ஆகவே தமிழகத்தின் வீரநிலைக்காலம்*

தொல்காப்பியர்க்கு முற்பட நிலவியது என்பதே பொருத்தமானதாகும். வீரநிலைக்கால முரட்டுத் தன்மையினையும், போர் வெறியினையும் தற்பலிச் செயலுணர்வையும் சமய உணர்வு இலக்கியிருக்கிறது என்பதைச் சங்கப் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. சமயக் கோட்பாடுகளும், அற உணர்ச்சிகளும்; அன்பு, அருளாகிய பண்புநலன்களும் வீரநிலைக்காலப் பண்பை மாற்றிச் சங்ககாலப் பண்பாடாக உருவாக்கியிருக்கின்றன. எனினும் வீரநிலைக்காலப் பண்பின் சாயல்கள் சங்க இலக்கியங்களில் இல்லாமலில்லை. அப்பண்பின் நிழல்களே, மாற்றார் நாட்டை எரிமடுக்கவும், இடையறாது போர் மேற்செல்லவும் தூண்டுகின்றனவாகப் பாடல்களில் காணப்படுகின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்களுக்கு மிக முற்பட்ட வீரநிலைக் காலத்திற்கும், சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்ட சமய காலத்திற்கும் இடைப்பட அமைந்த தனித்தன்மைகள் உடையன என்பது தெளிவாகின்றன.

**அரசுரிமை**

பண்டைத் தமிழகத்தில் அரசுரிமை, அரசக்குடியின் வழிவழியே வருகின்றதாக இருந்தது.

> மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
> பாறர வந்த பழவாறற் றாயம்[54]

என்று சோழன் நலங்கிள்ளி இவ்வரசப் பேறு குறித்துப் பாடுகிறான். அரசனின் மூத்தமகன் அடுத்த அரசன் என்ற மரபில் நன்மைகளும். தீமைகளும் உள்ளன.

அரியணை ஏறுவதற்கு நெடுங்காலம் முன்பாகவே, அஃதாவது மகப் பிறந்தவுடனேயே அரசுரிமை முடிவாகி விடுவதால், உரிமைச் சிக்கல் எழ வாய்ப்பில்லை. பிறந்தவுடனேயே இவ்வுரிமை பெற்றுவிடுவதால் அரியணை ஏறுவதற்கு முன் உள்ள நீண்டகாலப் பகுதியில் அரசர்க்கு வேண்டும் அத்தனைப் பயிற்சிகளையும் அவ்வுரிமையாளன் பெற இயலும். ஆளும் தந்தைக்குத் துணையாக "சேம அச்சுப்" போல அவ்வுரிமை மகன் போர்க்களத்திலும் இயங்குவான். இவையனைய நன்மைகள் உண்டெனினும் அறிவாற்றல் இல்லாதவன், தீயப் பண்பினன் எனும் நிலையில் ஒருவன்

அரசக்குடியில் மூத்தோனாகப் பிறப்பின் அவனையும் மக்கள் அரசனாக ஏற்றாக வேண்டிய சூழலும் உண்டு. வழிவழி ஆளும் உரிமை உடையோம் என்ற குடிச்செருக்கு தோன்றுதற்குரிய வாய்ப்பும் உள்ளன. பண்டைத் தமிழக அரசியலில், அரசுரிமைச் சிக்கலைக் காட்டும் நிகழ்ச்சிகள் மிகுதியாக இல்லை. கரிகாலன் அரசுரிமை பெற்றமை குறித்துப் பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும்,

> தாய்வயிற் றிருந்து தாயமெய்தி[55]
>
> உருகெப தாய மூழி னெய்தி[56]

என்றும் கூறுகின்றன. நச்சினார்க்கினியர் பொருநராற்றுப்படை உரையில்,

> தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல
>
> முகூர்த்தம் வருமளவும் தாயுடை வயிற்றிலேயிருந்து
>
> பிறக்கையினாலே அரசவுரிமையைப் பெற்றுப் பிறந்தென்றார்[57]

எனக் கரிகாலன் அரசு பெற்றமை குறித்துக் கூறுவர். அரசக் குடியிற் பிறந்த மூத்தோன் அரசுரிமை பெற்றான் என இவ்வடிக்கு உரை காண்பது பொருந்துவதன்று. கரிகாலன் தாய் வயிற்றிலிருக்கும் போதே அவன் தந்தை இறந்ததனால் அப்போதே அவன் அரசுரிமை பெற்றான் என்று உரையாசிரியர் பொ.வே.சோமசுந்தரனார் இவ்வடிக்குக் கூறும் உரையே முற்றிலும் பொருந்துவதாகும். இவ்வுரையால் குழவி நிலையிலேயே அரசுரிமை பெறுந்தகுதி மைந்தர்க்கு உண்டென்பது அறியப்படும். மகளிர்க்கு நாடாளும் உரிமை அளிக்கப்பட்டதாகச் சங்க இலக்கியத்தில் யாண்டும் குறிப்பில்லை.

> பூதபாண்டியன் உயிர் நீத்த பின்பு தீப்பாயும் அவன் தேவியைக் குறித்த இருபாடல்களிலும் அரசுரிமை பெறுவது பற்றிய குறிப்பில்லை.[58]

அரியணையில் அரசனுடன் அவன் மனைவியும் அமைந்திருக்கும் செய்தியைப் பதிற்றுப்பத்துப் பாடல்களும், சிலப்பதிகாரமும் குறிக்கின்றன; எனினும் அரசியல் குறித்த செய்திகளில் அரசுரிமையில் மனைவியர் பங்குபெற்றதாகக் குறிப்பில்லை.

> காக்கை பாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்குக் காலமும் இடமுமறிந்து ஒழுகத்தக்க நெறிகளையுரைப்பர்.[59]

ஔவையார். அவர் அதியமான் பொருட்டாக அரசியல் தூதரானார். ஆகவே மனைவியர் தலையீடு இல்லாத அரசியல் போக்கை அக்கால அரசர்

மேற்கொண்டனர் என்பது அறியப்படும். அரசன் உயிருடன் இருக்கும்போதே அவன் மக்கள் அரியணையை விரும்பி அவனோடு மாறுபட்டமைக்குக் கோப்பெருஞ் சோழன் வரலாறு ஒரு சான்றாக அமைகிறது. இதற்கு,

> வடபுலத்து அரசரிடையே அரசுரிமை காரணமாகக் கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. உடன் பிறந்தோரை கொன்று அரசு கட்டில் ஏறியோர் உண்டு. பௌத்த சமயத்தின் அருளற நெறியை உலகிற் பரப்பிய அசோகனே இளமைக்காலத்தில் தன்னைச் சார்ந்தவர்களைக் கொன்று அவர்களின் குருதியில் நீத்தியே அரியணை ஏறியதாக வரலாற்றாசிரியர் குறிக்கின்றனர்[60]

என்ற கூற்றைச் சான்றாகக் கொள்ளலாம்.

கோப்பெருஞ்சோழன் தன் மகன்களோடு போர்புரிய எண்ணாமல் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தது அவனின் அறநெறித் தன்மையாகும். அறநெறியைப் புல்லாற்றூர் எயிற்றியனார் என்னுஞ் சான்றோர் கோப்பெருஞ்சோழனுக்குத் தமிழ் நிலத்திற்கே உரிய அறக்கருத்தை எடுத்துரைத்துப் போர் தவிர்க்க வேண்டியிருக்கிறார். நலங்கிள்ளி நெடுங்கிள்ளி என்னும் தாயத்தார் இருவர் தம்முள் பொர நேர்ந்தபோது கோவூர் கிழார் ஒரு குடிச் சோழராகிய நீவிர் போரிடுதல் அறம் அன்று எனக் கூறிச் சந்து செய்விக்கிறார். நல்வினை மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்துடன் அம்மன்னன் வடக்கிருந்து உயிர் துறக்கிறான்.

> ஒருவர் தோற்பினும் தோற்பதும் குடியே
> இருவீர் வேறல் இயற்கையும் அன்றே[61]

என்ற பாடலடிகள் போர் தவிர்க்க வேண்டுவதைச் சுட்டுகின்றன. தமிழ் நிலத்தில் இவ்வாறு ஒரோ வழி அரசுரிமைச் சிக்கல் ஏற்பட்டபோது புலமைச் சான்றோர் தலையிட்டு அரசக் குடியினரை நெறிப்படுத்தி நன்முடிவு காணச் செய்துள்ளனர். பெருஞ்சேரலிரும் பொறையைப் போற்றும் அரிசில்கிழார் அவ்வேந்தனுக்கு அரசுதுறைப் போகிய மகன் அமைந்தது குறித்து,

> ஒடுங்கீ ரோதி யொண்ணுதல் கருவில்
> எண்ணியன் முற்றி யீரறிவு புரிந்து
> சால்பும் செம்மையு முளப்படப் பிறவும்

காவற் கமைந்த வரசுதுறை போகிய

வீறுசால் புதல்வற் பெற்றனை[62]

என்று பாராட்டக் காணலாம். இவ்வாறு அரசுரிமைக்குரிய மகனைப் பெறுவதை அரசர் மிகவும் விரும்பினர் என்பதையும், அம்மகனைக் வில், வேல், வாள் பயிற்சியிலும் போர்ப் பயிற்சியிலும் ஈடுபடுத்தினர் என்பதும் மேற்கண்ட பாடலால் அறியப்படுகிறது.

அதியமானின் மகன் பொகுட்டெழினி கீழ்மரத்து யாத்த சேமவச்சுப் போல விளங்கினான்[63]

என்பர் ஔவையார். மூத்த மகனைப் போர்களப் பயிற்சிகளிலும் அரசியல் துறைகளிலும் ஈடுபடுத்திய பண்டைத் தமிழ்வேந்தரின் செயல் இவ்வெடுத்துக் காட்டால் உறுதிப்படுகிறது. அவ்வகையில் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனின் மக்களுள் மூத்தோனாகிய செங்குட்டுவனே அரசுரிமை பெறுவதற்கு உரியவனாக இருக்க நிமித்திகனால் ஏற்பட்ட சிக்கலை இளங்கோவடிகள் முன்வந்து நீக்கியதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதற்கு,

அரசுரிமைச் சிக்கல் தன் காலத்தும், தனக்குப் பின்னும் ஏற்படாதிருக்கத் திருமணம் விரும்பாத துறவுநெறி மேற்கொண்டு தன்னலந் துறந்த வரலாறு சமைத்தார் இளங்கோ[64]

என்பர். ஆகவே அரசுரிமைச் சிக்கல்கள் அக்குடிப் பிறந்த நல்லோரின் தியாக உணர்வாலும், புலமைச் சான்றோரின் அறிவுரையாலும் தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாம்.

## பெருவேந்தரும் குறுநில மன்னரும்

சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தரே பண்டைப் பெருவேந்தராகத் தொல்காப்பியத்தாலும், சங்க இலக்கியங்களாலும் குறிக்கப்பெறுகின்றனர். இம்மூவேந்தரும் ஒரோவழி மண்ணாசையில் ஒற்றுமை கொண்டிருந்தார்களேயன்றி ஒருவருக்கொருவர் நிலைத்த உறவும் ஒற்றுமையும் உடையவர்களாக இல்லை. ஆனால் மூவேந்தரும் ஒற்றுமையாக இருப்பதைப் புலவர்கள் விரும்பினர். எனினும் புகழ் வேட்கையும், போர் விருப்பமும், வேந்து மரபும் அவர்களை ஒற்றுமையாய் வாழ அனுமதிக்கவில்லை. புலவர்கள் மூவேந்தரின் ஆளுகைக்குட்பட்ட மூன்று

வேறுவேறு நிலப்பகுதிகளையும் தமிழ் உலகம் என்ற பொதுப் பெயராற் சுட்டியுள்ளனர் என்பதற்கு,

பொதுமைச் சுட்டிய மூவருலகம்[65]

என்ற பாடலடி சான்றாகும். மூவேந்தரையும் "தண்டமிழ்க் கிழவர்" எனக் குறிப்பர். வேங்கடத்திற்கு அப்பாலிருக்கும் நாடுகளை "மொழி பெயர் தேஎம்" என்ற பெயரால் புலவர்கள் குறிப்பிடுவர். கனகவிசயர் தமிழ்வேந்தரைப் பொதுப்பட இகழ்ந்தமையினைப் பொறுக்காது சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் சென்றிருக்கிறான். ஆகவே தம்முள் பொருதியக் காலத்தும் தமிழ் வேந்தர் என்ற ஓருணர்வு மூவேந்தரிடத்தும் இருந்தமை சில நிகழ்ச்சிகளால் புலப்படுத்தப்பட்டுள்ளன.

சங்ககால அரச மரபினரின் வாழ்க்கையைப் பின்வரும் கூற்றுக்கள் தெளிவுபடுத்துகின்றன.

> கரிகாலன் மகள் ஆதிமந்தியைச் சேரன் ஆட்டனத்தி மணந்து கொண்ட செய்தியை அகநானூறும், சிலப்பதிகாரமும் காட்டுகின்றன. காதற்களவு நெறி பரவலாகவும், போற்றத்தக்கதாகவும் பேசப்பெறும் சங்க காலத்தில் காதற்களவு காரணமாக வேந்துக் குடியினன் ஒருவன் ஓர் எளிய குடியைச் சார்ந்த பெண்ணிடம் மனஞ்சாய்ந்து அவளைத் தன் பெருங்கோப்பெண்டாக கொண்டான் என்ற குறிப்பு எங்குமில்லை. செல்வப் பெருக்கும் அதிகாரப் பெருநிலையும் மன்னர்களின் வாழ்க்கைப் போக்கை வரையறுத்த நெறிகள் செல்லுமாறு ஆக்கியிருக்கலாம். பன் மனைவியர் கொள்ளும் பழக்கமும், பரத்தையருறவும் அக்காலத்திருந்தன என்னும் நலங்கிள்ளி, பூதபாண்டியன் போலும் ஒருமைக் கணவர்களும் அக்கால அரச மரபில் இருந்திருக்கின்றனர்.[66]

என்பதும்,

> சங்க காலக் குறுநில மன்னர்களில் பலர் நெடும்புகழ் பெற்றவர்கள். ஆளும் நிலங்குறியதாயினும் அவர்களின் உள்ள பரப்பு பெருவேந்தரின் நிலப்பரப்பினும் பெரிதாக இருந்தது. மலையமான் திருமுடிக்காரியிடம் பெருவேந்தரே படையுதவி வேண்டியிருக்கின்றனர்.[67]

என்பதும் சான்றாகும். எனவே மூவேந்தரினும் இக்குறுநில மன்னர்களே புலவர்க்கும், பாணர்க்கும் அடையாத நெடுங்கதவும், அஞ்சேலென்ற சொல்லும் கொண்டு அவர்களின் வறுமையைத் துடைத்திருக்கின்றனர். குமணனைப் பாடும் பெருஞ்சித்திரனார் பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன், ஆய், நள்ளி ஆகிய ஏழு வள்ளல்களும் இறந்துபட்டனர் எனக் குறிக்கின்றார். சிறுபாணாற்றுப்படையிலும் இவ்வேழு வள்ளல்களாகிய குறுநில மன்னர்களும் புகழப்படுகின்றனர். ஔவையார், கபிலர், பரணர், அரிசில்கிழார் ஆகிய பெரும்புலவர்கள் இக்குறுநில மன்னர்களுள் சிலரைப் பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

> கபிலர் பாரியோடு உயிர்நட்புப் பூண்ட உரவோர் புறநானூற்றில் பத்தொன்பது பாடல்களில் கபிலர் பாரியைப் பற்றிப் பாடுவர்.[68]

அவனது வாழ்வின் உயர்விலும், தாழ்விலும் உடனிருந்து, பாரியிறந்தபின் அவன் மகளிர்க்குத் தந்தையாகி இறுதியில்,

> இம்மை போலக் காட்டி யும்மை
> இடையில் காட்சி நின்னோ
> டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே[69]

எனக்கூறி உயிர் துறத்தலைக் காணலாம். வேள் பாரியின் பனிச்சுனை புறநானூற்றிலும், குறுந்தொகையிலும், புலவர் பிறராலும் உவமமாக்கப்படுகின்றது. பற்றுக் கோடில்லாத முல்லைக்கொடி போலவாடும் பாரி மகளிரைக் கபிலர் அடைக்கலப்படுத்த முனைகையில் அவன் முல்லைக்குத் தேர் ஈந்த செய்தி கபிலரால் எடுத்துரைக்கப்படுகிறது. கொடை மடத்தால் புகழ் பூண்ட பாரியின் பெருமையும் சிறப்பும், மூவேந்தரையும் அவன்மீது படையெடுக்கத் தூண்டுகின்றன. மூவேந்தரைப் பொறுத்தவரை அவர்கள் குறுநில மன்னனான பாரியைத் தோல்வியுறச் செய்திருப்பினும் அவர்தம் பெருமிதத்திற்கும் புகழிற்கும் இப்படையெடுப்பு ஒரு சிறுமையாக அமைந்து விடுகிறது.

வேண்டுமெனக் கேட்பின் நாடும் குன்றும் ஒருங்கியும் ஒருவனைப் பகைத்தற்குரிய காரணமின்றி மூன்று பெருவேந்தர் வந்து முற்றுகையிடல் அறமன்று என்பதைக் கபிலர் பாடல் நன்கு விளக்குகின்றது. வல்வில் ஓரி

வன்பரணராலும், கழைதின் யானையாராலும் மூன்று புறப்பாடல்களிற் பாடப்பெற்ற வள்ளல் ஆவான். அவனின் வள்ளல தன்மையைக்,

காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் என ஆங்கு[70]

எனவும்,

கொல்லி மலைக்குத் தலைவனாகிய ஓரி மலையளன் திருமுடிக்காரியோடு மாறுபாடு கொண்டு போர் செய்தான்[71]

என்றும் கூறப்பெற்றுள்ளன.

காரி ஓரியைக் கொன்று கொல்லிமலையைச் சேரனுக்களித்தான்[72]

என்று அகநானூறு கூறுகின்றது. புறநானூற்றின் 125 ஆம் பாட்டில் தலைவனாகக் குறிக்கப்பெறும் தேர்வண் மலையன் என்பானும் இக்காரியே ஆவன். சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் போரிட்டபோது சோழனுக்கு மலையமான் துணை நின்றதைப் புறப்பாட்டில் வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடுகிறார்.

ஔவையார் அதியமானைக் குறித்து இருபத்திரண்டு புறப்பாடல்களையும், அதியமான் மகன் பொகுட்டெழினியைக் குறித்து மூன்று புறப்பாடல்களையும் பாடியுள்ளார். பாரியும் கபிலரும், அதியனும் ஔவையும், குமணனும் பெருஞ்சித்திரனாரும், ஆய் அண்டிரனும் முடமோசியும் போல ஓரரசர்க்கு ஒரு புலவர் நெருங்கிய நட்புரிமை பூண்டவராக விளங்குகின்றதைப் புறப்பாடல்கள் சான்று காட்டுகின்றன.

**பிறரை மதித்து நடத்தல்**

மனிதர்களின் அடிப்படைத் தேவைகள் உணவும் உடையும் ஆகும். அவை எல்லா மனிதனுக்கும் ஒன்றுதான். எனவே, தம்மிடமுள்ள பொருளைப் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள் என்று நக்கீரர் கீழ்வரும் பாடலில் வேண்டுகிறார்.

உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே!
அதனால், செல்வத்துப் பயனே ஈதல்![73]

என்பது அப்பாடலாகும். இந்தப் பாடலில், பொருளைக் கொடுத்து வாழுங்கள் என்று கூறுவதாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல், அதன் உட்பொருளையும் நோக்கினால், பிறந்து வாழ்ந்து இறந்து போகிற எல்லோருக்கும் எல்லா உணர்வுகளும் பொதுவானது என்பதை உணர்ந்து, ஒருவரை ஒருவர் இழிவுப்படுத்திக் கொள்ளாமல் மதித்து மனிதநேயத்தோடு நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

**பரந்த மனப்பான்மை**

படைப்பு வெறும் படைப்பாக இல்லாமல் தாம் படைக்கின்ற படைப்பு ஒரு சமுதாயத்திற்காக என்ற உணர்வோடு புலவர்கள் பாடல்களை இயற்றியுள்ளனர். அதனால்தான் புறநானூற்றுப் பாடல்களில் மறத்திலும் அறம் தவழ்கிறது. மண்ணில் தோன்றிய மக்களிடையே உலவும் எதுவும் மக்களுக்குப் பயனள்ளதாகவே இருக்க வேண்டும் என்பது சான்றோரின் கருத்தாகும்.

உலகம் யாவர்க்கும் பொது. உலகில் உள்ள மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உறவினரே என்னும் பரந்த நோக்கோடு வாழ வேண்டும் என்பதைக் கணியன் பூங்குன்றனார்,

யாதும் ஊரே, யாவரும் கேளிர்!
தீதும் நன்றும் பிறர் தர வாரா!
நோதலும் தணிதலும் அவற்றோ அன்ன
சாதலும் புகுவது அன்றே! வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே[74]

என்ற பாடலில் புலப்படுத்துகின்றார். இப்பாடலில் ஒருவரின் நன்மைக்கும் தீமைக்கும் தன்னுடைய செயல்பாடுகளே காரணம் என்றும் அதனால் பிறரைக் குறை கூறுவது தவறு என்றும் கூறுகிறது. மேலும் இறப்பு புதுமையானது அல்ல. எனவே அதற்காக வருந்தாமல் வாழ்க்கையை இனிமையாகத் தொடர வேண்டும் என்பதை கணியன் பூங்குன்றனார் எடுத்து இயம்புகிறார்.

**மறத்தில் அறம்**

அரசர்கள் போர்க்காலங்களில் போர் முறைகளில் பிறரைத் துன்புறுத்தாத அறநெறிகளை மேற்கொண்டுள்ளனர். எளியவர்களைக் கண்டு இரக்கம் கொள்பவர்களாகத் திகழ்ந்துள்ளனர். வீர உணர்வும் இரக்கப்பண்பும் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடிகொண்டிருந்ததே அவனது புகழுக்குக் காரணமாக உள்ளது என்பதை,

முலைபொலி ஆகம் உருப்ப நூறி
மெய்ம் மறந்து பட்டவரையாப் பூசல்
ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர
அவிர் அறல் கடுக்கும் அம்மென்
குவையரும் கூந்தல் கொய்தல் கண்டே![75]

என்ற கல்லாடனார் பாடல் சுட்டுகிறது. உன் வேலும் நின்னால் கொலையுண்ட வீர மறவர்களின் மனைவியர் படும் அவலத்தையும் அழுகையையும் கண்டு, உன்னை எதிர்க்கும் அப்பகைவர் உடலில் பாய்ந்து சிதைக்காது, அவர் உயிரைப் பறிக்காது என்று கூறுவதிலிருந்து, பகைவர்களின் சுற்றத்தின் மீது இரக்கம் கொண்ட பண்பு இப்பாடலில் புலப்படுத்தப்படுகிறது.

**மானம் காத்தல்**

தன்னிலை தாழாமல் பிறரால் தாழ்த்தாமல் வாழ்வது மானமாகும். மானமிழந்து வாழ்தலில் சாதலே நன்று எனக் கருதிய தமிழரின் வரலாறு போற்றத்தக்கதாகும். கோப்பெருஞ்சோழன் தன் மக்களால் வெறுக்கப்பட்டு வடக்கிலிருந்து உயிர்விட்டான். பெருஞ்சேரல் இரும்பொறை வெண்ணிப்போரில் புறப்புண் ஏற்றமைக்கு நாணி வடக்கிலிருந்து உயிர்விட்டான் என்பதை அறியும்போது மானத்தின் மேன்மையை உணர முடிகிறது.

குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
அள் அன்று என்று வாளின்தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் கிடர்ப்படுத்து இரீஇய
கேள்அல் கேளிர் வேளாண்சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்

இரந்து உண்ணும் அளவை,

ஈன்மரோ இவ்வுலகத்தானே![76]

என்பது புறப்பாடல். இப்பாடலில் சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழமன்னன் செங்கணானுக்கும் இடையே ஏதோ ஒரு காரணத்தால் போர் நடைபெறுகிறது. இந்தப் போரில் சேரமன்னன் கனைக்கால் இரும்பொறையைச் சோழமன்னன் வென்று, சேர மன்னனைச் சங்கிலியால் பிணைத்து இழுத்து வந்து சிறையில் அடைத்தபொழுது, தாகத்திற்குத் தண்ணீர் கேட்கிறான். சோழ மன்னனின் போர் வீரன் காலம் தாழ்த்திக் கொண்டு வந்து கொடுத்த நீரைக் குடிக்காமல் இறந்து போவதே சிறந்தது என்று கருதி உயிர் துறந்துள்ளான் என்பதிலிருந்து சேரமன்னனின் மானவுணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**வீரர்களின் உடை**

வீரர்கள் பூந்தொழிலமைந்த ஆடையை உடுத்தி, அரையில் நீலக்கச்சையும் அணிந்துள்ளனர். இவர்தம் மார்பில் புலித்தோலால் செய்யப்பட்ட கவசமும் அணிவர். இதனை,

புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய

எய்கணை விழித்த பகட்டு எழில் மார்பின்

மறலி அன்ன களிற்று மிசையோனே[77]

என்ற பாடலடிகள் சுட்டுகிறது. இது வீரர்கள் புலித்தோல் கவசம் அணிந்த வழக்கத்தைப் புலப்படுத்துகிறது.

**ஈகை அறம்**

செல்வம் உடையோர் இல்லாதவர்க்கு வழங்குவதே ஈகையாகும். உலகத்தார் போற்றும் அறங்களுள் காலத்தால் அழியாததும், நிலைத்து நிற்பதுமான உன்னதமான அறம் ஈகை ஆகும். ஈவோர் இரப்போர் முகங்கண்டும் இரவலன் தான் பெற்ற பொருளைப் பெறார்க்கும் வழங்கும்போது அவர் அடையும் இன்பம் ஈந்தவரையும் இன்பமுறச் செய்வது ஈகை ஆகும். வள்ளல்களின் வரையாது ஈதல் தன்மைக்கு வரையாது பொழிகின்ற மாரியை ஒப்பிடுவது பண்டைத் தமிழர் மரபாகும். மாரி வரையாது மிகுதியாகப் பொழிந்து ஒரு நாட்டைச் செழிக்கச் செய்கிறது.

*களர்நிலம் உவர் நிலம் என்று பாராது எங்கும் நிரந்து பெய்கிறது. அதுபோல வள்ளல்கள் வரையாது ஈந்து புலவர் தம் வறுமையினை ஒழிப்பதோடு புலமை இல்லார் என்று பேதம் பாராது அனைவருக்கும் வழங்குகின்ற தன்மையைப் புறநானூற்றுப் பாடல்களில் காணலாம். அவற்றிற்கு,*

வானத்தன்ன வன்மை[78]

மாரியன்ன வன்மை

பாரி யொருவனுமல்லன்

மாரியு முன்டீண்டுலகு புறப்பதுவே[79]

மாரியீகை[80]

*என்ற பாடலடிகளைச் சான்றாகக் காட்டலாம்.*

*வள்ளல்கள் தன்னிடம் இரந்து வந்தவர்கள் பின்னும் அந்நிலைக்காகப் பிறிதொருவரை நாடிச் செல்லாத அளவிற்கு வழங்குவதைச் சிறப்பாகக் கருதினர். இதனை,*

பிறன் கடை மறப்ப[81]

*என்று அறத்தை வலியுறுத்துகிறது. அதனால்தான் புலவர் பலரும் வள்ளல் ஒருவனிடமே மிகுந்த ஈடுபாடு கொண்டு ஒழுகியதோடு அவனையன்றிப் பிறிதொருவரை 'நா' பாடாதெனவும் உரைத்துள்ளனர்.*

**கொடைத்திறன்**

*கொடை என்றால் 'கொடுத்தல்' என்பது பொருள். கணவனும், மனைவியும் உள்ளம் மகிழ்ந்து வருகின்ற இரவலர்க்கும், விருந்தினர்க்கும் உறவினர்களுக்கும் தம்மால் இயன்ற அளவு பொருட்களைக் கொடுத்து மகிழ்ந்தனர். கணவன் போர் நிமித்தமாகவோ, பிறவற்றின் பொருட்டோ நெடுந்தூரம் பிரிந்து சென்றபின், அவன் மனைவி வருகின்ற இரவலர்க்குப் பரிசில் நல்கிச் சிறப்பிப்பாள். இச்செய்தியைப் புறநானூறு,*

கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து

புன்தலை மடப்பிடி பரிசிலாகப்

பெண்டிரும் தம்பதம் கொடுக்கும்[82]

*எனப் போற்றுகிறது.*

ஏழ்மையை எண்ணி இழிவு செய்யாது தம்முடைய தகுதியையும், பெருமையையும் உணர்ந்து மலை போன்ற யானைகளையும், குதிரைகளையும் பட்டி நிறையப் பசுக்களையும், வீடு நிறையப் பணி செய்யும் உழவர்களையும், நெற்களஞ்சியங்களையும் இரவலர்களுக்கும் புலவர்களுக்கும் கொடுத்துள்ளனர். கொடை பெற்றவர்கள் இவை எல்லாம் கனவோ எனத் திகைக்கும் வண்ணம் நனவில் வழங்கிய அரசர்கள் தங்கள் கொடை மடத்தை வெளிப்படுத்தியுள்ளனர். சான்றாக,

> என் சிறுமையி னிழித்து நோக்கான்
> தன் பெருமையின் தகவுநோக்கிக்
> குன்றுறழ்ந்த களிறென்கோ
> கொய்யுளைய மாவென்கோ
> ஆங்கவை கனவென மருள வல்ல நனவின்[83]

இப்பாடலைக் கூறலாம். இப்பாட்டில் தான் கனவிலும் காணமுடியாத அளவு பரிசு கொடுத்தான் மன்னனின் கொடைத்திறம் புலவரால் புகழப்படுகிறது. மன்னர்கள் கொடை மடம் பட்டார்கள் என்பது இதனால் உறுதியாகின்றது. பகை மன்னன் தந்த திறைப்பொருளை இரவலர், பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என வருவோர்க்கெல்லாம் வாரி வழங்கியுள்ள நிலையும் இவண் எண்ணத்தக்கதாகும்.

போர்க்களத்தில் இருபக்கத்து மன்னர்களும் புண்பட்டு வீழ்ந்து கிடக்கின்றனர். புலவர் ஒருவர் இருவரையும் பார்த்து மனம் வருந்துகின்றார். அப்போது விழுப்புண்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் சேரமான் புலவரைக் காண்கிறார். அவரைக் கண்டதும் தன் கழுத்திலிருக்கும் ஆரத்தை எடுத்துக் கொள்ளச் சொல்கிறான். புலவர் அம்மன்னனின் செயலைக் கண்டு வியந்து, இப்பரிசு பெறவோ யான் வந்தேன் என மனமுருகிப் பாடுகின்றார். அப்பாடல்,

> பாடி வந்த தெல்லாங் கோடியர்
> முழவுமரு டிருமணி மிடைந்ததோள்
> அரவுற ழார முகக்குவ மெனவே[84]

என்பதாகும். மன்னன் போரில் வீரமரணம் அடையும் தறுவாயிலும் புலவருக்கு வழங்கியக் கொடைத்திறம் வியக்கத்தக்கதாகும். இப்பண்பு

*பெரும்பாலான மன்னர்களுக்கு இயல்பாய் அமைந்திருந்தன என்பது தமிழர்க்கே உரிய பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகும்.*

**விருந்தோம்பல்**

*அதியமான் நெடுமான் அஞ்சியின் ஈகைத்தன்மையை ஔவையார் பாராட்டிப் போற்றுகின்றார். அதற்கு,*

ஒரு நாள் செல்லலாம், இரு நாள் செல்லலாம்
பல நாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விரும்பினன் மாதே[85]

*என்ற பாடல் சான்றாகும். விருந்தும் மருந்தும் மூன்று வேளை என்ற வழக்கு மக்களிடையே வழங்கப்பெறுகிறது. ஆனால் மன்னன் அதியமானிடம் ஒருநாள் இல்லை, இரு நாள் இல்லை, பல நாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் போலவே இன்முகத்துடன் வரவேற்று அனைவருக்கும் பரிசுகள் அளிப்பான் என்று ஔவையார் கூறுகிறார்.*

**கல்வியும் மனிதநேயமும்**

*போதிய கல்வியறிவு இல்லாமையால்தான் வன்முறைகளும், மனித நேயத்தைச் சீர்குலைக்கும் செயல்களும் நடக்கின்றன. எனவே வளமான கல்வியை அனைத்து மக்களுக்கும் அளிக்க வழிவகை செய்ய வேண்டும். கல்வி ஒருவனை நல்ல மனிதனாகவும் பண்புள்ளவனாகவும் உயரச் செய்யும் கருவி எனலாம். ஒவ்வொரு மனிதனும் கல்வி கற்க வேண்டிய முக்கியத்துவம் குறித்து ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்,*

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே![86]

*என்று பாடியுள்ளான்.*

*கல்வியால் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடு நீங்கி, அன்பு அமைதியும் பெருகும். கல்வியோடு சேர்ந்து கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மனித*

நேயத்தையும் கற்பிக்க வேண்டும். அதற்குக் கல்விச் சாலைகளை அறச்சாலைகளாகவும் மாற்றினால் மனிதநேயம் ஒவ்வொருவரின் உள்ளத்தில் மலரும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பதிற்றுப்பத்தில் நிகழ்வுகள்**

செந்தமிழ் மொழியின் தீஞ்சுவையினைச் சிறப்பாக விளக்கும் சங்க இலக்கியங்களுள் ஒன்றாய்த் திகழ்வது 'பதிற்றுப்பத்து' என்னும் தொகை நூலாகும். இத்தொகையிலுள்ள எல்லாப் பாடல்களும் சேரவேந்தர்களின் கல்வித்திறம், மனத்தின்மை, புகழ், கொடைத்திறம் ஆகிய பெருமிதப் பண்புகளையும் படைவன்மை, போர்த்திறம், ஆட்சிச் சிறப்பினையும் நயமுற விளக்குகின்றன.

அரசியல் நிலை, சமுதாயநிலை முதலியவற்றின் வரலாற்றை அறியவும் புறப்பாடல்கள் துணை செய்கின்றன. சங்க எட்டுத்தொகையில் 'ஒத்த பதிற்றுப்பத்து' என்று சிறப்பித்துக் கூறப்படும் நூல் பதிற்றுப்பத்து ஆகும்.

'பதிற்றுப்பத்து' என்றால் பத்துப்பத்து எனப்பொருள்படும். பத்துச்சேர மன்னர்களைப் பத்துப்புலவர்கள் பாடிய பத்துப் பத்துப்பாடல்களின் தொகுப்பு பதிற்றுப்பத்து ஆகும். இதில் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. முடியுடை வேந்தர் மூவருள்ளும் சேரமன்னர்களின் சிறப்பை விளக்கும் வரலாற்று நூலாகவும் விளங்குகின்றது. அது மட்டுமின்றி பழங்காலத் தமிழ் மக்களைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

**உடைமைகளைச் சிதைத்தல்**

சேரர் கொடையில் எத்தகைய ஈகைத் திறம் உடையவராக உள்ளனரோ அவ்வாறே படையில் வன்மையுடையவர் எனவும், இரவலர்பால் எவ்வளவு இரக்கம் உடையவராக உள்ளனரோ அவ்வளவு பகைவர்க்கு இரங்காமையுடையவர் எனவும் பதிற்றுப்பத்துப் புலவர்கள் சேரரர்களின் கொடை மடத்தையும் படை மறத்தையும் வருணிக்கின்றனர். ஆரல் மீன்கள் துள்ளும் ஆட்டுக்கிடை கட்டிய வயல்கள். பன்றி கிண்ட உழாமல் விதைத்த

நெல்கள். எருமையை உண்ண அழைக்கும் கரும்பின் பாத்திற்பூத்த நெய்தல்கள். வளைந்த தலையுடைய முதுபசுக்கள். ஆம்பற் பூவை உண்ணும் ஆட்டின் இடங்கள், தென்னையும் மருதமும் பூம்பொய்கையும் செழித்த ஊர்கள். இவ்வாறான வளங்களைப் புலவர் பாடுவதற்கு அமைந்த பகைவர் நாடுகளைப் பொலிவழிய யமன் புகுந்த உடல்போலச் சேரலாதன் கோபங்கொண்டு அழித்தான். அதனால் அந்தச் செழிப்பிடங்கள் யாதும் முளையாப் பாழிடம் ஆயின. பகைவர் நாடுகள் முன்பிருந்த வாழ்நிலையையும், சேரன் படையெடுத்த பின் இருக்கும் பாழ்நிலையையும் கண்ணுற்றவர்கட்டு உள்ளம் அழியும் சேரனொடு பகைக்கும் முனைப்பே வராது என்பதனை,

. . . . . . . . . . . . . . . . . . . . . .
பாடல் சான்ற பயங்கெழு வைப்பின்
நாடுகவின் அழிய நாமங் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீ சிவந் திறுத்த நீரழி பாக்கம்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
உள்ளம் அழிய உனக்குநர் மிடல்புத்து
உள்ளுநர் பனிக்கும் பாழாயினவே[87]

எனக் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ளார். இப்பாடல் சேரனின் போர்த்திறத்தையும் பகைவரை வெருவச் செய்யும் போர் முறையையும் எடுத்துரைக்கின்றது.

## வாழிடங்களைத் தீயிட்டு அழித்தல்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் இருபத்தைந்தாண்டு காலம் அரசு வீற்றிருந்தான். அவன் போரில் அளவற்ற யானைகளோடு சென்ற ஆற்றல் மிக்குவென்ற குட்டுவனாதலின், பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்ற பெயரைப் பெற்றான். உம்பற்காடு என்னும் நாட்டினைத் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தவன் அகப்பா என்னும் கோட்டையை வென்று அதனைப் பகலில் தீயிட்டு அழித்தவன். கரிய ஆண் யானையை மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரை வரை ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்பட நிற்கச் செய்து அவற்றின்

வாயிலாக அவ்விரு கடல் நீரையும் கொண்டுவரச் செய்து நீராடியவன் என்பதை,

அகப்பா எறிந்து பகல் தீ வேட்டு
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
கண் அகன் வைப்பின் மண் வகுத்து ஈந்து
கருங்களிற்று யானைப் புணர் நிரைநீட்டி
இருகடல் நீரும் ஒரு பகல் ஆடி[88]

என்று பதிற்றுப்பத்து - மூன்றாவது பத்தில் பாடுகிறார் பாலைக் கௌதமனார்.

**மதில்களை அழித்தல்**

சேரர்களின் போர் விளைவுகளைப் பற்றிக் கூறும்போது குதிரைப்படைகள் புகுந்து வயலைச் சிதைத்தமையால் கலப்பைகட்கு வேலையில்லை. மதநீர் ஒழுகும் யானைக் கூட்டம் வயல் முழுதும் நடமாடியதால் பயிர்வளம் என்பதில்லை. போர் வீரர்கள் புகுந்தமையால் மக்கள் கூடிய மன்றங்கள் கழுதை அடையும் குட்டிச் சுவர்கள் ஆயின. பகைவரின் மதில்கள் காப்பும் கதவுமின்றி வெற்றிடமாயின. மேலும் சிவந்த நெருப்புக் கொழுந்து கற்றோடு கூடியதால் வழியெல்லாம் பெரும்பாழாயின. இதற்குக்காரணம் பகை மன்னர்கள் உன்னைப் பகைத்துக் கொண்டதன் விளைவுதான் என்கிறார்; பதிற்றுப்பத்துப் புலவர் பாலைக் கௌதமனார். அவர்,

மாவாடிய புலம் நாஞ்சில் ஆடா;
கடாஅஞ் செவ்விய கருங்கண்யானை
இனம்பரந்த புலம்வளம்பரப் பறியா
நின்படைஞர் சேர்ந்த மன்றம் கழுதைபோகி
நீ உடன்றோர் மன்னெயில் தோட்டிவையா[89]

என்று பல்யானைச் செல்கெழு குட்டுவனால் ஏற்பட்ட போரின் விளைவுகளை, இயற்கைச் சிதைவுகளை இப்பாடலில் கூறுகின்றார்.

## மன்னனின் வள்ளண்மைப் பண்பு

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் வள்ளன்மையை வருணிக்க முனைந்த நச்செள்ளையார், இரவலர்கள் தாமாகவே தன்னை நாடி வராவிட்டாலும், அவர்களைத் தேடிச் சென்று தேரிலே ஏற்றி வந்து மனம்மாற வரிசை செய்வான் என்று புகழுகின்றார். மேலும் சேரலாதன் நற்குணங்களால் நிரம்பியவர்களைப் புரத்தலில் வல்லோன் என்றும், தன் தேரைப் பிறநாடுகளுக்கு அனுப்பி, அதில் அவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு உணவைத் தருபவன் என்றும் பகைவரும் கேட்டற்கு விருப்பம் மிகுதற்குக் காரணமான மெய்யான மொழியையுடைய புகழ்மிக்க தலைவன் என்றும் புகழ்கின்றார்.

வாரார் ஆயினும் இரவலர், வேண்டி
தேரின் தந்து, அவர்க்கு ஆர் பதன் நல்கும்
நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்[90]

என்பதன் வழி சேரமன்னனின் வள்ளன்மைப் பண்புப் புலப்படுகிறது.

## பரிசுப் பொருட்கள்

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் தன்னை நாடிவந்த விறலியர்கள் நிறையப் பூத்துள்ள வேங்கை மரத்தைப்போல விளங்குகின்ற அணிகலன்களை அணிந்து அழகு பெற்றுச் சிறந்து விளங்குவன்; என்று கூறப்பெறுகிறான். அவன் கொடை கொடுக்கும் பெருந்தன்மையுடையவன். ஆதலால் பாணர்கள் பசிய பொன்னால் செய்த தாமரை மலரைச் சூடுவர். பாணரில் சிறுவர் இனிய களிப்பு வழுவாத மென்சொல்லை விரும்பி நெஞ்சில் மிக்க மகிழ்ச்சியோடு அகன்ற போர்க்களத்தை வாழ்த்தும் தன்மையைப் பெற்றவர்கள்.

மேலும், அங்குசத்தின் எல்லையைக் கடவாது பூண் அணியப்பெற்று, விளங்குபவையும், பாகர் ஏவுதலின்படி நடப்பனவும் ஒள்ளிய தீப்பொறிகள் கலந்து தோன்றும்படி காட்டை இடமாகக் கொண்டனவும் நாட்டிலுள்ளோரெல்லாரும் காணத்தக்க விளங்குகின்ற காட்டுத்தீயைப் போன்ற சினத்தீயை வெளிப்படுத்தும் வலிமையுடையனவாய்ப் போர்த்தொழிலை விரும்பும் யானைகள் பலவற்றையும் நார்முடிச்சேரல் பரிசாக அளிப்பான் என்று அவனின் கொடைப்பண்பு போற்றப்பெறுகின்றது.

**மன்னனை வாழ்த்துதல்**

*புலவர் ஒருவர் சேர மன்னனை வாழ்த்தும்போது "பலருக்கும் பகுத்தளிப்பதற்கே செல்வத்தைச் சேர்த்துவை" என்று வாழ்த்துகிறார். தன்னிடம் பரிசில் பெறும் இரவலர்களின் செல்வமாக இருப்பவனே! பாணனையுடைய நான்கு உலகத்தை உடையவனே! பழியில்லாத செல்வத்தைப் பெற்றவனே! வானவரம்பன் என்னும் பெயரினையுடையவனே! என்று பலவாறாக கூறி "இனிய பொருட்கள் பலவற்றை நின்பாற் பெற்றால் அவற்றை வேறுவேறாகத் துய்ப்போம் நீ தருவாயாக" என்று கேட்பதற்கு முன்னே கெடுதலில்லாத மனத்துடனே பிறருடன் பகுத்துண்ணும் உணவை இரவலருக்குச் சேரும் வகையில் கொடுத்த ஆண்மையையுடையவன் நீ! அத்தகைய நின் ஈகைச் சிறப்பால் பிறர்க்கென நீ வாழ்வாயாக! என வாழ்த்துகிறார். அப்பாடல்,*

இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்
தருகஎன விழையாத் தாஇல் நெஞ்சத்து
பகுத்தூண் தொகுத்த ஆண்மை
பிறர்க்கு என வாழ்த்தி நீ ஆகன்மாறே[91]

*என்பதாகும்.*

**வேள்வியும் விருந்தும்**

*பண்டைத் தமிழ்மன்னர் சிலர் வேத வேள்விகளை ஆதரித்து வந்தனர். தெய்வங்களுக்கு விருந்தளிப்பது வேதவேள்வியாகும். மக்களுக்கு உணவளிப்பது விருந்தாகும். இவை இரண்டும் அதாவது வேள்வியும் விருந்தும் ஒன்றே என்பது மன்னர்களின் கொள்கையாக உள்ளன.*

*"சொல், பெயர், நாட்டம், கேள்வி, நெஞ்சம்" என்று ஐந்துடன் போற்றி அவை துணையாக துன்பம் குழாது விளங்கிய கொள்கையாக மன்னர்கள் எண்ணினர் என்பதை,*

காலையன்ன சீர்சால் வாய்மொழி
உருகெழு மரபின் கடவுட்பேணியர்

கொண்ட தீயின் சுடர்எழு தோறும்

விரும்புமெய்பரந்த பெரும்பெயர் ஆவுதி[92]

என்ற பதிற்றுப்பத்து பாடல் சுட்டுகிறது. அக்கால அந்தணர் சொல்லிலக்கண நூல், பொருள் இலக்கணநூல் சோதிட நூல், வேதநூல் அடங்கிய வெள்ளம் என்ற ஐந்தையும் போற்றிப் பாதுகாத்தவர்கள். அந்நூற்களின் துணையால் எவ்வுயிர்க்கும் தீமை செய்யாமல் வாழ்கின்ற சிறந்த கொள்கையுடையவர்கள். சூரியனைப் போல என்றும் தவறாத உயர்ந்த உண்மையைப் பேசுபவர்களைப் பாதுகாப்பதற்காக வேள்வி மேற்கொள்ளப்படுகிறது. அவ்வேள்வித் தீயின் நெருப்பு உயர்ந்து எரியும் தன்மையானது எல்லோரும் விரும்பும் உண்மையை விளக்குவதன் பொருட்டுப் பரவி நிற்கின்றது; என்னும் கருத்தை உணர்த்துவதாகும். இவ்வாறு வேள்வி செய்யும் அந்தணர்களின் அறிவையும் ஒழுக்கத்தையும் அறியலாம். மேலும் விருந்து போற்றும் பண்பை,

வருநர் வரையார், வாரவேண்டி

விருந்துகள் மாறாது உணீஇய பாசவர்

உனைத்தழித்த வான்நிணக் கொழும்குறை

குய்யிடுதோறும் ஆனாது ஆர்ப்பக்

கடல்ஒலி கொண்டு செழுநகர் வரைப்பின்

நடுவண் எழுந்த ஆடுநெய் ஆவுதி[93]

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. இப்பாடலில் தம் இல்லிற்கு வருகின்றவர்களை அன்புடன் உண்டு செல்லும்படி வேண்டிக் கொள்ளுகின்றனர். விருந்தினர்கள் உடனே திரும்பிப் போகாமல் தங்கியிருந்து உண்ணும்பொருட்டும், ஆட்டு இறைச்சியைக் குய்யென்ற ஓசையுடன் பொரித்து எடுக்கின்றனர். இவ்வாறு நகரின் நடுவிலே சமைக்கின்ற அவ்வேள்வியிலிருந்து கடலொலி போல ஓசையெழுகின்றது. அக்காலத்தில் விருந்தினர்க்கு செய்யும் சமையலை வேள்வி அதாவது “அடுநெய் ஆவுதி” என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

**சாதிப் பிரிவு**

பண்டைய நாளில் மக்கள் வேட்டுவர், இருளர், வில்லியர் எனப் பகுக்கப் பெற்றனர். இப்பகுப்பு முறைகளில் சில நேரங்களில் வாழுமிடக்கூறுகளும், சூழ்நிலைக் கூறுகளும் இணைந்திருந்தன. நாளடைவில்

வேட்டுவருக்கும், குறவருக்குமே வேறுபாடுகள் காணப்பெற்றன. வேட்டுவர் வேட்டையாடுதலை நிகழ்த்திக் குன்றில் உறைந்த குன்றக்குறவர் எனவும், குறவர்களில் சற்றுக் குறைந்த பொருளாதார வாழ்வு உடையவர் கொடியர் கொடிச்சியர் எனவும் பிர்த்துக் காட்டப்பெற்றனர். எனவே தொழில்முறையில் பிரிவுகள் அமைந்திருந்தனவேயன்றிப் பிறப்பினால் பிரிவுகள் இல்லை. தீண்டாமை எனும் கொடிய பழக்கம் காணப்பெறவில்லை. அரசரும், பாணரும், அந்தணரும் ஒன்றாக இருந்திருக்கின்றனர் என்பது சங்கப் புறப்பாடல்களின் மூலம் அறியப் பெறுகிறது.

**அறுதொழில்**

பார்ப்பனர்கள் அக்காலத்தில் அறுதொழில் புரிவோராகவும், தருமத்தைச் செய்பவர்களாகவும் இருந்தனர் என்பதை,

> . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
> ஓதல் வேட்டல் அவைபிறர்ச்செய்தல்
> ஈதல் ஏற்றலென்று ஆறுபுரிந்தொழுகும்
> அறம்புரி அந்தணர் வழிமொழிந்தொழுகி[94]

என்ற பாடல் கூறுகிறது. பொருள் வேண்டிக் கையேந்தி நின்ற பார்ப்பனருக்கு அவருடைய கைநிறையும்படி பொற்காசும் பொற்பூவும் நீருடன் அள்ளிக் கொடுத்திருப்பதையும், அந்தணருக்குரிய ஆறு தொழில்களாக ஓதுதல், வேள்வி செய்தல், பிறரும் வேதத்தை ஓதச் செய்தல், வேள்வி செய்வித்தல், ஈதல், கொள்ளத்தகும் பொருட்களை ஏற்றல் ஆகியவற்றைப் பற்றி அறியமுடிகிறது.

பண்டைத் தமிழ் மக்கள் இயற்கை அமைப்பிற்கேற்பத் தங்கள் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொண்டனர். தொல்காப்பியப் பொருளதிகாரம் குறிப்பிடும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப்பகுதிகள் இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்டன. ஒவ்வொரு நிலப்பகுதியிலும் வாழ்ந்த மக்கள் அந்தந்த நிலப்பகுதிகளுக்கு ஏற்பத் தங்கள் தொழில் முறைகளையும் அமைத்துக் கொண்டார்கள். இதனை,

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்[95]

என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். தொழில் அடிப்படையில் மனிதர்கள் வேறுபடுத்தப்பட்டனர். பிறப்பால் அல்ல என்பதை வள்ளுவரும்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்[96]

என்ற குறள் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

## இனம், குடி

இனம், குடி என்பன பொதுச்சுட்டுகளாக அமைந்துள்ளன. குடி என்ற சொல் பொதுமையாகப் பலரையும் சுட்டி வந்துள்ளது. அரசனின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் தொகுதியினர் ‘குடி’ எனப்பட்டனர். வெவ்வேறு தொழிலினரான மக்களும் குடிப்பெயரினைத் தம் பெயரோடு இணைத்துக் கொண்டனர். தானியங்கள் விற்போரும், உழவரும் குடிகளாயினர். நாடு, ஊர், குடி, மனை என்பன முறையே ஒன்று அடங்கியிருந்தன. ஏழைகளும் செல்வரும் குடியாக அமைந்தனர்.

இரவல் மாக்கள் சிறுகுடி பெருக[97]

என்றனர். குடி என்பது சங்க காலத்தில் சிறு எண்ணிக்கையினைக் கொண்டதன்று. பலரை உடையது. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று இந்நான்கும் இல்லாமல் வேறுகுடிகள் இல்லை என்பதை,

துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை[98]

என்னும் இவ்வரிகள் உணர்த்துகின்றன.

## மகளிர் நிலை

பூப்போன்ற கண்களும் மூங்கில் போன்ற திரண்ட தோள்களும், பிறை போன்று, மதியை மயக்கும் நெற்றியும் உடையவராய் மகளிர் திகழ்ந்தனர். மகளிர் விருந்தோம்பும் பண்பில் சிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல் சங்கப்புலவர் வரிசையிலும் இடம் பெற்றிருந்தனர். காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், வெண்ணிக்குயத்தியார் ஆகிய இருவரும் சேர வரலாற்றில்

குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெற்றவர்கள் ஆவர். முல்லை நில மகளிர் தங்களால் விரும்பி வளர்க்கப்பட்ட வலிய காளைகளை அடக்கிய வீரர்களையே மணக்க விரும்பினர் என்பதை முல்லைக்கலிப் பாடல்கள் உணர்த்துகின்றன.

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பெண் கற்கும் உரிமையும், கவிபாடும் உரிமை, காதலுரிமை, இல்லறத் தொழிலுரிமை என எல்லாப் பெருமையும் புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தாள். மேலம் ஆண்கள் பரத்தையரோடு புணர இல்லற மகளிர் கற்பின் திறத்தால் சிறந்து விளங்கினர் என்பதை,

ஆரிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை
அமிர்து பொதி துவர்வாய் அமர்ந்த நோக்கு[99]

என்னும் பாடல் கூறுகின்றது. தன் கணவனையின்றிப் பிற ஆடவரைக் கனவிலும் கருதாது ஒழுகும் உள்ளத்திண்மையே கற்பு எனப்படும் உயிரினும் நாணும், நாணினும் கற்பும் சிறந்தனவாகப் போற்றப்பட்டன.

எனினும் கணவனை இழந்து கைம்மை நிலையடைந்த பெண்டிர் வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றில் தம் விருப்பத்திற்கு மாறான கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டியதாயிற்று. இந்நிலை ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பு வளர்ச்சியடைவதற்கு துணையாக இருந்திருக்கின்றது எனலாம்.

உடன்போக்குச் சென்றுவிட்ட மகளைத் தேடி அலையும் செவிலித்தாயிடம் அறவோர் சந்தனம், முத்து, இசை ஆகியன பிறக்கும் இடத்திற்குப் பயன்தரா, அவற்றின் பயன்பாடு நுகர்வோர்க்கே உரியது. அதுபோல நின் மகளும் அத்தன்மையளே எனக் கூறுவதை,

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
இறந்த கற்பினாட்டு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறத்தலைப் பிரியா ஆறுமற்றதுவே[100]

என்று கலித்தொகைப் பாடல் சுட்டிக் காட்டுகிறது. இப்பாடல் சமுதாயத்தில் மகளிரின் இருத்தல் நிலை பற்றிக் கூறுகிறது. மேலும்,

முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள்[101]

வடமீன் புரையும் கற்பின் மடமொழி அறிவை[102]

எனவும்,

மீனொ டுரையும் கற்பின் வானுதல் அறிவை[103]

அருந்ததி அனைய கற்பு[104]

என்ற பாடல்கள் மூலம் மகளிரின் சிறப்பை கலித்தொகை எடுத்தியம்புகிறது.

மென்மை வாய்ந்த மகளிர், தம் அன்பினாலும் பண்பினாலும் வன்மை மிக்க ஆடவர்களைப் பணித்தனர். இதனைப் பற்றி,

மகளிர் மலைத்தல் அல்லது மன்னர்

மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப[105]

எனவும்,

வணங்குசிலை பொருந்தரின் மணங்கமழ் அகலம்

மகளிர்க்கு அல்லது மலர்ப்ப அறியலியே[106]

என்ற பாடலடிகளின் மூலம் பெருவீரம் பொருந்திய ஆடவர் மகளிரின் மென்மைக்குப் பணிந்துள்ளனர் என்பதை உணரலாம்.

## அரச சின்னங்கள்

சங்கத் தமிழ்நாட்டில் முரசு புனிதமாகக் கருதப்பட்டது. அது அழகிய கட்டிலில் வைக்கப்பட்டுள்ளது. முரசுக்குக் குருதி பலியிடுவதும் உண்டு. முரசைக் கழுவி, எண்ணெய் பூசி மயிற்பீலியும் மாலையும் சூட்டி அதனைப் பாதுகாத்து வந்திருக்கின்றனர். அது வைக்கப்படும் கட்டிலில் யாரும் அமர்தல் குற்றமாகும். அமைதிக் காலத்திலும் போர்க்காலத்திலும் முரசு முழங்கியது. ஊர்த்திருவிழாவினை முரசு முழங்கி அறிவித்தனர். வள்ளுவர் யானையின் மேல் அமர்ந்து பிடரியில் முரசை வைத்து முழங்குவார். முரசு கொட்டுவதற்கு வள்ளுவர் என்பார் இருந்தனர். காவல் தொழிலுக்குரிய சின்னம் முரசு ஆகும். அது புலியைக் கொன்ற யானையின் தோலால் செய்யப்படுவதாகக் கூறுவர். இடியோசை போன்று ஒலிக்கக் கூடிய முரசு படை செல்லும் திசையில் நல்ல

வேளையில் வாளோடு எடுத்துச் செல்லப்படும். பகைவரின் முரசத்தைக் கைப்பற்றுவது பெரிய வெற்றியாகும் என்பதனை,

இருபெரு வேந்தரையும் உடனிலைவென்று
முரசும் குடையும் கலனுங் கொண்டு[107]

என்ற பாடல்வரி மூலம் அறியலாம். அக்காலத்தில் வீரமுரசு, தியாக முரசு, நியாய முரசு எனப் பல முரசுகள் இருந்துள்ளன.

வாள் வீரத்தின் சின்னமாகும். மன்னனை ‘வாளோர் உழவன்’ எனப் பாராட்டினர். நல்ல நாளில் வாளை எடுத்துச் செல்ல வேண்டிய திசையில் செலுத்தும் நிகழ்ச்சியை ‘வாள் நாட்கோள்’ என்பர். போர்க்களத்தில் கொடி உயரப் பறக்கும். அது வேல்கொடி எனப்படும். இதனை,

நிலம்புடைப்பு அன்ன ஆர்ப்பொடு விசும்பு துடைய
வான்தோய் வெல்கொடி தேர்மிசை நுடங்கப்[108]

என்ற பாடல்வரி மூலம் அறியலாம்.

**கொடைத்திறன்**

சங்க காலத்தில் பதிற்றுப்பத்து பாடிய புலவர்க்குச் சேரர்கள் அளித்த கொடைகள் அளவிடற்கரியது. பொருள் என்பது புகழுக்கு ஒரு கருவி என்பதனை மரபாக அறிந்த சேரர்கள் தங்கட்குத் தமிழில் ஒரு குல இலக்கியத்தைத் தேடிக் கொண்டனர். அன்று எழுந்த சேரர் குல இலக்கியம் இன்று தமிழின் இலக்கியமாகத் தமிழினத்தின் கொடைத்திறம் காட்டும் வரலாறாக விளங்குகிறது. ஒருவன் உடைமை கொடையாக மாறும்போது, அக்கொடைப் பயன் பொதுப் பயனாக மலர்கின்றது எனலாம்.

மன்னர்கள் ஆட்சி வன்மையும், படை வன்மையும் உடையவர்களாக இருப்பதும், இருக்க வேண்டியதும் பொதுத் தன்மையாகும். எனினும் கொடையாளியாக இருப்பது சிறப்புத்தன்மையாகும். தமிழக வேந்தர்கள் பொதுவாக வீரப் புகழும் சிறப்பான கொடைப்புகழும் வாய்ந்தவர்கள்.

சேரமன்னன் விறலியர்க்குப் பல பெண் யானைகளைப் பரிசாக வழங்கியுள்ளான். பல முத்து மாலைகளைத் தந்திருக்கிறான். உடுப்பவையும் அணிபவையும் பெறுவது மட்டும் அல்லாமல் உண்பனவற்றையும் கொடையாகப் பெற்றார்கள் என்பதனை,

யாமம் சேறுகம் நீயிறும் வம்மின்
துயிலுங் கோதைத் துளங்கியல் விறலியர்
கொளைவல் வாழ்க்கை நுங்கிளையினது உண்இயர்[109]

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

**புலவர் நிலை**

ஒரு நாட்டின் பண்பட்ட மரபுகளைக் கட்டிக்காக்கும் காவலராகவும், வாழ்வுக்கு நெறியமைத்து ஒழுங்குபடுத்தும் பொறுப்பாளராகவும் விளங்குவோர் கற்றறிந்த சான்றோராவர். இதனை நன்கு உணர்ந்த சங்க காலச் சமூகம், புலவர்களுக்கு மிகப் பெரிய சிறப்பளித்தனர். குறிப்பாக சேரமன்னன் செங்குட்டுவன் தன்னைப் பாடி சிறப்பித்த பரணருக்குப் பணிவிடை செய்யத் தம் மகன் சேரலாதனை அனுப்பியுள்ளான். புலவர் பிசிராந்தையார் தம் நரையில்லாத இன்ப வாழ்விற்குக் கூறும் காரணங்களுள் சான்றோர் பலர் தம் ஊரில் வாழ்தல் ஒன்றாகும் என்கிறார். புலவர்கள் வறுமையைப் பேசும் இடம் எல்லாம் பொருளைப் பெறும் நோக்கம் ஒன்று மட்டுமே என்று கூறுவதற்கு இடம் இல்லை. காட்டில் வாழ்ந்த குமண வள்ளலைப் பெருந்தலைச் சாத்தனார் புகழ்ந்து பாடுகின்றார். அப்பாட்டில் கொடிய வறுமைத் துன்பம் விளக்கப்பட்டாலும், பொருள் ஏதும் வேண்டவில்லை என்பதைக் காணலாம்.

அன்றையத் தமிழ் மன்னர்கள் தம் நாட்டறிஞர் பசியால் வாடவும் வாழவும் இடமளித்திருக்க மாட்டார்கள். தம் நாட்டு அறிஞர்கள், தம்பகை மன்னர்பால் பொருள் பெற்றுத் தங்கள் வறுமையைத் துடைக்குமாறு விட்டிருப்பின் அது அவர்கட்கு இழுக்கேயாகும் என்பதை உணர்ந்திருப்பார்கள். இவ்வாறாகப் புலவர்களின் வாழ்க்கை நிலை இருந்துள்ளன.

**நல்லறத்தைப் பாதுகாத்தல்**

*குடிமக்கள் உயிரினும் சிறந்தது ஒழுக்கமே என்ற உண்மையை உணர்ந்திருந்தனர் என்பதற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்.*

சினனே, காமம், கழி கண்ணோட்டம்
அச்சம், பொய்ச் சொல், அன்பு மிக உடைமை
தெறல், கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியமையாகும்.[110]

*இப்பாடல், மிகுந்த கோபமும், மிகுந்த காமமும், அளவிறந்த கண்ணோட்டமும், பகைவர்க்கு அஞ்சுதலும், பொய் கூறுதலும், பொருளினிடத்து அளவுக்கு மிஞ்சிய பற்று வைத்தலும், அளவுக்கு மிஞ்சிய தண்டனை அளித்தலும் இவை போல்வன பிறவும் அறவழியில் ஆட்சி செலுத்துவதற்குத் தடையாவன என்பதைப் புலப்படுத்துகின்றது.*

*சேர மன்னர்களின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியே "பதிற்றுப்பத்து" என்னும் இலக்கியமாகும்.*

**பரிபாடலில் நிகழ்வுகள்**

*பரிபாடல் என்பது பாட்டு வகைகளுள் ஒன்று. இதன் இயல்பைத் தொல்காப்பியம் நன்கு விவரித்து உள்ளது. உறுதிப்பொருள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியன பற்றி பரிபாடலில் கூறப்பட்டு உள்ளது. இது இசைப்பாவாகும். பரிபாட்டு எனவும் இவற்றைக் கூறுவர்.*

*சங்கத்தார் தொகுத்த பரிபாடல்கள் 70 என்பது இறையனாரகப் பொருள் உரையாலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பேராசிரியர் உரையாலும் தெரிய வருகிறது. இப்பாடல்களில் யார் யாரைக் குறித்து எத்தனை பாடல்கள் இருந்தன என்பதை,*

திருமாற்கு இரு - நான்கு; செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டு: காடுகாட்டு ஒன்று; மருவினிய
வையை இருபத்தாறு; மாமதுரை நான்கு என்ப
செய்ய பரிபாடல் திறம்

*என்ற வெண்பா பாடல் எடுத்துக்காட்டுகின்றது. முதல் 22 பாடல்கள் மட்டும் இப்பொழுது நமக்கு பிரதிகளில் கிடைத்துள்ளன. 22 பாடல்களில் 6*

திருமாலுக்கும், 8 முருகனுக்கும், 6 வையைக்கும், 2 மதுரைக்கும் உரியன. இந்நூலைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பெயர் அறியக்கூடவில்லை. பரிபாடலின் சிற்றெல்லை 25 அடி என்றும், பேரெல்லை 400 அடி என்றும் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் துறை, இயற்றிய ஆசிரியர் பெயர், இசை வகுத்தோர் பெயர், பண்ணின் பெயர், பற்றிய பழங்குறிப்புகள் உள்ளன. இந்நூலுக்கு உரை வகுத்தவர் பரிமேலழகர் ஆவார்.

**நகரின் உள்ளமைப்பு**

நகரின் உள்ளமைப்பு அரசன் இருக்கையை நடுவாகக் கொண்டு அந்தணர், அரசர், வேளாளர் என்னும் நாற்பெருங்குடி மக்கள் வீதிகளும், போர் மறவர், கொல்லர், குயவர் முதலிய பல்வேறு தொழில் புரியும் மாந்தரும் வாழும் வீதிகளும் முறை முறையாக அமைந்திருந்தன. இந்த அமைப்பு தாமரைப்பூவின் நடுவிலுள்ள கொட்டையை அடுத்து இதழ்கள் அமைந்திருப்பதைப் போல உள்ளது என்று மதுரை நகரையும் கச்சி நகரையும் குறிப்பதிலிருந்து நகரங்கள் ஒருவகை நியதியின்படி அமைக்கப்பட்டிருந்தன என்பதை உணரலாம்.

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவோடு புரையும், சீர் ஊர், பூவின்
இதழகத்து அனைய தெருவம், இதழகத்து
அரும் பொகுட்கு அனைத்தே; அண்ணல்கோயில்
தாதின் அணையர், தண் தமிழ்க் குடிகள்[111]

என மதுரை அமைப்பைப் பரிபாடல் கூறுகிறது. இவ்வாறே கச்சியின் அமைப்பும் உள்ளதை,

நீல நிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மலர்தலை உலகத்துள்ளும் பலர்தொழ
விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்[112]

எனவரும் பெரும்பாணாற்றுப்படையால் அறியலாம்.

**மக்களின் வாழ்க்கை நிலை**

*இரவில் ஊர் காப்பாளர்கள் நகரில் சுற்றித் திரிந்து காவல் புரிந்தனர். மதுரை மா நகரில் இரவின் நான்கு சாமங்களிலும் எந்தெந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதை மதுரைக்காஞ்சி (536-639) விரிவாகத் தருகிறது.*

*நாழிகை அறிவிப்போர் கன்னல் என்னும் நாழிகை வட்டினால் காலத்தை அளந்து மக்களுக்கு அறிவித்து வந்தனர். விடியற்காலையில் கிழக்கே வெள்ளி தோன்றுதலும் நகரத்தில் அமைதி கலைகிறது. பொய்கை மலரின் இன்னொலி செய்யும் வண்டைப் போல அந்தணர்கள் வேதம்பாடத் தொடங்குகின்றனர். ஏனைய நகரங்களில் கோழியின் குரலால் மக்கள் துயில் எழுவது போலன்றி மதுரை மக்கள் மறை ஒலியால் துயில் எழுகின்றனர் என்பதை,*

நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழியும் வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாது எம்பேர் ஊர்துயிலே[113]

*என்கிறார் புலவர். யாழோர் காலைப் பண்ணாகிய மருதப் பண்ணை இசைக்கின்றனர். பரிக்காரர் யானைக்குக் கவளத்தை உண்பிக்கின்றனர். குதிரைகள் புல் உணவைத் தின்று குதட்டுகின்றன. பல்வேறு வகைப்பட்ட பண்டங்கள் விற்கும் கடைகளை மெழுகுகின்றனர். கள் விற்போர் கள் விலை பகர்ந்து செல்கின்றனர். கள்ளுண்டு களித்தோர் முழங்கும் குரல்கள் ஒலிக்கின்றன. மகளிர் சிலம்பொலிக்க எழுந்து கதவுகளைத் திறத்தலினால் கதவோசைகள் எழுகின்றன. வேதாளிகர், நாழிகை செல்வார் தத்தம் துறைக்குரியவற்றை இயம்புகின்றனர். எருதுகள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு முழங்குகின்றன. புள்ளியோடு அழகிய நிறத்தை உடைய கோழிச் சேவல்களும் அழகிய மயில்களும் தத்தம் பெடைகளைக் கூவி அழைக்கின்றன. இவ்வகையான நிகழ்ச்சிகள் மதுரை மாநகரில் நிகழ்வதாக மதுரைக்காஞ்சி தெரிவிக்கிறது.*

**வணிகர்**

வணிகத் தொழில் புரிவதால் வணிகர் எனப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த இல்லங்கள் மலை போன்று உயர்ந்து விளங்கின. பலவகைத் தொழில் மாட்சிகள் பெற்று இருந்தன. இவற்றின் கூரைகளிலே பருந்துகள் தங்கி இளைப்பாறி இருந்து மேலே பறக்குமாம். அறனெறி சிறிதும் பிறழாது இல்லத்திற்குரிய வழிகளிலேயே வாழ்க்கை நடத்தினர். பல்வகைப் பண்டங்களும் பல்வகை உணவுகளும் வணிகர் இல்லங்களில் நிரம்பியிருந்தன.

மலை, நிலம், நீர் இவைகளிலிருந்து தோன்றும் பல்வகைப் பண்டங்களையும் விற்றனர். மணி, முத்து, பொன் முதலிய சிறந்த பொருள்களும் இடம்பெற்றன. தேவர்களை வழிபட்டும், வேள்வியில் ஆவுதி செய்தும், பசுக்களையும் எருதுகளையும் ஓம்பியும் வாழ்ந்தனர். நான்மறையோர்க்குத் தானமளித்து உணவு முதலியன கொடுத்தனர். நடுநிலையில் இருக்கும் நெஞ்சத்தவர், கொடுப்பதிலும், கொள்வதிலும் கூடுதல் குறைவின்றி நேர்மையாக வாணிகத்தைப் போற்றினர். இதனை,

புண்ணியம் முட்டா தண்ணிழல் வாழ்க்கை[114]

உடையர் என்று சிறப்பிக்கப்படுகின்றனர். இவர்கள் வாழ்ந்த தெருவினை,

ஆங்கு ஓர்சார் உண்ணுவ, பூசுவ, பூண்ப, உடுப்பவை
மண்ணுவ, மணி, பொன் மலைய கடல்
பண்ணியம், மாசு அறு பயம்தரு கருகப்
புண்ணிய வணிகர் புனைமறுகு ஒருசார்[115]

எனப் பரிபாடல் இயம்புகிறது.

**கூத்தாடுவோர்**

மகளிர் விழாக் காலங்களில் துணங்கைக்கூத்தும் குரவைக் கூத்தாடுதலும், அப்பொழுது ஆடவர் அம்மகளிர்க்கு முதற்கை கொடுத்தலும் நிகழ்வதாகக் கூறப்படுகின்றது.

மன்னர் குழீஇய விழவினாலும்
மகளிர் தரீஇய துணங்கையானும்
யாண்டும் காணேன் மாண் தக்கோனை[116]

என்ற குறுந்தொகைப் பாட்டில் ஆடுகள மகள், ஆடுகள மகன் எனத் துணங்கைக் கூத்தாடியவர் குறிப்பிடப்பெறுகின்றனர்.

பாடுவார் பாணிச்சீரும், ஆடுவார் அரங்கத்தாளமும்[117]

பாடுவார் பாடல், பரவல், பழிச்சுதல்,

ஆடுவார் ஆல் அமர்ந்த சீர்ப்பாணி[118]

என வருதலின், இவர்கள் ஊர்களில் நிலையாகத் தங்கி, ஆடல் பாடல்களில் ஈடுபட்ட வகுப்பினராவர். இவ்வகுப்பாரும் விழாக்காலங்களில் ஆடல் பாடல் நிகழ்த்தி உள்ளனர். நாடகம் ஆடுதலும் இம்மகளிர் இயல்பு. பாடுவார், ஆடுவார் என்னும் இருவகை இனத்தாரைக் குறிப்பிடுகின்றனர். இவர்கள் திருக்கோயில்களில் பாடல் ஆடல் நிகழ்த்தியோராவர். இவர்களின் நிலையை,

பாடுவார் பக்கம் கொண்டென,

ஆடுவார் சேரி அடைந்ததென[119]

எனவும்,

நாடக மகளிர் ஆடுகளத்து அடுத்த

விசி வீங்கு இன்னியம் கடுப்ப

சேரிதோறும்[120]

எனவும்,

உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ

பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்[121]

எனவரும் பகுதிகளால் ஊரிடத்தே நிலையாகத் தங்கி வாழ்ந்த மகளிர் தம் ஆடல்பாடல் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தியுள்ளனர் என்பது புலனாகும்.

குழல் அகவ, யாழ முரல

முழவுஅதிர, முரசு இயம்ப

விழவு அருவியல் ஆவணத்து[122]

என்ற பாடலடிகள் விழாவில் இசைக்கருவிகளை இன்னிசையுடன் இசைத்துக் கலைநிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர் என்பதற்குச் சான்றாகும்.

**மாலை வகை**

மாலைகள் பலவகை முறைகளால் ஆக்கப்பட்டன. நெற்றின மாலைகள், கோத்த மாலைகள், தொடுத்த மாலைகள், தூக்கிக் கட்டின மாலை எனப் பல்வேறு வகையில் கட்டினர். இவற்றின் அமைப்பிற்கு ஏற்ற வகையில்

*கோதை, தார், மாலை, சூட்டு, கண்ணி என வெவ்வேறு பெயர்களிட்டு வழங்கினர்.*

புகை வகை தைஇயினார் பூங்கோதை நல்லார்

தகை வகை தையினார் தார்;

வகை வகை தைஇயினார் மாலை, மிகமிகச்

சூட்டும் கண்ணியும் மோட்டு விலையமும்

இயல் அணி, அணி நிற்ப ஏறி[123]

*எனவரும் பரிபாடற் பகுதி மகளிர் பல்வகையான மாலைகளைத் தொடுத்து அணிந்துள்ளதை உணர்த்துகிறது.*

மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்

மகளிர் கோதை மைந்தர் மலையவும்

மகளிர் கோதை மைந்தர் புனையவும்

மைந்தர் தண்தார் மகளிர் பெய்யவும்[124]

*எனக் குறிப்பது கொண்டு கண்ணி, தார் என்பனவற்றை ஆடவர் அணிவர் எனவும், கோதை மகளிர் அணியும் மாலையைக் குறிக்கும் எனவும் தெரியவருகின்றது. குறிஞ்சிப்பாட்டில் விவரிக்கப்படும் வில்லேந்தி அம்பு தெரிந்து வேட்டைக்கு வந்த ஆடவன் அணிந்த மாலை முதலியன குறிக்கப்பட்டுள்ளன.*

**திலகம் இடுதல்**

*மகளிர் தமது நெற்றியில் திலகம் இடுதலும் அந்நாள் தொட்டு வரும் மரபேயாகும். செந்நிறத்திலகம் இடுதல் பெருவழக்காயிருந்தது.*

நெற்றி விழியன நிறைதிலகம் இட்டாளே

கொற்றவை கோலம் கொண்டு ஓர் பெண்[125]

*என்ற அடிகள் திலகமிடுதலைச் சுட்டுகின்றன. ஒரு பெண் கொற்றவையின் நெருப்பாகிய நெற்றி விழிக்கு ஒப்பாகத் திலகம் இட்டாள்; என்பதனால் அப்பெண் இட்ட திலகம் செந்நிறத்தது என்பது தெளிவாகும்.*

**மகளிர் அலங்காரம்**

*மகளிர் எவ்வெவ்வகையில் தம்மை அலங்காரம் செய்து கொண்டனர் என்பது குறித்துப் பல குறிப்புகள் சங்கப்பாடல்களில் உள்ளன. காலத்திற்கும்*

*சூழ்நிலைக்கும் ஏற்றதான உடை, அணிவதை மேற்கொண்டனர். வையையின் புதுப்புனல் வரவைக் காணச்சென்ற மகளிரின் கோலத்தைப் பரிபாடல் பின்வருமாறு விளக்குகிறது.*

மின் அவிர் ஒளி இழை வேயுமோரும்
பொன் அடர்ப்பூம்புனை துரத்துவோரும்
அகில்கெழு சாந்தம் மாற்றி ஆற்றும்
புகைகெழு சாந்தம் பூசுவோரும்
கார் கொள்கூந்தல் கதுப்பு அமைப்போரும்[126]

*என்கிறது. இவ்வாறே விழாக்காலங்களிலும் திருமணம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளிலும் மக்கள் பல்வேறு வகையில் தங்களை அலங்கரித்துக் கொள்வது வழக்கமாயிருந்திருக்கிறது.*

*மறத்தமிழரின் வீரமும், மாண்பும், சிறப்பும் பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை உலகம் வியந்து போற்றும் அளவிற்குச் சிறந்து விளங்குகிறது.*

**தொகுப்புரை**

- *சங்க கால மக்களின் அரசியல், சமுதாயநிலை, கல்வி, நாகரிகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்க வழக்கங்கள், வாணிபம் ஆகிய பலவற்றையும் அறிய உதவும் ஓர் இலக்கியப் பேழையாக புறநானூறு விளக்குகிறது.*
- *சமுதாயத்தில் உள்ள எல்லா மக்களுமே ஒழுக்கத்தின் உறைவிடமாக இருத்தல் இயலாது. ஒரு சிலர் ஒழுக்கத்திலிருந்து பிறழ்ந்தும் காணப்படுகின்றனர். மண்ணுக்கும் அரசுரிமைக்கும் பெண்ணுக்கும் போர் தொடுத்திருக்கின்றனர் பண்டை மன்னர்கள். அனைவரும் கல்வி கற்க வேண்டும். கற்பிப்பவர்க்கு அவ்வப்போது உதவிகள் செய்து பொருள் கொடுத்தும் கற்க வேண்டும் என்ற பண்பும் ஒழுக்கமும் பண்டைத் தமிழரிடத்தே காணப்படுகின்றன.*
- *மன்னர்கள் தமக்கு ஓர் இழுக்கு ஏற்படின் அதனைத் தாங்காது தன்குடியின் பெருமையைக் காக்க உயிரையும் விடத் துணியும் உள்ளம் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகிறது.*

- உரிமை கோருதல் என்று வந்துவிட்டால் ஒன்றுபட்டு வெற்றியால் அதை நிலைநாட்ட வேண்டும். இயலாது போனால் சரணடைந்து உரிமையை விட்டுக் கொடுத்து விடவேண்டும் என்ற கருத்து கூறப்பெறுகிறது.
- வீரமும் போர்ப்பண்பும் ஆடவர்க்குரிய இன்றியமையாப் பண்புகளெனச் சங்ககாலம் கருதியது. வீரநிலைக் காலத்தில் நிலவிய போர் விருப்பச் சமூகம் சங்ககாலத்திலும் நிலவியது. வீரரும் ஆன்றவிந் தடங்கிய கொள்கையினரும் 'சான்றோர்' என்ற சொல்லாற் குறிக்கப்பட்டுள்ளனர்.
- வீரநிலைக் கால இரக்கமில்லாக் கொடுஞ்செயல்கள் சங்ககாலத்திலும் இருந்தன. இவற்றை அறமில்லை எனக் கூறி அறிவு தெருட்டிய புலவர்களும் அக்காலத்திலிருந்தனர்.
- தமிழக அரசியலில் அரசுரிமைச் சிக்கல்கள் தோன்றிய காலத்து அவற்றைப் புலமைச் சான்றோரின் அறிவுரையும் அரசக்குடிப் பிறந்த நல்லோரின் தியாக உணர்வும் தவிர்த்துத் துயர் களைந்திருக்கின்றன.
- தமிழகம் மூவேந்தராலும், குறுநில மன்னராலும் பகுதி பகுதியாக ஆளப்பட்டிருப்பினும், மொழி அடிப்படையில் தமிழகத்தை ஒரு நாடாகக் கருதும் உணர்ச்சி புலவரிடையேயும், தம்முள் பொருதிக் கொண்டாலும், தமிழ்வேந்தர் என்ற உணர்வு மூவேந்தரிடையேயும் இருந்துள்ளது.
- மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை ஆகியவற்றைப் பிறருக்கு கொடுத்து மகிழ வேண்டும் எனவும், பரந்த மனப்பான்மையோடு செயல்பட்டனர் என்பதும் புறநானூற்றுப் பாடல்கள் மூலம் அறியமுடிகிறது.
- போர் புரியும்போதுகூட அரசர்கள் பிறரை துன்புறுத்தாமல் இருந்திருக்கின்றனர். உலகத்தார் போற்றும் அறங்களுள் காலத்தால் அழியாதது ஈகை. வள்ளல்கள் வரையாது ஈந்து புலவர் தம் வறுமையினை ஒழித்துள்ளனர்.
- தொழில்முறையில் மனிதருக்குள் பிரிவுகள் அமைந்திருந்தனவே அன்றிப் பிறப்பினால் பிரிவுகள் இல்லை என்று பதிற்றுப்பத்துப்

பாடல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு நிலப்பகுதியிலும் வாழ்ந்த மக்கள் அந்தந்த நிலப்பகுதிகளுக்கு ஏற்பத் தங்கள் தொழில் முறைகளை அமைத்துக் கொண்டார்கள்.

✸ மகளிர் தமது நெற்றியில் திலகம் இடுதல் பற்றியும், எவ்வெவ்வகையில் தங்களை அலங்காரம் செய்து கொண்டனர் என்பது குறித்தும் பல்வேறு குறிப்புகள் சங்கப்பாடல்களில் உள்ளன.

## சான்றெண் குறிப்புகள்

1. **தொல்காப்பியர், தொல்காப்பியம், புறத்.**, நூ.1.
2. **புறநானூறு**, பா.87.
3. **நாலடியார்**, பா.142.
4. மேலது., பா.143.
5. **குறள்**.6.
6. மேலது., 21.
7. மேலது., 990.
8. **புறம்.**, 75.
9. **புறம்.**, பா.341.
10. இரா.ஜெகதீசன், **இலக்கிய ஒழுக்கம்**, ப.2.
11. **புறம்.**, பா.183.
12. **குறள்**.50.
13. **புறம்.**, 44.
14. **குறள்**.776.
15. **புறம்.**, 257.
16. **புறம்**.226.
17. க.கைலாசபதி, **ஒப்பியல் இலக்கியம்,** ப.111.
18. சு.வித்தியானந்தன், **தமிழர் சால்பு,** பக்.83-86.
19. கோ.கேசவன், **மண்ணும் மனித உறவுகளும்,** ப.29.
20. **புறம்**.87.
21. **பெரும்பாணாற்றுப்படை,** அடி.134-136.
22. **புறம்**.31:3-6.
23. மேலது., 6:21-22.
24. மேலது., 16:15-17.
25. **புறத்திரட்டு** 1279.
26. டி.வி.சதாசிவ பண்டாரத்தார், **பிற்காலச் சோழர் சரித்திரம்,** ப.278.
27. **புறம்**.13.
28. மேலது., 109:11-14.

29. **புறம்.** *110:1-2.*

30. **புறப்பொருள் வெண்பாமாலை,** *94.*

31. செ.வேங்கடராமச் செட்டியார், **பாரியொடு மூவேந்தர் போர்,** பக்.*357-377.*

32. ந.ஜெயராமன், **களம் கண்ட கருத்துக்கள்,** ப.*17.*

33. **பதிற்றுப்பத்து** *61:6-10.*

34. **சிலப்பதிகாரம்** *5:90-94.*

35. **கலித்தொகை** *104:1-4.*

36. **புறநானூறு,** *182:5-6.*

37. மேலது., *86:5-6.*

38. மேலது., *306:5-7.*

39. மேலது., *79:1-2.*

40. மேலது., *279:8*

41. மேலது., *41:1-3.*

42. மேலது., *20:18-19.*

43. **பதிற்றுப்பத்து** *61:6.*

44. **புறம்.***9:1-6.*

45. **அகம்.***309:1-6.*

46. **புறம்.***308:10-11.*

47. மேலது., *167:1-7.*

48. மேலது., *65.*

49. மயிலை சீனி.வேங்கடசாமி, **சமணமும் தமிழும்,** ப.*183.*

50. **குறிஞ்சிப்பாட்டு** *27-28.*

51. **பொருநராற்றுப்படை** *54-55.*

52. **மதுரைக்காஞ்சி** *154-158.*

53. நா.செயராமன், **சங்க இலக்கியத்தில் பாடாண்திணை,** பக்.*300-332.*

54. **புறம்.***75:1-2.*

55. **பொருநராற்றுப்படை,** *132.*

56. **பட்டினப்பாலை,** *227.*

57. பொருநராற்றுப்படை, ப.115.
58. புறம்.246-247.
59. பதிற்றுப்பத்து 21:37-38.
60. ந.சுப்ரமணியன், பண்டைய இந்திய அரசியல் ஆட்சி நிலையங்கள், ப.84.
61. புறம்.45.
62. பதிற்றுப்பத்து 74:17-21.
63. புறம்.102:5-6.
64. சிலப்பதிகாரம் 30:175-183.
65. புறம்.357:2.
66. அகம்.22:10.
67. சிலப்பதிகாரம் 21:10-15.
68. புறம்.1225.
69. மேலது., 105:111.
70. மேலது., 236:10-12.
71. சிறுபாணாற்றுப்படை 110-111.
72. அகம்.209:12-15.
73. புறம்.189:5-7.
74. மேலது., 192:1-5.
75. மேலது., 25:11-15.
76. மேலது., 74:1-7.
77. மேலது., 13:2-4.
78. மேலது., 80.
79. மேலது., 107.
80. மேலது., 158.
81. புறம்.68.
82. மேலது., 151.
83. மேலது., 387.
84. மேலது., 368.
85. மேலது., 101:1-3.

86. புறம். 183:1-2, 9-10.

87. பதிற்றுப்பத்து, பா.13:9-19.

88. மேலது., பா.3 ஆம் பத்து, 3-4.

89. மேலது., பா.25:1-5.

90. மேலது., பா.55:10-12.

91. மேலது., பா.38:13-16.

92. மேலது., பா.23.

93. மேலது., பா.29.

94. பதிற்றுப்பத்து 24:6-7.

95. தொல்.புறம்.20:1-3.

96. குறள்.972.

97. பதிற்றுப்பத்து 59:7.

98. புறம்.335.

99. பதிற்றுப்பத்து 16:10-12.

100. கலித்தொகை 9.

101. அகம்.274.

102. புறம்.122.

103. பதிற்றுப்பத்து 89.

104. ஐங்குறுநூறு 442.

105. புறம்.10.

106. பதிற்றுப்பத்து 63.

107. மேலது., 5-6.

108. மேலது., 44:1-2.

109. மேலது., 64:12-14.

110. மேலது., 22:1-4.

111. பரி.8:1-5.

112. பெரும்பாணாற்றுப்படை 402-411.

113. பரி.8:9-12.

114. பட்டினப்பாலை 194-212.

115. பரிபாடல் திரட்டு 1:22-25.

116. குறுந்.31.

117. பரி.8:109.

118. மேலது., 10:116-117.

119. மேலது., 7:31-32.

120. பெரும்பாணாற்றுப்படை 55-56.

121. பட்டினப்பாலை 113.

122. மேலது., 156-158.

123. பரி., 20:27-32.

124. பட். 109:110.

125. பரி. 11:99-100.

126. மேலது., 11:11-15.

## இயல் 5

# சமுதாய நிகழ்வுகள்

*சமுதாயம் என்பது ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை முறையைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமூகம் எனப்படும். இது மக்கள் ஒன்றுபட்ட பொது எண்ணத்துடன் கூடிய சட்டத்திட்டங்களைக் கருத்தில் கொண்டு ஒன்றுகூடி ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறித்து அமைவதாகும். இச்சமுதாய நிகழ்வுகளை இவ்வியல் ஆராய்கிறது.*

### சமுதாயம் பொருள் விளக்கம்

*மக்கள் இனம் ஒன்று சேர்ந்து வாழும் அமைப்பினைச் சமுதாயம் எனச் சுட்டலாம்.*

> தொடக்க காலத்தில் ஆதிமனிதர்கள் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும், மரப்பொந்துகளிலும் விலங்கோடு விலங்காக வாழ்ந்த சூழ்நிலைமாறி ஒன்றாக ஓரிடத்தில் வாழத் தலைப்பட்ட போதே சமூகம் (Society) எனும் அமைப்பு உருவானது[1]

*என்று சமுதாய வளர்ச்சியின் படிநிலையினை மு.அருணாசலம் என்பவர் எடுத்துக்காட்டுகிறார்.*

> சமுதாயம் எனும் சொல் ஓர் இனத்தையோ நாட்டையோ உலகமக்கள் அனைவரையுமே குறிக்கலாம். ஒரு சிறு நிலப்பரப்பில் ஒரு பொதுவாழ்க்கை முறையைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும்[2]

*எனச் சமுதாய அமைப்பு குறித்து வாழ்வியற்களஞ்சியம் விளக்கம் தருகின்றது.*

> சொசைட்டி என்பது மன்னயம், சமுதாயம், கூட்டு வாழ்வுக்குழு என்பனவற்றைக் குறிப்பிடுவதுடன் நட்புக்குழு, உயர்குடி வகுப்பு, கூட்டுறவுக் கழகம், சேவைக்குழு என்பனவற்றையும் குறிப்பிடுவதாகும்[3]

*என்று சமுதாயம் குறித்து சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழ் அகராதி கூறுகின்றது.*

> சமுதாயம் என்பது மக்கள் சேர்ந்து வாழ்வதை மட்டும் குறிப்பதன்று. தனி மனிதர்கள் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்துள்ள அமைப்பு முறையையும் குறிக்கின்றது. இவ்வொழுங்கின் அடிப்படையில் இணைக்கப்பட்ட தனிமனிதர்களும், அவர்களைப் பிணைக்கும் உறவுமுறைகளும் இடைவிடாத மாற்றத்துக்குள்ளாகின்றன. இத்தகு சிக்கலான மாறிக்கொண்டே இருக்கும் அமைப்பையே சமுதாயம் என்பர்[4]

*என்று சமுதாயம் குறித்து நா.நளினிதேவி குறிப்பிடுகிறார்.*

## சமுதாயமும் இலக்கியப் படைப்பாளனும்

*இலக்கியங்கள் சமுதாயத்திலிருந்து பிறக்கின்றன. இலக்கியத்தையும், சமுதாயத்தையும் பிரிக்க இயலாதளவில் ஒன்றோடொன்று கலந்து காணப்படுகின்றன. இலக்கியப் படைப்பாளிகள் சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளைக் கூர்மையாகவும், பரந்துபட்ட பார்வையோடும் உற்றுநோக்கி அணுகுகின்றனர். படைப்பாளர்கள் தங்களுக்குரியப் படைப்பின் கருப்பொருளைச் சமுதாயத்திலும், சமுதாயம் சார்ந்த தளங்களிலிருந்தும் பெறுகின்றனர். தாங்கள் வாழ்கின்ற சமுதாயத்தின் நிலைப்பாடுகளைத் தங்கள் படைப்பின் வழியே பிரதிபலித்துக் காட்டுகின்றனர்.*

> இலக்கியப் படைப்பாளன் சமுதாயப் படிப்பாளனாக இருக்கவேண்டும். அவனது சிந்தனை ஊற்று வயிற்றுச் சோற்றுக்காக இல்லாமல் சமுதாய ஏற்றத்திற்காகப் பொங்கிப் பெருக வேண்டும். அவனது புலமை சமுதாய வளமைக்குத் தலைமை உரை கூறும் தகைமை உடையதாய் அமைய வேண்டும். அவனது எழுத்து சமுதாயத்தை அழுத்தும் கொடுமைகளை எடுத்துக்காட்ட வேண்டும். அப்போதுதான் அவன் மக்கள் எழுத்தாளனாக மதிக்கப்பெறுவான்[5]

*என்று படைப்பாளன் சமுதாயத்தின்மீது கொண்டுள்ள ஈடுபாட்டினைக் கவியமுது எனும் நூல் எடுத்துரைக்கின்றது.*

*கவிஞன் தான் காணுகின்ற சமுதாயச் சூழலை மட்டும் தம் படைப்பில் பதிவு செய்யவில்லை. சமுதாய மாற்றத்தை விரும்பும் அவன் சமுதாயத்தில் நடந்தேறி வரும் சீர்கேடுகளை வன்மையாகச் சாடுகிறான். சமுதாயச் சூழலை மாற்றி அமைக்கவும், அந்தந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும்*

விழைகின்றான். தான் விரும்பும் நல்ல சமுதாயம் அமையத் தன் படைப்பு வழியே குரல் கொடுக்கின்றான்.

**சங்க இலக்கியங்களில் சமுதாய நிகழ்வுகள்**

சங்கப் புலவர்களின் முழுப் பார்வையும் சமுதாய நலன்மீது அக்கறை கொண்ட நிலையில் காணப்படுகிறது. சமுதாயத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை உற்றுநோக்கி உள்ளார்ந்து உணர்ந்து நற்செயல்களைச் சிறப்போடும், சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டியும் எடுத்துரைக்கின்றனர். சமுதாயத்தில் மலிந்து வரும் சீர்கேடுகள் களையப்பட்டு நல்ல சமுதாயமாக மீட்டுருவாக்கம் பெறவேண்டும் என்ற கருதுகோளைத் தம் கவிதை வழியே முன்னிறுத்திக் காட்டுகின்றனர். சமுதாயத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளைக் கீழ்காணும் நிலைகளில் பதிவு செய்கின்றனர்.

1. காதல் சிறப்பும் சீர்கேடுகளும்
2. விருந்தோம்பல்
3. மடலேறுதல்
4. நிமித்தங்கள்
5. பெண்ணுணர்வுகள்
6. விளையாட்டுகள்
7. வாழ்வியல் நெறிகள்

என்னும் ஏழு நிலைகள் இவ்வியலில் பகுத்து ஆராயப்படுகிறது.

**காதல் சிறப்பும் சீர்கேடுகளும்**

மனித வாழ்க்கையில் இன்றியமையாத கூறுகளுள் ஒன்று காதல், ஒரு பருவத்தில் ஆணும், பெண்ணும் துணை தேடுவதென்பது மனித உடலியற்படியும், உளவியற்படியும் மிக இயல்பான ஒன்று. காதல் என்பது மனிதனின் கூட்டு வாழ்வுக்கும் மனிதத்தின் தொடர்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. இதனைப் பாரதியார்.

காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்,

காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்

காணமுண்டாம் சிற்பமுதற் கலைக ளுண்டாம்[6]

*என்கிறார்.*

**காதல் சொல் விளக்கம்**

காதல் என்பதற்கு அன்பு, வேட்கை ஆசை[7]

*என்று தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகின்றது.*

காதல் என்பது இனக்கவர்ச்சி அடிப்படையில் ஆண், பெண் இருவரிடையே ஏற்படும் அன்பு, நேசம்[8]

*என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் தருகின்றது.*

*ஓர் ஆண் - பெண் இருவரிடையே அன்பானது முகிழ்க்கும்போது காதல் என்று அழைக்கப்படுகிறது. முன்பின் பார்த்திராத இருவரிடையே திடீரெனத் தோன்றும் இக்காதல் தெய்வீகத் தன்மை கொண்டு விளங்குகின்றது. பருவம் கடந்தாலும் கடவாமல் நின்று உருவம் மாறினாலும் அன்பு உள்ளம் மாறாமல் நின்று உள்ளத்து உணர்ச்சிகளுக்கெல்லாம் தலைமை வகுத்து நிற்பது காதலாகும்.*

*பிறப்பு முதல் இறப்புவரை மனிதருள் ஒன்றெனக்கலந்துவிட்ட ஓர் உணர்வுதான் காதல். அது ஒவ்வொரு பருவத்தினரிடமும் வெவ்வேறு பரிமாணங்களில் வெளிப்படும் என்பதை,*

தாய்தன் மீது செலுத்தும் அன்பையும் அரவணைப்பையும் மகன் பின்னாளில் தன் காதலியிடமும் மனைவியிடமும் எதிர்பார்க்கின்றான். அதேபோல் தந்தை தன்மீது செலுத்தும் அன்பையும், பாசத்தையும் பருவமடைந்த பெண் பிறகு தன் காதலனிடமும் கணவனிடமும் எதிர்பார்க்கின்றாள்[9]

*என உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு கூறும் கருத்தினை இராஜம் இராஜேந்திரன் என்பார் எடுத்துக்காட்டுகிறார்.*

**நற்றிணையில் காதல்**

*தலைமகன் நாள்தோறும் வந்து தலைவியைச் சந்திக்கின்றான். அவன் ஒருநாள் வரவில்லை என்றாலும் தலைவி உயிர் பிரிவது போன்ற துன்பத்தை அடைகின்றாள். ஆனால், அவனுடைய நெடிய தேரின் வருகையை ஊரில் எழும் அலர் தடுத்து நிறுத்துகிறது. இவ்வாறு ஒரு தேர் வருவதற்குக் காரணம் தான் யார் என்று ஊர் அலசி ஆராய்கிறது. இதனை அறிந்த தோழி இது என்ன கொடுமை? என்று மனம் வேதனைப்படுகின்றாள். இதனை,*

. . . . . . . . . . . . . .

கறவினங் கலித்த நிறையிரும் பரப்பின்

துறையிலுந் துஞ்சாக் கண்ணர்

பெண்டிரும் உடைத்திவ் வம்பல் ஊதே[10]

*என்ற நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கின்றது. அலர்வாய்ப் பெண்டிரின் அருளற்ற மொழிகளை எண்ணி சினமும் வெறுப்பும் கொண்டு தோழி வருந்துகின்றாள் என்கிறது இப்பாடல்.*

**அன்னை அலைத்தல்**

*கண்டல் மரங்களாகிய வேலி சூழ்ந்த சிறிய குடித்தெருவின் கண்ணே ஒருநாள் ஒருதேர் வருகிறது. நேற்றிரவு ஒருதேர் வந்ததன்றோ? என்று உரையாடி ஊர் முழுவதும் அலராக எழுகிறது. அவ்வலரைக் கேட்டதாய், தன்னையொத்த இளமகளிர் பலரிருக்கத் தன்னையே குறிப்பாகப் பார்த்தாள் என்கிறாள் தோழி. மகள் காதல் வயப்பட்டு இருப்பாளோ என்ற அத்தாயின் பதட்டே இந்தச் சந்தேகத்திற்குக் காரணம். மற்றொரு தாயை, மறுகின் பெண்டிர் சிலரும் கடைக்கண்நோக்கி, மூக்கின் சுட்டுவிரல் சேர்த்து அம்பலாகத் தூற்றுகின்றனர். அதனால் பெரிதும் அச்சமும், அவமானமும் அடைந்த தாய் பருவம் அடைந்த தன்மைகளைக் கோலால் புடைத்துத் துன்புறுத்துகின்றாள். இதனால் நான் அலந்தனென் தோழி என்று தலைவி அவதிப்படுகின்றாள். தலைவியின் வேதனையை உணர்ந்த தோழி அவ்வூரின்மீது தன் கோபத்தைக் காட்டுகின்றாள். இதனைக் கூறும் பாடல்,*

நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு

செலவயர்ந் தசினால் யானே

அலர்சுமந்து ஒழிக இவ்வழுங்கல் ஊரே[11]

என்பதாகும். தோழி வெறுப்பினை உமிழ்ந்து தலைவியின் உடன்போக்கிற்கு உடன்படுகின்றாள்.

தலைமக்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்ட ஆசையினால் இரவும் பகலும் குறியிடத்துச் சந்தித்து வருகின்றனர். அதனால் ஊரார் தூற்றும் அலரினால் தலைவி இற்செறிப்புச் செய்யப்படுவாள் என்று அஞ்சுகிறாள் தோழி.

இவள் அலரின் அருங்கடிப் படுகுவாள்[12]

என்று கூறுகின்றாள். தலைவி காவல் மிகுதியால் குறியிடையீடுபட்டுத் தவிக்கின்றாள். அவள் புறம்போகாதவாறு அன்னை இரவும் பகலும் துயிலாது விழித்துக் கொண்டிருக்கிறாள். இதனால்,

பெய்யாது வைகிய கோதைபோல[13]

தலைவியின் மேனி வாடிக் காணப்படுகிறது. பனிநீர்ச் சேர்ப்பன் நாம முதலையின் நடுக்க முறுத்தும் பகைக்கும் அஞ்சாமல் காமமிகுதியால் வரும்பொழுது என் நெஞ்சம், படையோடு பகையரசன் மதிலை முற்றுகையிட்ட காலத்து, காவல் மிக்க எயிலைப் பெற்றிருப்பதால் கலங்காது இருக்கும் நொச்சி வேந்தனைப் போன்று அஞ்சாது இருந்தது. ஆனால் இப்பொழுது நடுயாமத்தில் புள்ளொலி கேட்டாலும், தலைவனின் தேரின் மணியோசையோ என்று மனம் கலங்குகின்றேன் என்கிறாள்.

**விருந்தோம்பல்**

'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்பது பழமொழி. இல்வாழ்க்கையில் இருக்கும் மகளிர் விருந்தினரைப் பேண வேண்டும் என்பதைக் கடமையாக, கற்பின் திறமாகப் போற்றுகின்றனர். தொல் தமிழர்களின் தனித்த அடையாளங்களில் ஒன்று 'விருந்தோம்பல்' என்னும் பண்பாட்டுக் கூறாகும். தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதிலும் விருந்தோம்பல் பண்பாட்டைக் காணமுடிகிறது.

விருந்து என்னும் சொல் புதுமை என்னும் பொருளைத் தருவதாகும் என்பர் தொல்காப்பியர்,

விருந்து தானே புதுவது மேற்றே[14]

என்று குறிப்பிடுகிறார்.

இல்வாழ்க்கையில் வரும் விருந்தினரை ஓம்புவதும், சுற்றத்தாரை உபசரிப்பதும், இரப்பார்க்கு ஈதலும் முக்கிய அறமாகும். விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்று அவர்க்கு இனிய உணவை ஆக்கி மகளிர் விருப்புடன் படைத்தனர். இதனை,

விருந்தயர் விருப்போடு விருந்தினர் ஆசைஇய
முறுவர் இன்நகை காண்கம்[15]

என்று நற்றிணை வரிகள் இயம்புகின்றன.

இரவு நேரத்தில் விருந்தினர் வந்தால்கூட அவரைப் போற்றுவதற்கு மகளிர் பின்னடைவது இல்லை என்பதை,

எல்லிவந்த நல்இசை விருந்திற்கு
கிளர்இழை அரிவை நெய்துழந்து அட்ட
விளர்ஊர் அம்புகை எறிந்த நெற்றி
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே[16]

என்று நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது.

தலைவியின் குணப் பண்புகளைப் பற்றிக் கூறும்போது, தைத்திங்கள், பாவைத் திருமணம் நிகழ்த்துவதும், பெண்ணைக் கொள்வதற்காகச் சிறுசோறு (நிலாச்சோறு) சமைத்து மகிழும் மகளிர் நோன்பின் பயனை கலித்தொகை எடுத்துரைக்கிறது.

சிறுசோறு மடுத்து நீநறு
நூதலவரொடு தக்கது[17]

என்பதில் நிலாச்சோறும் அதனை மற்றோருடன் உண்டு மகிழ்ந்ததையும் காணலாம்.

மருதக்கலியில் தலைவி கூற்றாக வரும் இடத்தில் ஊடல் தீர்க்கும் வாயில்களுள் விருந்தினர் வருகையும் ஒன்றாகும். பரத்தையிடம் சென்று

மீண்ட தலைவன், தலைவியின் ஊடலைத் தவிர்க்க விருந்துடன் வந்தான் என்பதை,

விருந்து எதிர்கோடலின் மறப்பல்[18]

என்ற வரி சுட்டுகிறது.

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை[19]

என்று கூறுவது விருந்து பேணலின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

வள்ளுவப் பெருந்தகையும் விருந்தோம்பல் பற்றிக் கூறும்போது, பொருள் நிரம்ப உள்ள காலத்து வெறுமையாவது, விருந்தோம்பலை ஏற்றுக்கொள்ளாது வெறுக்கும் பேதைமையாகும். அது அறிவில்லாதவரிடத்து மட்டுமே உண்டு என்கிறார். இதனை,

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு[20]

என்ற குறள்வழி விளக்குகிறார்.

**மடலேறுதல்**

சங்க காலத்தில் நிலவிய ஒரு பண்பாட்டு மரபு தான் மடலேறுதல். தலைவன் பனங்கருக்காற் செய்த குதிரைமீது அமர்ந்து, தலைவியின் உருவத்தைப் பனவோலையில் வரைந்து கைப்பிடித்துப் பல்லோர் அறிய ஊர் நடுவே நாற்சந்தியில் நிற்பான். பூளைப்பூ, ஆவாரம்பூ, எருக்கம்பூ ஆகியவற்றால் தொடுத்த மாலையை அணிந்து தலைவி மீது கொண்ட காதலை ஊரார் அறியும் வண்ணம் தெரிவிப்பான். பின்னர் தலைவனுக்குத் திருமணம் நிகழும்.

**பெருந்திணை**

மடலேறுதல் பெருந்திணைப் பாற்படும் என்பர் தொல்காப்பியர். அவர்,

ஏறிய மடம்திறம்[21]

என்கிறார். தொல்காப்பியரும் சங்கப்புலவரும் பெருந்திணையை மிகுந்தக் காமமாக வகுத்துப் பாடியுள்ளார்.

> ஐந்திணையானது அளவுக்காதல், பெருந்திணையாவது மிகுதிக்காதல், பெரும் என்ற அடை அளவிலும் மிகுதிப்பாட்டை மிகையைக் குறிக்கின்றது. பெரும்மூச்சு பெருங்காற்று, பெருமழை, பெரும்பேச்சு, பெருங்காஞ்சி, பெருவஞ்சி போன்ற தொடர்களை உள்நோக்குக[22]

என்பார் வ.சுப.மாணிக்கனார்.

## ஏறிய மடல்திறம்

ஐந்திணைக் களவில் தலைவன் தலைவியை நினைத்து அவளுடன் கலந்து இன்பமுற நினைப்பான். தோழி அதற்கு இணங்காமல் சேட்படுத்துவாள். இந்நிலையில் தலைவனின் காமம் முற்றி தான் மடலேறுவதாகத் தோழியிடம் கூறி அச்சுறுத்துவான். உடனே தலைவியைத் தோழி தலைவன்பால் ஆற்றுப்படுத்துவாள்.

தலைவி கிடைக்கப் பெறாமையால் தலைவன் பனைமடலைக் குதிரையாகக் கொண்டும், எருக்கம் பூவைத் தலையில் சூடியும். வீதியில் வருவான் என்பதை,

> மாவென மடலும் ஊர்ப பூவெனக்
> குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப
> சான்றவர்க்கு எல்லாம் கடன்ஆனால் இவ்விருந்த
> சான்றீர் உமக்கு ஒன்று அறிவுறுப்பேன்[23]

என்ற பாடல் விளக்குகிறது. தன்னை விரும்பாத பெண்ணை வேண்டி ஒருவன் மடலேறும்போது அவன் சான்றோர்களைப் பார்த்து விளிப்பது இல்லை. எனவே, மடலேறுதல் ஒத்தகாமம் உடையவர் மாட்டே நிகழும் என்பர்.

## அன்புக் காதலர்கள்

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் நோக்குகின்றனர். பார்த்தப்பொழுது சிறிதேயாயினும் இருவர் உள்ளமும் காதலால் ஒன்றிவிட்டது. இயற்கைப் புணர்ச்சியும் நிகழ்ந்தது. அதன்பின் தலைவனால் தலைவியைக் காணமுடியவில்லை. இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம்,

*பாங்கியற்கூட்டம் நடைபெற வழியில்லை. இதனால் தலைவன் வேட்கை மிகுதியால்,*

மின்னவிர் நுடக்கமும் கனவும்போல் மெய்காட்டி
என்னெஞ்சம் என்னொடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங்க கரந்தானைத் தலைப்படும் ஆறுஎவன் கொலோ[24]

*என்றும்,*

துளியிடை மின்னுப்போல் தோன்றி ஒருத்தி
ஒளியோடு உருவென்னைக் காட்டி அளியன்என்
நெஞ்சாறு கொண்டான் அதற்கொண்டும் துஞ்சேன்[25]

*என்று கூறி, அவளைத் தலைப்படுதல் கூடுமா எனப் புலம்புகிறான் தலைவன். எனினும் பல்வேறு இடையூறுகளுக்குப் பின் தலைவனும் தலைவியும் மனமொத்த அன்புடையவர்களாக இருப்பதை,*

அன்புறு கிளவியாள் [26]
ஒண்டொடி நோய்நோக்கு[27]
எந்நெஞ்சாறு கொண்டான்[28]
என்நெஞ்சம் இடியஇடைக்
கொள்ளும் சாயல்ஒருத்தி[29]

*என்பதன் வாயிலாக இருவரும் ஒத்த அன்புடைக் காதலர்கள் என்பதை மேற்கண்ட பாடலடிகள் உணர்த்துகின்றன.*

**மடலேறித் தலைவியைப் பெறுதல்**

*தலைவியைக் காண வாய்ப்பில்லாத நிலையில் தலைவனுக்குக் காமம் மிகுதியாகும். தன் உள்ளம் கவர்ந்தவளை ஊரறிய வெளிப்படுத்த வேண்டும் என்று தலைவன் நினைக்கிறான். அதனால் மடலேறுவதைக் கருவியாகக் கொள்கிறான். ஒரு தலைவன் மடலேறித் தலைவியை அடைந்ததாகக் கூறுகிறான். இதனை,*

மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை, அவிரை, எருக்கொடு, பணித்துயாத்து
மல்லல் ஊர் மறுகின்ற கண்இவட்டாடும் இதுஒத்தன்
எல்லீரும் கேட்டிமின் என்ற

படரும் பனைஈன்ற மாவும் சுடரிழை

நல்கியான் நல்கீ யவை[30]

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. எனவே தான் மடலேறித் தலைவியைப் பெற்றதாகத் தலைவன் கண்டோரிடம் கூறுகிறான்.

**பெற்றோர் உடன்படுதல்**

மடலேற்றம் கண்ட ஊர் மக்கள், மகள் இசையும்போது பெற்றோர் குறுக்கிடல் பொருந்தாது; தலைவனின் காதல் மெய்யானது என்று கூறுவர். தலைவியும் தலைவனை அடைய விரும்புகிறாள். இது அன்புடைக்காமம் என்று சான்றோர் பகர்வர். மகளும், ஊராரும், சான்றோரும் ஒப்பும்போதும், தலைவனும் தன் காதலில் உறுதியாக இருக்கும்போதும் பெற்றோர், தாம் விரும்பாவிடினும் தலைவியைத் தலைவனுக்கு மணம் முடித்து வைப்பர் என்பதை,

வருத்தமா ஊர்ந்து மறுசின்கட் பாடத்

திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே

பொருந்தாதோர் போர்வல் வழுதிக்கு அருள்திறை

போலக் கொடுத்தார் தமர்[31]

என்ற பாடல் கூறுகிறது. இப்பாடல் கண்டோருக்கெல்லாம் இரக்கம் தோன்றும்படி தலைவன் மடலேறினான். தெருவிலே தன் காதலைப் பாடினான். இவற்றை எல்லாம் கண்ட கேட்ட அவன் சுற்றத்தார் பாண்டியனுக்கு அஞ்சிப் பகைவர்கள் நிறைகொடுப்பது போல, மடலேறியவனுக்கு அவளை மணம் செய்து கொடுத்தனர் என்கிறது. ஒரு நாட்டை ஆள்பவர், தம்மைவிட வலியவர் படை எடுத்து வந்தால், தம் குடிகளின் நலன்கருதி, திறை கொடுத்தேனும் அமைதி செய்து கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர்,

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறையெறின்

கொள்வர் பெரியார்ப் பணிந்து[32]

என்கிறார். பெருந்திணைத் தலைவன், தன் காதலியை இல்லக் கிழத்தியாக்குவதற்கு மடலேறுதல் என்ற பெருமுயற்சியில் ஈடுபடுகிறான். அதற்காக நாணத்தைக் கைவிடுகிறான். இவையெல்லாம் மிகுசெயல் என்ற அடிப்படையில் இதனை பெருந்திணையாகக் கொள்ளலாம்.

**கோளும் நாளும் பார்த்தல்**

பழங்கால மக்கள் இயற்கையைத் தெய்வமாகப் போற்றி வாழ்ந்தனர். இயற்கையின் மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. பழக்கவாக்கங்களும் நம்பிக்கைகளும் பண்டையக் காலம் முதல் வாழ்ந்து வந்த மக்கள் வகைவகையாக வகுத்த வழக்கங்களும், நம்பிக்கைகளும் ஒவ்வொரு நாட்டிலும் வேரூன்றிக் கிடப்பனவாகும். இவற்றை மனிதகுலப் பண்பாட்டின் வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் தோன்றக் காரணம் வாழ்க்கைத்தேவை, அச்சம் ஆகியவையே ஆகும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் ஏராளமாகக் காணப்பெறுகின்றன. இதனடிப்படையில் மனித வாழ்வில் நம்பிக்கைகள் தோன்றலாயின. மக்களுக்கு நம்பிக்கை என்பது மூன்றாவது கை என்று கூறுவர். நிமித்தம் அல்லது சகுணம் பார்த்தல் என்பது பாமர மக்களிடம் மட்டுமன்று, படித்த மக்களிடமும் காணப்படுகிறது.

தமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் நிமித்தங்களை நாள் நிமித்தம், புள்நிமித்தம், பிறநிமித்தம் என மூவகைப் படுத்துகின்றார். அவர்,

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்[33]

என்கிறார். பண்டைத் தமிழ் மக்கள் நாள்களில் சிலவற்றை நல்லநாள், கெட்டநாள் எனக் கொண்டிருந்தனர். விண்மீன்களும், கோள்களும் நிற்கும் நிலைக்கொண்டு நாள்களைக் கணித்தனர். ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார், மாமூலனார், மூலங்கீரனார் ஆகிய சங்கப் புலவர்கள் நாளால் பெயர் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தங்கள் அகவாழ்வில் நடைபெறும் இன்றியமையாத நிகழ்ச்சிக்கு நாளும் கோளும் பார்த்தனர். களவு மனத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன் இந்த வழக்கத்தைப் பின்பற்றமாட்டான் என்பதை,

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை[34]

என்னும் தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கிறது.

*திருமணம் ஆடவர் மகளிர் வாழ்வில் நிகழும் பெரும் விழாவாகும். நல்ல நாள், நல்ல நேரம் நிமித்தம் பார்த்து மணம் முடித்து வைத்தனர் என்ற செய்தியை,*

திங்கள், சகுடம் மண்டிய துகள்நீர் கூட்டத்துக்
கடிநிகர் புனைந்து கடவுட பேணிப்
படுமண முழவொடு பரூஉப் பணைஇமிழ
வதுவை மண்ணிய மகளிர்[35]

*என வரும் பாடல் சுட்டுகிறது. திங்கள் உரோகினி கூடிய குற்றமற்ற நன்னாளில் திருமணம் நிகழ்ந்தது என்பதை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.*

*தீய கோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற வளைந்த வெள்ளிய திங்களைக் குற்றமற்ற சிறந்த புகழினையுடைய உரோகினி எனும் நாள், மீன் அமைந்த நன்னாளில் திருமணம் நிகழ்ந்தது என்பதை,*

கனையிருள் அகன்ற கவின்பெறுகாலை
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
வதுவை நன்மணம் கழிந்த பின்றை[36]

*என்ற பாடலின் மூலம் அறியலாம். வானியல் கலை பற்றிய முழுமையாக அறிந்த நம் பண்டைத் தமிழ் மக்கள் விண்மீன்கள் ஆகியவற்றின் நிலைகளைக் கொண்டு நல் நிமித்தங்களையும், தீய நிமித்தங்களையும் கணித்துத் இன்பம் தரும் நல்லற வாழ்வு சிறப்புற வேண்டி திருமணங்களை நடத்தியுள்ளனர் என்பது மேற்கண்ட சான்றுகளின் மூலம் அறிய இயலுகிறது.*

**புள் நிமித்தம்**

*சங்க இலக்கியத்தில் 'புள்' என்ற சொல் பறவைகளைக் குறிக்கின்ற சொல்லாகவும், பொதுவான நிமித்தங்களைக் குறிக்கின்ற சொல்லாகவும் பயின்று வருகிறது. 'புள்' என்பதற்கு நிமித்தம் என்ற சிறப்புப் பொருளும் உண்டு என்பதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இவ்விரு பொருளிலும் நிகழும் நிமித்தங்களை அகநானூறு படம்பிடித்துகாட்டுகின்றது.*

அணங்குடை முந்தீது பரந்த செறுவின்
உணங்கு திறம் பெயர்த்த வெண்கல் அமிழ்தம்

குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் ஆடவர்[37]

என்ற பாடல் உப்பினை எடுத்துச் செல்வோர் நன்னிமித்தம் பார்க்கின்ற வழக்கத்தினை உடையவராய் இருந்தனர் என்பதையும், இப்பாடலில் 'புள்' என்ற சொல் நிமித்தம் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளன. தற்காலத்திலும் இரவு நேரங்களில் உப்பை பிறர்க்குக் கொடுக்கும் வழக்கம் பெரும்பான்மையான மக்களிடம் இல்லை என்பதை அறியலாம்.

'நம்பிக்கை' என்பது பன்னெடுங்காலமாக மக்கள் வாழ்வில் இருந்து வந்துள்ளதை அகநானூறு சுட்டிக்காட்டுகிறது. நம்பிக்கைகள் எழக்காரணமாய் இருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் மக்களிடம் நம்பிக்கை இருப்பது உண்மையாகும். இன்றைய சமுதாயம் அறிவியல் வளர்ச்சியினால் மாபெரும் மாற்றத்தைக் கண்டாலும் மக்களிடம் காணப்பெறும் நம்பிக்கைகளில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை என்பதை சமுதாயத்தில் நிகழும் நிகழ்வுகளின் மூலம் அறியலாம்.

## பெண்ணுணர்வுகள்

தொல்காப்பியர் பெண்களுக்குரிய இயல்புகளாக அச்சம், நாணம், மடன் என்ற முப்பண்புகளையும் எக்காலத்தும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். இதனை,

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப[38]

என்ற நூற்பாவால் கூறுகிறார். எனினும் தொல்காப்பியர் காலச் சமுதாய வழக்கம் சில சங்ககாலத்தில் வேறுபட்டும் மாறுபட்டும் உள்ளன என்பதற்கு ஔவையார், ஆதிமந்தியார், நச்செள்ளையார், காக்கைபாடினியார் முதலிய பெண்பாற் புலவர்களின் பாடல்களைச் சான்றாகக் கொள்ளலாம்.

## தலைவி தோழியிடம் கூறுதல்

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாளாகித் தன் துன்பத்தை வெளிப்படுத்த இயலாதவாறு ஆற்றியிருக்க வேண்டும் என ஊரார்

*வலியுறுத்தும்போது தலைவி தன்னிலையைப் புலப்படுத்த எதிர்மறுத்துரைக்க முயல்கிறாள்.*

முட்டுவென்கொள் தாக்கு வேன்கொல்
ஓரென் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவுவேன் கொல்
அலமர லசைவளி அலைப்பவென்
உயவு நோயறியாது துஞ்சுமூர்கே[39]

*என்ற பாடல், தலைவன் வரைவிடை வைத்துப் பிரிய என்னை ஆற்றியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் இவ்வூரார்க்கு என் ஆற்றாமையை எவ்விதம் வெளிப்படுத்துவேன் என்று கூறுகிறாள். தன் உணர்வுகள் ஊரார்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் ஒரு தலைவி தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முயல்வதைக் காணமுடிகிறது. பெண் தன் காதல் உணர்வினை வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கும் அன்றைய சமுதாய மரபினை சங்ககாலத் தலைவி உடைத்தெறிய முற்படுகிறாள் எனலாம்.*

**தலைவி தோழியிடம் கூறுவாளாய் தலைவன் கேட்பக் கூறுதல்**

நெடுவரை மருங்கிற் பாம்புட இடிக்கும்
கடுவிசை யுருமின் கழுறுகுர லளைஇக்
காலொடு வந்த காமஞ்சூள் மாமழை
ஆரளி யிலையோ நீயே பேரிசை
இமயமுந் துளைக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரி ஃதெவனே[40]

*என்ற பாடலில் இடியும் காற்றுமாக வந்த மழையே, உனக்கு இரக்கம் இல்லையோ, உன்னால் இமயத்தையும் அசைக்க முடியும். அப்படிப்பட்ட வலிமை உடையநீ துணையற்றப் பெண்களிடம் உன் வலிமையைக் காட்டலாமோ என்று தலைவி கேட்பதாக உள்ளது. இது பெண்ணின் காதல் உணர்வை வெளிப்படுத்துகிறது. தலைவி தலைவன் வரும் வழியின் துன்பத்தை நினைத்து அஞ்சுகின்றாள். அஞ்சுவதற்குரிய செயலை விடுத்துத் திருமணம் செய்துக்கொண்டு வாழ விரும்புவதை அவளது சொற்கள் குறிப்பால் உணர்த்துகின்றன.*

**தலைவன் தன் நெஞ்சிடம் கூறுதல்**

நல்லுரை இகந்து புல்லுரை தாஅய்ப்
பெயல் நீர்க்கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கள் வெளம் நீந்தி
அரிது அவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூசலுயர் கோட்டு
மகவுடை மந்திபோல
அகனுறத் தழிஇக் கேட்டுனர் பெறினே[41]

*என்ற பாடல் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைவன் தலைவியை மணந்து கொள்ள காலநீட்டிப்புச் செய்கிறான். களவுக் காலத்தில் கூடுதல் வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ள தன் நெஞ்சிடம் பெறுதற்கு அரியது என்பதை அறிந்தும் பெற விரும்புதல் என்பது பசிய மண்கலத்தில் பெய்த நீரைப்போன்று அழிவினை ஏற்படுத்தும் என்கிறான். மேலும் தன் மனப்போராட்டம் பெரிதாகின்றது. உயர்ந்த மரக்கிளையில் தன் குட்டியைத் தழுவிக் கொள்ளும்பெண் குரங்கு போல நீயும் தலைவியைத் தழுவக்கூடும். எப்போதெனில் தலைவி உன் சொற்களைக் கேட்கும்பொழுது, என்று தலைவன் தன் நெஞ்சிடம் கூறுகின்றான். களவுக் காலத்தில் தலைவியுடன் கூடி இன்பம் துய்த்து பழிச்சொற்களுக்கு ஆளாவதைவிட அவளை மணந்து கொண்டு கற்புக்காலத்தில் இன்புற்று வாழ்வதே சிறந்தது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.*

*மேலும் 'அகனுறத் தழீஇ கேட்குநர் பெரினே' என்று தலைவன் குறிப்பிடுவதால் தலைவி அவனுடைய பேச்சைக் கேட்கவில்லை என்பது புலனாகிறது. அவளை வற்புறுத்த விரும்பாத தலைவனின் நெஞ்சமும் வெளிப்படுகிறது.*

**தோழி தலைவனிடம் கூறுதல்**

*தலைவியை உடன்போக்கு அழைத்துச் செல்ல தோழி வலியுறுத்துகிறாள். ஏனெனில் தலைவியின் நலனை உயிராகக் கருதுபவள் தோழி ஆவாள். இதனை விளக்கும் பாடல் பின்வருமாறு,*

நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடாததாகும்
கவணை அன்ன பூட்டு பொருதசாஅ
உமினெருத் தொழுகைத்தோடு நிரைத்தன்ன
முளிசினை பிளக்கு முன்பின்மையின்
யானை கைமடித் துயவும்
கானமும் இனியவாழ் நும்மொடு வரினே[42]

என்பது பாடல். இப்பாடல் நீரில் உள்ள குவளை மலர் வெப்பக்காற்று வீசிய இடத்தும் வாடாது இருப்பது போல, தலைவி உன்னுடன் வருவாளாயின் கடத்தற்கரிய பாலைநிலமும் இனியதாகும் என்று தோழி தலைவனிடம் கூறுவதாக அமைகிறது. நீர் குளிர்ச்சியைப் பெற்றிருப்பது போலத் தலைவி இனிமை தரும் இயல்பினைப் பெற்றவள் என்பது எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

நீரில்லாவிட்டால் குவளைமலர் வாடிவிடும். அதுபோல் தலைவாகிய நீ இல்லாவிட்டால் தலைவி வாடிவிடுவாள். எனவே உன்னுடன் அழைத்துச் செல்வாயாக என்று துணிச்சலாகத் தோழி கூறுகிறாள். தலைவி தலைவனைச் சார்ந்து இருக்கும் நிலை இப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கட்டுவிச்சியிடம் குறி கேட்கும் நிகழ்வு**

மக்கள் தங்கள் வாழ்க்கையில் நேரும் சில நிகழ்ச்சிகளின் உண்மையை அறிவதற்கும் மேல் நிகழ்வதை அறியவும் குறி கேட்டல், நேர்ந்த துன்பங்களுக்குச் சந்தி செய்தல் போன்ற வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இக்குறி கேட்பதற்குக் ‘கட்டுவிச்சி’ என்னும் குறி சொல்லும் பெண்மணியை அழைத்து வினவுவர். கட்டுவிச்சி வெள்ளிப்பூண் கட்டிய சிறுகோல் தாங்கிய கையுடன் இருப்பாள். குறி கேட்பவள் முறத்தில் நெல்லைக் கொண்டு வந்து கொடுக்க குறி சொல்லுபவள் முறத்தில் உள்ள நெல்லைக் கையில் அள்ளி எண்ணி, ஒற்றைப்படை, இரட்டைப்படையாக அமைவதைக் கொண்டு சில நிமித்தங்களை அறிந்து கூறுவது மரபாக இருந்துள்ளது. குறி சொல்பவள் பெரும்பாலும் குறவர் மகளிராக இருந்துள்ளனர்.

அகவன் மகளே அகவன் மகளே
மனவு கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவன்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே[43]

*என்ற பாடலின் வழியாகத் தோழியின் மதிநுட்பம் புலப்படுகிறது. கட்டுவிச்சியிடம் தோழி தலைவனுடைய மலையைப் புகழ்ந்து மீண்டும் மீண்டும் பாடச் சொல்வதன் வாயிலாகத் தலைவியின் காதலைத் தாய்க்கு குறிப்பாக உணர்த்துகிறாள். இந்தப் பாடலின் மூலம் தலைவியின் காதலை நேரடியாக வெளிப்படுத்தக் கூடாது என்ற மரபை மீறாமல் குறிப்பால் உணர்த்துவது குறிப்பிடத்தக்கதாகும்.*

**உடன்போக்கு செல்வதை ஏற்கும் நிகழ்வு**

*அக்காலத்தில் தலைவனுடனான திருமணத்திற்குச் செவிலி, நற்றாய், உறவினர்கள் மறுக்கும் நிலையில் தோழியின் உதவியுடன் தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிடுவாள். இதனால் உடன்போக்குச் சென்ற காலத்தில் தலைவி மீது வெறுப்பாக உள்ளவர்கள் சிறிது காலத்திற்குப் பின் மனம்மாறி அவளை ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு இருந்துள்ளது என்பது பின்வரும் பாடல் மூலம் அறியப்பெறுகின்றது. அப்பாடல்,*

பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொல் மூதாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலு லீர்க்கோசர் நன்மொழி போல
வாயாகின்றே தோழியாய் கழற்
சேயிலை வெவேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே[44]

*என்பதாகும். இப்பாடல் களவு வாழ்க்கையில் பெற்றோர் தனது மகளின் காதலுக்கு உடன்படாதபோது அவள் விரும்பிய ஆடவனுடன் உடன்போக்கில் ஈடுபட்டாள் என்பதை உணர்த்துகிறது. இந்த உடன்போக்கை அக்காலச் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது எனலாம்.*

**கற்பு நிலையில் கூறுதல்**

*கற்புக்காலத்தில் நிகழும் சமுதாய நிகழ்வுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன,*

1. *தலைவி தோழியிடம் கூறும் நிகழ்வு.*
2. *தலைவன் தோழியிடம் கூறும் நிகழ்வு.*
3. *பரத்தை பாங்காயினரிடம் கூறும் நிகழ்வு*

*என்பனவாகும்.*

## 1. தலைவி தோழியிடம் கூறும் நிகழ்வு

*வினையே ஆடவர்க்கு உயிர். மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என்பதற்கேற்பத் தலைவி தலைவன் பிரிவால் ஏற்படும் துன்ப நிகழ்வைத் தோழியிடம் கூறுவது மரபாக உள்ளது. இதற்கு,*

வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றலார்க்கும்
மலையுடை யருஞ்சுர மென்ப நம்
முலையிடை முனிநர் சென்ற வாறே[45]

*என்ற பாடல் சான்றாகும். இப்பாடல் தலைவனையே நினைத்து வாழும் தலைவி அவன் பொருள்வயிற் பிரிந்தபொழுது சென்ற வழியின் நிலையை நினைத்து வருந்தி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவி தலைவனின் பிரிவை நினைத்து வருந்தவில்லை என்றும், அவன் சென்ற சுரவழியை நினைத்து வருந்துவதாகக் கூறுகிறாள். தலைவன் தன் மார்பிடத்தே துயிலுதலை வெறுத்தவர் இப்பொழுது அவர் சென்றவழி வெப்பமிக்க காற்று வீசுதலால் வாகையினது நெற்றுக்கள் ஒலித்தற்கு இடனாகிய கடத்தற்கரிய பாலை வழியை எவ்வாறு கடந்து சென்றாரோ! என்பதை நினைத்தே வருந்துகின்றேன் என்கிறாள். இப்பாடலில் தலைவியின் அன்பின் மிகுதியைக் காணமுடிகிறது. தலைவன் தலைவியிடம் சொல்லாமல் பிரிந்து போனதை நினைத்துத் தலைவி வருந்துவதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.*

செல்வா ரல்லரென் றியானிகழ்ந்தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந்தனரே

ஆயிடை இருபே ராண்மை செய்த பூசல்

அல்ல னெஞ்ச மலமலக் குறுமே[46]

*தலைவி தலைவன் பிரிந்து செல்லமாட்டான் என்று நினைத்திருந்த காலத்தில் அவன் பிரிவை அறிவித்தால் உடன்படமாட்டாள் என்று எண்ணி தலைவியிடம் சொல்லாமல் தலைவன் பிரிந்து செல்கிறான். இரு வாள் கொண்டு நிகழ்த்தும் போரினால் ஏற்படும் விளைவுகள் எவ்வாறு மனத்தை வருத்துமோ அதைப்போல என் நெஞ்சமும் வருந்துகின்றது என்கிறாள் தலைவி. இவர் நம்மைப் பிரியார் என்னும் ஊக்கத்தையும் இவளுக்கு சொல்லாமலே போவோம் என்னும் துணிவையும் ஆண்மை என்றார்.*

## 2. தலைவன் தோழியிடம் கூறும் நிகழ்வு

*பொருள்வயிற் பிரிந்து மீண்டு வந்த தலைவன் தலைவியைப் பிரிந்த காலத்தில் இருந்த மனநிலையைக் கூறுவதாக இப்பாடல் அமைகிறது. தலைவியைப் பிரிந்தது துன்பம் தருவதாக இருந்தாலும் பொருள்தேடப் பிரிவது உலக இயல்பு என்கிறான். சான்றாக,*

உள்ளினெ னல்லெனோ யானே உள்ளி

நினைத்தனெ னல்லனோ பெரிதே நினைத்து

மருண்டென னல்லனோ உலகத்துப் பண்பே

நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை

இறைத்துணச் சென்றற் றாஅங்

கனைபெருங் காமமீண்டு கடைக்கொளலே[47]

*என்ற பாடலைக் கூறலாம். உயர்ந்த மரக்கிளையைத் தொட்டுச் சென்ற வெள்ளம் பின்னர் இறைக்கும் அளவுக்குச் சென்றதுபோல தான் தலைவியை நினைத்து வருந்தினால் காமநோய் பெருகுகிறது. நினைத்தேன் மீண்டும் மீண்டும் நினைத்தேன் உலக இயல்பை எண்ணி மயங்கினேன் என்று தலைவன் கூறுவதன் மூலம் தலைவிமீது தலைவன் இடையறாத அன்புகொண்டவன் என்பதும் பொருள்தேடச் செல்லுதல் சமுதாய நிகழ்வுகளில் ஒன்றாகும் என்பதையும் இப்பாடல் சுட்டுகிறது.*

## 3. பரத்தை பாங்காயினோரிடம் கூறும் நிகழ்வு

*சங்ககாலச் சமுதாயத்தில் பரத்தையர் ஒழுக்கம் ஏற்றுக்கொண்ட ஒன்றாகவே இருந்துள்ளது. இது பற்றிப் புலவர்கள் பாடியிருக்கின்றனர். பல*

*ஆடவரைத் தழுவும் பெண்களைப் 'பரத்தையர்கள்' என்று கூறியிருக்கின்றனர். பல பெண்களைத் தழுவும் ஆடவரைப் பற்றி எதுவும் பதிவு செய்யப்படாமையால் சமூகத்தில் அதிகாரம் ஆடவர்களிடம் இருந்துள்ளது என்பதை,*

> பரத்தையிடம் சென்று வந்த கணவனுக்கு வீட்டினுள் நுழைய இசைவு கொடுத்தல் (வாயில் நேர்தல்) இசைவு கொடாமை (வாயில் மறுத்தல்) என்ற இரு துறைகளும் மருதத்திணையில் பெருவரவின. இத்துறைகள் காட்டும் குறிப்பு என்ன ? பரத்தை வழிப்பட்ட பின்பு ஒரு தலைவன் தன் வீட்டிற்குள் புக அஞ்சுகின்றான். புகும் உரிமையை இழக்கின்றான். கேட்டுப் புகவேண்டிய நிலைக்குத் தாழ்கின்றாள்[48]

*என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகிறார்.*

*ஒரு தலைவி வாயில் வேண்டி வந்த தலைவனை வீட்டிற்கு நுழைய அனுமதி மறுக்கின்றாள். அப்போது மானமுடைய தலைவன் திருந்துவதற்கு இவ்வாயில் மறுப்பு போதாதா என்று பரத்தையிற் பிரிவு பற்றித் தலைவி குறிப்பிடுகிறார். அந்நிலையில் தலைவியை நோக்கிப் பரத்தை கூறும் பாடல் பின்வருமாறு,*

> கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி
> பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
> யாம∴. தயர்ம சேரும் தான∴.து
> அஞ்சுவது உடையள் ஆயின் வெம்போர்
> நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
> முனையான் பெருநிரை போலக்
> கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே[49]

*என்ற பாடலில் தலைவியின் இல்லற வாழ்க்கையைப் பரத்தை பழித்துத் தலைவிக்குப் பாங்காயினோரிடம் கூறுகிறாள். நானும் தலைவனும் நீர் விளையாட்டு விளையாடச் சென்றோம். தலைவி அதற்கு அஞ்சுவாளாயின் எழினியின் பசுக்கூட்டத்தைப் பகைவர் காத்தல் போல நீயும் உன் தலைவனைத் தனது சுற்றத்தோடு சேர்ந்து பாதுகாத்துக் கொள்வாயாக என்கிறாள் பரத்தை. தலைவனைக் காத்தல் தலைவியின் கடமையாகும் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.*

தலைவி தன்னைப் புறங்கூறினாள் என்பதைக் கேட்ட பரத்தை தலைவன் தன்னிடம் மிகுந்த அன்பு கொண்டவன் என்றும் தலைவியிடம் அன்பு கொண்டவன் அல்லன் என்று கூறுவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

அரிற்பவர்ப் பிறம்பின் வரிபுப்ற நீர்நாய்
வாளை நாளிறை பெறூஉம் ஊரன்
பொற்கோல் அவிர்தொடி நற்கெழு தகுவி
எம்பிறம் கூறும் என்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோள் எள்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன அவ்விரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மண கொளற்கிவரும் மள்ளர் போதே[50]

என்பது அப்பாடலாகும். ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடும் ஆட்டம் துணங்கையாகும். அக்கூத்தில் தான் விரும்புகின்ற பெண்ணுக்குக் கைகொடுத்து ஆடுவது ஆடல் மரபு. அப்படி ஆடப்படும் துணங்கைக் கூத்தில் தலைவன் என்னையே விரும்பி என்னுடன் சேர்ந்து ஆடுவதை நீங்கள் பார்ப்பீர்கள் என்று பரத்தை கூறுகிறாள். சமூகத்தில் தலைவிக்கே மதிப்பும் மரியாதையும் உண்டு. பரத்தையர்கள் பெண்களாக இருப்பினும் குற்றம் இல்லாதவர்களாக இருப்பினும் சமூக மதிப்பு என்பது அவர்களுக்கு இல்லை எனலாம். பெண்களுக்குக் காதலிக்கும் உரிமை இருந்தாலும் காதலை ஏற்றுக் கொள்ளாத மனநிலையும் அக்காலம் முதல் இக்காலம் வரை நிலவி வருகிறது. எனினும் பெண்கள் சங்ககாலத்தில் கல்வி அறிவில் மேம்பட்டு இருந்ததையும் பாடல்கள்வழி காணமுடிகிறது. சில நேர்வுகளில் பெண் உணர்வுகளை மதிக்காத சூழல் சங்ககாலத்தில் நிலவியதையும் அறியமுடிகிறது.

ஔவையார் பெண் புலவராக இருந்ததனால் பெண்களின் உணர்வுகளை மதித்துப் பெண்களின் நிலையை அவரது பாடல்களின் வழியாக உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளார். ஔவையாரின் பாடல்கள் அக்கால மகளிரின் நிலையைப் பெரிதும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

**விளையாட்டுகள்**

*சங்க காலத்தில் அம்புலியை அழைத்தல், தழூஉ விளையாடுதல், சிறுதேர் உருட்டல், ஊசல், சிற்றில் இழைத்தல், எதிரொலி கேட்டல், அலவன் ஆட்டம், சூதாட்டம், பந்து விளையாடுதல், கவண் வீசுதல், ஏறுதழுவுதல் போன்ற விளையாட்டுகள் இடம்பெறுமாற்றைக் காணலாம்.*

**அம்புலியை அழைத்தல்**

*தலைவி குழந்தைக்கு நிலாவைக்காட்டி சோறு ஊட்டுகிறாள். அப்போது நிலவின் அழகை எடுத்துக் கூறல், நிலவினைப் பற்றிக் கதைகள் சொல்லல், நிலவைப் பூமிக்கு இறங்கி வந்து குழந்தையுடன் விளையாட வேண்டல் முதலிய நிகழ்வுகள் நடக்கின்றன. அம்புலியை குழந்தைகளுடன் விளையாட வருமாறு அழைத்து மகிழ்கின்றனர். இந்நிகழ்வு தற்காலத்திலும் நடைபெறுகிறது எனலாம்.*

ஐய திங்கட் குழவி வருக எனயான் நின்னை
அம்புலி காட்டல் இனிது[51]

*என்ற பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.*

**தழூஉ விளையாடுதல்**

*தழூஉ சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு என்று தெரிகிறது. சிறுவர்கள் பலரும் சேர்ந்து இருமணல் செறிந்தஅகன்ற தெருவிலே ஓடிப்பிடித்து விளையாடுவர். இதில் ஒருவர் பிடிக்க மற்றவர்கள் அவர் பிடிக்கு அகப்படாமல் ஓடவேண்டும். பிடிப்பட்டவர் யாரோ அவரைக் கட்டித் தழுவிப் பிடிப்பதுதான் தழூஉ விளையாட்டு என்பதாகும். இதனை,*

இணையர் தழூஉ ஆடும் அக்கர்வாய்
வயன் தெரு[52]

*என்ற அடிகள் சுட்டுகின்றன. இவ்விளையாட்டு தெரு வீதிகளில் விளையாடப்பட்டது எனத் தெரிகிறது. இது சிறுவர் ஒருவரை ஒருவர் ஓடவிட்டுப் பிடித்துத் தழுவுதலால் இந்த விளையாட்டு தழூஉ எனப் பெயர் பெற்றது எனலாம்.*

**சிறுதேர் உருட்டல்**

*பழங்காலத்தில் மரக்கட்டைகளில் செய்யப்பட்ட மூன்று சக்கர வண்டிகளை (தேர்களை) உருட்டிச் சிறுவர்கள் மகிழ்ந்தார்கள். புதல்வன்பால் கொண்ட அன்பினால் பெற்றோர் தம் தொழிலையும் மறந்து சிறுதேர் உருட்டி நடைப்பயிலும் காட்சியைக் கண்டு மகிழ்வதை,*

முற்றத்துக்
கால்வல் தேர்கையின் இயக்கி நடைபயிற்றா
ஆலமர் செல்வன்[53]

*என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தன் புதல்வனுக்குத் தேரினைக் கையினால் இயக்கி நடை பழக்கினார்கள். பனக்குரும்பையால் உருளை செய்து இயற்றிய சிறுதேரை மணலில் இழுத்து விளையாடும் சிறுவர்கள் தங்களைக் குதிரைகளாகவும், தலைவன் மகன் அத்தேரில் ஏறிவரும் அரசனாகவும் கற்பித்துக் கொண்டு விளையாடினர் என்று இப்பாடல் கூறுகிறது.*

**ஊசல் விளையாடுதல்**

*தினைப்புனத்திலே கிளியை ஓட்டிக் காவல் புரியச் சென்ற தலைவி அதன் அருகே ஊசலில் அமர்ந்து ஆடினாள் என்பதனை,*

ஊசல் ஊர்ந்து ஆட, ஒரு ஞான்று வந்தானை[54]

*என்ற பாடல் வரி உணர்த்துகிறது.*

**சிற்றில் இழைத்தல்**

*மகளிர் மணலில் சிறிய வீடுகளைக் கட்டி விளையாடுவது சிற்றில்கட்டி விளையாடுவதாகும். வீட்டின் முன்னால் உள்ள மணல் நிறைந்த தெருவிலும், துறையிலும் உள்ள மணல் பரப்பிலும் சிற்றில்கட்டி விளையாடியுள்ளனர் என்பதை,*

தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா[55]

*என்ற வரிகள் சுட்டுகின்றன. தெருவிடத்தே மகளிர் சிற்றில் இழைத்து, உணவு சமைத்து விளையாடும்போது, மணலால் செய்த சிற்றிலைக் காலால்*

சிதைத்தும், கூந்தலில் சூட்டிய மலரினைப் பற்றி இழுத்தும், வரியினை உடைய பந்தை எடுத்துக் கொண்டு விளையாடினார் என்பதை அறியமுடிகிறது.

## எதிரொலி கேட்டல்

களவுக் காலத்தில் தலைவனும் தலைவியும் மலைப்பகுதியில் சந்திக்கும் பொழுது உரத்துக் கூறும் சொற்கள் மீண்டும் எதிரொலிக்கச் செய்கின்றன. அவற்றைச் சுட்டும் பாடலடிகள்,

இலங்குதாழ் அருவியொடு அணிகொண்ட
நின்மலைச்
சிலம்புபோல் கூறுவ கூறும்[56]

என்பதாகும். அருவிகளோடு அழகுடன் விளங்கும் நின்மலையின் மலை அடுக்குகள் கால் சிலம்பு போல், தன்முன் கூறுவனவற்றை அப்படியே எதிரொலிக்கச் செய்கின்றன. தலைவியும் தலைவனும் எதிரொலி கொடுத்து மகிழ்ச்சி அடைந்தனர் என்று கூறப் பெற்றுள்ளது.

## அலவன் ஆட்டம்

நெய்தல் நிலப் பகுதியில் வாழும் சிறுவர்கள் கடற்கரையில் நீர் படிந்த மணற்பகுதியில் உள்ள நண்டுகளைப் பிடித்து விளையாடி மகிழ்ந்தனர். இதனை,

உவறுநீர் உயர்எக்கர் அலவன் ஆடும் அலைவிரி[57]

என்ற பாடலடி சுட்டுகிறது. அலைகள் திரண்டு வந்து ஊறுகின்ற நீரை உடைய இருமணலிடத்து வளையினின்றும் வெளியே வந்து விளையாடித் திரியும் புள்ளிகளை உடைய நண்டுகள் அலைக்கழிக்கும். அந்நண்டுகள் அலைக்கழித்தாலும் அவற்றை விடாமல் பிடிக்கும் ஆர்வத்தைச் சிறுவர்கள் மேற்கொள்வார்கள். இது சூதாடு களத்து பலமுறை தோற்றலும், வேட்கை தவிராது காய்களை உருட்டி இடைவிடாமல் விளையாடும் விளையாட்டோடு ஒப்பிடப்படுகிறது.

**சூதாட்டம் (தாயம்) விளையாடல்**

உவறுநீர் உயர்எக்கர் அலவன் ஆடும் ஆணைவரி
தவல்இல் தன் கழகத்துத் தவிராது வட்டிப்ப
கவறு உற்ற வடுஏய்க்கும்[58]

என்ற பாடலடிகள் சங்ககாலச் சமுதாயத்தில் சூதாடுதல் விளையாட்டாக ஆடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறது. சூதாட்டம் விளையாடுவோர் மனவேட்கை கெடுதல் இல்லாத தண்ணிதென்று நீங்கிய சூதாடுகளத்து பலமுறை தோற்றாலும் வேட்கை தவிராது காய்களை உருட்ட வடுவுற்ற காய்களைப் போல அலவன் ஆட்டமும் ஒத்துக் காணப்படும். மேலும், தலைவி தலைவனை அடையாத நிலைக்குச் சூதாட்டத்தில் வேண்டிய எண், பெறாதவனுடைய மனம் வருத்தம் பெறும் நிலைக்கு உவமை கூறப்பட்டுள்ளது. சூதாட்டத்தில் பொருளை வைத்து ஆடியுள்ளனர் என்பது, 'உடைப்பொதி இழுத்தான் போல' என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளது.

**பந்து விளையாட்டு**

மகளிர் தெருவிடத்தே உள்ள மணலில் சிற்றில் இழைத்து, உணவு சமைத்து விளையாடும்போது மணலால் செய்த சிற்றிலைச் சிறுவர்கள் காலால் சிதைத்தும், பெண்களின் கூந்தலில் சூட்டிய மலரினை இழுத்தும், தாங்கள் விளையாடிய வரியினை உடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடிச் செல்வார்கள் என்பதை,

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டுஓடி
நோதக்க செய்யும்[59]

என்ற வரிகள் உணர்த்தகின்றன. மேற்கூறிய விளையாட்டுகளைச் சிறுவர் முதல் ஆடவர் - மகளிர் வரை விளையாடியிருக்கின்றனர். அவர்கள் ஆடிய விளையாட்டுகளைக் கலித்தொகையில் காணமுடிகிறது. இவ்விளையாட்டுகள் வாழ்வோடு இயைந்த விளையாட்டாகவும், மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இருந்துள்ளன. இன்றைய காலம்வரை இவ்விளையாட்டுகள் மக்களால் விளையாடப்பட்டு வருகின்றன.

**வாழ்வியல் நெறிகள்**

இலக்கியங்கள் மக்களை மகிழ்வித்தலுடன் அறிவுறுத்தும் செயலையும் செய்கின்றன. மக்கள் வாழ்க்கையில் பின்பற்றும் உயர்நெறிகள், இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன. பண்டைத் தமிழரின் வாழ்க்கைமுறை குறிக்கோள் வாழ்க்கையாகும். நல்லது செய்தல் ஆற்றாராயினும் அல்லவை செய்யத் துணியாத தூய்மையான எண்ணம் கொண்டவர்களாக வாழ்ந்துள்ளனர். புகழெனின் உயிரையும் கொடுக்கத் தயங்காதவர்கள். பழியெனின் இவ்வுலகைக் கொடுத்தாலும் பெற விரும்பாதவர்கள். வறுமையிலும் செம்மையாக வாழத் தலைப்பட்டவர்கள். எப்படியும் வாழலாம் என்பதன்றி இப்படித்தான் வாழவேண்டும் என்ற உயர்ந்த நெறியை உள்ளத்தால் கொண்டவர்கள்.

வாழ்வின் அடிப்படையாக அமைந்த குறிக்கோள்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றாகும். ஆண், பெண் அன்பு வாழ்க்கையைத் தொல்காப்பியர்,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை[60]

என்று குறிப்பிடுகிறார்.

அறத்தினால் பொருளாக்கி, அப்பொருளால் இன்பம் எய்துதல் சிறப்பாகும். இதனை உணர்த்தவே ஆசிரியர் இன்பத்தை முதலில் கூறி அதைப் பெறுவதற்குக் காரணமானப் பொருளை அடுத்துச் சொல்லி, அறத்தை இறுதியில் கூறினார்.

மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அவரவர் நிலைக்கேற்பச் சில வாழ்வியல் நெறிகளைக் கொண்டிருத்தல் இயல்பாகும். அவ்வியல்புகளில் குறிப்பிடத்தக்கனவாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.

1. இல்வாழ்க்கை
2. கணவனைப் பேணுதல்
3. இன்சொல் கூறல்
4. சோம்பல்

என நான்கு நிலைகளில் வாழ்வியல் நெறிகள் கூறப்பெறுகின்றன.

## 1. இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையில் ஈடுபடும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இன்றியமையாதது ஒத்த அன்பாகும். ஒத்த அன்பே காதலெனப்பட்டது. இல்வாழ்க்கையில் இருவரும் பிரியாது கூடிவாழும் வாழ்க்கையைப் பெரும்பேறாகக் கருதினர்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை[61]

என்று குறள் கூறுகிறது. வறிய வாழ்க்கையினும் பிரியா வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று சங்கத் தமிழர் எண்ணினர். ஒன்றன் கூறாடையை உடுத்தினாலும் மனம் ஒருமித்து வாழ்ந்தனர்.

இளமையும் காமமும் பொருந்தப் பெற்றவர்; அதன் பயனை நுகராது நாளைப் போக்கின் கழியும் இளமையை மீட்பது இயலாது என்று உணர்ந்து வாழ்ந்தவர்கள். இத்தகு அன்பான வாழ்வை நற்றிணை,

மாரிப் பித்திகத்து ஈரிதழ் அலரி
நறுங்காழ் ஆரமொடு மிடைந்த மார்பிற்
குறும்பொறிக் கொண்ட கொம்மையம் புகர்ப்பிற்
கருங்கண் வெம்முலை ஞெமுங்கப் புல்லிக்
கழிவதாக கங்குல்[62]

என்று கூறுகிறது. இப்பாடல் காதலர் கூடும் கூட்டம் ஒருவரோடு ஒருவர் மெய்யுறு புணர்ச்சியில் ஈடுபட்டதைப் புலப்படுத்துகிறது. தலைவியை விட்டுப் பிரியாது கழிப்பெருங்காம நுகர்ச்சியைப் பெற்றனர் என்பதை,

வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை
போழப் படாஅ முயக்கு[63]

என்று வள்ளுவமும் கூறுகிறது.

எனவே இன்பத்திற்குரிய காலம் இளமை என்பதும் அது கழிந்தால் மீண்டும் இயலாது என்பதும் இதன்மூலம் வலியுறுத்தப்படுகிறது. அத்துடன் இன்ப நுகர்ச்சியில் வாய்ப்பு நேரும்போது காலந்தாழ்த்தாது பெற்றால் வாழ்க்கை சிறக்கும் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**2. கணவனைப் பேணுதல்**

பண்டைத் தமிழ்ப் பெண்கள், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரெனக் கொண்டனர். உணவு சமைத்துப் பரிமாறி அவன் விருப்புடன் உண்பது கண்டு பெருமகிழ்வெய்தினர். கணவனுடைய இல்லத்தில் வறுமை வந்த காலத்தும் அவனோடு இயைந்து அவனுக்குத் தொண்டு செய்து வாழ்தலையே கடமையாகக் கொண்டனர் என்பதற்குப் பல சங்கப் பாடல்கள் சான்று பகருகின்றன.

தலைவி பெற்றோரின் வீட்டில் செல்வச் செழிப்பில் வாழ்ந்தவள். ஆயினும் கணவன் வீட்டில் வறுமை வந்த போதும் தலைவனை விட்டுப் பிரிந்து செல்லும் நிலையில் இருக்கவில்லை. இம்மை மாறி மறுமையாகினும் நீயாகியர் என் நெஞ்சு நேர்பவளே! என்று ஒன்றி வாழ்ந்தனர். வறுமையை நினைத்து கலங்கவில்லை என்பதற்குச் சான்றாக,

கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போல
பொழுதுமறுத்து உண்ணுஞ்சிறுமது கையளே[64]

என்ற பாடலைக் கூறலாம். இப்பாடலில் தன்னை மணந்து கொண்ட கணவனின் குடி வறுமை அடைந்ததென்று வருந்தவில்லை. அவள் பிறந்தகத்தில் தந்தை கொடுத்த கொழுவிய சோற்றினையும் நினையாளாயினாள். நீர் ஒழுகும் பாதையிலே வளைந்து வளைந்து கிடக்கும் கருமணலைப் போலப் பொழுதிற்கு உண்பதையும் கைவிட்டாள். தன் கணவன் குடிநிலைக்கேற்றபடி ஒழுகுவளாய்த் தானும் உண்டு வாழும் வன்மை கொண்டவளாக விளங்குகிறாள் என்பது எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

பெண்கள் தம் கணவனின் வருவாய்க்கேற்ப வாழ்ந்து இல்லறம் பேணும் சிறந்த தலைவியாகத் திகழ்ந்தனர். தந்தை வீட்டுப் பெருவாழ்வையும் மறந்து கணவன் வீட்டு நிலையோடு ஒன்றிக் கலந்துவிடும் உயரியபண்பு நெறியை உடையவர்களாக வாழ்ந்தனர்.

### 3. இன்சொல் கூறல்

ஒருவருடைய பேச்சு கேட்போர்க்கு மகிழ்வைத் தருதல் வேண்டும். பரிமேலழகர் இனியவை கூறல் என்பதற்கு மனத்தின்கண் உள்ள உவமையை வெளிப்படுவனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல் என்கிறார். சொன்ன சொல் தவறாத வாய்மையும் நினைக்குந்தோறும் நெடிது இனிது பயக்கும் இனிமையான சொற்களைப் பேசுபவர் எனச் சங்கத்தமிழ்ப் பெண் கூறுவதிலிருந்து இன்ப வாழ்விற்கு இனிய சொற்கள் உறுதுணையாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை ஒருவன் கூறின் அல்லவை தேய்ந்து அறம் பெருகும் என்பதை வள்ளுவர்,

அல்லவைதேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்[65]

என்பார்.

### 4. சோம்பல்

இது மடி என்றும் சொல்லப்பெறும். உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் வளமான வாழ்வு பொருளுடையார்க்கே அமையும். இல்லார் இவ்வுலகில் இன்பம் எய்துவதில்லை. எனவே வறுமை மிகவும் கொடியது. அதுவும் இளமையில் வறுமை இன்னும் கொடியதாகும். இத்தகு வறுமை ஒருவருக்குச் சோம்பலினால் வருவது. சோம்பலுக்கு இடம் தந்தோர் வாழ்வில் இன்பம் விடை கொடுக்கும். அவர்களால் அறத்தில் தவறாது ஒழுகுதலும், கேளிர் கேடுபோக்குதலும், பகைவர் செருக்கை அழித்தலும் பெற இயலாது.

இவ்வுலகில் புகழ் பெறுதலும், இன்பம் எய்தலும், ஈந்து உவத்தலும், சோம்பித் திரிவோர்க்கு இல்லையாகும். இதனை நற்றிணைப் பாடலின் கீழ்க்காணும் வரிகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

அரும்பொருள் கூட்டம் இருந்தோர்க்கு இல்[66]

என்கிறது. இம்மைக்குரிய புகழும் இம்மை மறுமை எனும் இருமைக்கு உரிய இன்பமும் மறுமையில் இன்புறுதற்கு ஏதுவாகிய ஈதல் ஆகிய மூன்றும், சோம்பி இருந்தார்க்கு வாய்ப்பதில்லை என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றது.

**பொருளினும் சிறந்த பொருள்**

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற வள்ளுவரின் வாக்கு பொருளின் இன்றியமையாமையை உணர்த்துகிறது.

நாளது இன்மையும் இளமைய தருமையுந்
. . . . . . . . . . . . . . . . . .
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்[67]

என்று தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதிய இளம்பூரணர் யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை, பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை, இன்மையான் வரும் இளிவரவினைப் பொருந்தாமை, பொருளுடையார்க்கு வேண்டிய அமைவு இன்றிமென்மேலும் ஆசை செலுத்துதல், சிறந்தார்மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை, பிரிதலருமையைப் பொருந்தாமை ஆகியவை பொருள்தேடிச் செல்வோர்க்கு உரிய இயல்புகள் என உரைவகுக்கின்றார்.

பாலைக்கலியில் பொருள்வயிற் பிரியக்கருதிய தலைவனைச் செலவழுங்குவிக்கத் துணியும் தோழி சில பொருள்பொதிந்த மொழிகளைப் பேசுகிறாள். தலைவனை நோக்கி, முன்பு உண்டான பொருள்கள் எல்லாம் கொடுத்துத் தொலைந்ததன் காரணமாக, தம்மிடம் வந்து இரப்பார்க்கு தம்மிடத்துப் பொருள் இல்லையென்று கூறிக் கொடாதிருத்தல் இளிவென்று கருதிப் பொருள்தேடச் செல்லும் தலைவனே! எனத் தோழி விளிக்கிறாள். இக்கூற்று பண்டைத் தமிழர்கள் பொருள் தேடியதற்கான உயர்ந்த நோக்கத்தைச் சுட்டுகிறது.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு[68]

என்னும் குறளின் மாண்பினைச் சங்கத் தமிழ் மக்கள் தம் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகியமை அவர்களின் செம்மாந்த வாழ்வியல் நெறியினைச் சுட்டுகிறது. வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும் என்னும் பொருள்பட தோழி, தலைவனிடம் உரையாடும் பகுதி இவண் சுட்டத்தக்கதாகும்.

இடனின்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவுஎன
கடன்இறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருள் ஆகுமோ
வடமீன்போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின்[69]

என்ற பாடலில் தம்முடைய இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் இல்லை என்று கூறிவந்து இரந்தவர்க்குச் சிறிதும் கொடாது இருத்தல் இழிவாகும்; என்று காட்டைக் கடந்து தேடிய பொருள் நன்கு மதிக்கப்படும் பொருளாகும். எனினும், அருந்ததிபோல், எல்லோரும் தொழுது வாழ்த்தும்படி விளங்கிய கற்பினை உடைய தலைவியின் பெருமை வாய்ந்த மெல்லிய தோளினைப் பிரியாதிருத்தல். நின்மனத்திற்குப் பொருளாய் இருக்குமாயின் அதுவே மிகச் சிறந்த பொருளாவதல்லது வேறு. பொருளாகுமே? எனத் தலைவனிடம் தோழி வினவுகிறாள். இக்கூற்று பெறுதற்கரிய இளமையைத் தொலைத்து பெரும் பொருளினும் சிறந்த பொருள் தலைவியுடன் இனிதிருந்து வாழ்தலே என்னும் வாழ்வியல் நெறியை உணர்த்துகிறது.

**பிரிவுத் துன்பம்**

இன்றைக்கு அதிநுகர்வுத் தன்மை பெருகிவிட்ட நிலையில் பொருளை மையமிட்டு வாழ்வில் பொருளுக்காக எதையும் செய்யும் மனநிலை மக்களிடம் ஏற்பட்டுள்ளது. கடல் கடந்து பல நாடுகளுக்குச் சென்று பொருள்தேடும் தலைவர்களும் அது பற்றியக் கவலை இல்லாத தலைவிகளும் இருக்கின்றனர். பொருளின்மீது கொண்ட அளவுகடந்த பற்றே இதற்குக் காரணம் எனலாம். தலைவன் உள்ளத்தே பிரியும் எண்ணம் உண்டானவுடன்; அது தலைவியால் உய்த்துணரப்பட்டு, தலைவி பெருந்துயருக்கு ஆளாகிறாள். அது கண்ட தோழி தலைவனிடம் தலைவியின் நிலையை எடுத்துரைக்கின்றாள். இதற்கு,

அன்பு அறமாறி யாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதியோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல் வினவின்
பகலின் விளங்கு நின் செம்மல் சிதைய
தவல் அருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டுஓர்
அவலம் படுதலும் உண்டு[70]

*என்ற பாடல் சான்றாகும். தலைவன் களவுக்காலத்தில் இனிய சொற்களைப் பேசி தலைவியைக் கவர்ந்து மணந்து கொண்டவன். ஆனால் இன்று கற்பு வாழ்வில் அவளைத் தனியே விடுத்துப் பொருள் தேடுவதற்காகப் பிரியக் கருதுகிறான். அவ்வாறு தலைவன் கருதியபடி செல்வானேயானால், அவ்விடத்தில் அவன் செயல் முடிந்து இங்கிருந்து வருவோரிடம் தலைவியின் நிலை எதுவோ என வினவக் கூடாது. வினவின் அவர்கள் உனக்கு தலைவி இறந்து பட்டாள் என்ற அவலச் செய்தியைக் கூறுவார்கள் என்கிறாள் தலைவி. இக்கூற்று நீ பிரிந்தால் இவள் வாழாள் எனத் தலைவனை எச்சரிப்பதாக அமைகிறது. இக்கூற்று,*

செல்லாமை உண்டேல் எமக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை[71]

*என்னும் குறளுடன் ஒப்பவைத்து எண்ணத்தக்கதாய் உள்ளது.*

**களவு வாழ்வும் கற்பு வாழ்வும்**

*களவுக் காலத்தில் பெற்ற இன்பத்தால் தலைவன் தலைவியைத் தினமும் காண விரும்புவதும், அவளிடம் மிகுந்த அன்பு கொண்டிருத்தலும் தலைவனின் இயல்பாகும். கற்பு வாழ்வில், தலைவி உடன் உறைவதால், காட்சிக்கு எளிமையாவதுடன், அவள் மீதுள்ள அன்பு சிறிது குறைவதும் உண்டு. இந்நிலையை நன்குணர்ந்தாள் தோழி. தலைவியைக் களவுக்காலத்தே புகழ்ந்து பாராட்டிய தலைவன், கற்பின்பாற்பட்டவுடன் பிரிய எண்ணுவதைக் கண்டு அவனைத் தடுத்துச் சில மொழிகளைக் கூறுகிறாள். அதற்கு,*

உன்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும்தாய்
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
ஏதிலார் கூறுவது அவனோ. . .[72]

என்ற பாடலடிகள் சான்றாகும். காதல், உடன் திருமணம், விரைவில் திருமண முறிவு என இன்றைய சமூகத்தில் சிலரின் வாழ்வியல் நிகழ்வாக உள்ளது. இந்நிலைக்குக் காதல் பெரும்பான்மையும் பொருள் அடிப்படையில் அமைவதே காரணம் எனலாம். திருமணத்திற்குப் பிந்தைய வாழ்விலும் பொருளே முக்கியப்பங்கு வகிக்கிறது. அப்பொருளிற்காகக் கணவனும் மனைவியும் பிரிந்து தொலைதூரம் சென்று வேலை பார்ப்பதாகும். இச்சூழலால் கணவன் மற்றும் மனைவியிடையே அன்பு குறைந்து நெறியில்லாத நடத்தைகளுக்கு வழிவகுப்பதுடன் அவர்களுடைய சந்ததியையும் பாதிப்படையச் செய்கிறது. பாலைக்கலியைக் கூர்ந்து நோக்கின் தலைவனின் பொருள்வயிற் பிரிவைத் தலைவியாலும், தோழியாலும் தவிர்க்குமாறு வேண்டப்படுகிறது. பகைவயிற்பிரிவு மற்றும் தூதிற்பிரிவு ஆகியவை எவ்விடத்தும் தடுக்கப்பட்டதாகப் பாடப்படவில்லை. எனவே நாடு காக்க வேண்டியும் நாட்டு நன்மை கருதியும் பிரிவதைச் சங்கத் தலைவிகள் தடுக்கவில்லை. ஏனென்றால் நாடு காப்பது ஆடவர்களின் கடமையாக எண்ணிப் போற்றியுள்ளனர். இல்லறம் என்பது தலைவனும் தலைவியும் பிரிவின்றி இணைந்து இருந்து ஆற்றும் நல்லறம் என்ற கருத்து பாலைக்கலி முழுவதும் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## வெறியாட்டு

தெய்வ வழிபாடுகளில் ஒன்று வெறியாட்டு. வெறியாட்டு நிகழ்ச்சியை நடத்தி வைக்க படிமத்தான் எனப்படும் வேலனை அழைப்பர். இவன் முருகனை வழிபடுவதற்கு உரித்தாகக் கொள்ளுமிடம் வெறியர் களம் எனப்படும். இது பெரும்பாலும் வீட்டின் முற்றமாக அமைந்திருக்கும். அம்முற்றம் நறுமணல் பரப்பப்பட்டு நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அக்களத்தின் ஒருபால் முருகப்பெருமானுக்குரிய கோழிக்கொடி நட்டு வைக்கப்பட்டிருக்கும். பூவும் மாலையும் அதற்கு அணிவித்து, நறும்புகை காட்டி முருகப்பெருமானை வேலன் எழுந்தருளச் செய்வான். வேலன் முருகனைப் புகழ்ந்து பாடுவான். அப்பூசையில் ஆட்டு மறியை அறுத்து அதிலிருந்து பெருகும் குருதியுடன் செந்தினையைக் கலந்து பலியாகத் தூவுவான். பல்வகை இயங்கள் முழங்க முருகப்பெருமான் புகழ் கூறி

வழிபடுவான். இவ்வழிபாடு இரவின் சாமப்பொழுதில் நிகழ்ந்ததாகத் தெரிய வருகின்றது. இதற்கு,

வேலன் புனைந்த வெறி அயர் களம்தொறும்
செந்நெல் வான் பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம் ஊர் வியன் துறை[73]

என்பது சான்றாகும். தலைவனே! முற்றத்திலுள்ள அரும்பு முதிர்ந்த புன்னை மரத்தின் மலர்கள் உதிர்ந்து பரந்த வெள்ளிய மணற்பரப்பில் வேலனால் அமைக்கப்பட்ட வெறியாட்டெடுக்கும் இடந்தோறும் செந்நெல்லினது வெள்ளிய பொறி சிதறினாற் போன்ற தோற்றத்தைத் தரும் என்று குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது. மேலும்,

செல்வன் பெரும்பெயர் ஏத்தி வேலன்
வெறிஅயர் வியன்களம் பொற்ப, வல்லோன்[74]

என்கிறது. தலைவியை ஓவியம் போன்று அழகு செய்யப்பட்ட வீட்டில் பாவையைப் போன்ற பலராலும் ஆராய்ந்து கண்டு மகிழத் தகுந்த மாட்சிமையுடைய அழகானது என் மகளுக்கு முன்பு போலவே சிறப்புறுக என்று முருகப்பெருமானை வேண்டி நற்றாய் கூறுவது குறிப்பிடத்தக்கது.

### வேலனின் கழங்குக்குறி

கட்டுவிச்சியிடம் நெற்குறி பார்ப்பதைப் போலவே வேலனை அழைத்துக் கழங்குக்குறி பார்ப்பதும் உண்டு. கழற்சி விதைகளை முருகன் முன்னிலையில் பரப்பி, வேலன் தன் கையிலுள்ள சிறு பைகள் கட்டிய கோலினால் அக்காய்களை அள்ளி எடுக்கும்போது, நேரும் குறிப்புக் கண்டு கூறுவதாகும். இதனை,

பெய்ம் மணல் முற்றம் கடிகொண்டு
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மெய்ம் மலி கழங்கின் வேலற் தந்தே[75]

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. மேலும்,

பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி
மலைவான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினான் அறிகுவதென்றால்
நன்றால் அம்ம நின்ற இவள் நலனே![76]

என்ற பாடல் தலைவியின் கற்பினை கழங்கினால் அளக்க இயலாது என எடுத்துரைக்கிறது.

பெய்ம் மணல் வரைப்பில் கழங்குபடுத்து அன்னைக்கு
முருகென மொழியும் வேலன்; மற்றவன்
வாழிய - இலங்கும் அருவிச்
சூர்மலை நாடனை அறியாதோனே[77]

என்ற பாடல் வேலன் கூறிய மாற்றத்தை உண்மையெனத் தாய் கேட்கத் தோழி கூறுவதாக அமைகிறது.

பொய்படுபு அறியாக் கழங்கே - மெய்யே
மணிவரைக் கட்சி மடமயில் ஆலும்நம்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோன்
ஆண்டகை விறல்வேள் அல்லன்[78]

எனும் இப்பாட்டு தலைவிக்கு வந்த நோய் முருகனால் வந்ததென்று இக்கழங்கு கூறுகிறது என்று வேலன் சொல்வதாகச் சுட்டுகிறது. இதனைக் கேட்ட தோழி அக்கழங்கிற்கு உரைப்பாளாய்ச் செவிலி தாய்க்கு எடுத்துரைப்பதாக உள்ளது.

**குரவைக்கூத்து**

வேலன் வெறியாட்டு தனிப்பட நிகழ்த்தலேயன்றி பலருடன் கூடி ஊர்மன்றத்தில் வேங்கை மரத்தின் அடியில் குரவைக்கூத்து ஆடி வழிபாடு நிகழ்த்துதலும் உண்டு. குரவையாடும் வழக்கம் ஆயர்களிடத்தும் அமைந்து இருப்பதை,

விலை வேண்டார், எம் இனத்து ஆயர் மகளிர்
கொலை ஏற்றுக் கோட்டிடை, தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப் போல, புகின்
ஆங்கு
குரவை தழீஇ, யாம், மரபுரி பாடி[79]

என்ற பாடலில் காணப்பெறுகிறது. முல்லை நிலத்தில் ஏறு தழுவுதல் நிகழ்ந்த போது அக்காட்சிகளைத் தோழி தலைவிக்குக் காட்டுகின்றாள். பின் நிகழ இருக்கும் குரவைக்கூத்தில் நாமும் சேர்ந்து பாண்டியனைப் புகழ்ந்து பாடுவோம் என்று கூறுகிறாள். மேலும்,

தொழுவினுள் கொண்ட ஏறு எல்லாம் புலம்புக தண்டாச்சீர்
வாங்கு எழில், நல்லாரும் மைந்தரும், மல்லல்ஊர்
ஆங்கண் அயர்வர், தழூஉ[80]

*என்கிறாள். அந்தத் தொழுவில் தழுவிக்கொண்ட காளைகள் எல்லாம் மேயும் நிலத்தில் போக அமையாத சிறப்பையும் பார்த்தவர் கண்ணைக் கவர்ந்து கொள்ளும் அழகையும் உடைய ஆய்ச்சியரும் ஆயரும் வளமையுடைய ஊரில் குரவை ஆடுவர் என்று தோழி தலைவிக்குக் காட்டிச் சொன்னாள் என்பது மேற்கண்ட பாடலின் கருத்தாகும்.*

தொண்டகச் சிறு பறைக் குரவை அயர.[81]

*என்ற பாடலடி தொண்டகமாகிய சிறு பறையின் தாளத்துக்கு ஏற்பக் குரவைக் கூத்தாடும் வழக்கம் இருந்துள்ளது என்பதைச் சுட்டுகிறது. மேலும்,*

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடு இன்இயம் கறங்க நேர்நிறுத்து
கார் மலர்க் குறிஞ்சி சூடி கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணி தழூஉப் பிணையூஉ
மன்றுதொறும் நின்று குரவை சேரிதொறும்[82]

*என்றும் கூறப்பெறுகிறது. இப்பாடல் அச்சத்தைச் செய்யும் வேலன் இத்தீமை முருகனால் தலைவிக்கு ஏற்பட்டது என்று கூற, அதனைக் கேட்டவரை வளைத்துக் கொண்டு இனிய இசைக்கருவிகளை முழங்க, முருகனை முன்னிலையாக்கிக் குறிஞ்சி மலரைக் கடப்ப மரத்தில் சூட்டி, ஆங்குப் புகழ்மிக்க முருகனை வழிபட்டான். ஆதலால் மகளிர் தழுவிக் கை கோத்து மன்றங்கள் தோறும் நின்று குரவை ஆடினர் என்கிறது.*

## கடவுள் வழிபாடு

*மக்கள் எந்தச் செயலைச் செய்யத் தொடங்கினாலும் முதலில் கடவுள் வணக்கம் செய்த பின்பே தொடங்கினர். சங்க காலத்தில் திருமண நிகழ்ச்சிக்கு முன்பு கடவுள் வழிபாடு இயற்றியுள்ளனர் என்பதை,*

கடிநகர் புனைந்து, கடவுள் பேணி[83]

*என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது.*

பாணர்கள் தாங்கள் இசையை இசைக்கத் தொடங்கும் முன் முதன்முதலில் கடவுள் வாழ்த்தை இசைத்துப் பின் பாடத் தொடங்கியுள்ளனர். நாள்தோறும் காலையில் கடவுளைப் பாடுவதை,

வலை வலந்தன்ன மென்நிழல் மருங்கில்
காடு உறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை[84]

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது.

அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை.[85]

என்பதிலிருந்து அரசவையில் கூட அரசரை வாழ்த்தும் முன் கடவுள் வணக்கம் செய்த பின்னரே மன்னரைப் புகழ்ந்தனர் என எடுத்துரைக்கின்றது.

## நாள்கோள் பார்த்தல்

சங்ககால மக்கள் தாம் செய்யப் போகும் எந்த நிகழ்ச்சிகளையும் தொடங்கும் முன் நாள், கோள் நோக்கியும் பல்வகை நிமித்தங்களை ஆராய்ந்த பின்னரே செயல்படத் தொடங்கினர் என்பதை,

புள்ளும் பொழுதும் பழித்தல், அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்[86]

எனக் கூறப்படுகின்றது. மேலும்,

நாள் அன்று போகி, புள் இடை தட்ப[87]

என்ற பாடலடி இவ்வழக்கத்தைப் புலப்படுத்துகின்றது. திருமணத்திற்குத் தீய கிரகங்களின் சேர்க்கையில்லாத காலத்தினைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இதற்கு,

கனை இருள் அகன்ற கவின்பெறு காலை
கோள் கால் நீங்கிய கொடுவெண் திங்கள்[88]

என்ற பாடலடிகள் சான்றாகும். சந்திரன் சுடர்விட்டு ரோகிணியுடன் கூடும் பெருநாளான முழுமதி நாளை நன்னாளாகத் தேர்ந்தெடுத்துள்ளதை அறியமுடிகிறது.

## விரிச்சி கேட்டல்

விரிச்சி என்பது நற்சொல்லைக் குறிக்கும். விரிச்சி கேட்போர் மனையிலுள்ள பெருமுது பெண்டிராய் இருப்பர். மாலைக் காலத்தில் ஊரின் ஒருபால் சென்று விரிச்சி கேட்டலும், காவல் பொருந்திய தன் மனையில் உள்ள

*மணலைப் பரப்பியப் பந்தரில் சென்று விரிச்சி கேட்டலும் நிகழ்ந்துள்ளது. மணி ஒலிக்க நாழியில் கொண்ட நெல்லுடனே சென்று; அந்நெல்லையும் முல்லைப்பூவையும் நீருடன் சொரிந்து விரிச்சியை நோக்கி நிற்பர் என்பதற்கு,*

புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்[89]

*என்ற அடி சான்றாகும். புள் நிமித்தத்தைப் போலவே விரிச்சி கேட்டலும் வழக்கமாய் இருந்ததைச் சங்ககால மக்களிடம் காணமுடிகிறது.*

பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கில் போகி
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப[90]

*என்பதிலிருந்து பெருமுதுப்பெண்டிர் விரிச்சி கேட்டு நின்றபொழுது, பசுவைப் பிரிந்த கன்றை நோக்கி, ஓர் ஆய்மகள் "இன்னே வருகுவர் தாயர்" என்று சொன்ன சொல்லைக் கேட்டு நல்மொழியாகப் போற்றியச் செய்தி முல்லைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.*

**பல்லி சொல் பலன் கேட்டல்**

*மாந்தர் வாய் பிறக்கும் நற்சொல் கேட்பது போலவே பல்லி எழுப்பும் ஓசையையும் நன்நிமித்தமாகக் கருதினர். தலைவியை விட்டுப் பொருள் தேடப் பிரிந்த நிலையில், அவன் சென்றது முதல் ஒவ்வொரு நாளும் சுவரில் குறியிட்டு அதனை நாள்தோறும் எண்ணிக் கொண்டு வருத்தத்துடன் வாழ்கிறாள். அந்த வருத்தத்தின் காரணமாகத் தன் முன் கையைக் கன்னத்துடன் சேர்த்து ஊன்றிக் கொண்டு படுக்கையில் பிரிவை எண்ணி அழுத கண்ணினளாய் வருந்தியிருக்கிறாள். இந்நிலையில் அவளுடைய துயரத்தை நீக்குவதைப் போலப் பல்லி ஒலித்ததாம். இதனை,*

இனைநலம் உடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர்; மனைவியின்
பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன
நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே[91]

*என்னும் பாடலால் அறியலாம். மேலும்,*

மணி ஓர்த் தன்ன தெண்குரல்

கணிவாய்ப் பல்லிய காடு இறந் தோரே![92]

என்ற பாடல் தலைவன் சென்ற காட்டில் கரடுமுரடான இடத்தில் விழுந்துள்ள நிழலில் கள்ளிச்செடி உள்ளது. அது முள்ளை உடையது. அதன் அடிப்பகுதியில் தங்கியிருந்து சிறிது இளைப்பாறி அவ்வழியில் செல்பவர்க்குப் பல்லி வருங்காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. மேலும்,

நயவரு குரல பல்லி

நள்ளென் யாமத்து, உள்ளுதொறும் படுமே[93]

என்ற பாடலடிகள் ஓங்கிய இடத்திலுள்ள உயர்ந்த புகழையுடைய நல்ல இல்லத்தில் விளக்கமான சுவரில் பொருந்தியிருந்து நன்மை வருவதாகக் கூறும் குரலையுடைய பல்லி, இருள்செறிந்த யாமத்தும் யாம் நம் காதலரை நினைக்குந்தோறும் ஒலிக்கும் என்று தலைவி எண்ணுவதாகக் கூறுகிறது.

இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி
சிறிய தெற்றுவது ஆயின், 'பெரிய
ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும்
நின்றாங்குப் பெயரும் கானம்
சென்றோர்மன்' என இருக்கிற் போர்க்கே[94]

என்ற இப்பாடலில் மகளிரேயன்றி விலங்குகளும் கூடப் பல்லி ஓசையைக் கேட்டு உணர்ந்து செயல்பட்டதாகக் கூறுகிறது.

## தொகுப்புரை

- ஒவ்வொரு மனிதனும் சக மனிதர்களோடு நட்புறவுகொண்டு வாழும் அமைப்பு முறையைச் சமுதாயம் என்கிறோம்.
- சமுதாயம் பற்றி அறிஞர்கள் கூறும் விளக்கம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றோடு வாழ்வியற் களஞ்சியம், அகராதிகள் கூறும் விளக்கமும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.
- காதல் என்பது கருத்தொருமித்த இருவர் உள்ளங்களின் இணைவாகும். மேலும் தலைவியின் காதலை ஊர் அலர் தூற்றி விடும் என்று

பயம்கொண்ட நிலை தாய்க்குத் தெரிய வரும்போது தலைவிபடும் துயரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

* விருந்தோம்பல் தமிழ்ப் பண்பாட்டின் உயிர்நாடி என்பதைச் சங்க அக இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. மேலும் இல்லறத் தலைவியின் கடமையாக விருந்தோம்பல் இருக்கிறது என்பதை நற்றிணைப் பாடல் தெளிவுறுத்துகிறது.

* நிலாவைக் காட்டித் தாய் குழந்தைக்குச் சோறு ஊட்டும் நிகழ்வு, சிறுவர்கள் தெருவில் ஓடிப்பிடித்து விளையாடும் நிகழ்வு, மூன்று சக்கர வண்டிகளைச் சிறுவர்கள் உருட்டி விளையாடும் நிகழ்வு, இளம் பெண்கள் ஊசல் கட்டி விளையாடும் நிகழ்வு, தலைவன் தலைவி மலைப்பகுதியில் ஒருவர் பெயர் கூற அதன் எதிரொலிச் சத்தம் கேட்டு இன்புறும் நிகழ்வு, கடற்கரைப் பகுதியில் நண்டுபிடித்து விளையாடும் நிகழ்வு, சூதாட்ட நிகழ்வு, சிற்றில் சிதைத்து ஆடும் நிகழ்வு எனப் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளைச் சங்க அக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளதை எடுத்துக் கூறப்பெற்றுள்ளது.

* தன் குடும்ப வருவாய்க்கு ஏற்றாற் போல கணவனின் நிலை அறிந்து மனைவி இல்வாழ்க்கை நடத்தும் உயரிய பண்பு நெறிப் பெற்றுத் திகழ்ந்தனர் என்பது சுட்டப்பெற்றுள்ளது.

* நிலையில்லாதப் பொருட்செல்வத்தை விட தலைவியின் அன்புச் செல்வமே உயர்ந்தது என்று கூறித் தலைவனைச் செலவழுங்குவிக்கும் பாங்கு தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

* வேலன் வெறியாட்டு நிகழ்த்துதல், வேலனிடம் கலங்குக்குறி கேட்டல், குரவைக்கூத்து ஆடுதல், கடவுளை வழிபட்ட பின் தம் செயல்களைத் தொடங்குதல், நல்ல நாள்கோள் பார்த்தல், புள் நிமித்தம், விரிச்சி கேட்டல் முதலிய பழக்கவழக்கங்கள் சங்கத் தமிழ் மக்களிடம் காணப்பெற்றுள்ள விதம் விளக்கமாக எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

## சான்றெண் குறிப்புகள்


1. மு.அருணாச்சலம், **தமிழ்ப் புதினங்களில் தொன்மங்கள்**, ப.138.
2. **வாழ்வியற் களஞ்சியம்**, தொகுதி - 8, ப.469.
3. **சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழகராதி**, ப.961.
4. நா.நளினிதேவி, **ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் சமுதாய மாற்றம்**, ப.24.
5. பட்டாபிராமன் (ப.ஆ.), **கவியமுது**, ப.255.
6. **பாரதியார் கவிதைகள்**, ப.239.
7. கதரைவேற்பிள்ளை, **தமிழ்மொழியகராதி**, ப.427.
8. பதிப்புக்குழு, **கிரியாவின் தற்காலத் தமிழகராதி**, ப.427.
9. இராஜம் ராஜேந்திரன், **மலேசியப் புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்**, ப.223.
10. **நற்றிணை**, பா.223.
11. மேலது., பா.149.
12. மேலது., பா.223.
13. மேலது., பா.11.
14. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.150.
15. **நற்றிணை**, பா.81:6-9.
16. மேலது., பா.41:6-10.
17. **கலித்தொகை**, பா.59:20-21.
18. மேலது., பா.75-17.
19. இளங்கோவடிகள், **சிலப்பதிகாரம்**, புறஞ்சேரி இருத்த காதை, பா.35-38.
20. **குறள்**.996.
21. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.996.
22. வ.சுப.மாணிக்கம், **தமிழ்க் காதல்**, ப.97.
23. **கலித்தொகை**, பா.139.
24. மேலது., பா.138.
25. மேலது., பா.139.
26. மேலது., பா.138.
27. மேலது., பா.140.

28. **கலித்தொகை**, பா.139.
29. மேலது., பா.140.
30. மேலது., பா.138.
31. மேலது., பா.141.
32. **குறள்**.680.
33. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.90.
34. மேலது., பா.135.
35. **அகநானூறு**, நூ.136:4-8.
36. மேலது., நூ.86:5-17.
37. மேலது., நூ.207.
38. தொல்காப்பியர், **தொல்காப்பியம், களவியல்**, நூ.1045.
39. **குறுந்தொகை**, பா.28.
40. மேலது., பா.158.
41. மேலது., பா.29.
42. மேலது., பா.388.
43. மேலது., பா.23.
44. மேலது., பா.15.
45. மேலது., பா.39.
46. மேலது., பா.43.
47. மேலது., பா.99.
48. வ.சுப.மாணிக்கம், **தமிழ்க் காதல்**, ப.86.
49. **குறுந்தொகை**, பா.80.
50. மேலது., பா.80.
51. **கலித்தொகை**, பா.80.
52. மேலது., பா.83.
53. மேலது., பா.81.
54. மேலது., பா.37.
55. மேலது., பா.51.
56. மேலது., பா.46.
57. மேலது., பா.136.

58. **கலித்தொகை**, பா.136.

59. மேலது., பா.151.

60. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.1036.

61. **குறள்**.41.

62. **நற்றிணை**, பா.314:3-6.

63. **குறள்**.1108.

64. **நற்றிணை**, பா.110:9-13.

65. **குறள்**.96.

66. **நற்றிணை**, பா.252.

67. தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, நூ.44.

68. **குறள்**.231.

69. **கலித்தொகை, பாலைக்கலி**, அடி.19-22.

70. மேலது., அடி.9-15.

71. **குறள்**.1151.

72. **கலித்தொகை, பாலைக்கலி**, பா.22:1-8.

73. **குறுந்தொகை**, பா.53.

74. **அகநானூறு**, பா.98:18-19.

75. **நற்றிணை**, பா.268:8-9.

76. **ஐங்குறுநூறு**, பா.248.

77. மேலது., பா.249.

78. மேலது., பா.250.

79. **கலித்தொகை**, பா.103.

80. மேலது., பா.104.

81. **திருமுருகாற்றுப்படை**, பா.197.

82. **மதுரைக்காஞ்சி**, பா.611-615.

83. **அகநானூறு**, பா.136:6.

84. **பொருநராற்றுப்படை**, பா.48-49.

85. **மலைபடுகடாம்**, பா.538.

86. **புறநானூறு**, பா.204:10-11.

87. மேலது., பா.24:1.

88. **அகநானூறு**, *பா.865:7.*

89. **குறுந்தொகை,** *பா.218:3.*

90. **முல்லைப்பாட்டு**, *பா.6-11.*

91. **கலித்தொகை,** *பா.11:19-22.*

92. **அகநானூறு**, *பா.151:14-15.*

93. **நற்றிணை,** *பா.333:11-12.*

94. **அகநானூறு**, *பா.387.*

# முடிவுரை

ஒவ்வொரு இயல்கள்தோறும் ஆய்வாளர் கண்டுணர்ந்த மெய்ம்மைகள் தொகுப்புரையாக வழங்கப்பெற்றுள்ளன. அத்தொகுப்புரைகளில் கூறப்பட்டுள்ள முடிபுகளைத் தொகுத்து முடிவுரையாக இவண் அளிக்கப் பெறுகிறது.

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்திய மக்கள் இயற்கையை வழிபட்டனர். இயற்கையைப் பாடத் தலைப்பட்டனர். இயற்கையைப் பாடத் தலைப்பட்டதின் விளைவாய் தோன்றியப் பாடல்கள்தான் சங்க இலக்கியங்களாகும்.

சங்ககாலத் தமிழறிஞர்கள் நுண்மாணுழைபுலம் மிக்கப் புலவர் பெருமக்கள். மனித வாழ்க்கையைக் கலைக் கண்ணோட்டத்துடனும், செம்மாந்த வாழ்க்கைக் குறிக்கோளுடனும் அணுகியவர்கள். அதனால்தான் இயற்கை சார்ந்தச் செம்மையான நிகழ்வுகளை மானுட வாழ்க்கையோடு இணைத்தப் பல பாடல்களை வடித்துத் தந்துள்ளனர்.

ஒவ்வொரு நிகழ்வுகளின் பின்புலமாக முதற், கரு, உரிப்பொருள்கள் இருக்கின்றன என்று தொல்காப்பியர் விளக்கம் தருகிறார். நிகழ்வுகளை தனிமனித நிகழ்வுகள், சமுதாய நிகழ்வுகள் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன. தனிமனித நிகழ்வுகள் காதல், குடும்பப் பின்னணி, தன்மன உணர்வுகள் என்ற முப்பெரும் பிரிவுகளாக விளக்கப்பட்டுள்ளன. சமுதாய நிகழ்வுகளில் தாய்மையின் சிறப்புகள், பெண்கள் எதிர் நோக்கும் சிக்கல்கள், கல்வியின் பயன்கள், மாணவர்களின் நிலை, வேலையில்லாத் திண்டாட்டம் எனப் பல சமுதாய நிகழ்வுகள் பொது நிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் தலைவன், தலைவி, தோழி, செவிலி ஆகியோர் கூற்று நிகழ்வுகளின் தன்மையும் சிறப்பும் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

களவு, கற்பு காலத்து ஒழுகலாறுகள் தலைமகளுக்குப் பொருந்தி வருவன பற்றி விளக்கப்பட்டுள்ளன. தலைவி தலைவனோடு இணைந்து அறச்செயலில் ஈடுபட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகின்றது. தலைவனைப் பிரிந்த தலைவி காமநோயால் ஆற்றாமையால் வருந்தும் நிலை, தலைவன் மடலூர்ந்து வந்து தலைவியை அடையும் விதம் ஆகியவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தலைவன் வரைவினை வற்புறுத்தும் தோழிக்கு கூறல், வரைவு மலிந்த தலைவிக்குக் கூறல், தலைவி தோழிக்கு வாயில் மறுத்தல், தலைவி தோழிக்கு வாயில் மறுத்தல் முதலிய நிகழ்வுகள் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களில் தலைவன், தலைவியை அடுத்துச் சிறப்பிடம் பெறுபவள் தோழி ஆவாள். தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் பாலமாக இருந்து உறவினைத் தோழி மேம்படுத்துவதும், அறத்தொடு நிற்கும் நிலையும் சுட்டப்பட்டுள்ளது. நொதுமலர் வரைவு, அலர் பெருக்கம் முதலியவற்றால் தலைவிக்கு நேரும் துயரம் பெருகுகிறது. இந்நிலையில் தமரின் துணையின்றித் தலைவியுடன் சேர்ந்து இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடத்த உடன்போக்கு மேற்கொள்ளுமாறு தலைவனுக்குத் தோழி அறிவுரை கூறுகிறாள். ஆணும் பெண்ணும் அன்பு செய்தல் என்ற நிலையில் தொடங்கி அந்த ஆழமாக வேரூன்றிப் பரவி மிகுந்த அன்பாகிப் பின் காதலாகிக் கசிந்து ஒருவர் மேல் ஒருவர் உள்ளம் ஈர்த்து அதன்வழி அவர்கள் பெறுகின்ற இன்பத்தையும் பிரிதல் ஏற்படுகின்றபொழுது அவர்கள் அடைகின்ற துன்பத்தினையும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. தோழி தலைவியின் இல்வாழ்வு நல்வாழ்வாக அமைந்தது கண்டு மகிழும் நிகழ்வு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அக்கால மக்களின் அரசியல், சமுதாய நிலை, கல்வி, நாகரிகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, வாணிபம் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அறவழியும் இல்லாமல், மரபு வழியும் இல்லாமல் மதிலின் ஒரு புறத்தே ஒதுங்கிக் கிடப்பது வீரமாகாது என்று புற இலக்கியங்கள் உரைக்கின்றன. வாழிடங்களைத் தீயிட்டு அழித்தல், உடைமைகளை சிதைத்தல், மதில்களை அழித்தல், மன்னனின் உளப்பாங்கு, அவன் பண்பு, பரிசுப் பொருள்கள்,

மன்னனை வாழ்த்துதல், வேள்வியும் விருந்தும் ஆகிய நிகழ்வுகளைப் புற நிகழ்வுகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பண்டைய சமூகத்தில் பெண்கள் கல்வி கற்கும் உரிமையையும், இல்லறத் தொழிலுரிமையையும், ஓரளவு ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தனர் என்பது சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

தலைவன் தலைவி இருவரும் உள்ளம் ஒருமித்து அன்பு வயப்பட்டால் மடலேறுதல் நிகழ்வு நடைபெறாது. ஆனால் தலைவனின் காதலை தலைவி ஏற்காமல் போனால் மடலேறுதல் நிகழ்வு நடைபெறும். எனினும் கடலெனக் காமம் உழந்தபோதும் பெண்கள் மடலேறியதாக நிகழ்வு இல்லை என்பது எடுத்தியம்பப்பட்டுள்ளது. பழங்கால மக்கள் இயற்கையை தெய்வமாகப் போற்றி வாழ்ந்தனர். வெறியாட்டு, கழங்குகுறி, குரவைக் கூத்து, கடவுள் வழிபாடு, நாள்கோள் பார்த்தல், விரிச்சி கேட்டல், பல்லி சொல் பலன் கேட்டல், நல்நிமித்தம் பார்த்தல், தீ நிமித்தம் தவிர்த்தல் ஆகிய பழக்கங்களும் நம்பிக்கைகளும் பண்டைத் தமிழர்களிடம் இருந்துள்ளன என்பது தெளிவாக எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. பெண்களுக்குக் காதலிக்கும் உரிமை இருந்தாலும் காதலை ஏற்றுக் கொள்ளாத நிலையில் தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிடும் நிலை காணப்பெறுகிறது. பெண் அடிமைத்தனம் சங்க காலத்தில் நிலவியதும் கூறப்பெற்றுள்ளது. குறிப்பாகக் கணவனை இழந்த பெண்களின் நிலை, பெண்கள் ஈமத்தீயில் மூழ்குதல், பெண்களைப் பரத்தையராகப் பார்த்தல் ஆகியவற்றைப் பெண்ணடிமைத்தனத்திற்கு சான்று காட்டலாம்.

சங்க இலக்கியங்களை உளவியல் நோக்கில் சங்க இலக்கியம் என்றும், சங்க இலக்கியம் காட்டும் சமூகம் என்றும், சங்க இலக்கியத்தின் தனித்தன்மைகள் (தனித்துவம்) என்றும், சங்க இலக்கியத்தின் வாழ்வியல் நெறிகள் என்றும், சங்க இலக்கியத்தில் உலகப் பொதுமைச் சிந்தனைகள் எனப் பல்வேறு தலைப்புகளில் ஆய்வதற்குரிய களமும், தரவும் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகிறது என்பது ஆய்வாளர் தம் பரிந்துரையாகும்.